தக்கை ராமாயணம்

273



5553

தக்கை ராமாயணம்

பாயிரம்

கடவுள் வணக்கம்

உலக மாதா உலகில்வந்தாள்
உலகை உடையாள் உலகுக்கெல்லாம்
திலகம் ஆனாள்செழு மாமலராள்
சீதை கணவன் சீராமபிரான்
கலைகொள் பெருங்கா வியம்பாடக்
கல்லைப் பெண்ஆக் கியபதமும்
நிலைகொள் முகில்மெய்யும் கமலக்கண்ணும்
நினைவினும் கனவினும் மறவேனே. 1

ஆன்றோர் வாழ்த்து

மாலை அணிசெம்பொன் அரங்கேசன்
வளரும் திருமா மலைக்கொழுந்தன்
சோலை மலைஎங்கள் அலங்காரன்
சோதி எழில்ஆயர் புகழ்ந்துஓங்கும்
சீலம் குருகூர் சடகோபர்
திருவாய் மொழிபேணும் எதிராசர்
கோல மலரொடு முடிசூடும்
கோவில் முனிஅருள் மறவேனே. 2

1. உலகமாதா - மகாலட்சுமி.
2. தேனோங்கு சோலைத் திருவேங் கடம்என்றும்
வானோங்கு சோலை மலையென்றும்—தானோங்கு
தென்னரங்கம் என்றும் திருஅத்தி ஊர்என்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர். —பழம்பாடல்.

சடகோபர் - நம்மாழ்வார். எதிராசர் - இராமானுசர். முனி - மணவாள மாமுனி. சோலைமலை - அழகர் மலை, கள்ளழகர் கோயில். சோலை மலை அழகர்பால் தெய்வ பக்தியும், நம்மாழ்வார் இராமனுசர் மணவாள மாமுனி — இவர்கள்பால் குருபக்தியும் கொண்டவர் எம்பெருமானார்.

நூற்பயன்

மாம ராமரந் தனைச்சொல்லியும்
 மரபில் வேடனும் மறையவர்க்குள்
ஓம ராம்அருந் தவனாகி
 உண்மை அறிந்தான் உலகுதன்னில்
நாம ராமா யணம்இதனை
 நாடிப் படிப்போரும் கேட்போரும்
தாம ராஅணை மால்அருளால்
 சகல பெரும்பேறும் பெறுவாரே. 3

அவையடக்கம்

தவமே உணர்கம்ப நாடன்சொல்லிற்
 சதகோ டியில்ஒன்றும் சொனதிலையான்
சிவமே அனுமார் கடந்தவிண்ணில்
 செல்லும் மசகுளத் தனைதூரம்
நவமே ஆகிஎன் மதியாலே
 நாடிப் பாடிய நினைவுஒன்றிலை
உவமை யில்லா வரலாறே
 உத்தி அறிவோர் உரவோரே. 4

காவியம் வந்த வரலாறு

மெத்தவே கண்ணன் வெண்ணெய்தன்னில்
 விருத்தச் சீர்இராமா யணத்தைச்
சுத்தநாக் கம்ப நாடன்சொன்னான்
 சொன்ன பொருள்தக்கை இசையாலே
பத்தர் பாடிஎம் பெருமான்நான்
 பகரும் படிசெய்தான், மோரூர்வாழ்
அத்த வாரிசொல் நல்லதம்பி
 அழகர் அருள்பெற்று வாழ்வோனே. 5

3. 'ராம' 'ராம' என்று சொல்லத் தெரியாது, 'மரா' 'மரா' என்று செபித்து வந்த வேடனுமே வால்மீக மாமுனியாக வளர்ந்த கதை நினைவுகூரப் பட்டது. ஓமராம் இருந்தவன் - ஓமம் - ஓமர் - வேள்வி செய்பவர். அருந்தவன் - வால்மீகி. அரா அணை மால் - பாம்பணையிற் பள்ளிகொண்ட திருமால்.

4. மசகு - கொசுகு. சிவசொருபமே அனுமன்.

அவனும் சடையன் காராளன்
அவன்தன் ஊரும் வெண்ணெய்நல்லூர்
இவனும் நலதம்பிக் காங்கேயன்
இவன்தன் ஊரும் மோரூராம்
அவனும் கண்ணன் சரராமன்
ஆகவ ராமன் இவனும்கண்ணன்
இவனும் அவனைப்போல் உலகுதனில்
இராம கதைதனைப் பாடுவித்தான். 6

6. நடையில் நின்றுஉயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே. —கம். பாயி. 11.

சடையப்பனுக்குக் கண்ணன், சரராமன் என்ற பெயர்கள் உண்டு. நல்ல தம்பிக்கும் ஆகவராமன் என்பது விருதுபெயர். இவன் கண்ணன், அதாவது கண்ணகுலத்தான்.

பால காண்டம்

1 ஆற்றுப் படலம்

—நதி பெருகியதே

நம்பன் நிறம்போலக் கடல்மேய்ந்து
நம்பி நிறம்போல முகில்மீண்டு
வெம்பும் இமவானை நீராட்டி
வெள்ளி விழுதுவிட்டருள் வள்ளல்போல்
செம்பொன் மணிஆரம் வணிகரைப்போல்
தேனார் மயிற்பீலி வானவில்போல்
தம்ப மறையோர்கைத் தானத்தைப்போல்
சரையு எனும்நதி பெருகியதே. 1

மலையும் மரமும்வல் விசையிற்கொண்டு
வாரி அடைக்கச்செல் கவிவெள்ளம்போல்
நிலையும் தெளிவின்றித் தேக்கெறிந்து
நிறைதேன் அளிமொய்க்கும் களியரைப்போல்
கலையும் மாவும்பல் கொடியும்கொண்டு
கடல்மேலும் போர்க்குச்செல் செய்கைபோல்
இலையின் மலர்ச்சுண்ணம் அகில்குங்குமம்
எங்கும் தன்மணம் வீசியதே. 2

1. கம்பர் 2, 4, 7, 8, 5 பாடல் காண்க.

நம்பன் - சிவன்; இவர் திருநீறு அணிந்திருக்கும் தோற்றம் வெண்மேகத்துக்கு ஒப்பு. நம்பி - திருமால். இமவான் - இமயமலை. இது பொன்னாக இருத்தலின் இதைப் பாதுகாக்கவும், மேலும் அழகாக்கவும், வெள்ளிக்கம்பிகளைக் குறுக்கும் மறுக்குமாகப் பின்னும்படி, தாரை தாரையாக மழை பொழிந்தது; அல்லது பொன்மலைமீது பெய்வதுதான் நமக்குத் தகுதி என்று வானம் வெள்ளி விழுது களை நெடுகிலும் இறக்கியது.

2. கம்பர் 9, 11, 13 பா காண்க.

மலைகளைப் பெயர்த்து மரங்களைப் பறித்துச் செல்வதால் வெள்ளம், கடலிலே அந்நாள் அணை கட்டிய வானர சேனை போன்றதாம். கதையின் பின் நிகழ்ச்சி இங்கே உவமையாகியது. வண்டுகள் மொய்க்கக் கரை கடந்து, நீரும் தெளிவின்றிக் கலங்கித் தேக்கு மரங்களைத் தள்ளிக்கொண்டுவரும் வெள்ளம், கள் குடியர்க்கு உவமை. கள் நாற்றத்தால் ஈக்கள் மொய்க்க, நெறி தவறி மனத் தெளிவின்றிக் கள்குடியர் தேக்கெறிந்து, ஏப்பம் விட்டு வருவார் அல்லவா? நால் வகைப் படைகளோடும் கொடிகள் பறந்தாட வீரமுழக்கம் செய்து போர்மீது போவார் போல ஆரவாரத்தோடு கடல்மேல் செல்லும் வெள்ளம்; அது விலங்குகளையும் கொடிகளையும் தள்ளிக்கொண்டு செல்லும் அல்லவா?

இரவி குலமன்னர் ஒழுக்கத்தைப்போல்
எல்லா உயிர்கட்கும் தாய்முலைபோல்
மரபில் எயினர்தம் சிலையும்அம்பும்
வலியிற் கொடுமன்னர் சேனையைப்போல்
உரவில் உறிவெண்ணெய் தயிர்பால்நெய்
உண்டு குருந்தொடு மருதம்உந்திப்
பரவி இடைமாதர் புனைகூறை
பரமன் போற்சூறை கொடுசென்றதே. 3

கதவும் விழமுட்டி ஓடைபொங்கக்
கடையர் மருதத்திற் கடகரிபோல்
பதவி முல்லையைக் குறிஞ்சிசெய்து
பாங்கின் மருதத்தை முல்லைஆக்கிச்
சிதைவில் நெய்தலை மருதம்செய்து
செல்லும் கதிபோலச் சோலைஎங்கும்
உதவி, அணைபொங்கிக் கழனிஎங்கும்
உடல்கொள் உயிர்போல் உலவியதே. 4

3. கம்பர் 12, 14, 15 பா காண்க.

ஒழுக்கம், தாய்ப்பால் போன்றது. வெள்ளம், பாலை நிலச் சிற்றூர்களிலே வேடர்கள் அஞ்சி ஓட, அவர்தம் வில் அம்புகளைக் கவர்ந்து ஊர்களைப் பாழாக்கி வரும். அவ் வெள்ளப்பெருக்கு, பகை நாட்டிலே மக்கள் குடிபெயர்ந்து ஓடக் கொள்ளையிட்டு, சூறையாடிச் செல்லும் சேனைபோன்றதாம். முல்லை நிலத்திலே தயிர் பால் வெண்ணெயை உறிகளோடு வாரிக்கொண்டு, குருந்து மருத மரங்களை முறித்துத் தள்ளி, ஆய்ச்சியரது கைவளை ஆடைகளைக் கவர்ந்து சரயு, மருதத்தில் பிரவேசித்தது. இது வெண்ணெய் கவர்ந்து, குருந்து ஒசித்து, மருத மரத்தை ஒடித்த கண்ணபிரான் செய்கை போன்றதாம். இராமாவதாரத்துக்குப் பிந்திய கிருஷ்ணாவதாரச் செய்தி இங்கே நினைவுகூரப்பட்டது.

4. கம்பர் 16, 17, 20 பா காண்க.

தான் அடைபட்டிருந்த கோட்டத்தின் கதவுகளை முட்டித்தள்ளி, ஓடை, நெற்றிப்பட்டம் ஒளிவீச வெறித்து ஓடும் மதயானை போன்றதாம் ஆற்று வெள்ளம். இது, மதகுகளைத் தகர்த்து ஓடைகள் நிரம்பி வழியும்படி பாய்ந்து செல்லும் அல்லவா? மலையிலே தோன்றி, பாலை முல்லை மருதம் நெய்தல் நிலங்களூடு செல்லும் வெள்ளப்பெருக்கு, முந்திய நிலத்துக் கருப்பொருள்களை அடுத்த நிலத்திலே கொண்டு குவிக்கும். இதனால் பல்வகைப் பொருள்களும் தத்தம் இடம்விட்டுப் பெயர்ந்து தடுமாறிக் கிடக்குமாம். இது போன்றதுதான் இருவினைகளும். இவை, தம்மைச் செய்த உயிர்கள் வெவ்வேறு கதிகளிற் சென்று பிறக்குமாறு, அவற்றை ஒன்றிவிருந்து மற்றொன்றுக்கு மாற்றி, அவ்வக் கதியிலே தொடர்ந்துசென்று பயனைத் துய்க்கும்படி செய்கிறது அல்லவா? எனவே செல்கதி வெள்ளத்துக்கு உவமை ஆயிற்று. அது, தேவரை மனிதர் ஆக்கி, மனிதரை மிருகமாக்கிச் செல்வதுபோல், வெள்ளமும், ஒரு நிலத்துப்பொருளை மற்றொரு நிலத்துப் பொருள் ஆக்கிற்று என்பதும் உண்டு.

2 நாட்டுப் படலம்

—கோசல நாட்டைப்பற்றியது

பொழில்இலகும் ஆற்றின்இயல் போற்றினேன்; காமன்
அழிவில்அம்பும் மாதர் விழிஅம்பும்—வழிவிலகாக்
கோசலநல் நாடும் குளிர்நீர் அயோத்திஎனும்
வாசநக ரும்துதிசெய் வாம். 1

புலவர்களே பொறுத்துக்கொள்ளுங்கள்

நாற்பதமும் படைத்தகவி
நல்தவவான் மீகமுனி
மேற்பதவா னவர்க்குஅமுதாய்
மிகப்புகழ்ந்த திருநாட்டை
ஆற்பதம்ஒன்று அறியாதுஎன்
அவமதியால் பிதற்றுகிறேன்
ஏற்பமுது வாய்ப்புலவீர்
இதுபொறுக்கை புகழ்உமக்கே. 2

மருதம் வீற்றிருக்குமே

வரம்புமடை குரம்புபள்ளம்
வளைதரளம் பொன்கழுநீர்
பரம்புசெந்நெல் கரும்புதண்கா
பவளம்அன்னம் தேன்அளிகள்
நரம்பின்இசை ஆலைஒலி
நதிமுழங்க மயிலாட
விரும்புகஞ்சம் விளக்குஏந்த
வீற்றிருக்கும் மாமருதம். 3

2. நாற்பதம் - வடமொழியிலே நான்கு பாதங்களையுடைய சுலோகங்களைக் காவியத்திலே முதன்முதல் பயன்படுத்தியவர் வான்மீக முனிவர்தான். வாங் கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பார் கம்பரும். ஆஸ்பதம் - ஆற்பதம்.

3. கம்பர் 2, 4 பா காண்க.

வரம்பு - வரப்புகளிலே வளை சங்கு, தண்ணீர் தாவி வரும். மடைகளிலே தரளம் – முத்து; குரம்பு - அணைகளிலே செம்பொன்; பள்ளங்களிலே கழுநீர் - நீலோற்பலம். பரம்பு அடித்த வயல்களிலே பவளம்; செந்நெல் பரப்பு எங்கும் அன்னம்; கரும்புக் காடுகளிலே தேன்கூடுகள்; தண்கா - குளிர்ந்த சோலைகளிலே

கண்ணுக்கு விருந்து

நீரில்வளை தாரில்அளி
    நிழலெருமை மலரினம்மை
போரில்அனம் தூர்ஆமை
    பொழிலில்மஞ்ஞை உறங்கிடவே
பாரில்அம்பொன் பணிலம்முத்தம்
    பன்மணிகள் செந்நெல்கன்னல்
காரிமள்ளர் மாதர்முகம்
    கண்மலரும் கழனியெலாம். 4

இலட்சுமிகரமே எங்கும்

மலரிற் படுகின்ற திருவும்வண்டும்
    வாரி படுகின்ற துகிரும்முத்தும்
இலவிற் படுகின்ற கலையும்மெய்யும்
    இளைஞர் படுகின்ற கணையும்கண்ணும்
பலவில் தேன்உண்டு யாழ்ப்பாணர்
    பாடும் குரல்மஞ்ஞை துயில்நீக்கும்
கலவிக் கடைசியர் அவயவம்போல்
    கடையர் களைஏதும் களையாரே. 5

அளிகள் - வண்டுகள்; நிரல் நிரையாகப் பொருள் கொள்க. யாழிசை போன்ற வண்டின் ரீங்காரம், கரும்பாலையின் அமலை, ஆறு பாய் அரவம்—இவை முழங்க, அந்தப் பின்னணியிலே மயில்கள் ஆடுமாம். தாமரை தன் பூ ஆகிய விளக்கை ஏந்த, மருதம் கொலு வீற்றிருக்குமாம். மருதம் - நதிதீரம் - வயலும் வயல்சார்ந்த இடங்களும்.

4. கம்பர் 6, 7 பா காண்க.

நீரிலே வளை - சங்கு, தார் - மாலையிலே, அளி - வண்டு, நிழலிலே எருமை, தாமரை மலரிலே திருமகள், நெற்போரிலே அன்னம், தூரிலே ஆமை, சோலையிலே மயில்—உறங்கியிருக்குமாம். பாரில் - உழுபடைச்சாலிலே பொன்னும், பணிலம் - சங்குகள் ஈன்ற முத்தும், கண்ணுக்கு விருந்தாய்த் தோன்றுமாம். செந்நெல் கதிர்களும், கரும்புப் பயிர்களும், உழத்தியர் முகமும் கண்ணும் மகிழ்ச்சியாக மலர்ந்திருக்குமாம். உறங்கிடவே, கண்மலரும்—இவற்றைக் கடைநிலைத் தீபகமாய் வைத்து இடந்தோறும் கூட்டிப் பொருள்கொள்க.

5. கம்பர் 5, 8, 10 பா காண்க.

மலர் - தாமரை. வாரி - கடல். துகிர் – பவளம். மக்கள் நாவிலே பொருந்துவன கலைப்பொருளும் மெய்ஞ்ஞானமுமே. காமுகரைத் தாக்குவன மன்மதன் மலர் அம்பும் மாதர் கண்ணுமே. யாழ்ப்பாணர் பாடும் இசைப்பாட்டுக்கள், மயிலைத் துயில் நீக்குமாம். உழத்தியரது கண், கை, கால், முகம், வாய் போன்றது என்று, களையாய்த் தழைத்த குவளை தாமரை அல்லி எதையும் உழவர் பறியாராம்.

மண்ணும் மணக்குமே

புனலாடிய மாதர் குழல்வாசம்
பொழிந்து மணநாறும் திரைவேலை
கனலா டியதேனும் மலர்த்தேனும்
கனித்தே னுடன்உண்டு களிக்கும்மச்சம்
மினலா டியமைந்தர் மார்பிற்சாந்தும்
விரைமென் சாந்தும்குங் குமமும்பங்கம்
எனலா வருமண்ணும் வண்டல்இட்டே
இசைவண் டினம்மொய்க்கும் எங்கெங்கும். 6

இவர்களே நாடெங்கும்

பருப்பும் அமுதும்நன் காயும்நெய்யும்
பாலும் பழமும்செந் தேனும்கண்டும்
விருப்பு மலர்ச்சாந்தும் அடைக்காயும்
விருந்தும் வேதியர்க்கு இடுவோரும்
அருப்பு முலையாரை வேட்பாரும்
அருட்கவி யும்பண்ணும் கேட்பாரும்
பொருப்பு நிகர்மைக் கடாக்கள்தனைப்
பொருத்தி வாரணம் பொருவாரும் 7

பூந்தண் கமலங்கள் முளைபேரப்
புலம்பச் சலஞ்சலம் மணியும்பொன்னும்
காந்தள் கயல்பாய ஆமைஅஞ்சக்
கடையர் உரப்பிக்கொண்டு உழுவாரும்
வாய்ந்த அனக்குஞ்சுக்கு எருமைதன்பால்
வாயிற் புகத்தேரை தாலாட்ட
ஆய்ந்த அரசன்னம் துயில்நீங்க
அளிசெவ் வழிபாட மகிழ்வாரும் 8

6. கம்பர் 11, 9, 12 பா காண்க.

புதுப்புனல் ஆடிய மாதர்களின் கூந்தல் மணத்தையே கடல் அலைகள் பரப்பிக் கொண்டிருக்குமாம். கனல் - கன்னல் - கரும்பு. கருப்பஞ்சாறு மலர்த்தேன் பழரசம் — இவற்றை உண்டு மீன்கள் எல்லாம் களிப்படையுமாம்.

7. கம்பர் 22, 16, 17 பா காண்க.

8. கம்பர் 18, 13, 14 பா காண்க.

உழவர்கள் கடாக்களை அதட்டி உழும்போது, கமலங்கள் வேரோடு பெயர்கின்றன, சங்குகள் கதறுகின்றன, மணியும் பொன்னும் மின்னுகின்றன, கயல் மீன்கள் பிறழ்கின்றன. ஆமைகள் ஓட்டினுள்ளே தலை கால்களைச் சுருக்கி அடக்கிச்

செந்நெல் அறுப்பாரும் சுமப்பாரும்
　　செழும்போர் குவிப்பாரும் பகுப்பாரும்
அந்நெல் அறம்செய்து மிகுந்தவற்றை
　　அணிவண் டியிற்கொண்டு வருவாரும்
பின்னை விருந்துண்ணச் சமைப்பாரும்
　　பெருங்கண் பிறைநுதல் மாதர்எல்லாம்
சொன்ன ஒழுக்கமும் குடிப்பிறப்பும்
　　சோராதே அன்னம் படைப்பாரும் 9

வீடுகளில் எல்லாம்

வருமெய் மனைதொறும் வெண்கழுநீர்
　　மலர்ச்செங் கழுநீரிற் கமுகிற்செல்லும்
எருமை இளங்கன்றை நினைந்துஒழுகும்
　　இன்பால் விளைசெந்நெல் வயலிற்செல்லும்
பெருமை இடைமாதர் கடையும்தயிர்
　　பெய்யும் வளைகூவச் சிதறிச்செல்லும்
கருமை விழிகண்டு பெடைவண்டுஎன்று
　　களிவண் டினம்மாதர் அருகிற்செல்லும். 10

நாசவேலை என்பது இல்லை

நெறிகடந்தது என்னில்வெள்ளம்
　　நிதிசுரக்கும் வேலைவங்கம்
குறிஅழிந்த சமரர்திண்தோள்
　　குலம்சுரக்கும் நல்லொழுக்கம்

கொள்கின்றன. எருமை தன் கன்றை நினைந்து சொரிந்த பாலை அன்னக்குஞ்சு பருகி, தேரை தாலாட்ட அது துயிலுமாம். அன்னம் துயில் விழித்து எழும்படி வண்டுகள் பள்ளி எழுச்சியாகச் செவ்வழிப் பண்ணை மது மயக்கத்தாற்போலும் வண்டுகள் காலையிலே பாடுகின்றன. இவற்றைக் கண்டும் கேட்டும் மகிழ்வாரே அந்நாடெங்கும்.

10. கம்பர் 26, 25, 28, 23 பா காண்க.

வீடுகளிலே அரிசி கழுவிய கழுநீர், வெள்ளமாய்ப் பெருகச் செங்கழுநீர்ப் படப்பை வழியே சென்று, கமுக மரங்களை வளர்க்குமாம். கன்றுகளை நினைந்து எருமைகள் சொரியும் பால், வயல்களிலே பாய, நெற்பயிர்கள் செழித்து வளருமாம்; கைவளை அரற்ற இடைச்சியர் கடையும் தயிர் நாலாப்பக்கமும் தெறித்து விழுமாம். மாதர்களின் மையுண்ட கண்களைத் தன் பெடை என்று கருதிய ஆண் வண்டு, ஆசைகொண்டு அம்மகளிர் அருகே செல்லுமாம்,

சிறியதென்றால் மாதர்இடை
செகம்சுரக்கும் பல்வளமும்
வெறியதென்றால் அவர்கூந்தல்
மெய்சுரக்கும் வசனம்எல்லாம். 11

பகை என்பது இல்லை

அகிற்புகைஆ லைப்புகையோ
அடுபுகைவேள் விப்புகையோ
முகிற்புகையோடு அளாவிஎங்கும்
முரசமுடன் முழுப்பகையாம்
பகற்பகைபூண் அணிமடவார்
பயோதரத்தின் பகைஇளநீர்
துகிற்புகைவெண் ணீரின்நுரை
சொற்பகைதான் இன்னமுதே. 12

எதிரி என்பது இல்லை

போரைநகும் மாதர்விழி ;
பொருப்பைநகும் நெற்போர்கள் ;
காரைநகும் சந்தனக்கா,
கன்னியர்பந்து ஆடுமிடம் ;

11. கம்பர் 40, 38 பா காண்க.

அந்நாட்டிலே கரைகடந்து செல்வது வெள்ளப் பெருக்குத்தான்; சட்டம் ஒழுங்கு மீறி நடப்பார் யாருமே இல்லை. கணக்கிலாத செல்வம் தருவது கடலிலே வரும் மரக்கலங்கள்தாம்; இப்படி இருந்ததாம் கடல் வாணிகம். அழிவு வேலை அங்கே நடப்பதில்லை; அழிவது வீரர்கள் பூசியிருக்கும் சந்தனக் குழம்பே. மக்களும் நல்லொழுக்கம் வாய்ந்த குடும்பங்களிலே வந்தவர்தாம். ஒழுக்கம் உடைமை குடிமை அல்லவா ? சிறுத்திருப்பது மாதர் இடைதான்; வேறு சிறுமை இல்லை. வெறித்து மணம் வீசியிருப்பது அவர் கூந்தல்தான்; மற்றபடி வெறியில்லை. மக்கள் வாயில் பயில்வது சத்தியமே.

12. கம்பர் 41, 45, 47 பா காண்க.

மகளிர் தம் கூந்தலுக்கு இடும் அகிற்புகை கரும்பாலையிலே எழும் ஒலைப் புகைதானோ, அடுக்களையில் எழும் புகை வேள்விக் குண்டத்தின் ஓமப்புகையோ, இனம் தெரியாவாறு இவை முகிலோடு கலந்து எங்கும் பரவியிருக்குமாம். முகிலின் இடியோடு முரசுகள் மாறுபட்டு முழங்குமாம். மாதர்கள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் சூரிய ஒளியை விஞ்சிப் பிரகாசிக்குமாம். அவர்தம் தனங்களோடு மாறுபடுவன செவ்விளநீர்களே; புகைபோலும் அவர் ஆடைகளுடன் இகல்வன நீர்நுரைகளே ; அவர் சொல்லுக்குப் பகை அமுதமே; மற்றபடி பகை என்பது அந்நாட்டில் இல்லை,

தேரை நகும் அல்குல்மொழி ;
    தேனை நகும் கந்தருவர் ;
ஊரை நகும் நந்தவனம் ;
    ஓதுமிடம் மைந்தர்களே. 13

வள்ளல்களே எங்கும்

கொடைசொரியும் வண்மைஇல்லை
    கொள்பவர்இல் லாததினால் ;
படைசொரியும் திண்மைஇல்லை
    பகைவர்கள்இல் லாததினால் ;
தொடைசொரியும் அளிநுகர்தேன் ;
    தொடைசொரியும் செவிநுகர்தேன் ;
கடைசொரியும் முன்றில்முத்தம் ;
    கலம்சொரியும் நவநிதியே. 14

வண்டிகளோ வண்டிகள்

எள்இறுங்கு சாமைதினை
    இன்துவரை பயறுஅவரை
கொள்ளுமுதற் கொள்ளும்வண்டில்
    கொழும்பாகும் மிளகும்உப்பும்
அள்ளும்எனும் சர்க்கரைதேன்
    அயிர்தயிர்பால் பாதைஎல்லாம்
தள்ளும்எனும் பெருநெருக்கால்
    தலைமயங்கும் செல்கதிபோல். 15

13. கம்பர் 46, 48 பா காண்க.

பொருப்பு - மலை. கன்னியர் பந்தாடும் இடம் சந்தனச்சோலை; மைந்தர் ஓதும் இடம் நந்தவனம்; மகளிர் மொழி தேனைவிட இனிமையானதாம்.

14. கம்பர் 53, 51, 39, 38 பா காண்க.

வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்—கம். 50.

கோதைகள் சொரிவன குளிர்இள நறவம்,
காதைகள் சொரிவன செவிநுகர் தேன்—கம். 51.

முன்றில்கள் அல்லன முத்தின் பந்தரே—கம். 39.

15. கம்பர் 54, 55 பா காண்க.

இறுங்கு - சோளம். அயிர் - கண்டசருக்கரை. எள் முதலிய பயறு வகைகளையும், பாகு, மிளகு, உப்பு, சர்க்கரை, தேன், தயிர், பால் முதலியவற்றையும் தனித்தனியே ஏற்றிவரும் வண்டிகள் வழி எங்கும் மிகப்பல. இடநெருக்கத்தால் எங்கும் அவை நிறுத்தப்படாமல் இடம்மாறிச் செலுத்தப்படுகின்றனவாம். ஆன்மாக்கள் தாம்செய்த வினைகளுக்கு ஏற்பப் பலகதிகளிலும் மாறிமாறிப் பிறப்பது போலத் தானாம். நாவிலப் பொருள்களும் இடம் மாறிச்சென்று விலையாவதை இவ்வாறு கூறுவார்.

எல்லை தெரியவில்லைதான்

பாவையர்தம் பாலகரைப்
    பால்அடிசில் ஊட்டிடும்கை
மாவைஅமர் செங்கமலம்
    வான்நிலவால் குவிவதொக்கும்
காவைஅணி திருநாட்டைக்
    காண்பவர்ஆர் சரயுஎனும்
பூவைபல கால்நடந்தும்
    பூமிஎல்லை கண்டிலளே. 16

16. கம்பர் 59, 60 பா காண்க.

தம் குழந்தைகளுக்குச் சங்கினால் பால் புகட்டும் தாய்மார்களின் கை குவிந்திருப்பது ஏன் தெரியுமா? கை - தாமரைப்பூ. சங்கு - நிலவு. நிலவுபடுவதால் தாமரை குவிந்தது. நாட்டின் எல்லையைக் காண்பது சாத்தியமே இல்லை. சரயுநதி பல கால்களால் ஓடியும் எல்லையைக் காண முடியவில்லையாம்.

3 நகரப் படலம்

— அயோத்தி நகரைப்பற்றியது

யானோ பேசவல்லேன்

கோசலநாடு எனும்பெயரால்
 குலவியநா னிலம்உரைத்தேன்
மாசலம்சூழ் மாசதுஇல்லா
 மருதவைப்பின் வளநகரைப்
பேசலரும் தவர்புகழ்ந்தார்
 பேதையனோ பேசவல்லேன்
வீசலரும் வீட்டுலகோர்
 மீளஎண்ணும் அயோத்தியையே. 1

பார்மகள்தன் வாள்முகமோ
 பயோதரமேற் பூடணமோ
சீர்மகள்வாழ் செழுமலரோ
 திருநெடுமால் திருவயிறோ
ஏர்மலிமூ வரும்காணா
 இந்நகர்போல் நன்னகர்தான்
ஊர்மதியும் சூரியனும்
 உலாவிஇன்னம் நாடுகின்றார். 2

இதுபோல் எங்கும் இல்லைதான்

எந்நலமும் எவ்வரசும்
 எத்தருவும் எக்களிறும்
மன்னவரும் மாதவரும்
 வானவரும் அவ்விடத்தை

2. கம்பர் 2, 3 பா காண்க.

திருமகள் வீற்றிருக்கும் தாமரை மலரேதான். அத்திருமகளின் அவதாரமான சீதாபிராட்டி உகந்த அயோத்தி. ஊழியின் இறுதியிலே உயிர்கள் யாவும் அடங்கும் இடம் திருமாலின் திருவயிறு. இது போன்றதுதான் அயோத்தியும். கொடிய பஞ்ச காலத்திலே மன்னுயிர் யாவும் தன்னிடம் வந்து தங்குதற்குரிய வளம் நிறைந்தது அல்லவா அந்நகரம். மும்மூர்த்திகளும் கண்டறியாத ஒன்றைச் சந்திர சூரியர் காண முயல்வார்போலச் சஞ்சாரம் செய்வது பேதமைதான்.

அந்நெடுமால் திருவுடனே
　　அனைத்துலகாண்டு அதிலிருந்தால்
இந்நகர்போல் ஒருநகர்தான்
　　இமையவர்நாட் டினில்உளதோ. 3

மதில் வருணனை

அருவரைநாற் சதுரம்இல்லை
　　ஆதலின்வேறு உவமைஇல்லை
ஒருவருநூ லால்பயத்தால்
　　உயர்வதனால் ஞானம்ஒக்கும்
தருவலியால் காவலினால்
　　சக்கரத்தால் தலைவர்ஒக்கும்
மருவருய்வா னுறவளர்ந்து
　　மாலும்ஒக்கும் மாமதிலே. 4

பன்னில்மெத்த வேதம்ஒக்கும்
　　பகைவர்ஒக்கும் பொறிஅடக்கம்
கன்னிஒக்கும் காவலினால்
　　காளிஒக்கும் சூலமதால்
மின்னிமைக்கும் சிலைமழுவாள்
　　வெல்கவண்கல் எறிதிகிரி
வன்னிஒக்கும் அணுகஒண்ணா
　　வத்துஒக்கும் மாமதிலே. 5

3. கம்பர் 6, 7 பா காண்க.

பூமியிலே உள்ள எல்லாப் பொருள்களும் இங்கே இருக்கின்றன. அங்கே தங்கியிருப்பவர் மன்னவர் மாதவர் வானவர்; இவர்கள் அதன் சிறப்பைப் புகழ்வர். திருமாலே இராமனாக அவதரித்துப் பிராட்டியுடன் வீற்றிருந்த இடம் ஆதலின், 'அந்நகர் ஒக்கும் பொன் நகர்' வேறெங்கும் இல்லை.

4. கம்பர் 8, 11 பா காண்க.

சிற்ப நூலின் விதிப்படி நாற்சதுரமான வரை - மலைகள் எவையும் இல்லை. எனவே மதிலுக்கு மலை உவமையாகாது. உயர்வற உயர்ந்திருப்பதால் உறுதிப் பொருள் நான்கையும் பயக்கும் ஞானத்தைப்போன்றதாம் அது. பரம்பொருளையே எட்டவல்ல ஞானத்தின் உயர்வுக்கு எல்லை இல்லை அல்லவா? உறுதியால் காவல் முறையால் ஆக்ஞா சக்கரம் செலுத்தும் தன்மையால் அரசரை அஃது ஒத்திருக்குமாம். வானுற வளர்ந்திருப்பதால் திரிவிக்ரமனையும் ஒக்குமாம்.

5. கம்பர் 8 பா காண்க.

மதிலின் உயரம் நுட்பங்களை முடியக் காண இயலாததால் அது வேதத்தைப் போன்றதாம். நகரத்தைக் காத்திருப்பதிலே துர்க்கையை ஒக்குமாம். உச்சியிலே

அகழி வருணனை

அதுமதிலாம் ஆழிவெற்பை
அலைசூழ்ந்தாற் போல்அகழி
பொதுமடவார் மனத்தாழ்ந்து
புன்கவிபோல் தெளிவிலதாய்
முதுநெறிக்குஓர் ஐம்புலன்போல்
முதலைஒன்றோடு ஒன்றுபொரக்
கதுவிஎதிர் காதுகின்ற
கார்அரக்கர் போலும்அன்றே. 6

சிலையதெனும் நுதல்மடவார்
திருமுகத்துக்கு ஓடியபூ
நிலைஅகழில் நிறைந்துபொர
நெடுமதிலை வளைந்ததொக்கும்
அலையதென்றே அவ்அகழில்
அணிநீரை மொண்டுகொண்டு
மலையதென்றே அம்மதில்மேல்
மாமேகம் பொழிந்திடுமால். 7

இடிதாங்கிச் சூலத்தைப் பெற்றிருப்பதால் காளியையும் அது ஒக்குமாம். சிலை மழு வாள் அனைய போர்ப் பொறிகளின் நாசசக்தியால் அது அக்கினியை நிகர்க்குமாம். எளிதில் தன்னை அணுகமுடியாத தன்மையால் பரம்பொருளையே அது ஒத்திருக்குமாம். வத்து-வஸ்து, பரம்பொருள்.

6. கம்பர் 3, 8 பா காண்க.

ஆழிவெற்பு - சக்கரவாளகிரி. இதைச் சூழ்ந்த அலை - அகழி பெரும் புறக்கடல் போன்றதாம். ஆழம் அறிய முடியாத அது பரத்தையர் மனம் போன்றதாம். மேலும் புன்கவி போலத் தெளிவு இல்லாது கலங்கியிருக்குமாம். அகழி நீரைக் கலக்கி ஒன்றோடொன்று முட்டி மோதித் திரியும் முதலைகள் அரக்கரைப் போன்றவையாம். விடாப்பிடியும் முரட்டுத்தனமும் வாய்ந்தவை அல்லவா அவை? மேலும் அவை நன்னெறியிலே நடத்த ஒட்டாப் பஞ்சேந்திரியம் போன்றவை.

7. கம்பர் 15, 16 பா காண்க.

சிலை - வில். ஓடிய - தோற்ற. பூ - தாமரை. தாமரை சிலவாக இருந்தபோது மகளிர் முகங்களுக்குத் தோற்றுப்போய் அவை செயல் அற்றுக் கிடந்தனவாம். இப்போது அகழியிலே அவை நிறைந்து பூத்து மிகத் திரண்டு வலிமை கொண்டு மகளிரோடு பொருதற்கு அறைகூவி வந்து, மதிலை வளைத்துக்கொண்டனவாம். அகழி கடலாக அதிலே நீருண்ட மேகம், மேல் எழுந்து போய் மலை என்று அம் மதில்மீது மழையைப் பொழியுமாம்.

குடையும்அன்னம் கரிமுதலை
குதிரைதிரை ஆயுதம்மீன்
மிடையும்மன்னர் சேனைஒக்கும்
விளிம்புவெள்ளி பளிங்குகட்டி
நடையும்அந்நீ ரும்தெரியா
நற்றவரும் சூழ்சோலை
அடையும்அம்மா நகர்மடந்தை
அணிநீல ஆடைஒக்கும். 8

கோபுரச் சிற்பம்

திக்கயம்போல் நான்மறைபோல்
செகமடந்தை மணிமுடிபோல்
மிக்கபெரும் கோபுரம்போய்
விண்ணளந்த பாதம்ஒக்கும்
தக்கநல்ஓ வியப்புறவைச்
சார்ந்தெனச்சே வலொடுஊடி
புக்கபெடை கற்பகமாம்
பூங்காவில் ஒதுங்கிடுமாம். 9

8. கம்பர் 19, 20 பா காண்க.

அன்னம் வெண்குடைகளாக, முதலைகள் யானைகளாக, அலைகள் குதிரைகளாக, மீன்கள் வேலும் வாளுமாக, அரசர் சேனையை ஒக்குமாம் அகழி. இதன் கரையை வெள்ளியால் கட்டிப் பளிங்குக் கற்களால் தளவரிசை போட்டிருப்பதால் அவ்விடத்துக்கும் அகழி நீருக்கும் வேறுபாடு தெரியவில்லையாம். மாநகர் மடந்தை உடுத்திய நீலநிற ஆடை போன்றதாம், அகழியைச் சூழ்ந்த சோலை. சோலைகளிலே தவசிகள் வசிப்பராம்.

9. கம்பர் 22, 23 பா காண்க.

நகரத்தின் நாற்புறமும் கம்பீரமாய் நிற்கும் கோபுரங்கள் நான்கும், திக்கயங்கள் - திசை யானைகள் போலத் தோன்றுகின்றன. மேலும், அவை வேதங்கள் போன்றவையாம், தம்வழியே நகரம் புகுவார் நெறி தவறாதிருப்பதால். பூதேவியின் மணிமுடி போன்ற அவை, திருமால் திரிவிக்கிரம மூர்த்தியாகி உலகு அளந்த திருவடிபோல வான் அளாவிச் சமைந்தன. அவற்றின் சிற்பமான பெண் புறாவின் பக்கத்திலே சேவல் - ஆண்புறா ஒன்று தங்கியிருக்க, அதைக் கண்டு ஊடல்கொண்ட அதன் பெடை, அதன் கண்ணிற் படாமல் கற்பகச் சோலையிலே புகுந்து மறைகிறதாம்.

மாளிகையின் விசித்திரம்

வச்சிரத்தால் தூண்நிறுத்தி
மரகதப்போ திகைநிரைத்து
அச்சிரம்செம் மணிப்பலகை
அடுக்கியபொன் மாளிகைகள்
மெச்சிரமா மேருஒக்கும்
வெண்சுதைதீற் றியமாடம்
நிச்சயமாம் பாற்கடலில்
நெடுந்திரையைப் போலும்அன்றே. 10

சந்திரகாந் தத்தலத்தில்
சந்தனத்தூண் நால்திசையும்
செந்தமனியத் துலாம்குயிற்றிச்
செம்பவளப் போதிகைமேல்
முந்துறமா ணிக்கம்எனும்
முழுப்பலகை பலபரப்பி
இந்திரநீ லச்சுவரால்
எண்ணிறந்த மாளிகையே. 11

வடிவுசெய்ய வாயதனால்
வளம்பெறும்பா டகக்காலால்
நடுவுதுய்ய பொன்தூண்கள்
நாடகம்செய் மாதர்ஒக்கும்
கொடிவிரவ மயில்உலவக்
குலமணிகள் அருவிஎன்ன
முடிவில்அருங் கிரிகள்ஒக்கும்
மொய்ம்மாடம் பலபலவே. 12

10. கம்பர் 29, 27 பா காண்க.

மேருமலையைப் போன்ற மாளிகைகளும் வெள்ளை வெளேரென்று சுண்ணாம்பு தீட்டிய மாடங்களும் உயர்ந்து ஓங்கி இருப்பது, சூறாவளி மோதுதலால் மேல்நோக்கிப் பொங்கி எழுந்த பாற்கடலின் அலைகள்போலத் தோன்றுகின்றனவாம். சிரம் - தலை, உச்சி.

11. கம்பர் 30 பா காண்க.

தலம் - தளவரிசை. தளவரிசை சந்திரகாந்தக் கல்தான். தூண்களோ சந்தன மரம்; துலாக்கட்டை செம்பொன்னால் ஆகியது; போதிகையும் பவளமே; பாவியிருக்கும் பலகையோ மாணிக்கம்; இந்திரநீலந்தான் சுவரும்.

12. கம்பர் 31, 35 பா காண்க.

பாடகம் - பாதசரம். கிரிகள் - மலைகள்.

ஆம், பொன்னுலகுதான்

வெற்பின்மிசை வாழைகள்போல்
மேலுயர்மா டக்கொடியால்
அற்புதமாம் மதிதேயும்
அகிற்புகைசேர் முகில்தேயும்
சொற்புணரி மணக்கும்என்றால்
சொரிதாரை மணக்கைபொய்யோ
பொற்புரிசை நகர்நிழலால்
பொன்னுலகா னதுவானே. 13

விளையாட்டு இடங்களிலே

மீளிமைந்தர் ஆடுமிடம்
வேழம்மெட்டு குழிநிறையத்
தூளிசுண்ணம் தூர்ந்திடுமாம்
தோகையர்பந்து ஆடுமிடம்
நீளியமுத் தாரம்அற்று
நிலாத்தழைக்கும் அவர்இடைபோல்
காளையர்தம் மனம்தேயும்
கனதனம்போல் வளரும்மயல். 14

வீடுகளிலே

பிறக்கும்இசை யால்குழலால்
பிரிந்தவர்தம் மனம்கொதிக்கும்
உறக்குமின்னார் சேவடியால்
உதைக்கில்அன்பர் புயம்சிவக்கும்

13. மலைமீது தோன்றும் வாழைக்காடு போன்றது, மாடங்களின்மீது உயர்ந்த கொடிகள்; இவை வானமதியைத் தேய்த்துக்கொண்டிருக்குமாம்; அகில் புகை சேர்ந்த கார்மேகத்திலும் படிந்திருக்குமாம். இம் மேகம் போய்த் தோய்ந்த கடலுமே அகில் மணம் கமழும் என்றால் அம் மேகங்கள் பொழியும் மழைத் தாரைகள் மணக்கும் என்பது பொய்யோ? மின்னல் போல வெயில் போலப் பொன் வேலைப்பாடுகளால் பொலிந்த மாநகரின் நிழல் பேரொளி சூழ்வதால் 'பொன்னுலகாயது புலவர் வானமே' - சுவர்க்க லோகமும் பொன்னுலகு ஆயிற்றாம்.

14. வீர மைந்தர் யானையொடு பொருது பயிற்சி செய்யும் இடங்களிலே யானைகள் வெகுண்டு தரையைத் தேய்த்துக் குழி பறிக்குமாம். இக் குழிகளை அவ்வீரர்கள் பூசியிருக்கும் சுண்ணப் பொடிகள் தூர்த்துவிடுமாம். பந்தாடும் இடங்களிலே மகளிரது ஆபரணங்களினின்றும் சிதறும் முத்துக்கள் நிலவு போல ஒளி பரப்புமாம். காம வேட்கை கொண்ட விடர்களின் மனம் அம் மகளிரின் இடைபோலத் தேய, மையல் அவர்தம் கனதனம் போல வளருமாம்.

நிறக்குமனை நெய்விளக்கோ
    நேரிழையார் மெய்விளக்கோ
சிறக்கும்அவர் வடிவுகண்டோ
    சித்திரங்கள் இமையாவே. 15

தெருக்களிலே

குதிரைமெட்டும் தூளியினால்
    குலமணிகள் சுடர்மறையும்
மதுகைமைந்தர் மாலைகளின்
    மதுத்துளியால் அவைவிளக்கும்
சதுரமின்னார் சதிவகுக்கும்
    சதங்கைகளும் பரித்தாளும்
அதிரவரும் கரிமதத்தால்
    அழுந்திடும்திண் தேர்க்காலே. 16

சுகந்தமே எங்கும்

வெங்கயமா மதம்மணக்கும்
    வேங்கையொடுஏ ழிலைப்பாலை
மங்கைநல்லார் வாய்மணக்கும்
    மலர்க்குமுதம் கற்பூரம்
அங்கவர்தம் குழல்மணக்கும்
    அகிற்புகையோடு இருவாட்சி
கொங்கைஇள நீர்மணக்கும்
    குங்குமமும் சுகந்தமுமே. 17

15. மாளிகைகளிலே ஒளி பரப்பி இருளைப் போக்குவது நெய் விளக்கோ? மகளிரது திருமேனியோ? விளக்குக்கு நெய்யும் திரியும் வேண்டும்; மகளிர் மேனியோ அவை வேண்டாது தன்வளவிலே பிரகாசிப்பது. மனைக்கு விளக்கம் மடவார் அல்லவா? இவர்தம் வடிவழகைப் பார்த்து 'எழுது சித்திரங்களும் இமைப்பிலாதவே'.

16. குதிரைக் குளம்புகள் கிளப்பிவிடும் புழுதி படிவதால் அதன்மீது சவாரி செய்யும் விரர் அணிந்திருக்கும் ஆபரணங்கள் ஒளி மழுங்கி மறையுமாம். அவர்தம் மலர்மாலைகள் தேனைச் சிந்தி அப் புழுதியைப் போக்குவதால், அணிகலன்கள் ஒளிர்கின்றனவாம். நாடக மகளிரின் சதி வகைகளை இனங்காட்டுவன, கணுக்காலிலே அவர் அணிந்துள்ள சதங்கைகள்; இவை அல்ல என்றால் நாட்டியக்குதிரைகளின் கால்கள். யானையின் மதநீர் வழிந்த சகதியில் தேர்கள் வழுக்கி அழுந்திடுமாம்.

17. வேங்கைப்பூவும் ஏழிலைப்பாலையும் யானையின் மதம்போல மணக்குமாம். குமுத மலர் போலவும், கற்பூரம் போலவும் மணக்குமாம் மகளிர் வாய். இவர்தம் கொங்கை இளநீர்தானாம். பூசியிருக்கும் குங்குமக் கலவை 'கமகம' என்று மணம் வீசுமாம்.

சாளரவா சல்மலரும்
　　தையல்நல்லார் முககமலம்
வாளரவேல் கணைஎறிய
　　மதன்அனையர் புயத்துஅழுந்தும்
தாளநவச் சிலம்பொலியும்
　　சங்கொலியும் குழல்இசையும்
நீளரவம் போற்செவியுள்
　　நெஞ்சரவம் பிரிந்தோர்க்கே. 18

கடல் முழக்கம் கெட்டது

வந்திதொறும் மறைஒலியும்
　　மன்னர்திறை யிடும்ஒலியும்
சந்திதொறும் முழவொலியும்
　　தானம்எங்கும் கரிஒலியும்
பந்திதொறும் பரிஒலியும்
　　பயில்வீரக் கழல்ஒலியும்
கந்திருவர் பாட்டொலியும்
　　கடல்ஒலியை அடக்கும்அன்றே. 19

பொழுதுபோக்கு

சொற்பொருள்சேர் பலகலையும்
　　சொலப்பொழுது போம்காலை
பற்பலநல் விருந்துடனே
　　பகற்பொழுதுஇன் அமுதுஉண்போர்
நற்பன்னீர் மலர்உகந்து
　　நகப்பொழுது போம்மாலை
அற்பொழுது கலவியிற்போம்
　　அயோத்திஉள்ளார்க்கு அனுதினமே. 20

வாட்கையினில் சிலைபயிற்றி
　　வரப்பொழுது போம்சிலர்க்கு
பூட்கைஎதிர் எதிர்பொருந்திப்
　　பொரப்பொழுது போம்சிலர்க்கு

18. மாளிகைகளின் சாளரங்களிலே மகளிர் முகமாகிய தாமரை மலர்ந்திருக்குமாம். அம்மலரின் வேல்களாகிய கண்கள் ஆடவர் புயங்களிலே ஆழப் பதியுமாம். அரவம் - பாம்பு.

20. அற்பொழுது - அல் - இரவு நேரம்.

வேட்கையினால் ஊடலினால்
மிகப்பொழுது போம்சிலர்க்கு
தாட்கையினில் தோள்கனிவாய்
தரப்பொழுது போம்சிலர்க்கே. 21

மேதாவியே எல்லாரும்

கொடியாரும் எழில்மதில்மேல்
கோபுரமேல் மாளிகைமேல்
வடியாவான் ஆறுவற்ற
வாரிஉண்ணும் மாமுகில்போல்
மிடியாரும் இலாததினால்
வெறுமைஇல்லை செல்வர்இல்லை
படியாதார்இல் லாததினால்
படிறரும்மூ டரும்இலையே. 22

இரப்பவரும் இல்லை

வரைப்புனமும் புனற்கரையும்
மணற்குவையும் மலர்ச்சயனம்
முரட்டகையும் கடலும்அஞ்ச
முரசமதிர் அயோத்திதனில்
கரப்பவர்இல் லாததினால்
காவல்இல்லை எப்பொழுதும்
இரப்பவர்இல் லாததினால்
ஈபவரும் தான்இலையே. 23

21. பூட்கை - யானை - கொள்கை.
தாட்கையினில் - தாழ்க்கை - தாமதிக்கையில்.

22. நானாவிதமான கொடிகள், வான்ஆறு - ஆகாய கங்கை வற்றிப் போம் படி, தம் நுனிகளால் அதன் நீரை வாரி உண்ணுமாம்.

கல்லாது நிற்பார்பிறர் இன்மையில் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை அவைவல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை, உடையவர்களும் இல்லை மாதோ.

—கம். 74.

23. கள்வார் இலாமைப் பொருள்காவலும் இல்லை யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ. —கம். 73,

அரசன் எப்பேர்ப்பட்டவன் தெரியுமா?

கல்விமுதல் கேள்விபணை
　　கனதவம்தா னம்தழைபூ
நல்விதமாம் புத்திமுத்தி
　　நறும்கனியாம். நகர்க்குஅரசன்
சொல்விரிவாம் இக்கதைக்குஓர்
　　சுவாமிஇரா மனைப்பயந்தோன்
வல்விறல்ஏழ் உலகாள்வான்
　　மன்னர்மன்னன் தசரதனே. 24

செய்யாத யாகம்இல்லை
　　திகிரிமுதல் ஏவல்செய்யும்
தொய்யாமல் அன்னைபிதா
　　சுற்றமுமாம் எவர்க்கும்அவன்
எய்யாநூல் ஆய்ந்துவென்றான்
　　இரப்போரை ஈந்துவென்றான்
வெய்யாரைக் காய்ந்துவென்றான்
　　மின்னாரைத் தோய்ந்துவென்றான். 25

24. கல்வி, முதல் - விதை; கேள்வி, பணை - கிளை; தவம் - தழை; தானம்-பூ; புத்தி - ஞானத்தால் அடையலாகும் முத்தி - நறுங்கனி.

25. கம்பர் 4, 5 பா காண்க.

ஈந்தே கடந்தான் இரப்போர்கடல்; எண்இல் நுண்நூல்
ஆய்ந்தே கடந்தான் அறிவுஎன்னும் அளக்கர்; வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை; கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவின்தொடர் போக பௌவம்.

—கம். 5.

4 திருஅவதாரப் படலம்

— இராமனாகத் திருமால் அவதரித்தது

உயிருக்குள் உயிர்

சூழிவெள்ளம் புள்மிருகம்
    தொக்கவேசை யர்மனமும்
வாழியொரு நெறிநடத்தும்
    மன்னர்மன்னன் தசரதற்கு
ஆழிவரை மாமதிலாய்
    அகழிபெரும் புறக்கடலாய்ப்
பாழிவரை மாளிகையாய்ப்
    பார்முழுதும் அயோத்திஒக்கும். 1

பகைதேயும் வேல்தேயா;
    பணியும்மன்னர் பன்முடியின்
வகைதேயும் கழல்தேயா;
    மதிதேயும் குடைதேயா;
மிகைதேயம் ஒருபுனஞ்செய்
    வேளாண்போல் உயிர்க்குயிராய்—
தொகைதேயா இரவியைப்போல்
    தொல்லுலகை ஆளுகின்றான். 2

1. வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர் உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்—என்பார் கம்பரும். வெள்ளம் வருதலும் வற்றுதலும் இன்றி எப்போதும் ஒரே சீராகச் செல்லுமாம்; காரணம் மழை வளம் பிழையாமை. இது அரசன் செங்கோலால் ஆவது. பறவைகளும் விலங்குகளுமே தம்முள் இனப்பகை இன்றியும் மாந்தர்க்குத் தீங்கு செய்யாமலும் வசிக்கின்றனவாம். வேசையர்கூட ஒருவனுக்கே வாழ்க்கைப்படுவராம். நகரத்துக்கு நான்கு புறத்திலும் மதில்; மதிலுக்கு வெளியே அகழி: உள்ளே மாட மாளிகைகள்—இப்படியே உலகத்திற்கும் சக்கரவாளகிரி மதில்; அம்மலையைச் சூழ்ந்த பெருங்கடல் அகழி; இமயம், பொதியம் முதலான மலைகளே மாளிகைகள். எனவே ‘பூமியும் அயோத்தி மாநகரம் போலும்’.

பிள்ளைப்பேறு இல்லையே

மன்னர்மன்னன் தசரதனும்
வசிட்டமுனி தனைவணங்கி
அன்னைபிதா தெய்வமும்நீ
அறுபதினா யிரவருடம்
உன்னருளால் உலகாண்டேன்
உலகைஎன்பின் யார்புரப்பார்
என்னஉளம் வருந்துகின்றேன்
என,முனிவன் மனத்துணர்ந்தான். 3

ஈது முன் நிகழ்ந்தவண்ணம்

அரக்கமன்னர் கொடுமைஎல்லாம்
அரற்குஅமரர் உரைத்ததுவும்
உரைக்க,அவன் கொல்லேன்என்று
உம்பருடன் சென்றதுவும்
விரைக்கமலத்து அயனொடும்தான்
மேருவில்ஓர் மண்டபத்தில்
கரக்கமலம் குவித்துஇறைஞ்சிக்
கண்ணனையே போற்றியதும், 4

கைத்திகிரி சங்கேந்திக்
கருடன்மிசைத் தோன்றியதும்
பத்திவிண்ணோர் பணிந்துகுறை
பகர்ந்ததுவும், பாயலுடன்
இத்திகிரி சங்குஇளையோர்
எனவருவோம் தசரதன்பால்
புத்திஉண்டாம் வானரராய்ப்
போதும்இன்று என்றுஓதியதும், 5

3. என - என்ன - என்று.

4. அவன் - அரன். அயன் - பிரமன். கண்ணன் - திருமால்.

5. பாயல் – ஆதிசேடன். திகிரி - சக்கரம். ஆதிசேடனும் சக்கரமும் சங்குமே தம்பியராய்த் தசரதனுக்குப் புதல்வர்களாய் பிறப்போம்; நீங்கள் வானரராய்ப் பிறப்பெடுங்கள்,

செங்கருடன் மீதேறித்
　　தேவன்எழுந் தருளியபின்—
சங்கரன்நான் அனுமன்என,
　　சதுமுகன்நான் சாம்பன்என,
வெங்கதிர் சுக்ரீவன்என,
　　விண்ணவர்கோன் வாலிமகன்
அங்கதன்நான் என,தழலோன்
　　நீலன்என்றே ஆனதுவும், 6

அனைத்துவிண்ணோர் வானரராய்
　　அவனிதனிற் பிறந்தமையும்
மனத்திலெண்ணி, வதிட்டமுனி
　　மன்னர்மன்னன் தனைநோக்கி,
நினைத்தவண்ணம் மைந்தர்உண்டாம்
　　நிறைவேள்வி செய்விஎன,
எனத்தவனை வணங்கிமன்னன்
　　எவ்வகையான் செய்வதுஎன்றான். 7

கலைக்கோட்டு முனிவன் வரலாறு

காசிபன்சொல் விபாண்டகன்சேய்
　　கலைக்கோட்டு மாமுனியாம்
தேசிகனால் வேள்விசெய்தாற்
　　செகதலம்ஏ ழும்புரக்கும்
மாசில்புகழ் மைந்தர்உண்டாம்
　　மன்னவனே என்றுஅருள,
ஆசில்முனி எங்குளன்என்று
　　அவன்கேட்க முனிஉரைப்பான். 8

6. சங்கரனே அனுமன்; பிரம்மன் சாம்பன் (ஜாம்பவான்) ஆக; இந்திரன், வாலியும் அங்கதனும் ஆக; சூரியன் சுக்கிரீவன் ஆக; அக்கினி நீலனாகத் தோன்றினர். வாயு பகவானது அமிசம் மாருதி (அனுமன்). சங்கரனும் மாருதியுடன் கலந்தான் என்பார் கம்பர். சங்கரனது அமிசம் மாருதி என்பதும், இந்திரன் அமிசம் அங்கதன் என்பதும் வான்மீகத்தில் இல்லை.

7. தவன் - வசிட்டன்.

8. காசிபன் - எல்லா உயிர் இனங்களையும் ஈன்றவன். இவரால் பூமிக்குக் காசினி என்னும் பெயர் ஏற்பட்டது. இவருடைய புதல்வர் விபாண்டகர். இவரது புதல்வர்தான் இருசிய சிருங்கர் என்ற கலைக்கோட்டு முனிவர். முகத்திலே மான் கொம்பு ஒன்று உடையவராய்ப் பிறந்தார்; ஆதலின் அப்பெயர் பெற்றார். திறமைசாலியை நாம் கொம்பன் என்பது இவரது நினைவாற் போலும். ஆண் பெண் பால் வேறுபாடு அறியார்; மக்களையும் விலங்குகளாகவே கருதுபவர் அவர்.

ஊனம்இலா மனுகுலத்தோன்
உத்தான பாதன்அருள்
ஆனபுகழ் ரோமபதன்
அங்கவள நாடுதனில்
மானமழை மறுத்திடலால்
மறையவரைக் கேட்க,அவர்
மோனர்தொழும் கலைக்கோட்டு
முனிவரில்வான் பொழியும்என்றார். 9

மனிதரையும் மிருகம்எனும்
வரனைஎங்ஙன் கொணர்வதென,
கனிதருவாய்க் கணிகையர்கள்
கடிதெழுந்து கொணர்தும்என,
இனிதுஅரசன் செல்லும்என,
ஏந்திழையார் தொழுதுசென்று
முனிதலம்ஓர் யோசனைபோய்
முனிவரைப்போல் இருக்கைசெய்தார். 10

தாதைஇல்லா இடம்அறிந்து
தவமகனாம் இருடிசிங்கன்
பாதமலர் பணிந்தவரைப்
பரிந்துஅவனும் முனிவர்என்றே
மாதகவான் பூசைசெய்ய,
வாழைபலா மாங்கனிதான்
ஆதரவாய் எம்மிடத்தும்
அமையநீர் வருகவென்றார். 11

9. மனுவின் மரபிலே தோன்றிய உத்தானபாதன் என்பான் புதல்வன் உரோமபதன், அங்கநாட்டை ஆளுகிறான். இந்நாட்டிலே மழையின்றிப் பஞ்சம் ஏற்பட்டது. கலைக்கோட்டு முனிவர் இங்கே வந்தால் மழை பெய்யும், பஞ்சம் தீரும் என்று வேதியர்கள் சொன்னார்கள். மானம் - வானம் - நாட்டு வழக்கு.

10. மனிதரையும் விலங்குகள் என்றே கருதும் காட்டுவாசியான அம் முனிவரை நாட்டுக்குள் அழைத்து வருவது எப்படி? கணிகை மகளிர் சிலர் நாங்கள் சென்று அழைத்து வருவோம் என்று விடைபெற்றுப் போய், முனிவரது ஆசிரமத் துக்குச் சிறிது தொலைவில் பன்னசாலை அமைத்து, வஞ்சகத்தால் அவரை வசப் படுத்தக் கருதித் தவசிகள் போல வேடமணிந்து தங்கினர்.

11. விபாண்டகர் இல்லாத சமயம் பார்த்து அப் போலித் தவசிகள் கலைக் கோட்டு முனிவரிடம் சென்று, அவரை வணங்கி நின்றனர். இவர்களை அவரும் தவசிகள் என்றே வரவேற்று உபசரித்தார். அப் போலித் தவசிகள் பழங்களைக்

ஆய்ந்தகுண மாதருடன்
அங்கவள நாடுபுக
வாய்ந்தபெரு மழைபொழிய
மறைவலவன் வரவறிந்து
வேந்தன்எதிர் கொண்டுஇறைஞ்சி
வியன்நகரில் பூசைசெய்து
சாந்தைஎனும் தன்மகளைத்
தவற்குநன்னீ ருடன்கொடுத்தான். 12

உலகம்எங்கும் வளம்சுரக்க
ரோமபதன் மகள்போற்ற
அலகில்முனி இருந்தனன்என்று
அம்முனிவன் கூறுதலும்,
திலகம்உற அடிவணங்கித்
தெசரதனும் கொணர்வன்என்றே
இலகுபடை புடைசூழ
இரதமிசை ஏகினனே. 13

முனிவனைத் தசரதன் அழைத்துவந்தான்

அரசர்பிரான் வரவுஎதிர்கொண்டு
அடிவணங்கி ரோமபதன்
முரசதிர நகரியிற்போய்
முழுமணிஆ சனத்துஇருத்தி
வரிசைபெறும் பூசைசெய்து
வந்ததுஎன்நீ என்ன,எல்லாம்
உரைசெயக்கேட்டு அருந்தவனை
உன்நகர்க்கே கொணர்வன்என்றான். 14

கொண்டு சென்று. அருந்து என அம் முனிவர்க்கு அன்போடு தந்தனர். இப்படியே சில நாள்கள் சென்றன. ஒரு நாள் தங்கள் ஆசிரமத்துக்கு வரவேண்டும் என்று முனிவரிடம் விண்ணப்பித்து நின்றனர். இவர்கள் விரித்த வலையில் வீழ்ந்தார் அவரும். இவர்கள் அம் முனிவரைத் தொட்டும் தழுவியும் கட்டி அணைத்தும் இன்புறுத்தினர் என்பது வான்மீகம்.

14. போய் - போய்ச்சேர.

தானையுடன் தன்னகர்க்கே
    தயரதன்தான் சென்றதற்பின்,
ஞானமுனி தனைவணங்கி
    நறைகமழ்தார் ரோமபதன்
ஆனபுகழ் அயோத்திவந்து
    அருந்தவநீ மீள்க-எனத்
தேனனசொல் தேவியொடும்
    தேர்மிசைகொண்டு ஏகினனே. 15

அந்தரதுந் துபிமுழங்க
    அமரர்கள்பூ மழைபொழிய
வந்தனன்மா முனிவன்என,
    மன்னன்எதிர் கொண்டிறைஞ்சிக்
கந்தநகர் மண்டபத்தில்
    கதிர்மணிஆ சனத்திருத்தி
முந்தவசிட் டர்முதலா
    முனிவருடன் மகிழ்ந்திருந்தே ; 16

புத்திரகாமேட்டி யாகம்

எங்கள்குலம் செய்தவம்நீர்
    எழுந்தருளிற்று என்றவனை,
உங்கள்குல வசிட்டர்இருந்து
    உனக்குஅரிதுஏ தென்று,பின்னும்
துங்கமகப் பெறுமகம்நீ
    தொடங்களன்றே கலப்பைமுதல்
மங்கலமாம் பொருள்ஈட்டி
    மன்னனைமஞ் சனம்ஆட்டி ; 17

முத்தழல்ஆ குதிசொரிந்து
    முன்னான்கு திங்களின்பின்
மெத்தமகம் நிறைவேற
    விண்ணவர்பூ மழைபொழிய

15. அயோத்திக்கு என்னுடன் வந்து மீள்க என்றான் உரோமபதன்.
17. உங்கள் குலகுருவாய் வசிட்டர் இருக்க உனக்கு அரிது எதுவும் இல்லை.

அத்தழலின் பொற்கலத்தே
ஆரமுதம் சுமந்தெழுந்து
வைத்ததொரு தேவதைதான்
மறிந்தும்அங்ஙண் மறைந்ததுவே. 18

இன்னமுதைத் தசரதனுக்கு
இருடிசிங்கன் தான்அருளி,
மன்னவஉன் தேவியர்க்கு
வரன்முறையாக் கொடுத்திடுஎன,
கன்னல்மொழிக் கௌசலைக்கும்
கைகையரா சன்மகட்கும்
நன்னலம்சேர் சுமித்திரைக்கும்
நாலுபங்காய் நல்கினனே. 19

உறையுள்மறை வேள்விமுற்றி
உம்பருக்கும் வேதியர்க்கும்
வரையின்உயர் தானம்நல்கி
மன்னவர்க்கும் வரிசைசெய்து
சரயுவின்நல் நீராட்டித்
தசரதன்தான் தொழவாழ்த்திப்
புரையதுஇல்லாக் கலைக்கோட்டுப்
புனிதன்எழுந் தருளினனே. 20

பிள்ளைப்பேறு வாய்த்தது

நேசம் புனர்பூசம் கற்கடகம்
நெடுமால் தனைப்பெற்றாள் கோசலைதான்;
பூசம் தனில்மீன லக்கினத்தில்
புத்திர னைப்பெற்றாள் பூவைகைகை;

18. அமுதம் - பிண்டம் - சோற்றுத்திரள் (பாற்பாயசம்).

19. அமுதம் - சோற்றுத்திரளைப் பகிர்ந்து அளித்த முறையைப் பலவிதமாகக் கூறுவர். முதலிலே கோசலைக்குப் பாதி; மீதியுள்ள பாதியிற் பாதி சுமித்திரைக்கு; பின் எஞ்சியதிற் பாதி கைகேயிக்கு; இறுதியிலே எஞ்சியதை மீண்டும் சுமத்திரைக்குத் தந்ததாக வான்மீகம் கூறும். மூவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, பங்கிடும்போது பிதிர்ந்ததைத் திரட்டி மீண்டும் சுமித்திரைக்குக் கொடுத்ததாகக் கூறுவர் சிலர். இக்கூற்றே கம்பருக்கு உடன்பாடுபோலும். இருமுறை தனித்தனியே கொடுக்கப்பெற்றதால் சுமித்திரை இரு புதல்வரைப் பெற்றாள்.

தேசம் புகழ்ஆயில் யம்கடகம்
செல்வன் தனைப்பெற்றாள் சுமித்திரைதான்,
வாசம் புனைசிங்கம் மகம்தழைக்க
மற்றும்ஒரு நல்லமக னைப்பெற்றாள். 21

அமரர் அனைவரும் அரம்பையரும்
ஆடிப் பாடிநின்று அலர்சொரிந்தார்;
குமரர் பிறந்தமை தாதியர்தாம்
கூற, முனியுடன் கோவேந்தன்
தமர நீராடித் தானம்செய்து
தனையர் முகம்கண்டு தரணிக்கெல்லாம்
அமர ஏழாண்டு இறைவேண்டாம்
என்று மணிமுரசு அறையச்சொன்னான். 22

தேவா லயமும்அந் தணர்மனையும்
சிறக்க நகர்எங்கும் அலங்கரித்துப்
பூவார் களபத்தொடு எண்ணெய்சுண்ணம்
பொழிந்து, தெருஎங்கும் புகன்றவர்க்கு
மாஆ டையும்பொன்னும் நிதியும்நல்கி
வசிட்ட முனிவன்பதி மூணாம்நாள்
நாவா கவேதேவ தேவனுக்கு
நாமம் பகர்ந்தான் இராமன்என்றே. 23

ஆழி ஆழ்வானைப் பரதன்என்றும்
அனந்தன் தனைஇலக்கு மணன்என்றும்
வாழி வளைச்சத்ருக் கன்என்றும்
மகிழ்ந்துஓதி யேநாலு வேதமும்போல்

21. புனர்பூச நட்சத்திரம் கற்கடக லக்கினத்தில் இராமன் பிறந்தான். பூச நட்சத்திரம் மீன லக்கினத்தில் பரதன் பிறந்தான். ஆயிலிய நட்சத்திரம் கடக லக்கினத்தில் இலக்குமணன் பிறந்தான். மக நட்சத்திரம் சிங்க ராசியில் சத்ருக்கன் பிறந்தான். இலக்குமணனுக்கும் சத்ருக்கனுக்கும் ஒரே லக்கினம்—ஆயிலியமும் கடகமும் கூடிய காலத்திலே பிறந்தனர் என்பது வான்மீகம்; மேலும் அது தேவியர் கருவுற்றிருந்த காலம் 12 மாதம் என்கிறது.

23. பன்னிரண்டு நாள்கள் தீட்டு; பதின்மூன்றாம் நாள் நாமகரணம். இராமன் - எல்லோரையும் மகிழ்விப்பவன்; மெய்ப்பொருளுக்கே இராமன் எனப் பெயர் ஈந்தனன் என்பார் கம்பர்.

ஊழி முதலோர்நன் னடையும்சொல்லும்
உகந்த சவளமொடு உபநயனம்
பாழி மதயானை தேர்பரிமாப்
பயின்று கலைகற்று வளர்ந்தனரே. 24

புனித ராமனும் இலக்குவனும்
போலப் பரதனும் இளையவனும்
இனிதுஅந் நகருள்ள சனம்வாழ்த்த
ஈரேழ் உலகமும் புகழ்ந்துஏத்த
மனித வடிவாகி வளர்ந்தருள
மன்னர் மன்னனும் தேவியரும்
தனிதண் மதிக்குடை மேல்விளங்கத்
தரணி காத்துஇன்பம் உறுநாளில் 25

24. ஆழி ஆழ்வான் - சக்கரத்தின் அமிசம் ஆகிய பரதன் - எதையும் தாங்குபவன். அனந்தன் - ஆதிசேடன் அமிசம்—இலக்குமணன் - இலக்கணங்களுக்குப் பொருந்தியவன். வாழிவளை - பாஞ்சசன்னியம் - சங்கின் அமிசம்—சத்ருக்கனன் - சத்ருக்களை அழிப்பவன். இவ்வாறு வசிட்டர் பெயரிட்டார் என்பது வான்மீகத்தில் இல்லை. நாராயணனே தம்மை நான்கு கூறாக்கிக்கொண்டு நான்கு புதல்வர்களாய் அவதரித்தான் என்று இது கூறும்.

25. இன்பம் உறுநாளில் விசுவாமித்திரன் வந்தான்.

5 கையடைப் படலம்

—விசுவாமித்திரரிடம் இராமலக்குமணரை
அடைக்கலமாகத் தசரதன் கொடுத்தது

இராமனை என் பின் அனுப்பு

ஏந்தல் மகவான் இவன்எனவே
    இரத்ன மண்டபத்து இனிதுஇருந்த
வேந்தர் வேந்தனைக் காணவந்த
    விசுவா மித்திரன் தனைவணங்கிச்
சூர்ந்த பரிவால் பூசித்து,எம்
    குலம்செய் தவம்வந் தருளிற்றுஎன்ன-
ஆய்ந்த முனிஎங்கட்கு உதவிஇந்த
    அயோத்தி திருப்பாற் கடல்,இதென்றே. 1

சம்பர னைக்கொன்று நீஅளித்த
    தலம்அன்றோ இந்த்ரன்இன்று ஆளுகின்றான்
செம்பொன் உலகு,என்ன- மகிழ்ந்துமன்னன்
    சிறந்தேன் இனி,என்ன செய்வதுஎன்ன-
இம்பர் தவத்திற்குஓர் காமாதி
    என,என் வேள்வியை அரக்கர்என்னும்
வம்பர் அழிக்காமற் காக்கஉந்தன்
    மகனாம் இராமனைத் தருதிஎன்றான். 2

1. மகவான் - இந்திரன். என்ன - என்று தசரதன் கூற. பரிவு - அன்பு.
யான், வலம்செய்து வணங்க, எளிவந்த இது முந்துஎன்
குலம்செய் தவம்என்று இனிதுகூற முனிகூறும். —கம். 7.

2. சம்பராசுரனால் அரசிழந்த இந்திரன், தசரதனிடம் முறையிடவே, தசரதன் இந்திரனுக்கு உதவியாகச் சம்பரனுடன் போர் புரிந்து அவனைக் கொன்று இந்திரனுக்கே ஆட்சியை நல்கினான். தவவேள்விக்கு இடையூறாய் வந்து தடுக்கும் சுபாகு - மாரீசர் என்ற அரக்கர்க்குக் காமக்குரோதங்கள் உவமை. காமம் வெகுளி மயக்கம் என்ற குற்றங்கள் மூன்றனுள் காமம் வெகுளிகளுக்குக் காரணம் அவிச்சை (மயக்கம்) அல்லவா? சுபாகு (காமம்), மாரீசன் (வெகுளி)—இவர்களுக்குத் தாய் தாடகை. இவர்களை ஒழிப்பதற்கு இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு கேட்டான் விசுவாமித்திரன்.

அந்த வாசகம் செவிசுடலால்
அந்தகன் கண்பெற்று இழந்தாற்போல்
சிந்தை தடுமாறிச் சிறிதுஆறிச்
சிறியர் இவர்,மெத்த வலியர்ஒன்னார்
உந்தன் பெருவேள்வி யான்காப்பேன்
உடனே எழுகென்ன; உலகம்அஞ்ச;
வந்த முனிவன் முனிவுஆற
மன்னா, கேள்என்று வசிட்டன்சொல்வான். 3

உயிரே போனதுபோலத்தான்

மாரிப் பெருவெள்ளம் கடற்பெய்தல்போல்
வரும்உன் மகற்குஆன வரம்,என்ன,
சீரிற் குருமொழி மீறாமல்
சேயை வருகெனத் தம்பியுடன்
பாருக்கு இறைநல்க; முனிவாழ்த்தப்
பரமன் தூணியும் வாளும்கட்டி
மேருச் சிலைகொண்டு நகர்நீங்கி
வேந்தன் உயிர்போல் முனிபின்சென்றான். 4

இங்கன் சரயுநல் ஆறுஏறி
ஏழு புரவியும் வான்ஏறத்
துங்க வேள்வியின் புகைஏறும்
சோலை ஏதென்று பரன்கேட்கக்
கங்கை வேணியன்யோ கம்தன்னைக்
காமன் அழிக்கஅக் காமனைத்தான்
அங்கம் அழித்ததுஇங்கு அதனாலே
அங்க நாடென்று முனிவன்சொன்னான். 5

3. கண்இலான் பெற்று இழந்தான்என உழந்தான்
கடுந்துயரம் கால வேலான். —கம். 12.

5. ஏழுபுரவியும் வான்ஏற - சூரியோதயத்தில். கங்கைவேணியன் - சிவனார்.

6

தாடகை வதைப் படலம்

—இராமன் தாடகையைக் கொன்றது

பற்றி எரிகிறதே பாலை

மாதவனாம் கவுசிகனும்
    மாதவனும் இளையவனும்
போதவனம் பலகடந்து
    போக,அங்கோர் பாலைவனம்
ஆதவனும் சுரர்கணமும்
    அடுங்காற்றும் இயக்கம்அற்று
மோதவரும் அசனியையும்
    முகிலையும்மின் னையும்சுடுமால். 1

அணிவெடிக்கும் கள்ளியின்கார்
    அகில்வெடிக்கும் கரிபுகுவாய்ப்
பணிவெடிக்கும் செம்மணியால்
    பார்வெடிக்கும் குருதிஒக்கும்
மணிவெடிக்கும் கழைக்கானல்
    வான்நதிதான் வளைந்ததுஒக்கும்
எணிவெடிக்கும் கயவர்சொல்லால்
    எரிமனம்போல் எரிசுரமே. 2

1. ஆதவன் - சூரியன். அசனி - இடி.

2. கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் என்பர். பணி - பாம்பு. பாம்பு வாய் திறந்து சிந்திய மாணிக்கங்கள், பார்மகள் தன் உடம்பிலே தோன்றிய புண் கிழித்து ஒழுகும் இரத்தம் போன்றன. எணி வெடிக்கும் கயவர் - எண்ணிப் படபட என்று பேசும் கயவர்.

> .... எரிசுடர்க் கடவுளும்
> கருதின், வேம்உள்ளமும்; காணின், வேம்நயனமும். —கம். 5.
>
> படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகரும்நா
> முடியவேம்; முடியமுடு இருளும்வான் முகடும்வேம்;
> விடியுமேல், வெயிலும் வேம்; மழையும் வேம்; மின்னினோடு
> இடியும் வேம்; என்னில், வேறு யாவை வேவாதவே? —கம். 6.

அவள் பெயர் தாடகை

ஆள்இயக்கும் அற்றதுஎன
அருளாளன் கேட்க,முனி
நீள்இயக்கன் சுகேதுமகள்
நெடுங்களிற்றா யிரம்வலியாள்
வாள்இயக்கன் சுந்தனுக்குஅம்
மாரீசன் சுவாகுஎன்னும்
மீளிஒக்கும் மைந்தர்பெற்று
மிகமதத்தாள் தாடகையே. 3

மலையமிசை மான்மரையை
வதைக்கஅகத் தியன்சீறித்
தொலையஎரி எழவிழித்துச்
சுந்தனைக்கொன்று அவன்மனையாள்
புலையள்தா டகைதனையும்
புதல்வரையும் இராக்கதராய்
உலையஎன்றே சாபம்இட
உறவுகொண்டார் சுமாலியையே. 4

பற்பலநாள் சுமாலியுடன்
பாதளத்து உறைந்துஇதுநாள்
மற்பயில்தோள் ராவணற்கு
மாமர்என்று அங்குஇருவருமே
நற்பெருவேள் வியைஅழித்து
நலிந்துஉலகை வருத்துகின்றார்;
வெற்பனையாள் கொன்றுதின்றே
விளிந்ததுஅங்க நாடதெல்லாம். 5

3. சுகேது என்ற யட்சன் தவம் செய்து பெற்ற பெண்பிள்ளைதான் தாடகை. இவள் சுந்தன் என்பானை மணந்து மாரீசன், சுபாகு என்ற இருவரைப் பெற்றாள்.

4. தன் புதல்வர்கள் (மாரீசன், சுபாகு) மாயையில் தேர்ந்து வளர்ந்துவந்த போது சுந்தன் செருக்கோடு அகத்தியர் ஆசிரமத்திலே மான்மரைகளை வதைக்க, அகத்தியர் கோபித்து நோக்கவும் சுந்தன் எரிந்து சாம்பலானான். அதனால் தாடகை வெகுண்டு தன் புதல்வர்களுடன் அகத்தியரை அணுகவே அம் முனிவன் சாபத்தால் அவர்கள் அரக்கர் ஆயினர்.

5. சுமாலி - இராவணன் தாயாகிய கேகசிக்குத் தந்தை. இவன் உடன்பிறந்தோர் மாலியும் மாலியவானும். சுபாகு, மாரீசர் சுமாலிக்கு அபிமானபுத்திரர் ஆயினர். இவர்களால் பாழ்பட்டதுதான் அங்கநாடு.

அவள் வந்தேவிட்டாள்

என்றுமுனி மொழியஎங்கோன்
எங்குஉறைவாள் அரக்கிஎனக்
குன்றுதனில் உறைவள்என்று
கூறும்முன்னே, தாடகைதான்
வன்திறலாள் மழைஇடிபோல்
வாய்தெழித்துத் தீவிழித்துத்
தின்றுபசி யான்கெடவோ
சேரவந்தீர் எனநகைத்தாள். 6

பேசியசொற்கு இராமபிரான்
பெண்என்று பொறுத்துநின்ற
வாசிகண்டு, கவுசிகன்தான்
மாதுஎனவே நீநினைந்தாய்
கூசி,அண்ட நாண்மைஉற்றாய்
கூற்றுவற்கும் கூற்றுஇவள்தான்
ஆசில்அறம் கெடுத்தவள்பால்
அருள்செலுமோ ஐயஎன்றான். 7

கன்னிப்போர்தான் இது

எவ்வினையும் நீபணித்தால்
எனக்குஅறமாம் எனஇசைந்தான்
அவ்வியல்கண் டாள்சூலம்
அரக்கிவிட்டாள் மதிக்கரவாய்,
வெவ்வில்வளைத்து இராமபிரான்
விடும்கணைதே வரும்காணார்
தெவ்வியல்கா லனைப்பறித்த
திரிசூலம் சிதறல்கண்டார். 8

7. பெண்என மனத்திடை பெருந்தகை நினைந்தான். —கம். 35.
இக்கொடி யாளையும் மாதுஎன்று எண்ணுவதோ. —கம். 37.
அறம் கெடுத்தவட்கு ஆண்மையும் வேண்டுமோ. —கம். 40.

இது, கம்பன் பாடமாய் தற்போது வழங்குகிறது. எம்பெருமானார், 'அறம் கெடுத்தவட்கு ஆரருள் வேண்டுமோ' என்று பாடம் கொண்டார்.

8. .... அது செய்கஎன்று ஏவினால்
மெய்ய நின்உரை வேதம் எனக்கொடு
செய்கை அன்றோ அறம் செயும்ஆறு என்றான், —கம், 44.

கன்மழைதான் அவள்சொரிந்தாள்
    கணைமழையால் இவன்தடுத்தான்
தின்மழைபோல் அவள்நாக்கும்
    செவியும்அற இளவல்எய்தான்
நன்மழைமே வியன்கணைதான்
    நல்லர்புல்லர்க்கு உரைத்தசொற்போல்
அன்மழையாம் நெஞ்சுஉருவி
    ஆவிஅறப் போயினவே. 9

வரக்கரியோன் கணைக்காற்றால்
    மழைஇடிமின் விழுவனபோல்
அரக்கருக்குஓர் துற்குறியாய்
    அறும்கொடியும் செக்கரும்போல்
இரக்கம்இல்லாள் இக்கதிவீழ்ந்து
    இறந்தனள்தா டகை;அறிந்தார்
திரக்கடவுட்கு அமரர்படை
    செழுமுனியே கொடுத்திடுஎன்றார். 10

10. மேகம், மின்னொடும் அசனியோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள்.
—கம். 50.

முடியுடை அரக்கற்கு அந்நாள் முந்தி உற்பாதம் ஆக
படியிடை அற்று வீழ்ந்த வெற்றிஅம் பதாகை ஒத்தாள். —கம். 51.
கடவுள் - இராமன்.

7 வேள்விப் படலம்

— விசுவாமித்திரர் வேள்வி செய்தது

நல்லதம்பிதான் அவன்

இனத்திற் பெரியவன் மோரூரான்
 இந்திர தருஅர்த்த நாரிக்கண்ணன்
கனத்திற் குமணன் ஆகவராமன்
 கருணை நலதம்பிக் காங்கேயன்
மனத்திற் குடிகொண்ட ராமபிரான்
 மகிழக் கவுசிக மாமுனிவன்
தினத்திற் புறத்தேவல் அடிமைசெய்யும்
 தெய்வப் படைக்கலம்சே ரத்தந்தான். 1

சித்தாசிரமம்

இளையோன் அகத்துஏவல் அடிமைசெய்ய
 யாங்கள் புறத்தேவல் எனும்அவற்றைக்
கிளையாம் எனக்கைக்கொண்டு இருகாதம்
 கெழுமி நடந்தொரு சோலைகண்டார்;
தளையார் தொடைமைந்தன் இதுஎன்,எனத்
 தலைவன் அலாதுஒரு தெய்வம்நெஞ்சில்
விளையா தவர்போலப் பவித்திரம்காண்
 விட்டுணு நூறாழி வேள்விசெய்தான். 2

1. தெய்வத்தன்மை வாய்ந்த ஆயுதங்களை விசுவாமித்திரன் இராமனுக்கு வழங்கினான்.

 விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே
 கண்ணெனும் கானம் நீங்கித் தாங்கரும் தவத்தின் மிக்கோன்
 மன்னவர் வறுமை நோய்க்கு மருந்துஅன சடையன் வெண்ணெய்
 அண்ணல்தன் சொல்லே அன்ன படைக்கலம் அருளி னானே.

—கம். 1.

2. இலக்குவன்போல அகத்தும் புறத்தும் ஏவல் செய்யும் அந்த ஆயுதங்களைச் சொந்தமாகக்கொண்டு இராமன் வழிநடந்தான். தங்கள் கணவரை அன்றித் தெய்வம் வேறு இல்லை என்று கருதும் கற்புடைய நங்கையர் மனம் போலப் பவித்திரம் - தூயது சந்தனச்சோலை,

மாவலி வரலாறு

அவ்வாறு ஏதெனில் மாவலியால்
அலைந்து சுரர்,மாலை அடிபோற்றச்
செவ்வாய் முகில்வண்ணன் காசிபன்தன்
தேவி அதிதிதன் திருவயிற்றில்
வெவ்வா மனன்ஆகி, மாபலிதன்
வேள்வி தனில்மண்மூ வடிவேண்ட,
இவ்வாறு அளந்துகொள் என,வெள்ளியாம்
இயல்மந் திரிமாயன் இவன்எனவே, 3

கரிய மால்எனில் ஈதுஅன்றிஓர்
கனத்தம் எனக்குஉண் டோவேறு;
பரிய வருதன்மம் புகழும்நிற்கும்
பகையே லோபம்அல் லாமல்உண்டோ?
உரிய கொடைநன்று, தீதுகொள்ளல்
ஒண்ணாது எனில்சுற்றம் உடுக்கைஉண்கை
அரியது- எனச்சொல்லி அவன்மாலை
அடிமூன்று அளந்துகொண்டு அருள்எனவே; 4

நீர்ஏற் றுற,வளர்ந்து இருதாளால்
நிலமும் வானமும் அளந்து,உலகைச்
சீர்ஏற்று இந்திரன் தனக்குஅருளித்
திருவும் புவியும்தன் அடிவருடப்
பேர்ஏற் றமதான பாற்கடலிற்
பெருநா கணையில்கண் வளரப்புக்கான்,
போர்ஏற்று எழில்வெற்றிச் சிலைவீரா
புண்ணிய தலம்இது வேள்விக்குஎன்றான். 5

3. சுரர் - தேவர். மால் - திருமால், வெள்ளி - சுக்கிராசாரியன்.
மாயன் - வஞ்சகன், திருமால்.

4. கனத்தம் - பெருமை; எனக்கு இதன்மேல் நலம் யாது என்றான்.
கொள்வது தீது கொடுப்பது நன்றால். —கம். 19.
ஈந்தவர் அன்றி இருந்தவர் யாரே. —கம். 20.
நல்லாறு எனினும் கொளல்தீது மேல்உலகம்
இல்எனினும் ஈதலே நன்று. —வள்ளுவர்.
கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். —வள்ளுவர்.

5. நீர் ஏற்றுற - தாரை வார்த்துக் கொடுக்க,

அழிந்தனர் அரக்கர்

திருவ னுடன்தம்பி காத்துநிற்கத்
　　திரமா முனிவேள்வி செய்யப்புக்கான்
இருவர் தமில்முன்னோன் முனியைநண்ணி
　　என்று வருவார்கள் அரக்கர்என்றான்
குருவும் மவுனமொடு இருக்க,மைந்தன்
　　கும்பிட்டு ஏகி,விண் தனைப்பார்த்தான்
பருவ முகில்போல் இடித்துஅடர்த்துப்
　　பல்லா யிரங்கோடி பாணம்விட்டார்.　　6

முனிவன் மொழிந்தவர் இவர்கள்என்று
　　முன்னோன் காட்டக்கண்டு இளவீரன்
இனி,வன் கொடியோர்கள் அடியன்கையால்
　　இறக்கும் படிபார்என்று இறைஞ்சிச்சொல்ல,
நனிவன் நிருதர்தம் பிணச்சோரி
　　நடத்தும் மகத்தீயில் விழும்என்றுஎண்ணித்
தனிவன் பெருவீரத் தனுவளைத்துத்
　　தலைவன் வனைந்தனன் சரக்கூடம்.　　7

விடத்தால் விடையோனை அடைஅண்டர்போல்
　　விமலா சரண்என்ற முனிவர்க்குஎல்லாம்
தடத்தா மரைக்கையால் அபயம்நல்கிச்
　　சரத்தால் அரக்கரைத் தரைப்படுத்தித்
திடத்தாட கைமைந்தன் மூத்தோனைத்
　　திரைஆழி யில்விட்டுமற்று ஒருவன்தன்னைப்
படத்தான் மாறாடப் பேய்க்கணங்கள்
　　பாட ஆடின கவந்தங்களே.　　8

7. நனி - மிகுதி. வன் - வலிய. தனி - தனித்த, வன்மை.

8. விஷம் வரக்கண்டு சிவனாரிடம் அடைக்கலம் அடைந்த தேவர்கள் போல.

எதுவும் அரிது இல்லை

அந்தர துந்துமி முழங்கவிண்ணோர்
அரியே சரண்என்றுஅங்கு அலர்சொரிந்தார்;
தந்தர முனிவோர்கள் ஆசிசொன்னார்;
தழல்வேள் வியைமுற்றிக் கவுசிகன்தான்,
சுந்தர உலகுஎல்லாம் வயிற்றில்வைத்துச்
சோரா வகைகாக்கும் உனக்குஅரிதோ
இந்தினம் இயல்வேள்வி காத்தவண்ணம்
என்தன் பாக்கியம் என,உரைத்தான். 9

விசுவா மித்திரன் எனவிளங்கும்
விரும ரிஷிதனை வணங்கி,எங்கோன்
எசுவா ரணம்வல்ல தவத்தோனே
இனிமேல் யான்செய்யும் பணிஏதுஎன்றான்;
சிசுவா உனக்குஎதும் அரிதுஒன்றுஇல்லை
சிறந்த செயல்உண்டு செய்கைமுன்னே
வசுவார் சனகன்தன் மகமும்கண்டு
வருவோம் எழுகஎன்று எழுந்துசென்றான். 10

9. இந்தினம் - இத்தினம் - மெலித்தல் விகாரம்.

10. விருமரிஷி - பிரமருஷி. எசு ஆரணம் - யஜுர் வேதம். வசு - செல்வம்,

8 சமுத்திர மதனப் படலம்

— கடலைக் கடைந்தது

சோணை நதிக்கரையில்

கற்பூண் அணிஆரம் புளினக்கொங்கை
    கயற்கண் இடைவஞ்சி அறல்கூந்தல்
சொற்பூ மேகலை சிலம்புஒலிகால்
    சோண நதிகண்டார்; இளைப்பாறி
வெற்பூடு ஆதித்தன் கடல்குளிக்க
    வியன்தா மரைக்கோயில் கதவடைக்கப்
பொற்பூர் களிவண்டும் பெடையும்தங்கும்
    பூஞ்சோ லையில்தாமும் புக்குஇருந்தார். 1

முனிவர் சோலையின் வரலாறு சொல்கிறார்

மெய்யன் கேட்கநன் முனிவன்சொல்வான்
    விட்ணு பதத்தோர்வித் தியாதரப்பெண்
தையல் மலர்மாதைப் புகழ்பாடத்
    தனது முடிமாலை அருள்செய்தாள்
துய்ய திருமாலை யாழில்கட்டிச்
    சோதி நான்முகன் உலகில்வந்தாள்
செய்ய முனிதுருவா சன்கண்டான்
    திருவுக்கு இசைபாடும் தெரிவைஎன்றே. 2

கம்பராமாயணப் பதிப்புகள் சிலவற்றில் அகலிகைப் படலம் என்று, 86 செய்யுள்கள் இடம் பெறுகின்றன. இவற்றுள் முதல் 31 செய்யுள்கள் துர்வாசப் படலம்; அடுத்த 31 செய்யுள்கள் கங்கை வரலாற்றுப் படலம்; எஞ்சிய 24 செய்யுள்கள் அகலிகைப் படலம் என்று ஏட்டுச் சுவடிகளிலே காணப்படுகின்றன.

தக்கை ராமாயணத்திலே துர்வாசப் படலம், சமுத்திர மதனப் படலம் என்று பெயர் பெறுகிறது.

1. அணி ஆரம் அணிந்த கொங்கை, புளினம் - மணற்குவியல் போன்றதாம். கயல் போலும் கண். வஞ்சி - கொடி போலும் இடை. அறல் - கருமணல் போலும் கூந்தல். புதுமலர், மேகலை, சிலம்பு போல் அலம்பும் வாய்க்கால்களையுடைய சோண நதி; சோணைதான் அது. உருவகம். ஆதித்தன் - சூரியன், அத்தமித்தான்.

'கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான்போல் கடல்குளித்தான்' —கம். 2.

2. மைய்யன் - இராமன். மலர் மாது - இலட்சுமி.

ஆன புகழ்மாதை அடிவணங்க
    ஆதி நாயகியாள் திருமாலை
ஞான முனிகொள்களன்று அவளும்நல்க,
    நான்செய் தவம்என்று நடம்ஆடித்
தான மாலையை முடியில்வைத்துத்
    தவனும் சுரர்நாடு தனிற்செறிந்தான்;
வான மகவானும் பவனிவந்தான்
    வானோர் சூழவெள் ஆனையின்மேல். 3

வெள்ளி மலைமேல்ஆ யிரம்பங்கயம்
    விரிந்து கதிர்சூடி வரும்கார்போல்
வெள்ளி நிலவுஈனும் குடைநிழற்ற
    வெண்சா மரைவீசத் தெய்வமின்னார்
துள்ளி நடமாடப் பேரிபம்பை
    தும்புரு நாரதர் இசைபாடத்
துள்ளி மதுமாலை வாசவன்தான்
    தோன்றும் பவனிகண்டு உளம்மகிழ்ந்தான். 4

மகிழ்ந்த முனிஅந்தத் தொடையைநல்க
    வாங்கி அயிராவ தத்துக்குஇட்டான்
இகழ்ந்து மதயானை பறித்துஎறிய
    எரிந்து முனிசீறிப் புரந்தரனைத்
திகழ்ந்த திருமாலை தவத்திற்பெற்றேன்
    செருக்கால் இகழ்ந்தாய்உன் செல்வம்முற்றும்
அகழ்ந்து கடல்கொள்க எனச்சபித்தான்
    அனைத்தும் கடல்கொண்டது அமரர்அஞ்ச. 5

கண்ணன் மோரூரான்

ஆனை பரிதேரும் நவநிதியும்
    அரமங் கையர்களும் அமுதம்முற்றும்
ஏனை முழுவதும்தண் கடலிற்செல்ல
    இமையோர் இரிந்தார்;என் போல்என்றால்,

3. தவன் - தவசி - துருவாசன். மகவான் - இந்திரன்.
4. வாசவன் – இந்திரன்.
5. புரந்தரனை (இந்திரனை)ச் சபித்தான்,

மான பரன்கண்ணன் மோரூரான்
　　வரிசை நலதம்பிக் காங்கேயன்
சேனை வரக்கண்டு கலங்கிஒன்னார்
　　சேனை திசைஎங்கும் சிதறுகைபோல். 6

கதை தொடர்கிறது

மிகுந்த உலகெங்கும் வறுமையினால்
　　மெலிய அமரரும் சிவன்அயனும்
முகுந்தன் திருமுன்னே போற்றிசெய்து
　　முனிவன் முனிவால்உற் றதுகூறத்
தகுந்தண் மலர்க்கையால் அபயம்நல்கி,
　　சசிதூண் மலைமத்தில் பணித்தாம்பால்
புகுந்து அசுரரொடு மருந்துபெய்து
　　புணரி கடைமின்என்று அருள்புரிந்தான். 7

சந்திரன் தூண்ஆக மருந்தைவிட்டுத்
　　தாழிக் கடலைவா சுகித்தாம்பால்
மந்தர கிரிமத்தால் அவுணரொடும்
　　வானோர் கடைஆண்மை வலிஒய,

6. அரம டந்தையர் கற்பகம் நவநிதி அமிர்தம்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கத்து
ஒருவ ரும்பொருள் இன்றியே உவரிபுக்கு ஒளிப்ப
வெருவி ஓடின கண்ணன்வாழ் வெண்ணெய்மே வாரின்.

இதை மிகைப்பாடல் அல்லது இடைச்செருகல் என்பார் கூற்று சிந்தனைக் குரியது. அகலிகைப் படலம் 18ஆம் பாடலாக வை. மு. கோ. பதிப்பில் இந்தப் பாடல் பின்வருமாறு காணப்படுகிறது:

அரம டந்தையர் கற்பகம் நவநிதி அமிர்தம்
சுரபி வாம்பல மதமலை முதலிய தொடக்கற்று
ஒருபெ ரும்பொருள் இன்றியே உள்ளன எல்லாம்
வெருவி ஓடிப்புக்கு ஒளித்தன விரிதிரைக் கடலின்.

இறுதி அடி ஏடுகளில் பலவிதமாகக் காணப்படுகிறது.

அ. வெருவி ஓடினர் விண்ணவர் கண்ணன் மேவாரின்.
ஆ. வெருவி ஓடினர் விண்ணவர் வெண்ணெய் மேவாரின்.
இ. வெருவி ஓடின வெண்ணெய்வாழ் கண்ணன் மேவாரின்.

7. சந்திரன் அடை தூணாக, மந்தர மலை மத்தாக, வாசுகி கடை கயிறாகக் கொண்டு அசுரருடன் சேர்ந்து 'கடல் கடையுங்கள்'. முகுந்தன் - திருமால், சசி - சந்திரன்.

முந்த ஆமையும் தானேஆய்
முதுகில் வரைகொண்டுஆ யிரம்தோளால்
செந்திரு வாளன் கடைந்துஎடுத்தான்
சேரக் கடல்கொண்ட பொருள்கள்எல்லாம். 8

அணியும் பரமற்குப் பிறையும்நஞ்சும்
ஆகண்ட லற்குஉள்ள வளமும்நல்கி
மணியும் திருவும்தன் உரத்துஅணிந்து
மாமோ கினியான மால்அருளால்
பணியும் இமையவர் அமுதம்உண்ண,
பகைத்தா னவர்மாள, திதிஎனும்தாய்,
திணியும் அமரரை வதைக்கஒரு
சேய்தா எனக்,காசி பனைக்கேட்டாள். 9

பாரில் தவம்செய்என்று அவன்கூறப்
பருவம் ஆயிரம் தவம்புரிந்தாள்;
சீரிற் புரந்தரன் அவள்வயிற்றின்
சேயை அறுத்துஎழு கூறுசெய்தான்
பேரிற் சொலஏழு மருத்தர்என்றே
பிறந்த இடம்இங்கே; இதனுக்குஅப்பால்
வேரிச் சடையற்குக் கங்கைபெற்ற
விசாகன் சரவணம் எனவும்சொன்னான். 10

8. வரை - மலை.

..........................கடைந்து ஓய
திறல்கொள் ஆமையாய் முதுகினில் மந்தரம் திரிய
விறல்கொள் ஆயிரம் தடக்கைகள் பரப்பி மீவலிப்ப
கடல் கடைந்தான். திருவாளன் - திருமால்.

9. கடலிலே தோன்றிய பிறையையும் நஞ்சையும் சிவனார் ஏற்றுக்கொண்டார். மற்றச் செல்வங்களை இந்திரன் பெற்றுக்கொண்டான். கௌத்துவ மணியையும் சிதேவியையும் திருமால் அடைந்தான். இக்கருத்து அமைந்த பாடல் கம்பனிலும் பயில்கிறது. அது வருமாறு :

வெருவும் ஆலமும் பிறையும் வெள்விடை யவற்குஈந்து
தருவும் வேறுள தகைமையும் சதமகற்கு அளித்து
மருவு தொல்பெரு வளங்களும் வேறுற வழங்கித்
திருவு டன்மணி அணிந்தனன் சிதர மூர்த்தி.

10. திதி என்பவள், தன்னைக் கொல்லும் புதல்வனைப் பெறத் தவஞ் செய்கிறாள் என்பதை அறிந்த இந்திரன், அவளுக்குப் பணியாளனாய் அமர்ந்து, சமயம் பார்த்து, நுண்ணிய உருவங்கொண்டு அவளது வயிற்றினுள் நுழைந்து அவள் தரித்திருந்த கருவை ஏழு துண்டங்களாகச் சிதைத்தான். இந்த எழுவரும் மாருதர் என்று பெயர்பெற்று எங்கும் சஞ்சரித்திருக்கின்றனராம். கந்தன் அபிமானிகளான இவர்களைச் சப்த மருத்துக்கள் என்பர். சரவணம் - நாணற்காடு. குமார சம்பவம் கூறிய வான்மீகி, சரவணத்தைக் குறிப்பிடவில்லை.

9 கங்கை வரலாற்றுப் படலம்

— கங்கையின் வரலாறுபற்றியது

சகரன் - சாகரர்

நந்து தினகரன் உதயம்செய்ய
    நடந்து மூவரும் கங்கைகண்டார்
இந்த நதிஉண்மை அருள்என்றுஎங்கோன்
    இயம்பக் கவுசிக முனிசொல்வான்
உந்தன் குலமன்னர் சகரன்கற்போர்
    உரியோர் இருவரில் விதர்ப்பைபெற்ற
மைந்தன் போசனன் சுமதிபெற்ற
    மைந்தர் அறுபதி னாயிரம்பேர். 1

சமுத்திரம் - சாகரம்

அசுவ மேதம்செய் நாள்,அண்டர்கோன்
    அசுவம் கபிலன்பின் ஒளித்துவைத்தான்
சசுவன் போசனன் மகன்குமரன்
    தாதை தாதைக்குச் சொலச்,சகரன்
சிசுவ ருடன்கூற, சகரர்எல்லாம்
    தேடி நவகண்டம் செய்துமண்கீழ்
வசுவன் கபிலன்பின் வடகிழக்கில்
    வாசி தனைக்கண்டு முனியைவைதார். 2

1. சகரன் தேவியருள் மூத்தவள் விதர்ப்பை, இளையவள் சுமதி. விதர்ப்பைக்குப் பிறந்தவன் அசமஞ்சன்; இவனையே போசனன் என்பது. இவன் மகன் அஞ்சுமான். சகரனுக்குச் சுமதியிடம் பிறந்தவர் அறுபதினாயிரவர் - சாகரர். சகரனுக்குக், கற்போர் - கற்புடைய மனைவியர் இருவர்.

2. யாகக் குதிரையை இந்திரன், பாதளத்திலே தவம் புரியும் கபிலன் பின் புறத்திலே மறைத்து வைத்தான். அம் முனிவன் தவம் கலைந்து கண்விழித்துப் பார்ப்பானானால் அப் பார்வையிலே பட்டது எரிந்து சாம்பலாகும். போசனன் மகன் அஞ்சுமான். சகரன் சிசுவர் - சகரன் புதல்வர் சாகரர். நவகண்டம் செய்து - நூறு யோசனை அகலமும் ஆழமும் குழியும்படி பூமியைத் தோண்டிப் புதிய உலகம் செய்து. வாசி - குதிரை.

அந்த மாமுனி கபிலன்கண்ணால்
அறுபதி னாயிரம் சகரர்களும்
வெந்து பொடிஆனார். அதுகேட்டு
வேந்தன் சகரன்வெந் துயர்மூழ்க-
வந்து மலைபோல்வெண் ணீறுகண்டு
மறுகி இருடியை அடிதொழவே
உந்தன் பரிசுது கொடுபோஎன்று
உற்றது உரைசெய்ய, வாங்கிவந்தான். 3

வானோர் இறைவற்குப் பரியைநல்கி
மகத்தை முடித்துமன் அரசாட்சி
தானோர் மகனுக்குக் கொடுத்துச்சென்றான்,
சகரன். சகரர்தொட் டிடலாலே
ஞானோ தயவாழ்வே, வாரிதிக்கு
நாமம் சாகரம்என்று ஆனதற்பின்,
ஆனோர் குலத்தில்வந்து அவதரித்தான்
ஆண்டான், பகீரதன் உலகம்தன்னை. 4

பகீரதப் பிரயத்தனம்

இறந்த காலத்தைக் கேட்டுஇரங்கி,
என்முன் தாதையர்நற் கதிபெறவே
சிறந்த செயல்ஏதுஎன் றமுனியைச்
செய்ய பகீரதன் வணங்க,அவன்,
நிறைந்த குணவேதன் தனைநோக்கி
நெடுமா தவம்செய்தால் நெறிஉண்டுஎன்னத்
துறந்த சுமந்திரற்கு அரசுநல்கித்
தூய தவம்செய்தான் இமயவெற்பில். 5

3. இருடியைத் தொழுது அசுவத்தை மீட்டு வந்தவன் சகரனுடைய பேரன் அஞ்சுமான்.

4. மகம் - யாகம். சகரன் ஆட்சியைப் பேரன் அஞ்சுமானுக்குக் கொடுத்தான். அஞ்சுமானின் மகன் திலீபன். இவன் மகன் பகீரதன். திலீபனைக் கம்பர் குறிப்பிடவில்லை.

5. முனி - வசிட்டன். வேதன் - பிரமன்.

பதினா யிரம்காலம் கழிந்ததற்பின்
பதுமா சனன்வந்துன் மூதாக்கள்
மதிமா தவன்சிற முடிந்தமையால்
வான்ஆறு அவர்என்பில் தோய்ந்துசென்றால்
கதிநா டுறுவார்;கங் கைவந்தால்
கடல்பார் இடம்இல்லை, அதைஆற்ற
நதிநா தனைநோர்என்று அயன்போனான்—
நக்கன் தனைநாடித் தபசுசெய்தான். 6

மற்றும் பதினாயிர வருடம்நோற்க,
சிவன் வந்தேஉன் மனக்கருத்தை
முற்றும் படிசெய்வோம் என; சென்றபின்
மொய்ம்பூம் புனற்கங்கை தனைநோக்கி
நற்றும் தவம்ஐயா யிரங்காலம்
நடத்த, ஒருபெண்ணின் வடிவாகி,
'வற்றும் தவம்என்நீ வருந்துகின்றாய்,
வரும்வான் நதிவேகம் பொறுப்பார்ஆர்? 7

அரவா பரணன்விளோ தம்சொன்னான்;
அறிந்து தவம்செய்,என்று அவள்போனாள்—
பரவாம் இரண்டரைஆ யிரம்ஆண்டு
பருவம் தவம்செய்ய, சிவன்தோன்றி,
கரவான் நதி,அஞ்சல், சிதறாமல்
காப்போம் எனப்போத— பகீரதனும்
உரவான் இரண்டரைஆ யிரத்துஆண்டு
மாதவம் செய்தான் ஒழியாமல். 8

6. பதுமாசனன் - பிரமன். மாதவன் - கபிலமுனி. வான்ஆறு - ஆகாய கங்கை. கங்கை வந்தால் அதைக் கொள்வதற்குக் கடலோ பார் - பூமியோ தாங்காது. அதை ஆற்ற - கங்கையின் வேகத்தைத் தாங்க. நதிநாதன், நக்கன் - சிவபெருமான். நோர் - நோல் - (நோன்பு) - நோற்பாயாக - தவம் செய்வாயாக.

7. நற்றும் - நத்தும் - விரும்பும், வற்றும். இங்கே செய்யும் என்பது பொருள். சிவனார் தோன்றி, "உன் மனக் கருத்தை நிறைவேற்றுவோம். அதாவது, கங்கையைத் தாங்குவோம்" என்றார். கங்கையை நினைந்து பகீரதன் மீண்டும் தவம் செய்தான். கங்கையும் ஒரு பெண் ஆகி அவன் முன் தோன்றி, "ஆகாய கங்கை பூமியில் இறங்கி வந்தால் அவள் வேகத்தைத் தாங்குவோர் யார்? தாங்குவதாகச் சிவனார் சொன்னது, வெறும் விளையாட்டுத்தான். உன் தவத்திலே ஏதோ குறைபாடு உள்ளது; மீண்டும் தவம் செய்" என்று செருக்கோடு கூறிப் போனாள்.

8. சிவனார் தோன்றி, "ஆகாய கங்கைக்கு நீ அஞ்சாதே. அதன் நீர் சிறிதும் சிதறாது சிந்தாது அடக்குவோம்" என்று சொல்லிப் போனார். பகீரதனும் கங்கையைக் குறித்து மீண்டும் தவம் செய்தான்.

அருமைச் சருகுஉண்டும் நீரைஉண்டும்
அடவா யுவைஉண்டும் வெயிலைஉண்டும்
ஒருமுப் பதினா யிரகாலம்
உருகித் தவம்செய்ய, பகீரதன்முன்
பெருமைப் பிரமாண்ட மும்அண்டமும்
பெருகிப் புறப்படக்கங் கைஎன்னும்
தருமப் புனலாம் அதனை,அங்குஓர்
சடையில் தரித்தனனே உமைகேள்வன். 9

புற்கண் பனிபோலச் சிவன்சடையில்
புனல்ஆறு ஒளித்திடவே திகைத்துமன்னன்
நிற்க, வருந்தல்என்று அருளிச்சற்றே
நிலத்தில் விட,கங்கை பெருகிச்சென்று
முற்கண் விரைந்துஏகும் பகீரதற்கு
முந்திக் கொடுசென்று முனிவேள்வி
துற்க— அவன்சிறி வாரிஉண்டான்;
தொழுத வேந்தற்குச் செவியில்தந்தான். 10

சானு மாமுனியின் செவியினின்றும்
தலத்திற் குதிகொண்டு சகரர்என்பில்
வான நதிதோயச் சகரர்எல்லாம்
மகிழ்ந்து கதிபெற்றார் வாராமல்;
தேனின் மலர்மாரி அமரர்சிந்தத்
தெய்வ முரசும்சங் கமும்ஆர்ப்ப
ஆன புகழ்பெற்றுப் பகீரதன்தான்
அயோத்தி நகர்எய்தி அறங்காத்தான். 11

9. பகீரதன் தவம் செய்த ஆண்டுகள் : பிரமனைக் குறித்துப் பதினாயிரம் வருடம்; சிவனைக் குறித்துப் பதினாயிரம் வருடம்; கங்கையைக் குறித்து ஐயாயிரம் வருடம்; மீண்டும் சிவனையும் கங்கையையும் குறித்து ஐயாயிரம் வருடம்— ஆக முப்பதாயிரம் ஆண்டுகள்—இந்தக் காலக் கணக்கு வான்மீகத்தில் இல்லை. இப்படிக் கணக்கிட்டவர் கம்பர்தான்.

10. கங்கை நதிக்கு முன்னாகப் பகீரதன் வழிகாட்டிச் செல்ல, அவனை முந்திக்கொண்டு வேகமாய்ச் சென்ற கங்கை, வழியிலே சன்னு முனிவரின் வேள்வியை அழிக்க, அவர் வெகுண்டு தம் உள்ளங்கையிலே கங்கை வெள்ளம் முழுவதையும் அடக்கிப் பருகிடவே, பகீரதன் வேண்ட, தமது ஒரு காதின் வழியாகக் கங்கையை வெளியே விட்டார் என்பது கதை.

பாகீரதி - சானவி

அண்ட கோளத்துஅப் புறத்துஉலகம்
அளந்த அரிபாதம் தனில்பிறந்தாள்
புண்ட ரீகன்தன் இடத்துஇருந்தாள்
புவியில் பகீரதன் தவம்செய்யக்
கண்ட கறைக்கண்டன் சடையிற்புக்காள்
கங்கை பகீரதி எனநடந்தாள்
உண்ட சானுவின் செவியில்வந்தாள்
ஒருபேர் சானவிஎன வும்பெற்றாள். 12

12. அண்டகோளத்து அப்பால் திருமால் அன்று அளந்து கொண்டபோது, அவனது பாதத் தீர்த்தமாகத் தோன்றினாள் கங்கை. பின் புண்டரீகன் - பிரமன் தன் கமண்டலத்திலே கொண்ட தீர்த்தம் ஆனாள். பகீரதன் கொணர்ந்ததால் பாகீரதி; சன்னுவின் செவியில் வந்ததால் சானவி—இவை கங்கையின் பரியாய நாமங்கள்.

சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில் சங்கரன் சடையினில் தங்கிக்
கதிர்முக மணிகொண்டு இழிபுனல் கங்கை. —பெரியாழ்வார்.

10 அகலிகைப் படலம்

— அகலிகையின் கதையைக் கூறுவது

விசுவாமித்திரருடன் மிதிலை நோக்கிப் புறப்பட்ட இராம லட்சுமணர் விதேக நாடு அடைந்து, மிதிலையின் மதிற்புறத்தே தங்கினார்கள். அங்கே வெற்றிடத்தில் மேடிட்டிருந்த கருங்கல்லைக் கண்டார்கள். அகலிகையின் சாப ரூபம்தான் அது. அதன்மீது இராமனது பாததூளி படவும் அவள் பண்டைய வண்ணமாய் எழுந்து நின்றாள். அன்னையே அனைய அவள் யார்? அவளுக்கு இது நேர்ந்தது ஏன்? என்று வினவினான் இராமன். அவள் கதையைக் கூறினார் கவுசிகர்.

விருத்தம்

மாஇரு விசும்பின் கங்கை
    மண்மிசைக் கொணர்ந்தோன் மைந்த
மேயின உவகை யோடு
    மின்னென ஒதுங்கி நின்றாள்
தீவினை நயந்து செய்த
    தேவர்கோன் தனக்குச் செங்கண்
ஆயிரம் அளித்தோன் பன்னி
    அகலிகை ஆகும் என்றான். 1

தையலாள் நயன வேலும்
    மன்மதன் சரமும் பாய
உய்யலாம் உறுதி நாடி
    உழல்பவன் ஒருநாள் உற்ற
மையலால் அறிவு நீங்கி
    மாமுனிக்கு அற்றம் செய்து
பொய்இலா உள்ளத் தான்தன்
    உருவமே கொண்டு புக்கான். 2

இப் படலத்துக்கு உரிய ஆறு பாடல்கள் தக்கை ராமாயண ஏட்டுச்சுவடியிலே செப்பவிடலாகாவாறு சிதைந்து காணப்படுகின்றன. கம்பராமாயண விருத்தங்கள் — 6 அவ்விடத்தை நிரப்புகின்றன.

புக்குஅவ ளோடும் காமப்
    புதுமணம் மதுவின் தேறல்
ஒக்கஉண்டு இருத்த லோடும்
    உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்
'தக்கதுஅன்று' என்ன ஓராள்;
    தாழ்ந்தனள் இருப்ப; தாழா
முக்கணான் அனைய ஆற்றல்
    முனிவனும் முடுகி வந்தான். 3

சரந்தரு சாபம் அல்லால்
    தடுப்பரும் சாபம் வல்ல
வரம்தரு முனிவன் எய்த
    வருதலும், வெருவி, மாயா,
நிரந்தரம் உலகில் நிற்கும்
    நெடும்பழி பூண்டாள் நின்றாள்;
புரந்தரன் நடுங்கி ஆங்குஓர்
    பூசையாய்ப் போகல் உற்றான். 4

எல்லைஇல் நாணம் எய்தி
    யாவர்க்கும் நகைவந்து எய்தப்
புல்லிய பழியி னோடும்
    புரந்தரன் போய பின்றை,
மெல்லிய லாளை நோக்கி
    'விலைமகள் அனைய நீயும்
கல்இயல் ஆதி' என்றான்;
    கருங்கல்ஆய் மருங்கு வீழ்வாள். 5

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
    இனிஇந்த உலகுக்கு எல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர்
    துயர்வண்ணம் உறுவது உண்டோ?
மைவண்ணத்து அரக்கி போரில்,
    மழைவண்ணத்து அண்ண லே!உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்;
    கால்வண்ணம் இங்குக் கண்டேன். 6

11 மிதிலைக் காட்சிப் படலம்

— விசுவாமித்திரர் இராமலக்குவர் மிதிலை நகரின்
காட்சிகளைக் கண்டது

வரவேற்கிறது மிதிலை

பூங்கொடிஎன் இடத்துஇருந்தாள்
புண்ணியனே வருகஎன்று
தேங்கொடியாம் கைநீட்டித்
திருநகர்தான் அழைப்பதுபோல்
பாங்கொடுதான் தெய்வமின்னார்
படர்விசும்பில் ஆடலும்போல்
ஆங்கொடிகள் உறநனைந்தும்
அகிற்புகையால் ஆறல்கண்டார். 1

கண்கொளாக் காட்சி

கணையம்எடுத்து ஒன்றோடுஒன்று
களிற்றினங்கள் பொருகைகண்டார்
கணையதுஎனத் திகிரிஎன்னக்
கடும்பரிகள் திரிகைகண்டார்
கணையம்உறச் சொரிகமுகில்
கன்னியர்ஆ டுசெல்கண்டார்
கணையம்உறக் ககனம்உயர்
கடிமதில்சூழ் மிதிலைபுக்கார். 2

மன்னுமத்தி மதம்பெருக
மாஇரதம் சேறுகண்டார்
பொன்னும்முத்தும் இருபுறம்சேர்
பொன்னிஒக்கும் வீதிகண்டார்.

1. முகில்குலம் தடவும் தோறும் நவைவன முகிலின் சூழ்ந்த
அகில்புகை கதுவும் தோறும் புலர்வன ஆடக் கண்டார். —கம். 3.

2. கணையம் - தண்டாயுதம். கணை - அம்பு. கணையமுற - கள்நயம்உற - கணயம்உற. கணையம் - போலி.

தென்னிசைக்க முழவுஇரட்டத்
    தெரிவையர்ஆ டரங்குகண்டார்
மின்னிருக்கும் சாளரத்துள்
    வேல்இமைக்கும் திங்கள்கண்டார். 3

தோகைநல்லாள் குமரருடன்
    சூதாடும் பண்ணைகண்டார்
பாகெனவா சகமடவார்
    பந்தாடும் சோலைகண்டார்
பூகனமாய்க் கொய்துகொண்டு
    புனல்ஆடும் பொய்கைகண்டார்
மோகனமாய் மதுவைஉண்டு
    முறுவல்செய் முளரிகண்டார். 4

போதயனால் மாமதனால்
    புத்தமுதில் எழுதஒண்ணாச்
சீதைஅன்னாள் மேவுதலால்
    திருவிருக்கும் தாமரைபோல்
கோதைநல்வேல் அடல்வீரர்
    கொடும்படைஞர் காத்துநிற்கும்
மாதையமன் னவன்கோவில்
    மணிமதில்சூழ் அகழிகண்டார். 5

3. அத்தி - யானை - அத்தத்தை உடையது அத்தி. அத்தம் - கரம். கரத்தை உடையது கரி.

.... கரைகள் தோறும்
பரப்பிய பொன்னி அன்ன ஆவணம் பலவும் கண்டார். —கம். 10.

வாளரம் பொருத வேலும் மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடு கிடந்த நீலச் சுருளும்செங் கிடையும் கொண்டு
நீள்இருங் களங்கம் நீக்கி நிரைமணி மாட நெற்றிச்
சாளரம் தோறும் தோன்றும் சந்திர உதயம் கண்டார். —கம். 14.

4. களிப்பினை உணர்த்தும் செவ்விக் கமலங்கள் பலவும் கண்டார். —கம். 15.

5. ஆதரித்து அமுதில் கோல்தோய்த்து அவயவம் அமைக்கும் தன்மை
யாதுஎனத் திகைக்கும் அல்லால் மதனற்கும் எழுத ஒண்ணாச்
சீதை. —கம். 4.

கோதை வேல் - மாலையணிந்த வேல். மாதய மன்னவன் - சனகன்.

கிளியோடும் பலபேசிக்
    கிளர்நடைகண்டு அனம்ஒதுங்க
அளிஓடும் கயல்விழியார்
    அலர்கொய்யும் சோலைகண்டார்
களியோடும் தார்வேந்தன்
    கனகமணிக் கோயில்கண்டார்
ஒளியோடு களிமாடம்
    உகந்துகண்டார் அங்குநின்றார். 6

12 கைக்கிளைப் படலம்

— இராம சிதையர் காதல்பற்றியது

அழகினுக்கு ஓர் அழகு

நற்பொருளைச் செழுந்திருவை
நாரியர்க்குஎல் லாம்அரசைப்
பொற்பொலிவை இன்னமுதப்
புலன்சுவையைப் பூமணத்தைச்
சொற்பொருளை அயன்முதலோர்
துதித்துநல்லோர்க்கு உவமைசொல்லும்
இற்பொலிவைப் புகழஎன்றால்
யாரைவேறு உவமைசொல்வேன். 1

தேர்ந்தகயல் வேல்விழியார்
திரைக்கடல்வாய் அமுதம்அன்றி
ஆர்ந்தகளி மாடமிசை
அன்றுவரும் அமுதானாள்
நேர்ந்தஇடை மின்அனையார்
நிறைந்துசத கோடிசுற்ற
வார்ந்தகுழல் உமைபோலும்
மாதர்எல்லாம் வணங்கிநின்றார். 2

பெண்இவள்போல் இனிஒருபெண்
பிரமனுக்கும் செயலாமோ
கண்ணுறஓர் அமுதுஉளவோ
கண்காட்சிக்கு எல்லைஉண்டோ

இப் படலமும் அடுத்துவரும் கவுசிகப் படலமும் கம்பராமாயணப் பதிப்புகளில் மிதிலைக் காட்சிப் படலத்தில் அடங்கும்.

1. பொன்னின் சோதி போதினில் நாற்றம் பொலிவேபோல்
தென்நுண் தேனிற் றிஞ்சுவை செஞ்சொல் கவிஇன்பம்
கன்னிம் மாடத்து உம்பரின் மாடே களிபேடோடு
அன்னம் ஆடும் முன்துறை கண்டுஅங்கு அயல்நின்றார். —கம். 23.

செப்பும் காலை, செங்கமலத்தோன் முதல்யாரும்
எப்பெண் பாலும் கொண்டுஉவ மிப்போர் உவமிக்கும்
அப்பெண் தானே ஆயின போதுஇங்கு அயல்வேறோர்
ஒப்புஎங் கேகொண்டு எவ்வகை நாடி உரைசெய்வோம். —கம். 24.

2. கடல் தந்த அமுதம் அல்லாமல் மாடம் கொடுத்த அமுதம் போன்றாள்.

மண்உலகோர் இமையாமல்
    வரம்பெறுவோம் எனஉரைத்தார்
விண்உலகோர் இமைப்பிலரும்
    விழிஅனந்தம் வேணும்என்றார். 3

ஓதுகல்லும் ஓவியமும்
    உருகநின்றாள் உருவுகண்டு
மீதுவிண்ணா டியர்முகமும்
    வெண்மதியும் பகல்மதியாம்;
ஆதிமுதல் நாயகியை
    அழகினுக்குளோர் அழகுதன்னை
மாதுதன்னை வள்ளல்கண்டான்;
    வள்ளலையும் மாதுகண்டாள். 4

கண்வழிப் புகுந்த காதல்

மெய்க்கருணை நல்லறமும்
    விண்ணவரும் வேதியரும்
ஒக்கஅரும் தவம்செயலால்
    ஒண்கமல மலருள்நின்றும்
இக்கடல்மா நிலத்துஉதித்தாள்
    இணைவேல்கண் நிறைபுயத்தே
தைக்க,அவன்தா மரைக்கண்கள்
    தையல்தனத்து அழுந்தினவே. 5

பார்த்தகண்ணும் பாசமதால்
    பற்றிஒரு வரைஒருவர்
ஈர்த்திடமா றிப்புகுந்தார்,
    இரண்டுஉடற்குளோர் உயிரானார்;
ஆர்த்ததிருப் பாற்கடலுள்
    அரவணைமேல் கலவிதனை
நீர்த்தவரே கூடினக்கால்
    நிகழ்த்துவதுஎன் வேறுஇனியே! 6

4. விண்ணாடியர் - தேவலோகத்துப் பெண்கள். நாடியர் - நாட்டையுடைய பெண்கள்.

அழகுஎனும் அணியும்ஓர் அழகு பெற்றதே. —கம். 34.
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள். —கம். 35.

6. நீர்த்தவர் - நீத்தவர்.

இறையவனை அணைந்திலளால்
ஏந்திழைஓ வியம்ஆனாள்
மறையவர்வாழ் வானபிரான்
மாமுனிபின் மறைந்துசென்றான் —
நறையமலர்க் கருங்குழலாள்
நன்மனமா மதயானை
நிறையதெனும் குடோரியினும்
நில்லாமல் ஏகியதே. 7

கண்ணிடையே புகுந்தமயல்
கலந்துமெய்யில் பால்உறைபோல்,
நுண்ணிடைபோல், மனம்மெலிவை
நொந்துஉரையாள் ஊமரைப்போல்;
எண்ணிடைவேள் வாளிஎய்தான்
எரியிலிடும் சமிதையைப்போல்;
புண்ணிடைவேல் எனவருத்தப்
பூங்கொடிபோல் சோர்ந்தனளே. 8

நெருப்பிலே இட்ட பூங்கொடியேதான்

தாதியரும் செவிலியரும்
தாங்கிநல்அ மளிசேர்த்தார்;
போதுஅலரும் கமலவனம்
புன்பனியால் கரிந்ததுபோல்
மாதுயரால் பொழிவிழிநீர்
வரும்கனல்மூச் சால்சுவறும்;
சோதிநன்மா மலர்க்களபம்
சொரிந்தனவும் பொரிந்தனவே. 9

உள்ளம் கவர்கள்வன்

அம்புயமோ நயனம்என்னும்
அருஞ்சிலையோ புருவம்என்னும்
அம்-புயமோ வரைகள்என்னும்
அலங்கிருதம் அகலம்என்னும்

7. குடோரி - தடுப்பது, இங்கே அங்குசம்.

8. கண் வழியாக உள்ளே புகுந்த காதல்நோய் உடல் எங்கும் வியாபித்தது, பாலில் உற்ற பிரை போன்றது. மனத்திலே நினைந்து நினைந்து தளர்வதை, ஊமர்போல வாயால் சொல்லமாட்டாதவள் ஆனாள்.

அம்புலியோ வதனம்என்னும்
அரும்புமுல்லை முறுவல்என்னும்
அம்-புலியோ வடிவம்என்னும்
அகந்தனுளே உளன்எனுமால். 10

அன்னையரும் சிலதியரும்
அயினியின்கண் ணேறுசுற்றி
என்அயரும் துயர்இதுஎன்றே
எழில்ஆல வட்டம்இட,
மின்னைஅருந் துயர்விளைக்க
மெய்அணிதார் வெந்துஅழலப்
பொன்னயரும் கனற்குஉருகும்
பொற்பாவை போன்றனளே. 11

பொன்நகர்நாட்டு அமரன்அல்லன்
புண்டரிகக் கண்இமைக்கும்
மன்னவர்தம் குமரன்மெய்யே
வரிசிலைக்கை நூல்மார்பன்
அன்னவனை இன்னமும்கண்டு
அறிந்தலதுஎன் ஆவிநில்லாது
என்னஅவள் துயர்க்குஇரங்கி
இரவியும்தான் கடல்புகுந்தான். 12

இதுவோ கூற்றின் வடிவு

மையோ கடலோநீ லக்கல்லோ
மழையோ அவர்வண்ணம் வருத்துதுஎன்னை
அய்யோ என,உள்ளம் தளர்வாள்முன்
அந்தி மாலையும் மிகவருத்த
வெய்யோ பணிநஞ்சோ கூற்றம்கொல்லோ
விலக்கும் இருள்என்ன மணிவிளக்கைத்
துய்யோர் இட,வாரி தனில்உதித்தான்
சோமன் அமுதவெண் கலசத்தைப்போல். 13

10. அம்புயம் - தாமரை. அம் புயம் - அழகிய தோள். வரை - மலை. அம்புலி - சந்திரன்; அம் புலி - அழகிய புலி.

11. அயினி - கண் எச்சில் தீர ஆலத்தி எடுத்தல். ஆலவட்டம் - பெரு விசிறி. காற்றால் காம அனல் பெருகச் சீதை பொன்போல் உருகினாள். அகலம் - மார்பு.

கருநெருப்போ வெண்நெருப்போ

விமுகம் பாலையுந்தி வெண்கஞ்சம்போல்
வெண்மா மதிவெள்ளிக் கும்பம்தன்னில்
கமுகம் இளம்பாளை விரிந்ததுபோல்
ககனம் பழையதென்று புதுக்குகைபோல்
சுமுகன் மோரூர்வாழ் அத்தப்பன்சொல்
தோன்றல் நல்லதம்பி சீர்த்திஎங்கும்
சமுகம் பலரும்கொண் டாடும்வண்ணம்
தண்ணிலா எங்கும் தழைத்ததம்மா! 14

நிலைக்கும் அவர்வண்ணம் உனதுவண்ணம்
நிகரா காஎன்று நாணும்வண்ணம்
அலைக்கும் எனக்கும்நீ துயரம்செய்தாய்
அலையோ இருள்என்னும் கருங்கனலே
மலைக்கும் மதிஎன்னும் வெண்கனலே
மலர்வாழ் பெண்ணொடும் பிறந்தும்எனைச்
சிலைக்கும் திறம்என்என்று இரங்கல்உற்றாள்.
சீராமன் இனிச்செய்தது இயம்பல்உற்றேன்— 15

14. விமுகம் - வெளிப்பட. வெள்ளிக் கும்பத்து நாட்டிய வெண்பாளைக் கமுகு போல. அத்தப்பன் பெயர் சொல்ல - விளங்க - தோன்றியவன் நல்லதம்பி.

பூத்தஅண்டம் பழையதென்று புதுக்குவானும் போன்றுளதால்.
—கம். 74.

வண்ண மாலை கைபரப்பி உலகை வளைந்த இருள்எல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்து உதயத்து எழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசைஅனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநல்நீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன் புகழ்போல் எங்கும் பரந்துளதால்.
—கம். 73.

15. இருள் எனும் கருங்கனல் - கருநெருப்பின் இடையே எழுந்த வெண் நெருப்பு என்பார் கம்பர். இராமனுக்கு நிறத்தினால் தோல்வியடைந்து வெட்கி வெளிப்போந்து, இருளே, மதியே, கடலுக்கும் எனக்கும் நீ துயர் செய்கிறாய் அல்லவா? சிலைக்கும் - வருத்தும்.

13 கவுசிகப் படலம்

—விசுவாமித்திரர் வரலாற்றைக் கூறுவது

சனகனைக் கண்டார்கள்

மன்னவனைச் சென்றுகண்டார்
    மண்டபத்தில் வந்திருந்தார்
இன்னமுதாய் அகலிபெற்ற
    இருடிசதா னந்தன்உற்றான்
அன்னவனை இராமபிரான்
    அடிவணங்க எடுத்துஅணைத்தான்
முன்னவர்என் கவுசிகன்தான்
    முனிமகனைப் பார்த்துரைப்பான். 1

என்துயர் முடித்தவன் இவன்தான்

தவமுனிகேள் இந்தவள்ளல்
    தாடகைதன் உடலினையும்
உவமைஇல்என் வேள்வியையும்
    உன்அனைசா பமும்முடித்தே
எவம்அறஎன் துயர்முடித்தான்—
    எனக்கேட்டுக் கவுதமன்சேய்,
அவம்அறஉன் கருணைஉண்டேல்
    அரியதுஉண்டோ எனமகிழ்ந்தான். 2

விசுவாமித்திரர் வரலாறு

மகிழ்ந்தசதா னந்தமுனி
    வரராமன் தனைநோக்கித்
திகழ்ந்தசிலைக் குமராகேள்
    சிறந்தகவு சிகமுனிவன்

இப் படலம், கம்பராமாயணப் பதிப்புகளிலே மிதிலைக் காட்சிப் படலத்துள் இடம்பெறுகிறது.

1. கௌதம முனிவருக்கு அகலிகையிடம் பிறந்தவர் சதானந்தர்; இவர் சனக குலப் புரோகிதர். அகலி - அகலிகை. முனிமகன் - சதானந்தர்.

2. உன் அ(ன்)னை - அகலிகை. எவம் - எவ்வம் - துன்பம். உன் அருள் கிடைத்திருக்க இந்த வெற்றி வீரர்க்கு எதுவும் அரிதில்லை.

புகழ்ந்தகுணத்து அரசன்எனப்
புவிஆளும் தலைநாளில்
நிகழ்ந்ததொரு வேட்டைவந்து
நீள்வசிட்ட முனியைஉற்றான். 3

அரசனுக்கு வசிட்டமுனி
அருள்காம தேனுவைத்தான்
வரவழைத்து விருந்துசெய்ய—
வன்படையோடு அருந்தியபின்
தர,எனக்குத் தகும்என்ன,
தவன்மறுக்க, பசுவைமன்னன்
கரகயிற்றால் பிணிக்க,அது
கனன்றுஉடலை விதிர்த்ததுவே. 4

பப்பரர்சோ னகர்வயவர்
பசுஉடலில் பிறந்துமன்னன்
வெப்படைசே னையைத்துணிக்க,
வேந்தன்மைந்தர் நூற்றுவர்தாம்
அப்படையை வலியால்வென்று
அம்முனியை அடர்த்துவந்தார்
துப்படையும் முனிசீறச்
சுடர்விழியால் வெந்துஒழிந்தார். 5

கண்டுஅரசன் தேர்ஏறிக்
கார்முகத்தால் கணைசொரியத்
தண்டம்எதிர் முனிநிறுத்தச்
சரங்கள்எல்லாம் விழுங்கியதால்;
ஒண்தொடிபா கனைவேண்டி
உயர்படைபெற்று அப்படையை
மண்டலிகன் தொடுத்துவிட
மாமுனிவன் வாரிஉண்டான். 6

5. துப்பு - பலம் - தவ பலம்.

6. ஒண்தொடியாள் பாகன் - சிவன். படை - ஆயுதம், சேனை. மண்டலிகன் - அரசன் கவுசிகன்.

அன்னதுகண்டு அரசன்உணர்ந்து
        அருந்தவர்க்கே வலிமைஎன்று
மன்னுகுண திசையினிற்போய்
        மாதவம்செய் திட,மகவான்
மின்னுதிலோத் தமைதந்த
        வேட்கையில்மூழ் கிப்பலநாள்
பின்னைவெகுண்டு அவளைமண்ணில்
        பிறந்திடுபோ எனச்சபித்தான். 7

தென்திசையிற் போந்துதவம்
        செய்திடும்நாள்— அயோத்திமன்னன்
துன்றுதிரி சங்குஎன்பான்
        சொற்குருவை அடிவணங்கி
இன்றுசரீரத் தோடுஎன்னை
        ஏற்றிஅருள் சுவர்க்கம்என்ன;
நின்றுசில நாள்கழித்தால்
        நீபெறுவாய் என்ன;அவன், 8

உனக்குஅருமை என;பிறரால்
        ஒன்றுசெய்வேன் யாகம்என;
கனக்குருவை இகழ்ந்தனைநீ
        கடும்புலையாம் எனச்சபித்தான்—
வனக்கனக முடிஆரம்
        மாசிரும்பாய் உடல்கருகிச்
சினக்கஅவ்வூர் பழிக்கவெள்கிச்
        சென்றுகண்டான் கவுசிகனை. 9

அருந்துயரம் பணிந்துசொல்ல,
        அஞ்சல்என்றே காதிமைந்தன்
பொருந்திமுனி வரையாகம்
        புரியும்என்ன; வசிட்டமைந்தர்

7. குணதிசை - கிழக்குத்திசை. மகவான் - இந்திரன். இவன் தூண்டுதலால் திலோத்தமை, கவுசிகன் முன் தோன்ற அவள் மையலில் மூழ்கினான் அம் முனிவன்.

8. குரு - வசிட்டர். இவன் - திரிசங்கு.

9. புலை - புலையன். கனகமுடி - முடி செம்பட்டை ஆக. கனக ஆரம் இரும்பாயிற்று.

கருந்துயர்நீ சனுக்குமகம்
　　காவலனோ வகுப்பன்என்ன;
வருந்திடுநீர் வேடர்களாய்
　　வனத்தில்என்றே இவன்சபித்தான். 10

தவப்பயனால் யான்கொடுத்தேன்
　　சாருதிநீ வானம்என்ன—
உவப்பதனால் உறும்அவனை
　　உம்பர்தள்ளி விடஇருகண்
சிவப்பமுனி விழாதேஎன்று
　　தேவர்முதல் எவ்வுலகும்
சுவர்க்கமும்நான் விதிப்பன்என்று
　　தொடங்க,விண்ணோர் துணுக்கம்உற்றார். 11

சிவன்அயன்வா சவன்இமையோர்
　　செறிந்துஇவனைப் புகழ்ந்துஏத்தித்
தவமுனியே பொறுத்தருள்வாய்
　　தாரகையாய் உனைஅடைந்தான்
பவம்அறவாழ்ந் திடுகஎன்று
　　பகர்ந்ததற்பின்; வருணதிக்கில்
உவமைஇல்லா தவன்இனிப்போய்
　　உயர்தவம்செய் திடும்போது, 12

அம்பரீஷன் செய்திகள்

அருஷ முடன்செம்பொன் தேரில்கொண்டு,
　　அம்ப ரீடன்என்று ஒருவேந்தன்
புருஷ மேதம்செய் திடவேண்டிப்
　　புதல்வர் கொளஎண்ணி வனத்திற்செல்ல,

10. இவன் - விசுவாமித்திரன்.

12. வருணதிக்கு - மேற்குத்திசை. உனை அடைந்த திரிசங்கு தாரகை - நட்சத்திரமாய் வாழ்ந்திடுக.

இருஷி கனும்பிள்ளை தரத்துணிந்தான்
இளைய மகன்தனைத்தாய் கைக்கொண்டாள்
வருஷம் மூத்தோனை முனிகைக்கொண்டான்
மற்ற நடுமைந்தன் முறுவல்செய்தான். 13

பெற்ற தாய்தந்தைக்கு உறுநிதியம்
பெருகச் சொரிவித்து விடைகொண்டுதான்
கொற்ற வேந்தரொடும் தேரிற்சென்றான்
குலவும் கதிர்மத்தி யானம்செல்ல
கற்ற மனச்சந்தி செயப்போந்தான்
கலைமைந் தனும்சந்தி செயும்போதில்
உற்ற கவுசிக முனியைக்கண்டான்
உற்றது ஏதென்ன வணங்கிச்சொல்வான். 14

தமக்கை ஆகிய கவுசிகையும்
தன்மைத் துனன்ஆம் இருஷிகனும்
அமைக்க விடுத்ததை அறிந்தருளி
அஞ்சல் நீஎன்று, தன்மக்களை
உமக்கே புகல்மன்னன் உடன்செல்என்று
உரைக்க, மறுத்தவர் வேடர்களாய்
இமைக்கண மேபோம் எனச்சபித்து
இனிய மருகனைநோக் கிச்சொல்வான். 15

13. புருஷமேத யாகம் செய்ய ஒரு சிறுவனை வாங்குதற்குப் பொன்னைத் தேரிலேகொண்டு அவனைத் தேடிச் சென்றான் அம்பரீடன். இருஷகன் - ரிசிக முனி. இவன் பிருகு முனிவன் புதல்வன்; கவுசிகனுக்குத் தங்கையான கவுசிகையின் கணவன்.

14. கதிர் - சூரியன். சந்தி - சந்தியாவந்தனம் செய்யப் போனான் அம்பரீடன்.

15. தாய் தந்தையரால் கைவிடப்பட்டுத் தன்னைச் சரண் அடைந்த மருமகனுக்கு அபயம் அளித்து, தன் புதல்வரிலே எவரேனும் அவனுக்குப் பதிலாகச் செல்லுக என்ன, அதற்கு எவனும் முன்வராமற்போகவே கவுசிகன் கோபித்து, வேடர்களாய்ப் போமாறு தன் புதல்வர்களைச் சபித்தான்.

அரச னுடன்சென்று, கம்பம்தன்னில்
அணைக்கும் பொழுதுஇந்த மந்திரத்தை
உரைசெய், போய்என்ன— பணிந்துசென்றான் ;
யூபம் தனில்ஓத யாகம்தன்னில்
வரிசை மால்வேதன் சிவன்வானோர்
வந்து பாலன்தன் உயிரைநல்கி
விரைசெய் மகத்தையும் முடித்துச்சென்றார்;
மிக்க வடதிக்கில் முனியும்சென்றான். 16

பிரமரிஷி ஆனார் கவுசிகர்

உன்னிப் பிராண்வந்து உட்பொருளை
யோகத்து எழுந்திட மீதுஎழுந்த
சென்னிப் புகைமூடக் கரிகள்எட்டும்
திசைக்கா வலரும்கண் களைமூடத்
துன்னிப் புவனங்கள் இருள்மூடச்
சுடரும் இமையோர் தியக்கம்உற்றார்;
முன்னிற் புகழ்ந்துமும் மூர்த்திகளும்
முனியே உனக்குஆரும் நிகரில்என்றார். 17

அந்த மொழிகேட்டு அந்தணன்தான்
அருமா தவம்இன்று பலித்ததுஎன்று
முந்த வணங்கினன் இருள்நீங்க
முத்தேவ ரும்தத்தம் பதியிற்சென்றார்;
இந்த முனிவன்தன் அருள்பெற்று
இசைபெற் றீர்என்று, கவுதமன்தன்
மைந்தன் சொல,மாலும் இளையோனும்
வாழ்த்தி வணங்கித்தம் இருக்கைபுக்கார். 18

14 குல்முறை கிளத்து படலம்

— இராமனது குலமரபு கூறுவது

கன்னியேதான் இவள்

மாதவனும் இலக்குவனும்
    வந்துபள்ளி கொண்டதற்பின்
மாதவனும் விழிதுயிலான்
    மங்கைதனை நினைந்துஉருகி,
மாதவளே மனகமல
    மலர்மடந்தை எனஉறைவாள்
மாதவள்தன் முறுவல்கண்டு
    வாழ்வதுஎன்று— ஆவிசோர்ந்தான். 1

அலர்க்கணையான் என்னைஎய்வான்
    ஆங்குஅவன்போல் ஆர்வலியார்
விலக்குஅரிய வெண்நிலவோ
    வெள்ளைவண்ணம் வெவ்விடமோ
செலக்கருதேன் தீநெறிக்கண்
    தெரிக்கில்இவள் கன்னிஎன்றே
மலர்க்கொடிமால் உற்றுஉழல்மால்
    மறுக்கஇரா மறுத்திலனே. 2

1. கம்பர் 4. மாதவளே .... உறைவாள் - எனது மனத்தாமரை மலரிலே வசிப்பதால் கமல மலரில் இருக்கும் இலக்குமிதானோ!

2. கம்பர் 8, 9, 10. விலக்கு அரிய .. வெவ்விடமோ - ஆலகால விடம் உலகெங்கும் பரந்து உயிர்களைக் கவர்ந்தது என்று கேட்டிருக்கிறேன். அதன் நிறம் கரிது. அதுபோலவே என்னுள் பரந்து என் உயிரைக் கவரும் இந்த நிலவோ வெண்மையானது. வெண்ணிற விடமும் இருக்கவா செய்கிறது! என் மனம் எப்போதும் நல்வழியிலே செல்லும்; தீய வழியிலே ஒருநாளும் செல்லாது. இப்போது அது சீதையின்பால் சென்றதால் அவள் கன்னிதான் என்பதைத் தெளிவாக்குகிறது. மால் - காதல் மயக்கம்; திருமாலாகிய இராமன்.

ஏகும் நல்வழி அல்வழி என்மனம்
ஆகுமோ இதற்கு ஆகிய காரணம்
பாகு போல்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறுஇதற்கு ஐயுறவு இல்லையே. —கம். 10.

சூரியோதயத்தில்

வெந்துயர்செய் இருள்அரசன்
    வெண்குடைபோல் விழுந்தமதி
முந்துஉதய கிரிப்பரமன்
    முதல்விழிபோல் இரவிவந்தான்
சிந்துரசிந் தூரம்என்னச்
    சிவந்தனகார் வரைகள்எல்லாம்
தந்துணைவன் வரவுகண்டார்
    தம்முகம்போன் றனகமலம். 3

உவந்துஅமரர் முனிவர்தொழ
    உயர்ந்தவிண்ணில் நடம்ஆடும்
சிவந்தசிவ சூரியன்தன்
    செஞ்சடைபோல் இருந்தகதிர்
நிவந்தகையால் அடிவருட
    நிமலன்எழுந்து இளவலொடும்
தவன்தனொடும் சந்திசெய்து
    சனகனைக்கண்டு அருகுஇருந்தான். 4

இருந்தமைந்தர் வடிவுகண்ணால்
    இனிதுஅருந்தி எழிற்சனகன்
அருந்தவனே இங்குஇவர்ஆர்?
    அருள்எனவே— தயரதன்கோன்
தரும்தனயர், நின்மகமும்
    தனுவலியும் காணவந்தார்,
மருந்தனையது இருந்ததுஎன்று
    மற்றுமுனி வகுத்துரைப்பான். 5

3. கம்பர் 13, 14. இருளாகிய அரசனது வெண்கொற்றக் குடை விழ்ந்தாற் போல மேற்றிசையில் தாழ்ந்து மறைந்தான் சந்திரன். இருள் மூடியிருந்த உதய கிரியில் சிவனாரது நெற்றிக்கண்போல் செஞ்ஞாயிறு உதயமாயிற்று. சாலை இளவெயில் கரிய மலைகள் எல்லாமுமே தகதகவெனச் சிவந்து தோன்றின. பிரிந்த கணவர் வரக்கண்ட மகளிர்தம் முகம்போலத் தாமரைகள் மலர்ந்தன.

4. கம்பர் 15. தேவர்களும் தபோதனரும் தொழுதுநிற்க, ஆகாயம் ஆகிய நடன சபையிலே நர்த்தனம் செய்யும் சூரியனாகிய சிவனாரின் பொன்னிறச் சடைகள் நாற்றிசையும் பரந்தாற்போலச் சூரியனது இளங்கிரணங்கள் எங்கும் பரவின. அவை அடிவருடித் துயில் எழுப்ப இராமன் எழுந்தான்.

5. மகம் - யாகம். மருந்து அனையது - அபூர்வமாக இருந்த வில். முனி - விசுவாமித்திரன்.

இவர்தம் வரலாறும் புயவலியும் இதுவே

செங்கதிரோன் பெற்றமனு
    செம்புனல்ஊ றப்பணித்தான்
அங்குஅவன்சேய் இச்சுவாகு
    அணிஅரங்கம் கோயில்கண்டான்
வெங்கயம் ஏறியைஏறி
    விண்ணகம்காத் தான்ஒருவன்
துங்கமுன்னீர் கடைந்துஒருவன்
    சுரர்க்குஅமுதம் கொடுத்தனன்காண். 6

ஒருவேந்தன் வேங்கைபுல்வாய்
    ஒருதுறைநீர் பருகுவித்தான்
ஒருவேந்தன் புறவினுக்கா
    உடல்முழுதும் அரிந்துவைத்தான்
அருள்வேந்தர் ஆழிதொட்டார்
    அறுபதினா யிரம்சகரர்
தருவேந்தன் பகிரதன்தான்
    தரணிதனிற் கங்கைதந்தான். 7

6. சூரிய குல முதல்வன் மனு. பணித்தான் - பிருது; இவன் தன் வரிசிலையால் நிலமடந்தை முலை சுரப்பச் சாதித்தான். இவனால் இப் பூமி பிருதுவி எனப்பட்டது. இவன் மகன் இட்சுவாகு; இவன் பிரமன் பூசித்து வந்த அரங்கநாதனைப் பெற்று வந்து அயோத்தியில் பிரதிட்டை செய்வித்தான். சூரிய மரபினர்க்குக் குலதெய்வமாய் விளங்கிய அப் பெருமானை இராமன் விபீடணனுக்கு அளிக்க, வீபீடணன் இலங்கைக்கு எடுத்து ஏகும்போது, அம் மூர்த்தி காவிரியின் ஆற்றிடைக் குறையாகிய திருவரங்கத்திலே குடிகொண்டார். கயம்ஏறி - ஐராவதம் என்ற யானை ஏறும் இந்திரனை வாகனமாக் கொண்டவன் காகுத்தன். இவன் பெயரால் இராமன் காகுத்தன் எனப்படுகிறான். அமுதம் கொடுத்தவன் பிருதுலாட்சன் என்கிறது திருவாலங்காட்டுச் செப்பேடு.

7. புலிப்போத்தும் புல்வாயும் ஒருதுறையில் நீர் உண்ண உலகாண்டவன் மாந்தாதா. (இவனுக்குப் பின் முசுகுந்தன்; இவன் இங்கே சொல்லப்படவில்லை.) மன்னுயிர்க்கு மாறாகத் தன்னுயிர் வழங்கியவன் சிபி. ஆழி - கடல்; இது சகரரால் தோண்டப்பட்டது. புனற்கங்கையை வானிலிருந்து கொணர்ந்தவன் பகிரதன்.

உந்துமத களிற்றுஒருவன்
　　ஒருநூறு வேள்விசெய்தான்
துந்துமியை வென்றுஅரனைச்
　　சோமனையும் போர்தொலைத்தார்
இந்துமதி மணம்புணர
　　எடுத்தவிலான் அசன்எனும்கோன்
தந்ததுவும் தசரதன்தான்
　　தந்தமைந்தர் தாம்இவர்காண். 8

இங்குஇவர்தம் பெருமைசொல்ல
　　என்தனக்கு முடியாது ;
பொங்குபுகழ் தயரதன்தான்
　　புதல்வர்இன்றி நெடுங்காலம்
தங்குருவால் கலைக்கோட்டுத்
　　தவமுனியால் வேள்விசெய்ய
அங்குநின்றும் பொற்கலத்துள்
　　ஆரமுதம் தோன்றியதே. 9

ஆரியநூல் முனிஅருளால்
　　ஆரமுதைத் தசரதன்தான்
நாரியனார் மூவருக்கும்
　　நாலுபங்குஆக் கிக்கொடுத்தான்
காரியஇம் மேனியனைக்
　　கௌசலைத்தாய் பெற்றெடுத்தாள்
பாரியசீர் இவன்போல்வான்
　　பரதனைத்தான் கைகைபெற்றாள். 10

8. பெருவேள்வி ஒருநூறு செய்தவன் சுதாசன். துந்து என்ற அசுரனைக் கொன்றவன் துந்துமாரன். சோமன் - சந்திரன். இவனை வென்றவன் சந்திரஜித். (இங்கே ரகு சொல்லப்படவில்லை.) அசன் - அஜன்; இவன் இந்துமதியைச் சுயம் வரத்திலே அடைந்தவன். இவனுக்குப் பின் தசரதன். துந்து என்ற அசுரனையும், அரன் - ருத்ரன் என்ற அசுரனையும், சோமன் - சந்திரனையும் வென்றவனை ரகு என்பாரும் உண்டு.

10. கம்பர் 9, 10, 11. மகவின்றி வருந்திய தசரதன், கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு புத்திரகாமேட்டி யாகம் செய்விக்க, அவ் வேள்வித் தீயினின்றும் கிடைத்த அமுதத்தைத் தசரதன் தன் தேவியர் மூவர்க்கும் நான்கு கூறிட்டு அளித்தான். அதனால் கோசலை இராமனையும், கைகேயி பரதனையும், சுமித்திரை இலக்குமணன் சத்துருக்கனன் ஆகியோரையும் பெற்றனர்.

இளங்குமரர் இருவரையும்
இளையசுமித் திரைஈன்றாள்
விளங்கமறை எனவளர்ந்தார்
வேதநன்னூல் ஓதுவித்து
வளங்கொள்படை பயிற்றுவித்து
வசிட்டமுனி வளர்த்தனன்காண்
களங்கரைக்கொன்று என்வேள்வி
காக்கஇவர் தமைக்கொணர்ந்தேன். 11

இவன்சரத்தால் தாடகைதான்
எதிர்ந்துபட்டாள்; அவள்புதல்வர்
இவன்சரத்தால் சேனையுடன்
இறந்து, ஒருவன் பறந்துசென்றான்;
இவன்சமர்த்தால் மகம்முடித்தேன்;
ஏவல்செய்யும் படைகொடுத்தேன்;
இவன்பதத்தூட்கு அகலிஉய்ந்தாள்;
இனும்உளவே பெருமைஎன்றான். 12

11. விளங்க மறை என வளர்ந்தார்.

கலைஆழிக் கதிர்த்திங்கள் உதயத்தில் கலித்தோங்கும்
அலைஆழி எனவளர்ந்தார் மறைநான்கும் அனையார்கள். —கம். 25.

களங்கர் – அசுரர்.

12. தாடகை புதல்வருள் ஒருவன் சுபாகு இறந்தான். மற்றொருவன் மாரீசன் போன இடம் தெரியவில்லை. மகம் - யாகம், பதத்தூள் - பாத தூசி, அகலி - அகலிகை.

15 கார்முகப் படலம்

—சிவதனுசை இராமன் நாண் ஏற்ற
அது இற்றதைப்பற்றியது

வந்து சேர்ந்தது சிவதனுசு

துங்கச் சிலையைநாண் ஏற்றில்எம்மைத்
துன்பக் கடலினின்றும் ஏற்றும்என்பான்
அங்கைச் சிலைதரச் சனகன்சொன்னான்
அறுப தாயிரவர் காவிவந்தார்
தங்கைச் சிலையினும் பெரியதுஎன்பார்
தமோதரற்கு அன்றி வசம்அன்றுஎன்பார்
மங்கைத் திருமணம் வாழ்கஎன்பார்
வைத்தார் கோதமமைந் தன்சொல்வான். 1

தக்கன் யாகத்திற் சுரரைவென்று
சனகன் குலமுன்னோர் இடத்தில்வைத்த
மிக்க சிவன்கைவில் இதுமுனியே
வேள்விக்கு உழும்பாரில் கொழுமுனையில்
மைக்கண் மங்கைஅவ தரித்தாள்
மன்னர் பலரும்கண்டு ஆதரித்தார்
நக்கன் சிலைதன்னை ஏற்றின்அல்லால்
நல்கோம் எனஎம்மை நலியப்புக்கார். 2

1. என்பான் என்றது சனகனை. காவி - சுமந்து. தங்கைச் சிலை - திருமால்தன் கைச்சிலை. கோதம மைந்தன் - கௌதம முனிவரின் புதல்வனான சதானந்தர்.

2. கொழுமுனையில் அவதரித்தாள் - உழுது வந்த படைச்சாலில் பூதேவியின் திருவுருவம் வெளிப்பட்டாற் போலப் பேரழகு படைத்த பெண்ணரசி - சீதேவியும் தோன்றினாள். நக்கன் - சிவனார் கைவில்லை வளைத்து நாண் ஏற்றினால் அன்றி நல்கோம்.

உழுகின்ற கொழுமுகத்தின் உதிக்கின்ற கதிரின்ஒளி
பொழிகின்ற புவிமடந்தை திருவெளிப்பட் டெனபுணரி
எழுகின்ற தெள்ளமுதோடு எழுந்தவளும் இழிந்துஒதுங்கித்
தொழுகின்ற நல்நலத்துப் பெண்அரசி தோன்றினாள், —கம். 17.

உண்மைப் பெரும்படை அமரர்தந்தார்
　　ஓடிப் பயந்தார்கள் அரசர்எல்லாம்
திண்மைச் சிலைஏற்ற வலியார்இல்லை
　　தெரிவை மணம்இல்லை எனஇருந்தோம்;
வண்மைத் தவன்இதை நாண்ஏற்றில்
　　வாழ்ந்தோம் என—கேட்டுக் கவுசிகன்தான்
ஒண்மைக் கரியோனை முகம்பார்க்க—
　　ஓமக் கொழுந்துஎன்ன எழுந்தனனே. 3

அண்டர் அனைவரும் ஆர்த்துஎழுந்தார்
　　அரிய தவத்தோர்கள் ஆசிசொன்னார்
கொண்டல் பொருப்புவில் முறிக்கும்முன்னே
　　கோடி கருப்புவில் முறித்தனன்வேள்
புண்ட ரிகன்சாபம் வளையாக்கால்
　　பூவையுடன் நாமும்மு டிவம்என்பார்
கண்ட வுடன்மின்னை உதவாமல்
　　கனவில் எதிர்வைத்தது அறிவுஎன்என்பார். 4

3. ஓமக்கொழுந்து - பெருவேள்வியின் இறுதியிலே ஒருசேரப் பொழியப் படும் பூரண ஆகுதி. அது வேள்வித்தியில் பட்ட மாத்திரத்தில் சுவாலைகள் பொங்கி எழுமாப்போல இராமன் நிமிர்ந்து எழுந்தான்.

சீதையை 'மணம் விரும்பி வந்த அரசர் எல்லாம்,

　　எல்காக்கும் முடிவிண்ணோர் படைஈந்தார் எனவேந்தர்
　　அல்காக்கை கூகையைக்கண்டு அஞ்சினவாம் எனஅகன்றார். —கம். 23.

இது கம்பன் வாக்குத்தானா என்று ஐயுறுகிறது மர்ரே பதிப்பு. கம்பன் வாக்காகவே கொள்வார் எம்பெருமானார்.

4. வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
　　கொள்என முன்பு கொடுப்பதை அல்லால்
　　வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்துஇப்
　　பிள்ளைமுன் இட்டது பேதைமை என்பார், —கம். 30,

எடுத்தது காணார் இற்றது கேட்டார்

விடரும் மடவாரும் இவைகூற
	விடையும் களிறும்போல் நடந்துசென்று
தொடரும் சிலைதன்னைச் சீதைதன்மேல்
	சூட்டும் தொடைபோலக் கடிதுஎடுத்தான்
அடரும் பணிபோலும் சிலைநாணை
	ஐயன் ஏற்றிட்டது யாவர்கண்டார்
படரும் முறிந்துஓசை கேளார்யார்?
	பதினா லுலகுளங்கும் நடுங்கியதே. 5

ஒரே குதூகலம்

அரவோர் இடிஎன்று வெருவல்உற்றார்
	அண்டம் பிளந்ததுஎன்று அமரர்நொந்தார்
திரவோன் வலிகண்டு மலர்சொரிந்தார்
	செனகன், தவம்இப்போ பலித்ததுஎன்றான்.
இரவோர் கலிதீர நிதிசொரிந்தான்
	எண்ணெய் மணிசுண்ணம் துகில்வீசி
உரவோர் மடவோர் ஆடல்உற்றார்
	ஒலிபண் பணைவீணை முழங்கியதே. 6

5. சூட்டும் தொடை போல - பாணிக்கிரகணம் - கைக் கோவைக்கு முன் மணமக்கள் மாலை மாற்றிக்கொள்ளுதல் மரபு. அப்போது சீதைக்குச் சூட்டு தற்குரிய மாலை போலவே சிவதனுசை இராமன் மிக எளிதாக எடுத்தான்.

6. 'தோகைய ரின்னன சொல்லிட' என்றே கூறுவார் கம்பர்.
'விடரும் மடவாரும் இவை கூற' என்று, இளைஞர் உள்ளத்தையும் காட்டுகிறார் எம்பெருமானவர். விடர் - இளைஞர்.

ஆடக மால்வரை அன்னது தன்னைத்
தேடஅரு மாமணி சீதை எனும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடுஅவிழ் மாலை இதுஎன்ன எடுத்தான். —கம். 33.

எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார், —கம், 34.

பணவாள் அரவணைப் பரமன்என்பார்.
பண்பன் தசரதன் புதல்வன்என்பார்.
மணவா ளனைக்காண மடமங்கைக்கும்
வாட்கண் ஆயிரம்வேண் டும்என்பார்.
கணவார் குழற்சீதை எழில்காணக்
காகுத் தனுக்கும்அப் படியேஎன்பார்.
குணவான் இளையோனைப் பாரும்;இவர்க்
கொணர்ந்த முனிதனை வணங்கும்என்பார். 7

காதலால் சிந்தை தளர்ந்து தேம்பினாள் சீதை

ஏனோர் இதுகூற சீதைஇப்பால்
இருளும் மதியும்போய் விடிந்ததற்பின்
மீனார் விழிமாதர் சூழ்ந்துஇறைஞ்ச
வியன்தா மரைப்பொய்கை மருங்கில்எய்தி
தானோர் பளிங்குமா மண்டபத்தில்
சந்திர காந்தத்தின் புனல்தெளித்துச்
தேனார் மலர்ப்பாயல் தனிற்சேர்ந்து
சிந்தை மயலாளே தேம்பல்உற்றாள். 8

பாரச் சிலைக்கையும் திருமார்பும்
பகழித் தூணியும் புறத்துஅழகும்
காரைப் புரைதோளும் புரிநூலும்
கண்ட லால்எனது ஆவிகாணேன்
தாரைப் புனைந்ததண் கருங்குஞ்சியும்
தண்டா மரைக்கண்ணும் மதிமுகமும்
ஆரக் கவர்ந்துஎந்தன் மதியைஉண்டு
அகலாது இமையும்விட்டு அகலாதே. 9

7. கயல்பொரு கடலுள் வைகும் கடவுளே காணும் என்பார். —கம். 42.

நம்பியைக் காணநங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணும் தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்
தம்பியைக் காண்மின் என்பார் தவம்உடைத்து உலகம்என்பார்
இம்பர்இந் நகரில்தந்த முனிவனை இறைஞ்சும் என்பார். —கம். 43.

9. நாண்உலாவு மேருவோடு நாண்உலாவு பாணியும்
தூண்உலாவு தோளும்வாளி பூடுஉலாவு தூணியும்
வாள்நிலாவின் நூல்உலாவும் மாலைமார்பும் மீளவும்
காணல்ஆகும் ஆகின்ஆவி காணல்ஆகு மேகொலாம். —கம். 47.

அரவோர் - நாகர்.

சினங்கொண்டு அழலும்வெவ் விடமும்என்மேல்
சிந்தும் மதியெதோ மறுஒன்றுஇல்லை
அனங்கன் கணைக்குஅஞ்சும் ஏழைஎன்றால்
அஞ்சல் இனிஎன்னாதது என்னஆண்மை
எனங்கம் தளரும் தனங்கள்விம்மி
எழுந்துஎன் அவர்மார்பில் அழுந்தாதேல்
கனங்கொண்டு அமுதம்கண்டு அருந்தார்போல்
கைவிட்டிருந்து எண்ணிக்கரைந்து ஒன்றுண்டோ. 10

ஆம், அவனேதான்

மலைவண் முலைநீல மாலைஎன்பாள்
வந்து வணங்கிக்கொண் டாடிச்சொல்வாள்
தலைவன் தசரத ராமன்என்பான்
தானும் தம்பியும் முனியும்வந்தான்
நிலைவன் சிவன்வில்லை எடுத்துஏற்ற
நிருபர் சபைஅஞ்ச முறிந்ததுஎன்றாள்;
அலைவன் துயர்தீரத் தெளிந்துவஞ்சி
அவன்ஆம் எனஆகம் புளகம்உற்றாள். 11

அன்றேல் முடிவேன்என்று இதயத்துஎண்ணி
அன்னம் இருந்தாள்;அச் சிலைஇற்றதோ
குன்றேஅதிர் ஓசைக்கு உவகைமிக்கான்
கோசிகனைத் திங்கள் குலவேந்தன்
இன்றே மணம்நன்றோ அரசன்வந்தோ
என்றே வினவ,மற்று அரசன்எய்தல்
நன்றே எனத்தூதர் கையில்ஓலை
நல்கி விடுத்தான் தசரதன்பால். 12

10. உருவ வெளிப்பாட்டிலே இராமனது முகச்சந்திரன் தோன்ற, நேற்றுத் தோன்றி வருத்திய சந்திரன் அல்ல. இதனிடையே தோமறு - களங்கம் காணப்படவில்லை. இது எங்கிருந்து வந்ததோ? எனங்கம் - என் அங்கம்.

சஞ்சலம் கலந்தபோது தையலாரை உய்யவந்து
அஞ்சல்அஞ்சல் என்கிலாத ஆண்மைஎன்ன ஆண்மையே? —கம். 49.

11. கோமுனி யுடன்வரு கொண்டல் என்றபின்
தாமரைக் கண்ணினான் என்ற தன்மையால்
ஆம்அவ னேகொல்என்று ஐயம் நீங்கினாள். —கம். 62.

12. சொல்லிய குறியின்அத் தோன்ற லேஅவன்
அல்லனேல் இறப்பென்என்று அகத்துள் உன்னினாள். —கம் 63.

உவகைமிக்கான் - சனகன்.

16

எழுச்சிப் படலம்

—தசரதன் மிதிலைக்குப் போதலைக் கூறுவது

வந்தது திருமணச் செய்தி

விரிந்தபுகழ் சேர்விசுவா மித்திரர்தாம் ஏவத்
தெரிந்த அயோத்தியிற்போய்ச் சேயைப் —பிரிந்த
துயரதனை நீங்கிடவே தூதர்இட்டார் ஓலை
தயரதனைத் தாள்பணிந்தே தான். 1

அறிந்தனன்அங்கு அரசர்பிரான்
அவ்வோலை வாசகம்தான்
முறிந்தவில்லின் ஓசைகொல்லோ
முன்னர்இங்கே இடித்ததுஎன்றான்.
செறிந்தபெரும் சேனைமுன்னே
செல்கமுரசு அறைகஎன்றான்.
அறைந்தனன்,வள் ளுவன்புவிமால்
அளந்தஅன்றுஓர் சம்புவன்போல். 2

கடல் என எழுந்தது சேனை

பாழிஇடி பேரிஎன்னப்
பார்த்திபர்தேர் அருக்கர்என்ன
வாழியஓ டையும்களிறும்
வானவில்லும் மழையும்என்னச்
சூழும்முகில் கொடிகள்என்னச்
சுடர்க்குடைகள் அன்னம்என்ன
ஏழுகடல் சேனைஎன்ன
எழுந்துமுன்னே நடந்தனவே. 3

2. திருமால் மூவுலகும் அடங்கும்படி ஈரடியால் அளந்து கொண்ட காலத்தில் சாம்பவான் பறை அறைந்து திரிந்தாற்போல, வள்ளுவன் நகர் எங்கும் திரிந்து பறை அறைந்தானாம்.

மடப்பிடிகள் ஊரும்மின்னார்
மலைமுகிலுள் மின்கள்ஒக்கும்
திடப்பரிமேல் வரும்மடவார்
திரையினில்ஒ திமங்கள்ஒக்கும்
தொடப்பயில்வெண் சிவிகைகள்மேல்
சுடர்வானத்து இந்துஒக்கும்
அடற்பகடு நடப்பதுஒக்கும்
அருகுசெல்லும் குமரர்எல்லாம். 4

கொடைக்குஒளியாத் தனத்துஅணைத்து
மனத்துஅணையாக் கோதையர்போல்
தொடைக்குஒளியா நடக்கினும்கால்
தோயாவாம் பரிநிலத்தே
நடைக்கொழுகொம்பு எனத்தாங்கும்
ஞாலமன்னன் எழுவதன்முன்
படைக்கொழுந்து மிதிலைஎனும்
பதிஅதனைக் கூடியதே. 5

வழிநடைக்காட்சி

பாண்டியிற்செல் மாதர்முகம்
பைங்கமல வனமதுஒக்கும்
தாண்டியவேல் விழிபாயத்
தகும்சமர பூமிஒக்கும்
வேண்டியகா தலிற்பார்க்கும்
விழிக்கடைமை அமுதம்ஒக்கும்
ஈண்டுமன்னர் குடைச்சிவிகை
இயங்குகங்கைத் தரங்கம்ஒக்கும். 6

5. தசரதன் அயோத்திவிட்டுப் புறப்படுமுன்னே அவன் படைகளின் முன்னணி (படைக்கொழுந்து) மிதிலை நகரை அடைந்தது.

சூருடை நிலைஎனத் தோய்ந்தும் தோய்கிலா
வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்
தாரொடும் சதியொடும் தாவும் ஆயினும்
பாரிடை மிதிக்கின்— பரியின் பந்தியே. —கம். 20.

6. பாண்டிலின் வைத்துஓர் பாவை தன்னொடும்
ஈண்டிய அன்பினோடு ஏகு வான்இடைக்
காண்டலும் நோக்கிய கடைக்கண் அஞ்சனம்
ஆண்தகைக்கு இனியதுஓர் அமுதம் ஆயதே. —கம். 25.

விழி கடை - கடைவிழி மை. தரங்கம் - அலை.

தெரியமுலைப் பார்வைவிடார்
சினக்களிற்றை முட்டிடுவார்
பரியில்விழும் மாதரைத்தாம்
பற்றிஎடுத்து உடன்நடப்பார்
புரிகுழலாய் நடுமறந்து
போந்ததுஎன்னே எனப்புகல்வார்
கருவிழியோ புகர்வேலோ
கடுங்கூர்மை எனப்பார்ப்பார். 7

ஆறேற்ற எடுப்பவர்ஆர்
ஆரமுதே என்பவரும்
மீறேற்றும் ஒட்டகையும்
மிகச்சுமக்கும் என்பாரும்
பேறேற்ற கமண்டலக்கைப்
பெருங்குடைக்கை அந்தணரும்
ஊறேற்ற பலமுழக்கால்
ஊமைகள்போல் செல்பவரும், 8

புள்ளினம்ஆர் பொய்கையைப்போல்
பூவையர்கால் சிலம்புஒலிக்கும்
புள்ளினமோ கரிமதமோ
பூவையர்கண் கார்முகமோ
துள்ளிநெடு மழைத்தாரை
தூளிவெள்ளம் அடைத்திடவே
துள்ளிஎழும் சேனைவெள்ளம்
தொடர்ந்துசொம்பாய் நடந்தனவே. 9

7. நடு - இடை. உங்கள் தனங்களும் தோள்களும் வெளியே தோன்றுகின்றன; இடை, அப்படித் தோன்றவில்லை. 'மருங்குல் எங்கு மறந்து வந்தாய்?' என்று கேட்டான் ஓர் இளைஞன் யுவதி ஒருத்தியிடம்.

8. ஆறு ஏற்ற - ஆற்று வெள்ளத்திலே உன்னை எடுத்துக் கரை சேர்ப்பவர் யாரோ? மீறு ஏற்று ஒட்டகம் - தள்ளரும் பாரம் தாங்கிய ஒட்டகம். கூட்டத்திலே கலவாமல் முந்திச் சென்றனர் அந்தணர். பல்வகையான பேரொலிகளால் ஒருவருக்கு ஒருவர் உரையாடாமல் ஊமையர்போல் சென்றனர். பேறு ஏற்ற - பெருமை பொருந்திய. ஊறு ஏற்ற - இடைஞ்சலான.

பூட்கைவரக் குழல்சரியப்
    போவாரை மதச்சேற்றில்
வாட்கைஇடம் தனில்ஏந்தி
    வலக்கைதனில் கொடுநடப்பார்;
தாட்கைமுகம் போல்மலரத்
    தருகஎன்பார் நாயகரை
வேட்கைஇருள், கொடிகுடையால்;
    விடிவுபகல், தொடைபடையால். 10

அறுக்கும்நம்மை விழிவாள்என்று
    அரிவையரை அகன்றுசெல்வார்
அறுக்கும்மணிப் பரல்உறைப்ப
    ஆடவர்தோள் மீதுசெல்வார்
இறுக்குமகா பரம்எறிந்து
    எருதுஓடும் யோகியைப்போல்
இறுக்குமகா வில்ஒலிமேல்
    இன்னிசைபா டிச்செல்வார். 11

பரிசனங்களுடன் செல்கிறான் தசரதன்

தும்பியல்வாய்க் கைபிடிப்போர்
    தோகைஅன்னம் கிளிகவர
தும்பியல்ஆ யிரமடவார்
    சூழவரும் கைகையுடன்

10. வாட்கை - வாள்கை. வலக்கை வாளை இடக்கைக்கு மாற்றி, வலக்கையால் தம் மனைவியரின் கையைப் பற்றிப் பையப்பைய நடத்திச் சென்றனர். தாள் கை முகம் போல மலர்ந்துள நெய்தல் நீலோற்பலம் முதலிய பூக்களைக் கொய்து இவை தருக என்று தம் கொழுநரை வேண்டுவார் சிலர். கொடி குடையால் இருள்; தொடை படையால் பகல்.

11. வண்டிகளில் பூட்டப்பெற்ற காளைகள் கட்டு அறுத்துக்கொண்டு பாரங்களை எல்லாம் தள்ளிவிட்டு ஓடி வருத்தம் தீர்தல், பாசமும் பற்றும் அற்றுப் பரிவுதீரும் யோகிகளுக்கு உவமை.

அறுக்கும் - வருத்தும். இறுக்கும் - அழுத்தும், முறிக்கும்.

தும்பிஎங்கும் சேடியர்கள்
சுற்றவரும் சுமித்திரையும்
தும்பிகளின் இசைபாடத்
தொடைச்சிவிகை மீதில்வந்தார். 12

செறிவயிரம் மணிக்கனகம்
செய்யவையம் தனில்மடவார்
அறுபதினா யிரம்சூழ
அண்ணலைஈன் றவளும்வந்தாள்
மறுவறுமா தவர்க்குள்வந்தான்
வசிட்டனும்வெண் குடைநிழற்கீழ்
சறுவரும்போற்று இருவரும்போல்
தம்பியராம் இருவர்வந்தார். 13

நித்தநிய மம்முடித்து
நேமியன்தாள் தலைக்குஅணிந்து
மெத்தமெய்த்தா னம்கொடுத்து
வேந்தனும்மங் கலநாளில்
சுத்தமறைபுகன்று அறுகுமலர்
தூவிமணக்க லசமும்கொண்டு
எத்தனையோர் அருகுவர
ஏழையர்பல் லாண்டுஇசைப்ப 14

12. தும்பு - வீண் பேச்சு, வரம்பு, ஓதம், வண்டு. தோகை - மயில், அன்னம், கிளி முதலியவற்றைக் கையிலே ஏந்திச் சேடியர் சூழ்ந்து வருகின்றனராம் கைகேசியை.

13. வையம் - விமானம். ஈன்றவள் - கோசலை. சறுவரும் - சர்வர் - அனைவரும், இருவர் - இராம இலக்குமணர். தம்பியர் - பரத சத்துருக்கனர்.

14. வேந்தன் - தசரதன். இச்செய்யுள் குளகம்; இசைப்ப, (15-ல்) மகிழ, ஓட்ட, (16-ல்) இந்துசைலம் உற்றான். நியமம் - கடமை. நேமியன் - ஒற்றைச் சக்கரமுள்ள தேரையுடைய சூரியன்; நித்த நியமங்களில் காயத்திரி மந்திரம் ஒன்று. அது சூரியனைப் போற்றும் மந்திரம். மேலும் தசரதன் சூரிய குலத்தினன் ஆதலால் சூரியனை வணங்குதலை மரபாகக் கொண்டான்.

இருகைகுவித்து அரசர்பலர்
எனைப்பார்த்தான் எனமகிழ,
பெருகவளை கரிமுரசம்
பேர்ஒலிகா ரினைஒட்ட,
வருகையினில் தூளிவெள்ளம்
வான்உயர்ந்தும் மறிகடலைப்
பொருகையினால் சகரருடன்
பொருந்தாதார் போன்றுஅகன்றே. 15

சந்திரசயிலம் சேர்ந்தனர்

பன்னரும்தேர் பரிகரிஆள்
பலசனத்தால் பார்நெளிக்க
என்னநிலம் பொறைதீர்த்தான்
என்ன,இரண்டு யோசனைபோய்
மன்னன்இந்து சைலம்உற்றான்
மலையினின்றும் தென்றல்வர
நன்னிலம்சேர் தருக்கள்தொறும்
நனிபலமாக் கட்டினரே. 16

மிடைபகைவேர் அறுப்பவர்போல்
வெள்ளிமரம் வேர்பிடுங்கி
இடைமருதம் ஒடித்தவன்போல்
இரண்டுமரம் ஒடித்தகரி
நடைவழிஏழில் ஐம்பாலை
நாற்றம்உற முறித்ததுஒன்றோ
அடைவுஅறியா அரசன்ஒக்கும்
அமைச்சன்ஒக்கும் பாகன்அம்மா! 17

17. தன்னைக் கட்டியிருந்த உரலோடு தவழ்ந்து, இரண்டு மருத மரங்களுக்கு இடையே அவை முறிந்து விழும்படி சென்ற கண்ணபிரான் போல ஓர் யானை தான் கட்டப்பட்டு இருந்த மரத்தை வேரொடு முறித்து எதிரிலிருந்த இரண்டு மரங்களுக்கு இடையிலே அவை முறிந்து விழும்படி சென்றது. மதங் கொண்ட யானையை வசப்படுத்தும் பாகன், நீதிநெறி நில்லாது தன் மனப் போக்கின்படி நடக்கும் அரசனை நல்வழிப்படுத்தும் அமைச்சனைப் போன்றான்.

சிரியஆ ரியர்மருளைத்
        தீர்ப்பதுபோல் உருள்உரைக்கக்
காரியகல் லையும்தமைப்போல்
        கனகம்நிறம் ஆக்கினதேர்
கூரியவாய்கவ் வும்இந்த்ர
        கோபம்என்ன மேகலையால்
தாரியல்ஆர் வார்குழலால்
        தையலர்பின் செலும்மயில்கள். 18

புரவிநின்றும் தருநிழலில்
        பூத்தகொம்பாம் எனப்பொலிவார்
பரவியபந் திகள்நிரைப்பார்
        பளிக்குஅறையில் துயின்றிடுவார்
விரவிளங்கும் காமுகரும்
        மெல்லியரும் உலாவல்உற
வரவியல்வா கனத்துஇறங்கி
        மன்னர்தந்தம் விடுதிபுக்கார். 19

குன்றுஇறங்கும் கோள்அரிபோல்
        குஞ்சரம்நின்று இறங்கிடுவார்
மென்துகிலால் துகள்துடைப்பார்
        விளங்குஇளமா தரைவிடரும்

18. பெரியோர் சிறியோரைச் சேர்ந்து அவர்தம் சிறுமையை மாற்றுமாப் போல, தேர்கள் உருண்டோடிக் கருங்கற்களையும் தேய்த்துத் தேய்த்து நிறம் பெறும்படி செய்தன.

மகளிரின் சிவந்த வாய்களைப் பார்த்து மயில்கள், இந்திரகோபப் பூச்சிகள் அல்லவா அவ் வாய்களைப் புகலடைந்து இருக்கின்றன என்று அவர்பின் சென்றனவாம். அவரது மேகலாபரணம், கூந்தல் எல்லாமுமே தம் தோகை போன்றன என்று கருதியும் அவர்பின் சென்றனவாம்.

குறிப்பு: கம்பராமாயணப் பதிப்புகளிலே 16ஆம் பாடலுடன் எழுச்சிப் படலம் முடிகிறது. 17ஆம் பாடலுடன் வரைக் காட்சிப் படலம் தொடங்குகிறது.

19. தாம் ஏறியிருந்த குதிரைகளினின்றும் இறங்கி மரநிழலிலே போய்ச் சேர்ந்த மகளிர் பூங்கொம்புபோல விளங்கினராம். குதிரைகளைக் கட்டுத் தறியிலே வரிசையாகக் கட்டினராம்.

ஒன்றுகரி அரிகரன்போல்
　　ஒருபால்வெண் பொடிபுனையும்
துன்றுபரித் துகள்படிந்து
　　துறப்பவர்போல் உதறினவே. 20

வாரிஅற ஊற்றுஉதவும்
　　வறுமையினும் வள்ளலைப்போல்
பாரியநீர் குடைமதமா
　　பறவைமது கயிடவர்போல்
ஆரியர்சொல் கேளாமல்
　　அழிந்திடும்கா முகர்போன்ற
காரிகையார் அடும்புகைநீள்
　　கடல்படிகார் போன்றதுவே. 21

20. அரி - சிங்கம். கரி - யானை. வெண்புழுதி ஒரு பக்கம் படியப்பெற்ற யானை மறுபக்கம் தன் இயல்பான கருநிறத்தோடு அரிகரன் (சங்கரநாராயணன்) போலக் காட்சி தந்ததாம். புழுதியிலே புரண்டு எழுந்த குதிரை தன் உடம்பிலே படிந்த புழுதியை மெய் உதறி நீக்கும். தீயவரோடு தொடர்பு கொண்டவர் அவர் இயல்பை அறிந்து அத் தொடர்பை விட்டுவிடுவர். இவரைப் போன்றதுதானாம் அந்தக் குதிரை.

21. தண்ணீர் அறவே வற்றியபோதும் ஊற்றுக்காலால் நீர் உதவும் நதி 'உள்ளது மறாது உதவும் வள்ளலையும் ஒத்த'. பாரிய - விரிந்த. குடை - குளிக்கும் மதயானைகள் அலைபுனலைக் கலக்குவன, பிரளய காலத்திலே கடலைக் கலக்கிய மதுகைடபரைப் போன்றனவாம். மேலும் பாகர்கள் தமக்கு உரைத்த குறிப்பு மொழிகளின்படி நீர்நிலையினின்றும் வெளி ஏறாது புனலி லேயே படிந்து கிடந்ததால் அந்த யானைகள், ஆன்றோர் சொல் கேளாது சிற்றின்பத்திலேயே அழுந்திக்கிடக்கும் காமுகர் போன்றனவாம்.

17 வரைக் காட்சிப் படலம்

—சந்திரசைலச் சாரலிலே தசரதன் ஆதியர்
மலைவளம் கண்டு களித்தது

மலைவளம்

உரைக்கும் புகழ்விஞ்சை வேந்தர்துன்ற
உம்பர் உலகுஒத்த சேனைவெள்ளம்
வரைக்கும் குயில்கட்கும் எதிர்கூவி
மயில்போல் திரிந்தனர் மடமாதர்
விரைக்குங் குமத்தோளார் வடிவாளர்
வீரக் கழற்சிங்கம் போல்திரிந்தார்
இரைக்கும் கடல்சூழும் மேருஎன்ன
இந்து சயிலத்தை விளம்பல்உற்றாம். 1

குழையோடு ஒடித்துப்பூங் கொம்பைத்தம்
கோலப் பிடிக்குஈயும் கோட்டுயானை
தழையோடு அலர்வேங்கை வெறுத்ததும்பி
தாரா கணம்தாவும் புன்னைஎன்ன—
மழையோ வான்ஆறோ ஆனைகையால்
வாரும் செழுந்தேன்ஐ வனம்விளைக்கும்
பழையோர் மதியைத்தம் இருபாலும்
பார்ப்பார் குறமாதர் அரம்பையர்போல். 2

குறவர் குறத்தியர் முகத்தினொடும்
குளிர்மா மதிதன்னை நிகர்பார்ப்பார்
கறைவன் கரிக்கொன்ற அடிச்சுவடும்
காந்தள் முடிமாதர் அடிச்சுவடும்

1. கம்பராமாயணப் பதிப்புகள் சிலவற்றிலே இப் பாடலுடன் எழுச்சிப் படலம் முடிவடைகிறது; பின்னர் வரைக் காட்சிப் படலம் தொடங்குகிறது.

2. ஓர் யானை தன் கொம்பால் தேன் இறாலைக் குத்தியதால் அதனின்றும் பாய்கிற தேனைக் கொண்டு குறவர் ஐவனம் - மூங்கில் நெல்லை விளைவிக்கின்றனர். சந்திர சயிலம் அல்லவா? இதன் சாரலிலே தங்கிய குறமாதர் சந்திரன் ஆகிய கண்ணாடியிலே தம் அழகைக் காண்பர்; அதே கண்ணாடியின் மறுபுறத்திலே அரம்பையர் தம் அழகைக் காண்பர்.

துறைவன் மணிப்பாறைச் சுனைஆடச்
சுகந்தம் கமழ்வெள்ளம் தேனைஒக்கும்
நறைவண்டு இனம்மின்னார் இசைபாட
நவில்கின் னரம்தாமும் மயங்கும்மன்னோ. 3

கொங்கைக் குறத்தியர் தொடைசூட்டிக்
கூந்தல் கமுகைத்தம் குழற்குஒப்பென்பார்
துங்கத்து அரம்பையர் கடகம்இட்டுத்
தொடிக்கைக்கு இணைஎன்பார் காந்தள்தன்னை
மங்கைக் கொடிஅன்னார் வெறுத்தபொற்பூண்
மந்தி யுடன்ஆடும் கவிபூணும்
கங்கைச் சிவன்ஒக்கும் அருவிக்குன்றம்
கரியோன் அணிஒக்கும் மணிச்சாரல். 4

மலைக்காட்சி

ஏலம் இலவங்கம் நாகத்தண்பூ
இசைய முடிப்பார்தண் தேறல்உண்பார்
கோல முலைபோலக் கோங்குஅரும்பும்
கொம்பில் பெடைவண்டும் கூந்தல்வண்டும்
சால மணம்செய்ய மனம்உகப்பார்
தலத்தில் பளிங்குஎன்று சுனையிற்புகக்
கால விழியார்மென் துகில்நனையக்
கடகம் எறிந்துஅவர் முறுவல்செய்வார். 5

3. தரையிலே யானையைக் கொன்ற வீரர்தம் அடிச்சுவடும், அவர்தம் தலைமுடியிலே மகளிரின் பாதச்சுவடும் காணப்படுமாம். பளிங்குப் பாறைகளிலே அமைந்துள சுனைகளிலே மகளிர் நீராட, அவர்தம் கூந்தலின் மலர் மணம் குங்குமக் கலவையுடன் கலந்து அந்தச் சுனை நறுமணம் வீசுவதுடன், பளிங்குப்பாறை கிண்ணமாக அதன்நீர் தேனைப்போன்றிருந்ததாம். 'மங்கையர் பாடல் கேட்டுக் கின்னரம் மயங்குமாதோ' என்பார் கம்பர்.

4. கூந்தல் கமுகு - கூந்தற்பனை. சாரல் - மேகம். மகளிர் வெறுத்துக் கழற்றி வீசிய பொன் அணிகளை 'மரம்பயில் கடுவன் பூண மந்தி கண்டு உவக்குமாதோ' என்பார் கம்பர். மலைவீழ் அருவி, சிவனார் சடையினின்றும் வீழுகிற கங்கையையும் திருமால் மார்பிலே தரித்த உத்தரீயத்தையும் ஒக்குமாம்.

5. பரந்த சுனை நீரைப் பளிங்குத் தலம் என்று தவறாகக் கருதி நடந்த மகளிரின் மெல்லிய ஆடை நனைவதைப் பார்த்து, இளைஞர்கள் கடகம் அணிந்த தம் கை கொட்டி நகைப்பராம்.

பாயல் பலகண்டார்; மாலைகண்டார்;
பசுந்தேன் நுகர்ந்திட்ட கலசம்கண்டார்;
சேய கணவரைப் பிரிந்தமின்னார்
சேர்ந்து கருகிய சயனம்கண்டார்;
தூய வெள்ளிலைப்பா கம்கண்டார்;
தொடைஆ டிடஆடும் ஊசல்கண்டார்;
நேயம் இமையோர்தம் கலவிமுற்றி
நீத்த கற்பகத் தொடையல்கண்டார். 6

பாந்தள் எனக்காந்தள் முன்கைக்குஅஞ்சுவார்
பளிங்கின் நிழற்பூவைப் பறியும்என்பார்
வாய்ந்த அனம்எனப் புனல்குடைவார்
வாழைக் குருத்துஅன்ன வாமமின்னார்
தோய்ந்து மலர்நாடும் சுரும்பினம்போல்
சுனையும் சோலையும் மலைவளமும்
ஆய்ந்து பகல்முற்றும் விளையாடி
அன்பால் மகிழ்வுற்றது அனிகவெள்ளம். 7

வந்தது அந்திமாலை

ஓங்கும் குடக்குன்றம் யானைஒக்கும்
ஒளிர்வெய் யவன்பாயும் சிங்கம்ஒக்கும்
வீங்கும் கரிரத்தம் ஒக்கும்செக்கர்
விளங்கும் மாஎல்லாம் தளிர்த்ததொக்கும்
தேங்கு சிகரங்கள் மகுடங்கள்போல்
செஞ்சந் தனம்பூசும் மாலைஒக்கும்
தாங்கும் கனச்சந்த்ர கிரியில்தங்கிச்
சகல சனங்களும் தலத்தின்உற்றார். 8

7. பாந்தன் - பாம்பு. அனம் - அன்னம். வாமம் - அழகு. அனிகம் - சேனை.

8. வெய்யவன் - சூரியன். கரி - யானை. செக்கர் - செவ்வானம். மா - மாமரம். மால் - திருமால். சிகரங்கள் மகுடங்களாக மலைகள் செஞ்சந்தனம் பூசிய திருமாலை ஒக்கும்.

கதிரோன் எனும்சிங்கம் செலக்கங்குல்
கரிபோல் வளைத்தபின் பலதீபம்
சதிரோர் புகழ்வாய்மை மன்னர்மன்னன்
தானைக் கடல்பூத்த தாமரைபோல்
அதிர்ஏர் வளைமுத்தம் ஈன்றாற்போல்
அநேகம் மீனோடு மதிதோன்ற
எதிரோ மதிஎன்று மாதர்முகம்
எண்ணில் மதிசேனைக்கடல் வற்றல்போல். 9

கழிந்தது கங்குல்

ஆர மணிமுத்து வடம்நீக்கி
அகிலும் சாந்தமும் அணிவாரும்
நேர மல்லிகை வெறுத்துப்புன்னை
நிரைசண் பகமாலை புனைவாரும்
பார முதுகேள்வி குழல்வீணை
பாடல் கேட்டும்நல் ஆடல்கண்டும்
சேர ஊடியும் கலவிஉண்டும்
செறிந்த பெரும்கங்குல் கழிந்ததன்றே. 10

9. சதிரோர் - அறிஞர். அதிர் ஏர் - மிக்க அழகு. வளை - சங்கு. தசரதனது சேனைப் பெருக்கமாகிய கடலிடம் எங்கும் தீபங்கள் ஏற்றப் பெற்றது கடல் தாமரை பூத்தாற்போல் தோன்றியதாம். சந்திரன் நட்சத்திரங் களோடு தோன்றியது சங்கு முத்தை ஈன்றதுபோலத் திகழ்ந்ததாம். உவர்க்கடல் ஒரே ஒரு சந்திரனைத்தான் பெற்றது; இந்தச் சேனைக் கடலோ மாதர் முகங் களாகிய எண்ணிலாத சந்திரர்களைத் தோற்றுவித்ததாம்.

பூக்கொய் படலம்

—வழியிலே ஒரு சோலையில் தங்கி மாதர்களும் மைந்தர்களும் மலர் பறித்தலைக் கூறுவது

சூரியோதயம்

இந்துஎயிற்று அம்தார் இருள்கனக னைச்சீறி
நந்துகதிர் என்னும் நகம்பாய்ச்சிச் —சிந்துநடுப்
பாரதுங்கம் சேர்உதய பர்வதம்என் தூணில்எலோன்
நாரசிங்கம் போல்தோன்றி னான். 1

பூஞ்சோலை புகுந்தனர்

நியமம்எல்லாம் செய்துமன்னன்
நீள்நெடும்தேர் மீதுசென்றான்
சுயமதிசேர் சேனைவெள்ளம்
சோணம்என்னும் ஆறுஅணுகச்
செயமலிவான் பகற்பொழுதில்
தெரிவையரும் ஆடவரும்
கயமலிசேர் சோலைபுக்கார்
கன்னிஇள மஞ்ஞைவெட்க. 2

யார்தான் வளைந்துகொடாதார்

தத்தகுயில் குரல்ஒழிந்த
சமர்த்தர்முன்னே வாய்இலர்போல்
சித்தம்மகிழ் மாதர்கையால்
தீண்டவளைந்து அடியிணைக்கீழ்
மெத்தமலர் சொரிந்தகொம்பும்
வேறுஇனி,யார் வளைந்து இறைஞ்சார்
உத்தமர்தோள் மலைவளைந்தால்
உற்றகொம்பும் வளையாவோ. 3

1. இந்து - பிறைச்சந்திரன். எயிறு - பல். இருள் கனகன் - இருளாகிய இரணியன். சிந்து - கடல். எலோன் - எல்லோன் - சூரியன்.

2. சோலையிற் புகுந்தபோது, மகளிரைக் கண்ட மயில்கள் அவர்தம் சாயலுக்கு வெட்கின.

3. வாசகம்வல் லார்முன்நின்று யாவர்வாய் திறக்கவல்லார். —கம். 6.
வஞ்சிபோல் மருங்குலார்மாட்டு யாவரே வணங்கலாதார். —கம். 7.

புகழ்ந்தவர்போல் வளைந்தகொம்பு
புலந்தவர்போல் சிலவளையா
முகம்தடங்கண் சுரும்புமொய்க்கும்
முளரிஎன்றும் குவளைஎன்றும்
சுகந்தமென்பூக் கொய்தகொம்பைத்
துணைவர்கண்ணுக்கு அழகிலென்று
உகந்தமின்னார் ஆபரணம்
உறப்பூட்டி நோக்கிநிற்பார். 4

புலவி நுணுக்கம்

கைம்மலர்சேர் நிழல்பளிங்கில்
கண்டுஇவள்ஆர் என்முன்என்று
செம்மலைஊ டிக்குயிலைச்
செழுமலர்கொய்து அருளும்என்பார்
வைம்மலிவே லவன்இளநீர்
மாதர்கொங்கை போலும்என்ன,
எம்மடவார் கொங்கைகண்டீர்
என்றுநின்று வெய்துஉயிர்ப்பாள். 5

அலர்பறித்தான் விழிபுதைத்தாள்
ஆர்எனவே சீறிநிற்பாள்
சிலர்தமைப்போல் மாறாடச்
செழுமலர்மோந் திடமுகப்பார்
மலர்பறித்தான் ஏற்றவர்க்கு
வழங்கஅஞ்சும் மறுத்தல்அஞ்சும்
பலவரிக்கண் வண்டுசுற்றும்
பாய்மதமால் யானைமன்னன். 6

4. மைந்தரை அணைந்து அவரைப் புகழும் மடந்தையர்போலத் துவண்டு வளைந்த சில பூங்கொம்புகள்; ஊடிப் புலந்து நின்ற மகளிர்போலச் சில பூங்கொம்புகள் கைப்பிடிக்கு அகப்படாமல் நிமிர்ந்து நின்றன. முகம் கண்களைத் தாமரை குவளை என்று வண்டுகள் மொய்க்குமாம்.

5. பளிங்குக் கல்லிலே மலர் ஏந்தித் தோன்றுகிற தன் நிழலைப் பார்த்த ஒருத்தி 'இச் சித்திரப்பாவை யாரோ?' என்பாள்.

6. தம்மிடம் மாற்றாளைப்பற்றிச் சொல்லாட, மனம் புழுங்கி வெய்து உயிர்த்து, அவனை நிமிர்ந்து பார்க்க மனம் இன்றிக் குனிந்தவாறே ஒரு மலரை முகர்ந்திருந்தாள் ஒருத்தி. மலர் பறித்த ஒருவன் தன் மனைவியரான இரு மாதர் ஏக காலத்திலே வந்து தம் கைகளை நீட்டிக் கேட்டவர்க்குக் கொடுக்க அஞ்சுவான்; மறுக்கவும் அஞ்சுவான். எவ்வகையிலும் அவர்கள் புலத்தற்கு இடம் உண்டு அல்லவா?

பார்க்கலொண்ணாப் பிறைநுதற்கும்
பயில்வாட்கும் பகுத்துநல்க
தீர்க்கலொண்ணாச் சினத்தினொடும்
சிந்தினள்அங்கு அதில்ஒருத்தி
வேர்க்கமுத்தம் அற்றுஉதிர
மென்மலர்நா டித்திரிவார்
போர்க்கஅன்னம் வெறுவிதுஎன்று
பூவாடை நல்கிடுவார். 7

புன்னையின்மேல் ஏறிநின்றான்
புந்தியின்மேல் ஏறிநின்றாள்
மன்னறிவால் உயர்ந்தவரும்
மாதரில்தா ழாதவர்ஆர்
வன்னமுலைப் பார்வைவிடான்
மலர்பறிப்பான் கைநினைவால்
இன்னம்மலர் கொய்துஆடி
இரும்புனல்ஆ டப்புகுந்தார். 8

7. ஒருவன், தன் இரு மனைவியர்க்கும் தன் கையில் இருந்த மலர்களைச் சமமாகப் பகுத்து நல்க, ஒருத்தி சினந்து கணவன் தந்த மலர்களைக் கீழே போட்டுப் போவாளாம். முத்துவடம் அற்று உதிர எங்கும் மலர் நாடித் திரிவார் சிலர். அன்னம் ஆடை இன்றி இருப்பது கண்டு அதற்குப் பூவாடை போர்த்துவாளாம்.

8. பூப்பறிக்கப் புன்னை மரத்தின்மீது ஏறி நின்ற தன் காதலன் மனத்துள் ஒருத்தி ஏறிக்கொண்டாள்.

19 நீர்விளையாட்டுப் படலம்

—பூக்கொய்தவர் புனல்விளையாடலைக் கூறுவது

பொய்கைபுக்கு மூழ்கி எழுந்தனர்

புனலாடப் புகுந்தவண்ணம்
புரந்தரன்தன் செல்வம்எல்லாம்
கனலாடும் பாகுமொழிக்
காரிகையார் குழாங்களுடன்
அனலாடும் பரமன்அன்ன
அருந்தவன்தான் சாபம்இட
மினலாடும் திரைகடல்வாய்
மீளவரச் செய்ததுஒக்கும். 1

புனலாடும் மைந்தரும் மாதரும்

தாளைஅன்ன தாமரைநீர்
தனில்வாளை உகளஅஞ்சி
வேளைஅன்னார் தோள்ஏறி
வீரமின்போல் இறங்கிடுவார்
வாளைஅன்ன கண்ணியுடன்
மலர்க்கையின்நீர் முகந்துஎறிவார்
பாளைஅன்ன வாயில்நன்னீர்
பரவுகொண்கன் மேல்உமிழ்வார். 2

முனைமேவும் வேல்விழியார்
முகம்மறைக்கும் குழல்நீக்கி
அனமேவா ஆடஎன்பார்
அந்நீரில் செல்கயலைக்

1. கனல் - (கன்னல்) - கரும்பு. துருவாசன் சாபமிட இந்திரன் செல்வம் முழுவதும் தேவமாதர்களுடன் பாற்கடலிலே மூழ்கி வெளிப்பட்டதைப் போன்ற தாம், நீரில் மூழ்கி எழும் மகளிர் நிலை.

2. புனலாடும் மகளிர் சிலர், வாளைமீன் புரள்வதற்கு அஞ்சி, மைந்தர் தோள்மீது ஏறியிருந்து பின் இறங்குவார் வீரலக்குமியைப் போன்றனராம்.

கனமேவு நாயகரைக்
கண்ணுளவோ பொய்கைஎன்பார்;
தனம்மேவும் தோழிஎன்று
தன்நிழற்குஆ ரம்கொடுப்பார். 3

கனிந்தசொல்லார் சூழநின்றார்
கனைகடல்மந் தரம்அனையான்
முனிந்துசென்றாள் தன்முகமோ
முளரிகொலோ எனப்பார்ப்பான்.
பொன்னின்தடந் தோள்தழுவப்
புனல்கரைசே ரப்போவார்.
அனிந்தையர்கால் தானைசுற்ற
அரவுஎனவே நடுங்கிடுவார். 4

பெண்கள்சுற்ற ஒருவன்நின்றான்
பிடிகள்சுற்றும் மதகசம்போல்
பண்கள்சுற்றும் மொழியர்சுற்றப்
பாவைநின்றாள் பனிமதிபோல்
கண்கள்முற்றும் சிவந்திடலால்
கனிஅதரம் வெளுத்திடலால்
வண்களிப்பு நல்குதலால்
மகிழ்நர்ஒக்கும் மணித்தடமே. 5

பொய்கையும் பூம்புனலும்

மீன்நாற்றம் பரிமளித்த
மேலோரைச் சேர்ந்தவர்போல்
கான்ஆற்றில் செம்மைஉற்ற
கருவானில் செக்கரைப்போல்

3. அன்னத்தைத் தம்முடன் விளையாட வா என்று அழைப்பார். கயல் மீனைப் பார்த்துத் தம் கணவரைக் காணப் பொய்கைக்கும் கண் உளவோ என்பார். நீரிலே பிரதிபலிக்கும் தன் உருவத்தைத் தோழி என்று கருதி அதற்குத் தம் முத்து மாலையைக் கொடுப்பார்.

4. அனிந்தையர் - நிந்தை இல்லாதவர். தன் கணவனுடன் கோபித்துக் கொண்ட ஒருத்தி தாமரை மலர்களிடையே மறைந்து நின்றாள்; மறையவே அவன், இது தாமரையா? முகமா? என்று அறிய மாட்டாது தடுமாறுகிறானாம். மேகலைகள் நீங்கிக் காலைச் சுற்ற பாம்போ என்று பயந்தார் சிலர்.

5. கண்கள் சிவப்புற, அதரம் வெளுக்க, களிப்பு நல்குவதால், பொய்கை காதல் கொழுநரைப் போன்றதாம்.

மானார்க்கு மெய்விளங்கி
மணிகள்ஒப்பம் இட்டதுபோல்
கோனார்க்கும் குறிஅழியக்
கோதைநல்லார் ஊடினரே. 6

விரகமிக்கார் ஆடியநீர்
வெதும்பல்உற்ற, மென்முலைகள்
வரைகலசம் கருநூலால்
வரிந்ததுஒத்த கூந்தல்சுற்ற,
திரைகளின்மூழ் கும்கமலம்
செம்முகம்கண்டு ஒளிப்பதுஒத்த
உரைகொள்அனம் அவர்நடைகண்டு
ஒதுங்கியவாறு ஒத்தனவே. 7

கரை ஏறினர்

மங்கையைநீர் ஆட்டலுற்றான்
மலர்த்திருவை வாரணம்போல்
அங்கவர்தான் கரைஏறி
ஆடையும்ஆ ரமும்புனைந்தார்
திங்களும்மீ னும்பிரிந்த
செழுவானம் போன்றபொய்கை
இங்குஇவர்போல் புனல்குளிப்பேன்
என்றுவெய்யோன் கடலைஉற்றான். 8

6. மகளிர் நீராடியதால் அவர்தம் கூந்தலின் அகிற்புகை மணமும் கத்தூரிக் குழம்பின் வாசனையும் பொய்கை மீன்களிடத்து மணப்பன ஆயின. பெரியோரைச் சேர்ந்த சிறியோரும் சிறப்பு எய்துவர் அல்லவா ? குங்குமம் சந்தனக் குழம்பு நீர்ப்பரப்பைப் போர்த்திருப்பது, கருவானில் பரவிய செவ்வானம் போன்றதாம். உடம்பிலே பூசியிருந்த சந்தனக் கலவை நீராடியதால் நீங்கவே, மகளிர் சாணை பிடித்த மணிபோல விளங்கினராம். தன் காதலன் தோளிலே சாந்தால் எழுதியிருந்த வரிக்கோலம் அழிந்தது, அவன் காதலி கண்சிவந்து ஊடுதற்குக் காரணம் ஆகியதாம்.

7. காம விகாரத்தால் வெதும்புவாளின் உடற்கொதிப்பால் பொய்கை நீரிலும் சூடு ஏறியதாம். விரிந்த கூந்தல் படிந்திருந்ததால் தனபாரங்கள் கருநூலால் வரிந்த கலசம் போன்றனவாம்.

8. திருமகளைத் தன் துதிக்கையிலே நீராட்டும் யானைபோல, தண்ணிரை அள்ளித் தன் காதலியின்மேல் சொரிந்தானாம் ஒருவன்.

குறிப்பு: சூரியாத்தமனத்துடன் இப் படலம் முடிகிறது. சந்திரோதயம் இந் நூலிலே அடுத்த படலத்தில் தொடங்குகிறது.

20 உண்டாட்டுப் படலம்

—மிதிலை போவார் மது உண்டு
மகிழ்ந்ததைக் கூறுவது

நிலவின் வருணனை

பெண்ணார் முகத்துக்குத் தோற்றதிங்கள்
பெயர்த்தும் உதித்தது குணதிசைமேல்
பண்ணார் நிறமும்வெண் நறவும்இன்பப்
பாலும் போல்எங்கும் பரந்தநிலா
உண்ணா தவர்க்கும் கலந்தவர்க்கும்
உண்ணும் அமுதம்நஞ்சு ஆனமையால்
கண்ணார் நதிகுன்றம் கடல்கள்எல்லாம்
கங்கை கயிலைபாற் கடல்ஒத்தவே. 1

கள்ளும் காமமும்

புதுவான் நிலவாலே கோலம்கொள்ளப்
புவனம் மதனன்வெள் ளணிபோன்ற
மெதுவாம் மலர்ப்பந்தல் மணற்சிற்றிலும்
மின்னார் பசுந்தேறல் பருகல்உற்றார்
மதுவார் கலசமும்சி வக்கக்கையால்
வாட்கண் சிவக்கச்சொல் லமுதம்சிந்தக்
கதுவாம் விரகாக் கினிக்குநெய்போல்
காந்தும் படிசெய்து காட்டிற்றுஅன்றே. 2

1. பண் - இசையானது ஓர் வடிவம் கொண்டது போன்றதாம் வெள்ளை நிறமான கள்; நறவு - கள். வெள்ளக்காடாய் இது எங்கும் பரவியது. மேலும் இது, கூடியவர்க்கு அமுதமும் கூடாதார்க்கு நஞ்சுமாய்ப் பரவியதாம். நிலவு ஒளி யால் நதிகள் எல்லாம் கங்கையே ஆன; மலைகள் எல்லாம் கயிலையே ஆன; கருங்கடலுமே பாற்கடல் போன்றது.

2. உலகமே மன்மதனின் விழாக் கொண்டாடுமாப் போல நிலாவாலே அனைத்தும் கோலம் - அழகு கொண்டதாம். கையின் செந்நிறம் படுதலால் மதுக் கலசம் சிவந்து தோன்ற, வாய் வழியே போன கள்ளால் கண்களும் சிவந்தன. ஓமக் குண்டத்திலே சொரிந்த நெய்யைப் போல, உள்ளே தங்கிய விரகம் ஆகிய அக்கினியை மூட்டி எழுப்பிக் காந்தும்படி செய்ததாம் மதுபானம்.

ஏந்தும் நறவில்தன் நிழலைக்கண்டாள்
　　ஏடீ நுகர்வாயே பாங்கிஎன்பாள்
சேந்து மணிவள்ளத்து அணிநிலவைச்
　　செவ்வாய் தனில்வைத்து நாணம்கொள்வார்
காந்தும் இருகண்செஞ் சிறைவண்டுஎன்று
　　கையிற் கடிவார்;தம் முகத்தைக்கண்டு
மாந்து மதியேஇம் மதுவைஎன்றும்
　　வருத்தா தேஅன்பர் பிரியில்என்பார். 3

உள்ளம் மயங்கித்தம் மேகலையை
　　உடுப்பார்; துகில்தன்னைக் குழற்குஅணிவார்
வெள்ளம் மதுசிந்த அறியாமல்
　　மீண்டும் வெறும்வட்டில் வாய்வைப்பார்
வள்ளம் மதுஉண்ணார் எனக்கேஎன்பார்
　　வழங்கார்; பொருள்நத்தும் இரவலர்போல்
தள்ள அகலாமல் ஈக்கள்மொய்க்கத்
　　தண்டா மரைத்தாளால் உறிஞ்சிஉண்பார். 4

கனிவாய் எயிறுஊற முகம்வேர்க்கக்
　　கலைசோர்வு உறக்கள்ளும் கணவர்க்குஒக்கும்
துனிவாய் மகிழ்நர்க்குத் தூதுவிட்டும்
　　தூதும்போ தாமல்தா மும்செல்வார்

3. மது நிரம்பிய கிண்ணத்திலே தன் நிழலைக் கண்டு அதைத் தோழி என்று எண்ணி, 'என்னுடன் ஒன்றாக நீயும் இம்மதுவை உண்ணலாமோ' என்று ஏசுவாள் ஒருத்தி. தன் கையில் இருந்த வெறும் பளிங்குக்கிண்ணத்திலே வெண்ணிலாப் பாய, கள் நிறைந்தது என்று அவ் வெறும் கிண்ணத்தை வாயிலே வைத்து வெட்கிப்போனாளாம் மற்றொருத்தி. வேறு ஒருத்தி, கள் நிறைந்த கலசத்திலே தன் கண் நிழலைக் கண்டு அதை வண்டு என்று கையால் விரட்டினளாம். இன்னொருத்தி, கலசத்திலே தன் முகம் பிரதிபலிப்பதைப் பார்த்து, அதைச் சந்திரன் என்று எண்ணி, மதியே நீயும் மாந்து இம் மதுவை என்பாளாம்; என் காதலன் பிரியும்போது என்னை நீ வருத்தாதே என்று கெஞ்சுவாளாம்.

4. கள் மயக்கத்தால் மது கவிழ்ந்து போனதை அறியாமல் தலைகீழான வெறும் கிண்ணத்தை வாயில் வைப்பாளாம் ஒருத்தி. உலோபிகளிடம் பொன்னை யாசித்துப் பெற விரும்பும் இரவலர்போல விரட்டவும், அகலாத வண்டுகள் மொய்க்க, வாய் திறந்து பருக எண்ணிக் கிண்ணத்தில் ஊன்றிய தாமரைத் தாளினால் உறிஞ்சி உண்டாளாம் மற்றொருத்தி.

இனிவாழ் கொழுநனைக் கொணராயேல்
எந்தன் கிளிஅல்லை அன்றில்என்பார்
முனிவார் மணல்கூடல் கூடாமல்
முருகன் வரச்சிறி முறுவல்செய்வார். 5

கலவி நினைந்துஅவள் துயின்றாற்போல்
கடிகை பதினைந்தோ கழிந்ததுஎன்பாள்
புலவி மிகுத்தவள் உதைக்கஅன்பன்
போத உடல்எங்கும் புளகம்கொள்வான்
சிலஇன் னிசைபாடிப் பாங்கியரைச்
சினப்பாள் மனத்துஎண்ணம் தெரியச்சொல்லாள்
இலவின் இதழ்வஞ்சி படுத்தமெத்தை
எரிபோல் சுடஅன்பன் இன்பம்கொள்வான். 6

இன்பம் வருத்திடில் செலும்மீளும்
இறப்பும் பிறப்பும்போல் இயங்குமின்னார்
அன்பன் உடல்வெப்பம் தணியப்பன்னீர்
ஆட்டும் கலசம்போல் அரிவைகொங்கை
மன்பொன் மணிமார்பில் அழுந்தக்கட்ட
அரங்கின் எழுதும்சித் திரம்போல்வான்
துன்பம் தனைச்சொன்ன திருக்கண்முத்தம்
துடைத்துத் தோன்றியமு றுவல்முத்தே. 7

மானம் பாராள்

தூநேர் மொழிமோகம் சொல்லவெட்கித்
தோழி முகம்பார்க்கத் தூதுசென்றாள்
தானே தலைவன்பால் ஒருத்திசென்றாள்
சாந்தாழ் மதுவோமன் மதன்தானோ

5, வால் எயிறு ஊறிய நீர் (எச்சில்) வெளிப்பட முகம் வியர்க்க, கலை நெகிழ்ந்து அவிழாமல் கலவி செய் கணவனும் கள்ளும் ஒக்குமாம். என் உயிரைப் போக்குவதால் கிளி அல்ல; நீ அன்றிலேதான் என்பாள் ஒருத்தி.

7. தன் கணவன் வரவை எதிர்நோக்கியிருக்கும் ஒருத்தி, மாறி மாறி வரும் பிறப்பும் இறப்பும் போல உவகையும் துயரமும் மாறி மாறித் தோன்றப் படமாடத்துள்ளே போவதும் வெளியே வருவதுமாய் இருப்பாளாம். திருக்கண் முத்தம் - முத்துப் போன்ற கண்ணீர் சிந்தித் தன் ஆற்றாமையைத் தலைவி அறிவிக்கவும், உனக்கு நேர்ந்தது யாதோ என்று தலைவன் கேட்கவே வெட்கத்தை விட்டு அவள் சிரித்தேவிட்டாளாம்.

மானேர் விழியார்கூ டலில்ஆடை
    மானம் துறந்தாள் துறந்தார்போல்
கானேர் மதுவுண்ட கணிகையர்போல்
    கலவி மதன்உண்டு களித்தனனே. 8

யாவரே வெல்வார்

நிரதம் உதைத்தகால் நோகும்என்பான்
    நெஞ்சத்து அவட்காகப் பிடித்ததுஎன்றாள்
சரதம் முலைமார்பை உருவிற்றுஎன்று
    தடவிப் பார்த்தனள் முதுகைக்கையால்
சுரதம் தனில்மதன் இரதியைப்போல்
    தோலார் ஒருவரைஒ ருவர்வெல்லார்
விரதம் கலைசங்கம் பூசல்இட்ட
    விழைவோர் அனுராக விதம்உண்ணவே. 9

சூரியன் தோன்றினான்

நெஞ்சால் உறப்புல்லி விடிந்திடவும்
    நீங்கா உடல்ஆவி இரண்டும்ஒன்றாய்
துஞ்சார் கலவிப்போர் மலையும்கொங்கை
    சுமவாது இடைபோலத் தேய்ந்தகங்குல்
நஞ்சார் வினையாளர்க்கு இடையில்வந்து
    நந்தும் திருப்போல மதியும்அந்த
மஞ்சார் கடல்வண்ணன் தடமார்பில்
    மணிபோல் ஆதித்தன் உதயம்செய்தான். 10

8. கலவியின்பொருட்டுப் புறத்தே உடம்பில் உள்ள ஆடையை நீக்குதல் கிடக்கட்டும்; அகத்து உள்ள நாணத்தையும் அல்லவா விட்டுவிட்டாள். கடுந் துறவை மேற்கொண்டார் போல, தான் என்பதையுமே விடத்தக்க தன்மை காமத்திலேதான் உள்ளது.

9. கூடா ஒழுக்கம் உடையான் என்று தன் காதலனை உதைத்தாளாம் ஒருத்தி; உதைத்தால் நோகும் என்று அவன் பிடிக்கவும், அவள், உன் நெஞ்சிலே உள்ள ஒருத்திமேல் உதைபடும் என்று பிடித்தாயோ என்றாளாம். இவ்வாறு காதல் இருவரும் 'ஒருவருக்கொருவர் தோலார் ஒத்தனர் உயிரும் ஒன்றே இருவர் தம் உணர்வும் ஒன்றே என்றபோது யாவரே வெல்வார்' என்பார் கம்பரும்.

10. தீவினையாளர்க்கு அதன் பயனாகிய செல்வம் இடையே வந்து, பின் மறையுமாப் போல, மதியும் நந்தும் - சந்திரனும் மறைந்தான். திருமாலின் மார்பிலே பிரகாசிக்கும் கௌத்துபம் போலச் சூரியன் தோன்றினான்.

21 எதிர்கொள் படலம்

—சனகன் தசரதனை எதிர்கொண்டு
வரவேற்றலைக் கூறுவது

வரவேற்க வந்தான் சனகன்

மாமறைநூல் நெறிதவறா
 மன்னுசெங்கோல் மன்னர்மன்னன்
காமரும்நீர் சேனைஎன்னும்
 கடலொடும்போய்க் கங்கைநண்ணி
ஆமருநீர் குடைந்தாடி
 அங்குநின்றும் மிதிலைஎய்தத்
தேமருமா லைச்சனகன்
 செய்தவண்ணம் செப்பல்உற்றேன். 1

கோதில்குடை பிடிமுடிதேர்
 கொடிகள்எங்கும் திருவளர
மாதிரைநீர் கடல்ஏழும்
 வரவுஎதிர்கொள் பாற்கடல்போல்
பாதுரகம் மதயானை
 பன்மணித்தேர் பதாதிஎன்னும்
சாதுரங்கம் புடைசூழத்
 தபனனைச்சேர் சோமன்ஒத்தார். 2

கார்ஒலியோ கரிஒலியோ
 கடல்ஒலியோ தேர்ஒலியோ
தார்ஒலியோ சுரும்புஒலியோ
 தரும்துகள்போல் எழுந்ததுஎங்கும்
தூர்ஒலிசேர் மலர்த்தாதோ
 சுண்ணமதோ பொற்பொடியோ
கூர்ஒலிசேர் மும்மதமோ
 குங்குமமோ சேறதெல்லாம். 3

2. தசரதன் சேனை கடல் ஏழும் திரண்டு வந்தாற்போல் வரவே அதைப் பாற்கடல், தபனனைச் சேர் சோமன் - சூரியனைச் சேர்ந்த சந்திரன் சந்தித்தது போல, சனகனது பரிவாரங்கள் வரவேற்றவாம்.

3. பல்வேறு ஒலிகளே எங்கும் முழங்கின; மகிழ்ச்சிப் பெருக்கால் தூவப் பெற்ற மலர்கள் சுண்ணங்கள் முதலிய புழுதியாய் எங்கும் நிறைந்த.

இருவரும்தம் தேர்இறங்கி
இருபுயம்ஆ ரத்தழுவித்
திருவரும்சொல் லால்வினவிச்
சேரஉற்றார் கூடிஉற்றார்;
தருவரும்சீர் மிதிலைநகர்ச்
சனங்களொடும் தம்பியொடும்
மருவரும்தார் இராமபிரான்
மன்னர்மன்னன் மருங்குவந்தான். 4

தந்தையரும் தனயரும்

தெரிந்தகடல் கருங்குவளைச்
செழும்பூவை மேகவண்ணன்
பிரிந்தஉயிர் வந்ததுபோல்
பெற்றவன்தன் பால்அணுகிப்
புரிந்தபடை வணங்கிடப்போய்ப்
புரவலனை வணங்கிஅவன்
விரிந்தபுயம் தனில்மறைந்தான்
விடையவன்வில் இறுத்தபிரான். 5

வீழ்ந்துஇருகண் நீர்சொரிய
மெய்ப்பரதன் வணங்கிடப்போய்த்
தாழ்ந்துகையால் எடுத்துஅணைத்தான்
தனயனைத்தந் தையைப்போல
வாழ்ந்துஇருவோர் இருவரையும்
வணங்கியபின் மன்னர்மன்னன்
சூழ்ந்துஇருசே னையும்தொழவே
தோன்றலைமுன் செல்கஎன்றான். 6

6. தன்னை வணங்கிய பரதனை, இராமன் தந்தையைப் போல் எடுத்து அணைத்தான். இருவோர் இருவரையும் வணங்கியபின் - இலக்குமணன் பரதனையும், சத்துருக்கன் இராம லக்குமணர்களையும் வணங்கினர்,

உலாவியற் படலம்

—இராமன் மிதிலை வீதியிலே பவனி
சென்றதைக் கூறுவது

பவனி வந்தான் இராமன்

மாதவத்தால் தம்பியர்கள்
    மாவில்வர மணித்தேர்மேல்
வேதபரா யணர்புகழ
    வீணைசங்கம் பணைமுழங்கப்
பேதையர்தாம் முதலாகப்
    பேரிளம்பெண் ஈறாகச்
கோதையர்கள் பூமழையாய்க்
    கொண்டல்வண்ணன் பவனிவந்தான். 1

பொம்மெனப் புகுந்து மொய்த்தார்

மான்இனம்போல் மயில்இனம்போல்
    வான்மீன்போல் நீர்வேட்ட
ஆன்இனம்போல் முயல்இனம்போல்
    அமுதம்மொய்க்கும் ஈஇனம்போல்
தேன்இனம்சூழ் தேன்இனம்போல்
    சேலைகுழல் சரியவந்தார்
மீன்இனம்போல் காண நம்தம்
    விழிகள்செய்த தவம்இதுஎன்றே. 2

திட்டருமெய்யன் அகலிபெற்ற
    சேவடியும் சானகிக்காய்
நாட்டருவெம் சிலைமுறித்த
    நற்புயமும் காணும்அன்பால்

2. மான் மயில் முதலியன வெவ்வேறு வகையில் மகளிர்க்கு உவமை.
மான்இனம் வருவபோன்றும் மயில்இனம் திரிவபோன்றும்
மீன்இனம் மிளிரவானில் மின்இனம் மிடைவபோன்றும்
தேன்இனம் சிலம்பிஆர்ப்ப சிலம்பினம் புலம்பிரங்க
பூநனை கூந்தல்மாதர் பொம்மெனப் புகுந்துமொய்த்தார். —கம். 1.

ஓட்டரும்தன் மனத்தின்முந்தி
　　ஓடவல்லோம் என்பவர்போல்
மேட்டருநீர் பள்ளம்உற
　　விரைவதுபோல் விரைந்துவந்தார். 3

மண்கடல்சூழ் புவிகடந்து
　　வான்கடந்தான் மடந்தையர்தம்
கண்கடவாது உறைந்திடவோ
　　கண்ணன்என்பார் இவனைஎன்பார்
தண்கடமா முலையில்மதன்
　　சரம்பாயத் தவித்துஇடைபோல்
எண்மடன்நாண் நிறைதளர்ந்து
　　இனவளைமே கலைஇழப்பார். 4

மடந்தைநல்லாள் கண்ணுள்இவன்
　　மைவணமோ பரந்ததுஎன்பார்
குடந்தைநல்லான் மேனிநம்தம்
　　கூர்விழியால் கறுத்ததுஎன்பார்
அடர்ந்துஎல்லாப் பணிகள்இழந்து
　　ஆடைஒன்றும் தாங்கிநிற்பார்
தொடர்ந்தகண்ணால் அயல்பாராத்
　　துணைஇலனோ தமியன்என்பார். 5

கண்ணில்வந்தான் போகாமல்
　　கண்ணிமையாம் கதவடைத்தேன்
எண்ணினவாறு அமளியின்மேல்
　　எனைக்கொடுபோ பாங்கிஎன்பார்

4. மண்கடந்து விண்கடந்த திருமாலாகிய இராமன், இப்போது பெண்கள் அனைவரது கண்களிலும் நிலவிய வகையால் அவனைக் கண்ணன் என்றனர் போலும்.

5. இராமனைப் பெண்கள் கண்ணிமையாமல் நோக்கி நின்றதால், அவன் மேனியின் மைவண்ணம் பிரதிபலித்துக் கண்கள் கருநிறம் அடைந்தனவோ! கண்ணின் கருநிறத்தால் அவன் மேனிதானும் கறுத்ததோ!

தண்ணியமெய் நடந்துவந்து
தாங்கவெதுப் பொடும்போவார்
புண்ணியன்வில் ஆண்மைஎண்ணான்
பூவில்எய்வான் யாவன்என்பார். 6

தோள் கண்டார் தோளே கண்டார்

அரியபல சமயம்எங்கும்
அவன்வடிவே காண்பதுபோல்
கரியபுயம் கைமுகம்தான்
கண்டதையே கண்டுநிற்பார்
தெரியகில்லாப் பெருநெருக்கால்
சிற்றிடைநீங் கலில்பார்ப்பார்
பிரியமுடன் பார்ப்பவரைப்
பெரும்சினத்தி எழப்பார்ப்பார். 7

உனக்குள்எல்லா உலகுஅடங்க
ஒருத்திநெஞ்சில் அடங்கவல்லாய்
கனக்கும்அரன் சிலைமுறித்தாய்
காமன்வில்லை முறித்திடுஎன்பார்
தனக்குவடுஆர் சிதையைப்போல்
தவம்புரிந்தார் யாவர்என்பார்
மனக்குஇனியான் வடிவுஎழுத
மதனனுக்கும் அருமைஎன்பார். 8

6. .... ஒருத்தி, உள்ளம்
குளிர்ப்பொடும் காண வந்தாள் கொதிப்பொடு கோயில் புக்காள்.
—கம். 16.

மைக்கருங் கூந்தல்செவ்வாய் வாள்நுதல் ஒருத்திஉள்ளம்
நெக்கனள் உருகுகின்றாள் நெஞ்சிடை வஞ்சன்வந்து
புக்கனன் போகாவண்ணம் கண்எனும் புலம்கொள்வாயில்
சிக்கென அடைத்தேன் தோழிசேருதும் அமளிஎன்றாள். —கம். 14.

7. தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழல் கமலம்அன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாரும்அஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்துஅன்னான் உருவுகண் டாரை ஒத்தார். —கம். 19.

8. உலகம் முழுவதையும் தனக்குள் அடக்கித் தான் ஒன்றில் அடங்காதவன் இறைவன் எனினும் அன்பர் உள்ளத்து அடங்குவான் என்பது கருத்து.

மானிடர்பால் அழகுஇதுஉண்டோ
மாயவனே காணும்என்பார்
கோனகர்வாழ் வான்சனகன்
குலம்செய்தவம் பாரும்என்பார்
தேன்அனையார் வருந்தல்கண்டும்
சிரித்துஅருளான் கொடியன்என்பார்
ஆனவர்மேல் கணைசெலவாய்
அனங்கன்உடை வாள்எடுத்தான். 9

சபா மண்டபம் சேர்ந்தான்

சித்தசவேள் தொடுத்தகணை
தெய்வமின்னா ரையும்வருத்த
மத்தவண்ணன் சேனையொடும்
வசிட்டர்கவு சிகர்இருந்த
முத்தணிமண் டபம்இருந்து
முனிவோரை அடிவணங்கி
வித்தகர்தம் பியர்சூழ
விரைமலர்ஆ சனத்துஇருந்தான். 10

மீன்களின்பின் வரும்மதிபோல்
மெய்த்தவரை வந்துஇறைஞ்சிக்
கோன்களிற்று மன்னர்பிரான்
குலமணிஆ சனத்துஇருந்தான்
தேன்கொள்பொற்றார் மகதர்மச்சர்
தெலுங்கர்கொங்கர் கலிங்கர்வங்கர்
வான்பொறையர் சோழர்தென்னர்
மற்றும்உள்ளோர் சூழ்ந்திருந்தார். 11

9. மலர் அம்புகள் எல்லாம் தீர்ந்துவிடவே மன்மதன் உடைவாள் எடுத்தான்.

வல்யானை மன்னர்மன்னன்
    வண்புகழ்போல் கவரிஇட்ட
பல்யாண்டு மாதர்சொல்லப்
    பனிமதிதன் குலச்சீதை
கல்யாணம் காணவந்த
    காட்சியைப்போல் குடைநிழற்ற
நல்யாகம் செயும்சனகன்
    நாடுநகர் போன்றதுவே. 12

12. தசரதனது சேனையின் பரப்பால் சனகனது பரந்த விதேக நாடு ஒரு நகரம்போலச் சுருங்கிக் காணப்பட்டதாம்.

23 கோலங்காண் படலம்

—சீதையை அலங்காரம் செய்ததைக் கூறுவது

அழகினுக்கு அழகு செய்தார்

தேவி மார்சூழத் தசரதன்தான்
　　தேவேந் திரன்போல இனிதுஇருக்க
மேவி வசிட்டனும் சனகன்தன்னை
　　மின்னைக் கொணர்கென உவந்துசொன்னான்
மாவின் வடுஅன்ன விழிமானார்
　　மங்கை உருவத்தை மறைப்பதுஓரார்
ஆவி அமுதத்தைச் சுவைசெய்கைபோல்
　　அழகுக்கு அழகென்ன அலங்கரித்தார். 1

கண்ணன் கருமேனி மனம்நிறைந்து
　　சூரிய குழல்என்னப் பரந்தனமேல்
வண்ணம் சிகழிகைத் தொடைஅணிந்தார்
　　மழைமா மேகத்தில் மதியத்தைப்போல்
தண்ணம் குழைநீழல் உமிழவிட்டார்
　　சங்கை நிகர்கண்டத்து அணிநிறைத்தார்
வெண்ணம் கதிர்முத்துச் சிவப்பாக
　　மேருநிகர் கொங்கைக்கு ஆரம்இட்டார். 2

வெய்யிற் கேயூரம் தோளில்இட்டார்
　　வேயின் மணிமுத்தம் விளங்குகைபோல்
கையிற் கடகமும் காப்பும்இட்டார்
　　கமலம் குவியாது இராவெயிற்போல்

1. உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்பதுஓரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக்கு அழகுசெய்தார்.
—கம். 3.

2. கண்ணன்தன் கருவண்ணம் சிதையின் மனத்தை நிறைத்துக் கருங்கூந்தலாகப் புறம் போந்ததுபோலும். அதிலே கார்மேகத்திடையே தோன்றும் வெண் மதிபோன்ற சிகழிகை (மாலை) அணிந்தார்களாம்.

உள்ளத்தின் ஊசலாடும் குழைநிழல் உமிழவிட்டார். —கம். 6.

ஐயுற்று உணர்ஒண்ணா மருங்குல்சுற்றும்
அணிமே கலையில்பூண் ஆரம்இட்டார்
செய்யில் கரும்புஅஞ்சும் மொழிதாளில்
செம்பஞ் சுடன்செம்பொன் சிலம்பிட்டார். 3

பெருமான் நிறம்போல விழிமையிட்டுப்
பிறைமங் கலம்போலத் திலதம்இட்டு
வருமா தானம்செய்து அயினிசுற்றி
வணங்கி வலம்செய்து மாதர்சுற்றத்
தருமா மலர்க்கோயி லிடத்தாலும்
சங்கம் கையினாலும் தலைவனைப்போல்
திருமா மலர்ப்பந்தல் நீழலிற்கீழ்
தெய்வ விளக்குஎன்ன நடக்கல்உற்றாள். 4

நடை அழகை என்ன சொல்ல

துய்ய நிலம்தாளில் உறையாமல்
துளிரும் செழும்பூவும் பரப்பினபோல்
செய்ய மணிச்சோதி திகழ்ந்துவரச்
செழும்மின் உருக்கொண்டு வருவதுபோல்
பைய நடைகண்டு தோற்றஅன்னம்
பணிந்து வருகைபோல் கவரிஇட
தைய லரும்துதி வணங்கத்தக்காள்
சான்றோர் இருந்தமண் டபத்தில்உற்றாள். 5

3. வேய் - மூங்கில். கடகமும் காப்பும் வெயில்போல; கை, கமலம்போல; இரவிலும் இது குவியாதவாறு இளவெயில் சூழ்ந்துகொண்டதுபோல, கடகமும் காப்பும் இட்டார்.

4. மா தானம் செய்து - வேதியர்க்குச் சொர்ண தானம் செய்து. பாஞ்ச சன்னியம் என்னும் சங்கைத் தலைவன் (இராமன்) கைக்கொண்டிருக்கிறான்; சீதையும் சங்கு வளையலைத் தரித்திருக்கிறாள். ஆதலின் 'நங்கையும் நம்பி ஒத்தாள் நாம் இனிப் புகல்வதென்ன' என்பார் கம்பர். —கம். 21.

5. பொன்னின்ஒளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்
மின்னின்எழில் அன்னவள்தன் மேனியது மான
அன்னமும் அரம்பையரும் ஆர்அமிழ்தும் நாண
மன்அவை இருந்தமணி மண்டபம் அடைந்தாள், —கம். 28.

மறைக்கும் விதிக்கொண்ணாச் சுயம்புஅன்னாள்
　　வரக்கண்டு ஓவியம் போல்இருந்தார்
நிறைக்கும் கடல்வண்ணன் அமுதம்பெற்ற
　　நெடுவா சவன்போலக் களிகூர்ந்தான்
சிறக்கும் வசிட்டனும் தசரதனும்
　　திருமகள் இவள்என்றே மனம்மகிழ்ந்தார்
நறைக்குங் குமமாலை அரசர்எல்லாம்
　　நம்தாய் எனச்செங்கை குவித்தனரே. 6

தகுமா தவரையும் மன்னர்மன்னன்
　　தனையும் வணங்கித்தன் தாதையின்பால்
மிகுமா மணிப்பீடம் தனில்இருந்த
　　விமலை எழில்கண்டகௌ சிகன்சொல்வான்
சுகுமா ரரில்மிக்க வரராமன்
　　தோயும் திருஇந்தத் தோகைஎன்றால்
உருமா சிலைஇந்தச் சிலைஇலக்கோ
　　ஓரேழ் வரையையும் தான்ஒடிப்பான். 7

நிச்சய தாம்பூலம்

செங்கை வளைசெவ்வே திருத்துகைபோல்
　　சிந்தை வடிவத்தைப் புறத்தும்காண்பாள்
துங்க வரராமப் பெருங்கடலில்
　　சுடர்க்கண் கடைஆறு புகமண்டித்தாள்
அங்கம் புளகித்தாள் மனம்களித்தாள்
　　அரசர்க்கு அரசனும் கவுசிகனை
மங்கை மணம்எந்நாள் எனக்கேட்டான்
　　வரமா தவத்தோனும் நாளைஎன்றான். 8

6. கண்டோர் ஓவியம் என இமைத்திலர் உயிர்த்திலர். வாசவன் - இந்திரன்.

7. அச்சென நினைத்தமுதல் அந்தணன் நினைந்தான்
பச்சைமலை ஒத்தபடி வத்துஅடல் இராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கைஇவள் என்றால்
இச்சிலை கிடக்கமலை ஏழையும் இறானோ. —கம். 36.

8. ஐயனை அகத்து வடிவேஅல புறத்தும்
கைவளை திருந்துபு கடைக்கணின் உணர்ந்தாள். —கம். 37.

சிதையின் கடைக்கண் பார்வை ஆகிய நதி ராமப் பெருங்கடலில் பாய, அங்கம் புளகித்தாள்.

என்னும் சமயத்தில் வெற்றிச்சங்கம்
இயம்ப மறைவாணர் ஆசிசொல்ல
மன்னும் புகழ்மன்னன் இருக்கைபுக்கான்
மாதும் தனதுஅம்பொன் மனையில்புக்காள்
பன்னும் குணராமன் கோயில்உற்றான்
பலமா தவத்தோரும் படைமன்னரும்
துன்னும் இடந்தோறும் எழுந்துசென்றார்
சூரிய னும்மேலைக் கடலைஉற்றான். 9

கடிமணப் படலம்

—சீதாராம கல்யாணத்தைப்பற்றியது

சனகன் உபசரிக்கத் தார்வேந்தன் சேனை
அனைவரும்வீடு உற்றவர்போல் ஆனார்—புனைகுழற்பூ
மாலைக் குழல்இசைப்பார் மாலைக் குழல்கற்றோர்
மாலைக் குழல்உற்றாள் மால். 1

இந்த இரவுக்குத்தானும் என்ன கொடுமை

இரவிவந்தால் இறைவருவான்
இரவேநீ ஏன்விடியாய்
பரவிஇரா விடியாக்கால்
பனைமிசைவாழ் அன்றில்துஞ்சா
அரவிடமோ வெண்ணிலவோ
அயிற்கணையோ வெயிற்கனலோ
தரவிடுமோ நீமனமே
தரிக்கலையோ இன்றுஒருநாள். 2

நன்றுதென்றல் பெரும்புலியே
நாடிஇரை தேடுகின்றாய்
எண்ணிறந்த பரஞ்சுடர்தான்
என்றுவரும் மாமதியே
விண்ணுறங்கும் மண்ணுறங்கும்
விழிஉறங்கேன் விதிவலியோ
கண்ணுறங்காய் நீயும்என்போல்
கன்னிகையே கருங்கடலே. 3

1. புனை குழலில் பூமாலையைச் சூடுவார். மாலைக் காலத்திலே புல்லாங் குழல் இசைப்பார். மாலைக்கு உழல் உற்றாள்.

2. இரவி வந்தால் - சூரியன் தோன்றினால். இரவு இவந்தால் - இரவு நீங்கினால் எனலுமாம். அரவிடமோ - அரவின் விடமோ.

இரவே கொடியாய் விடியாய் எனுமால். —கம். 3.

3. தென்றல் புலியே இரைதே டுதியோ. —கம். 7.

கடலேஉரை நீயும்ஓர் கன்னிகொலாம். —கம். 11.

பன்னகம்போல் நீடுஇரவே
பான்மதியே மாருதமே
என்னைஇங்ஙன் வருத்துகின்றீர்
இறையைஇங்ஙன் வருத்தீரோ
ஒன்னலர்போல் பகைதீர்என்று
ஒண்ணுதலாள் மெலியும்அப்போ
மன்னர்மன்னன் மைந்தனும்தான்
மாதைஎண்ணி மையலுற்றான். 4

செய்யகண்ணால் கண்டமின்என்
சிந்தைவிட்டு நீங்கிலதால்
மையகண்ணோ வல்லிருளோ
வளரும்இன்னம் விடிந்திலதால்
தையல்நல்லாள் முகமதியே
தமியேற்குஎன்று உறவுஆவாய்
ஐயம்எல்லாம் தெளிந்திடல்என்
அகமனமோ அவட்குஇடமே. 5

நகரத்தை அலங்கரித்தனர்

இன்னவண்ணம் இறைவன்எண்ண
இறைவிமணம் நாளைஎன்றே
அந்நகரை அலங்கரிக்க
ஆனையின்மேல் முரசுஅறைந்தார்
மன்னவர்மா தவர்மடவார்
மைந்தர்எல்லாம் மனம்மகிழ்ந்தார்
சொன்னநல்மா மணம்காண்பான்
சூரியனும் தோன்றினனே. 6

5. அவட்கு இடமோ, அவள் இப்போது விளையாடும் இடமாக் கொண்டது. என் அகமனமோ - உள்ளமோ.

குழிப்பு : தானன தானன தானன தான

கோயில்கள் மாளிகை மச்சொடு மாடம்
கூடமும் நீடவி ளக்கிடு வாரும்
வாயில் கண்ணாடி பதித்திடு வாரும்
மாமக தோரணம் நட்டிடு வாரும்
காயிலை மூலப லத்தொடு பாலும்
காவடி தேன்அடை யக்கொணர் வாரும்
தாயிலும் ஆதரவு உற்றன தானம்
தாழ்வற வேதிய ருக்குஇடு வாரும். 7

பூரண மாமுளை பாலிகை வாசம்
போதலர் வேதிகை மீதிடு வாரும்
வாரண வாசிகள் மேல்வரு வாரும்
வாழைகள் பூகமொ டேநடு வாரும்
தேரணி வீதிவி ழாவரு வாரும்
தேமறை ஏழிசை பாடிடு வாரும்
நாரண னார்புக ழேபுகழ் வாரும்
நாடகம் ஆடிஉ லாவிடு வாரும். 8

குழிப்பு : தனதன தானன தனதன தான

குமரர்கள் தோகையர் கொடைஅணி வாரும்
குளிரவி தானநல் நிழல்இடு வாரும்
தமரம லாரிகள் முரசுஅறை வாரும்
தாளப தாகைகள் உயரிடு வாரும்
நமர்என வாணரொடு அமுதுசெய் வாரும்
நனிபனி நீரகில் மலர்சொரி வாரும்
அமரர்கள் கோன்மணி முடிபுனை நாளில்
அதிவித மானது திருமண நாளே. 9

கல்யாண மண்டபத்தில்

முரசம் பணிலம்மங் கலகீதம்
முழங்க மறைவாணர் ஆசிசொல்ல
அரசர் பலசூழத் தசரதன்தான்
அணிமண் டபச்சிங்கா சனத்திருந்தான்
பிரசம் பொழிமாலைச் சனகன்உற்றான்
பெரியோர் அனைவோரும் சூழ்ந்திருந்தார்
வரசந் திரபானுச் சுடர்கள்சுற்ற
மகமே ருவைப்போலும் மணிக்கூடம். 10

மின்னும் மேகமும் சுடர்இரண்டும்
மீனம் செறிகூடம் பகிரண்டம்போல்
மன்னும் தவர்அண்டர் மனிதர்துன்ற
மாயோன் உதரம்போல் மகிழ்ந்திருந்தார்
துன்னும் வரராமன் திருமஞ்சனம்
சுருதி நெறிஆடி நெடுமாலைப்
பன்னும் பதம்சூடி வேதியர்க்குப்
பலகன் னியாதானம் பரிந்துஅளித்தான். 11

மணக்கோலம் பூணுகிறான் இராமன்

கருணைத் திருமேனி மேகம்தன்னில்
கலந்த நிலவுஎன்னக் சுதம்பம்சாத்தி
வருணச் செழும்செம்பொன் முடிசூடி
மதிபோல் சிகழிகைத் தொடைசூடி
இருணற் பகலும்கண்டு அறிந்தவர்தாம்
இருகுண் டலம்ஆகி இருசெவியில்
தருணச் சனகிதன் பெயரைச்சொல்லும்
சந்திரர் சூரியர்போல் விளங்கினவே. 12

11. திருமண மண்டபம் பிரமாவின் அண்டத்தையும் திருமாலின் வயிற்றையும் ஒத்ததாம்.

12. இருணற்பகலும் - இருளும் நற்பகலும் - இரவிலும் பகலிலும் சீதை அடைந்த காதல் நோயைக் கண்டறிந்தவரான சந்திர சூரியர். இரு குண்டலம் - காதணிகளாய் இராமன் செவியிலே தூது சென்று உரைப்பனபோலத் தோன்றினராம்.

சிவனைப் போல்தும்பை மலர்சூடித்
　　திலத நுதல்வீர பட்டம்கட்டி
தவளம் புரிசங்கம் நிறைகண்டத்தே
　　தரளத் தாவடம் சனகிஎன்னும்
இவனத் திருமாதின் நகைவெண்நிலா
　　இதயம் நிறைந்துமெய் பொடிப்பதுஒக்கப்
புவனக் கிரிசுற்றும் பொறிஅரவம்
　　போலத் திருத்தோளில் வலயம்மின்ன. 13

தேவன் இவன்என்றே குறியிட்டபோல்
　　திண்டோள் நடுமுத்து வடம்இலங்க
ஏவர் இரந்தாலும் அவர்க்குநல்கும்
　　இருகற் பகக்கையில் கடகம்மின்ன
மேவும் மணிஆரம் உ.த்தரிகம்
　　மேகம் தனில்இந்த்ர தனுவைவெல்ல
மூவர் தான்என்று முடித்ததுபோல்
　　முந்நூல் மார்பினில் முழுதுஇலங்க. 14

உரிய பிரமனோடு உலகுஊனும்
　　உந்தி மலர்மேல்இட்டு உதரபந்தம்
கரிய கடல்சுற்று பாற்கடல்போல்
　　கடியில் பொலிவெண் பட்டுஉடுத்தி
அரிய வரைசூழும் கதிரவன்போல்
　　அயில்வாள் கனகக்கச்சு உறஆர்த்துப்
பெரிய சுடர்வான் இளவெயில்போல்
　　பிரசம் மலர்மாலை அதிற்சூட்டி 15

13. சானகியின் முறுவலானது தன் மனத்துள்ளும் நிறைந்து, பின் தன் மார்பிலும் வெளிப்படுமாப்போலக் கழுத்திலே தரளத் தாழ்வடம் - முத்து மாலையைப் புனைந்தான். புவனக்கிரி - மந்தர மலை. இதைச் சுற்றிய அரவம் - வாசுகியைப்போல வாகுவலயத்தைத் தோள்களிலே அணிந்தானாம். தாழ்வடம் - தாவடம்.

14. தன்னிடம் வந்து வேண்டுவார்க்குக் கொடுக்கும்பொருட்டு முன்னதாகவே வைத்திருப்பதுபோலக் கற்பகக் கையில் கடகம் மின்னியதாம். மார்பிலே முப்புரிநூல் ஒன்றாய் முடித்து வைத்தது, முதற்கடவுளர் மூவரும் தானே என்று உணர்த்துவான்போலிருந்ததாம்.

15. உதரபந்தத்தின் முகப்பு உந்திக்கமலம்போல ஒளிர்ந்ததாம். கருங் கடலைச் சூழ்ந்த பாற்கடல்போலக் கருமேனியில் வெண்பட்டு உடுத்தி.

எவ்வாறு அளக்கின்றது உலகைஎன்றே
இருதா ளினைச்சுற்றும் சிலம்பணிந்து
தவ்வா வினைதீர அயன்முதலோர்
சாத்தும் திருநாமம் தான்சாத்தி
இவ்வாறு எழிலாரும் கோலம்கொண்டான்
எங்கோன் இமையோர்தம் குறைதீர்ப்பான்
அவ்வாறு ஒருதானே தனக்குஇணையாம்
அழகன் அலங்காரம் புகழ்வார்ஆர்? 16

வந்தார் மணமக்கள்

விரதம் தசரதன் பலவும்செய்து
வெள்ளி வயிரப்பொன் மணியிற்செய்த
இரதம் தனில்ஏறி இராமபிரான்
இளையோர் இருவரும் கவரிஇடப்
பரதன் தேர்ஊர அரசர்சுற்றப்
படர்மண் டபம்எய்தி ரதம்இறங்கி
வரத முனிவரைத் தந்தைதன்னை
வணங்கி மணிச்சிங்கா தனத்துஇருந்தான். 17

வீழி குமிழ்வள்ளை மதியம்சங்கம்
வெற்பும் சுமந்துஒரு செம்பொற்கொம்பு
தோழி யர்என்னும் கொடிகள்எல்லாம்
சுற்ற வருகின்ற பரிசேபோல்
ஆழி அமுதத்தின் முதல்தோன்றி
அவனி தனில்பின்னை அவதரித்தாள்
வாழி வரைதனில் புகுமாப்போல்
மணிசேர் கனமண்ட பத்தில்உற்றாள். 18

16. திருவிக்கிரமாவதாரத்திலே மூவுலகையும் அளந்த திருவடிகள் இனியும் அவ்வாறு செய்ய இயலாதபடி தடுப்பனபோல இரு தாள்களிலும் சிலம்பணிந்து.

18. குமிழ் - மூக்கு. வள்ளை - காது. மதி - முகம். சங்கு - கழுத்து. வெற்பு - தனபாரம். இவற்றைச் சுமந்த ஒரு பொன்கொம்புபோன்ற சீதை, பாற்கடலிலே முதலில் தோன்றி, பின் பூமியிலே அவதரித்து, இப்போது மலையிலே தோன்றுவாள்போல மண்டபத்திலே வந்து சேர்ந்தாள்.

சீதா கல்யாணச் சிறப்பு

வேலை கடைந்தமுன் னாளில்இந்த
மின்னாள் தோன்றிஇம் மேலோனை
மாலை புனைந்தநாள் தனிலும்இந்நாள்
வாய்த்த நாள்என்றார் அமரர்எல்லாம்
ஞாலம் பதினாலின் வளப்பம்எல்லாம்
லட்சுமீ கரம்என்னும் நால்வேதம்
சீல நயமும்மெய்த் திருவுக்குஎன்றார்
சிறியேன் புகழ்ந்துஓத அறியேனே. 19

நேசம் உறவானில் நிறையப்புக்கார்
நிலவார் சடையோனும் பார்ப்பதியும்
வாச மலரோனும் பாரதியும்
மாலும் சசியும்நல் மணம்காண்பார்
தேசம் மகிழத்தண் டுலம்பரப்பித்
தெர்ப்பை சாத்திமண்ட லம்வகுத்துப்
பூசந் தனம்தூவி வசிட்டமுனி
பொருந்து மறைவேள்வி திருந்தச்செய்தான். 20

இன்பா மணச்சிங்கா சனம்மீதே
இராம பெருமானும் சீதைஎன்னும்
அன்பா மலர்மாதும் இனிதுஇருந்தார்
அட்ட போகமும்யோ கமும்போல்
நின்பால் வரும்சொல்லும் பொருளும்என்ன
நீஎன் மகளுடனே வாழ்கஎன்று
தன்பா ணியின்நீரைச் சனகன்பண்பால்
தலைவன் திருக்கையில் தான்ஈந்தான். 21

19. யாவற்றின் அழகுகளும் எந்த இலட்சுமியின் அமிசமோ அந்த இலட்சுமியே மணமகளாய் இருக்கும் இத் திருமண வைபவத்தை என்ன என்று எடுத்துச் சொல்வது.

21. சீதாராமர் மணவேதிகையில் இருந்தது, போகமும் யோகமும் போன்றதாம். பாணி - கை. தாரை வார்த்துக் கன்னிகாதானம் கொடுத்தான்.

சுங்கா தரன்வேதன் அருந்தவத்தோர்
    சுனமா மறைவாணர் புகல்ஆசி
சங்கார் ஒலிதனிற் பெரிதுழங்கத்
    தருவா னவர்மன்னர் மிகவாழ்த்தக்
கொங்கார் மலரும்பொன் மலரும்முத்தும்
    கோல மணிகளும் சொரிந்திடலால்
அங்கா சினிமுற்றும் மீன்பூத்த
    ஆகா யமும்போல் விளங்கிற்றுஅம்மா! 22

தண்ணார் அருளாளன் வரராமன்
    தழலுக்கு ஆகுதிகொ டுத்துமுக்கால்
பெண்ணார் அமுதைக்கை பிடித்துக்கொண்டு
    பிரியா உயிரும்நல் உடலும்என்ன
கண்ணார் வேள்வியை வலம்வந்தான்
    கையிற் பொரிஅள்ளி மிதித்துஅம்மியை
விண்ணார் அருந்ததிவி ளங்கக்கண்டார்
    விதித்த நெறிமுற்றும் திருந்தச்செய்தார். 23

பொன்மா முரசும்பல் லாண்டும்சங்கும்
    புகழும் வேதமுடன் மிகமுழங்க
நன்மா தவரையும் மன்னனையும்
    நற்றாள் வணக்கம்செய்து அகத்துப்புக்கார்
சொன்மா கைகையைக் கௌசலையைச்
    சுமித்திரா தேவியைத் தொழுதுஎழுந்தார்
என்மா மகனுக்குத் தகுமங்கையே
    என்றார் அருந்ததி முதலானோர். 24

22. காசினி - நிலவுலகம், மீன் நடுவானின் விளங்கியதாம்.

23. பாணிக்கிரகணம் – கை கோவை ஆனதும் இராமன் சீதையின் கையைப் பிடித்துக்கொண்டு வேள்வித்தீயை வலம் வந்து வணங்கி, பொரியைத் தூவினான். பின் அம்மி மிதித்து அருந்ததி காணல் நிகழ்ந்தது. சீதாராமர் திருமணச் சடங்கிலே திருப்பூட்டல் - மாங்கலிய தாரணம் கூறப்படவில்லை. அருந்ததி காணல் தவிர்ந்த மற்றச் சடங்குகள் அனைத்தும் ஆண்டாள் வாக்கிலும் பயின்றுள்ளன. இச் சடங்குகள் எதுவும் வான்மீகத்தில் இல்லை. வழக்கத்திலே மங்கலநாண் பூட்டிய பின், அம்மி மிதித்து அருந்ததி காணல் நடைபெறுகிறது. கற்பில் கலங்காமல் கல்லைப்போல் உறுதியாய் இருத்தலைக் குறிப்பது அம்மி மிதித்தல்; அல்லது கற்பு நிலை தவறிக் கல்லான அகலிகையை நினைவுறுத்துவதாகவும் கூறுவர். வசிட்ட முனிவரின் பத்தினி அருந்ததி.

24. கன்னி அருந்ததி காரிகை காண
    நன்மக னுக்குஇவள் நல்லணி என்றாள். —கம். 95,

மருப்பார் முலையாரும் புவியும்பொன்னும்
வண்பட் டாடையும் மணிப்பூணும்
பொருப்பார் புயமன்னன் சனகன்நல்கப்
போதச் சீதனம் சீதைபெற்றாள்
விருப்பால் இறைவியும் இறையோனும்
வேதம் பகர்ந்தநல் நெறியாலே
திருப்பாற் கடல்அன்ன சயனம்தன்னில்
திருவும் திருமாலும் எனலானார். 25

பங்குனி உத்திர நல் நாள்தனிலே
பரமன் திருமாதை மணம்வேட்க
மங்கல அக்கினி தழைத்துஓங்க
வசிட்ட முனிதானே வளர்க்கலுற்றான்
கொங்கின் மணமாலைச் சனகன்பின்னோன்
குரத்து வசன்பெற்ற கோதைநல்லார்
இங்கு இனிஅவர்மூ வர்தமையும்
இராமற்கு இளையர்மூ வரும்வேட்டார். 26

மணந்தார் மணந்தபின் மன்னர்மன்னன்
வாய்ந்த புகழ்ஒன்றே ஈய்ந்ததில்லை
பணம்தா னியம்பூமி முதல்தானம்
பாலித்து இரவலர் குறைதீர்த்தான்
புணர்ந்தார் அளவற்ற இன்பம்துய்த்தார்
பொன்மா மிதிலைக்குள் சிலகாலம்
குணந்தாள் மிகமன்னு முனிவோரும்
குமரர் களும்செய்தது இனிச்சொல்கின்றேன். 27

25 பரசுராமப் படலம்

—பரசுராமன் செருக்கு அடங்கிச் சென்றது

தசரதனாதியர் அயோத்தி போதல்

கனகமக மேருவெற்பில்
    கவுசிகமா முனிஅடைந்தான்
தினகரன்போல் நகர்நோக்கித்
    தெசரதன்தான் முன்புசெல்லச்
சனகன்அவன் பின்புவந்த
    தம்பியரும் தேவியரும்
வனைகுழற்சி தையினோடு
    வரராமன் நடுவில்வந்தான். 1

தடுத்துவலம் வாசிவரத்
    தடமணித்தேர் நடத்தாமல்
எடுத்தபுகழ் மன்னவர்கோன்
    இந்நிமித்தம் யாதுஎனவே
அடுத்துடனே இடையூறும்
    அதுவேநன் றாகும்என்று
வடித்துணர்வான் சொல்லும்முன்னே
    மழுவாளன் தோன்றினனே! 2

1. கனகமகமேரு - பொன்மால்வரை; இமயச்சாரல் என்பது வான்மீகம். மேருவும் இமயமும் வேறுபாடின்றிச் சொல்லப்படுவதால் கௌசிகன் இமயம் சென்றதாகவே கருதலாம். தசரதன் முன்னே செல்ல, சனகன் அவனைப் பின் தொடர்ந்து வந்தான். தம்பியரும் அவர்தம் தேவியரும் தன்னை அனுகி வர சிதையுடனே இராமன் நடுவில் வந்தான்.

2. தடுத்து வலம் வாசி வர - நன் நிமித்தமாக மயில்கள் இடமிருந்து வலமாகவும், தீ நிமித்தமாகக் காகம் வலமிருந்து இடமாகவும் சென்று, பயணத்துக்குத் தடைசெய்ய. வாசி - பறவை. வடித்துணர்வான் - நிமித்திகன்,

இன்றேவரும் இடையூறுஅது நன்றாய்விடும் என்றான். —கம். 6.

மழுவாளன் - மழு என்ற கைக்கோடாலியை உடையவன் - பரசுராமன்,

பரசுராமன் தோன்றினான்

கடல்மறுகச் சுரர்வெருவக்
கவிழ்கலம்போல் புவிநடுங்க
அடல்புரையும் சிலைதிரியா
அயில்முகவெங் கணைதெரிவான்
மிடல்படல்செஞ் சடைமுடியான்
விழித்தழலான் தெளித்தசொல்லான்
திடல்உலகை முடிக்களன்றோ
சினம்இதுஎன்றே எவரும்அஞ்ச; 3

முழுவரையிற் பெரியமன்னன்
முரண்புயம்ஆ யிரம்துணித்துப்
பழிஅரசை மூவெழுகால்
படுத்துஉதிரக் கடல்குளித்தோன்
மழுஎரியக் கடல்திரிய
வடவனல்போல் சுடர்கனலச்
செழுமதியிற் சடைபடரச்
செகமுடிவில் சிவனைஒப்பான்; 4

சீறிவரும் வரவுகண்டு
தெசரதன்தான் துணுக்கம்உற்றான்
மாறில்பெரும் படைஇரிய
வரைதுணித்த மழுவாளன்
மீறும்இடி போல்விடைத்து
வீரன்எதிர் வெகுண்டுவந்தான்
ஏறுபுகழ் இராகவனும்
இங்குஇவன்ஆர் எனநினைந்தான். 5

3. சிலை திரியா - கிரவுஞ்ச கிரி நிலைபெயர, அல்லது, வில்லைச் சுழற்றிக் கொண்டு.

4. மன்னன் - கார்த்தவீரியார்ச்சுனன். பழி அரசை .... படுத்து - கார்த்தவீரியன் மக்கள், தன் (பரசுராமன்) தந்தை ஆகிய சமதக்கினி முனிவரைக் கொன்றதால் பழிக்குப் பழியாக இருபத்தொரு தலைமுறை அரசர் குலத்தை அழித்தான். வடவனல் - வடவைத் தீபோலத் தனது உடலின் வெப்பத்தால் ஒளி தகிக்க.

வந்தது உன் வலிமை காணவே

அப்பரசு ராமனைவந்து
அடிவணங்கித் தசரதன்தான்
மெய்ப்பரிவால் பூசைசெய்ய
விரும்புவது மதியாமல்
செப்பரும்சி ராமனை,நீ
சிலைஒடித்த ஒலிகேட்டேன்
இப்பொழுதுஉன் வலிகாண்பேன்
இகல்போர்நான் வந்ததுஎன்றான். 6

சிந்தைஅஞ்சித் தசரதன்தான்
தீயமன்னர் குலம்அறுத்தாய்
எந்தன்மகன் கொடியன்அன்றே
எதிர்உனக்குஆர் மூவர்அல்லால்
மைந்தனுடன் குலமுடிவோம்
மடியாமல் யாங்கள்எல்லாம்
உந்தனிடம் சரணம்என்றே
உபயபதம் தனில்வீழ்ந்தான். 7

நீ ஒடித்தது ஓட்டை வில்

வணங்கிமன்னன் மனம்தவிக்க
மதியாமல் மழுவாளள்
குணம்கிளரும் இராகவனைக்
குறித்துஎதிரே கூறல்உற்றான்
திணம்கிளர்மா மேருவினும்
திண்ணியவெம் சிலைஇரண்டும்
மணம்கிளரும் மலர்அயன்தான்
வகுத்துஅமைத்தான் முன்நாளில். 8

8. மேரு மலையைப்போலும் உறுதியான வில் இரண்டைப் படைத்தவன் அயன் - பிரமன்; விசுவகருமன் என்பார் கம்பர். மயன் என்பாரும் உளர்,

சங்கரனும் நாரணனும்
　　தனுஇரண்டும் தரித்துஉகந்தார்
அங்கதனில் வலிதுளதுஎன்று
　　அயனைவிண்ணோர் கேட்க,அயன்
சங்கரர்நா ரணர்பொருமின்
　　தனுஇரண்டால் என,வணங்க
அங்கவர்தன் போரில்அரன்
　　அம்சிலைசற்று ஒடிந்ததுஅன்றோ. 9

முரிசிலைஎன்று ஒடிந்தவதை
　　முக்கணன்வா சவற்குஅளித்தான்
வரிசிலையாம் இச்சிலையை
　　மால்கொடுத்தான் இருசிகற்கு
இருசிகன்பால் எந்தைபெற்றான்
　　எந்தைஎமக்கு அருளியதாம்
பொருசிலைநீ வாங்குதியோ
　　போர்புரியேன் உன்னொடுஎன்றான். 10

ஊனவில்லை ஒடித்தனைநீ
　　உன்பால்ஓர் வழிப்பகைநான்
ஞானஎந்தை தனைவதைத்த
　　நராதிபனை மூவெழுகால்
மானகுலம் கருவறுத்து
　　வார்குருதிப் புனல்மூழ்கி
ஆனஎந்தை கடன்கழித்தேன்
　　அரும்கோபம் தணிந்திருந்தேன். 11

9. யாரினும் உயர்ந்த மூலத்து ஒருவராம் இருவர், அதாவது யாவரினும் மேம்பட்ட காரணத்தால் ஒருவராகி, காரியத்தால் இரு வேறு வடிவினரான சங்கர நாரணரிடையே பிரமன் போரை மூட்டிவிட்டான்.

10. முரிந்த தன் கைவில்லை இந்திரனுக்கு அளித்தார் சிவன்; அந்த வில்லைத்தான் நீ ஒடித்தது. திருமால் தன் வில்லை இருசிக முனிக்குத் தந்தார். அம்முனிவர் பரசுராமனின் பாட்டனார். இந்த என் வில்லை வளைத்து உன்னால் நாண் ஏற்ற முடியுமா ? முடிந்தால் உன்னோடு போர் புரியேன்.

மேருவின்மேல் தவம்இருந்தேன்
வெஞ்சிலைநீ முரித்தஒலி
சாருதலால் சிறிவந்தேன்
சமர்பொரவே வல்லைஎன்றால்
போர்உறுவில் வாங்கிடுஎன்றான்
புண்ணியன்செங் கையில்வாங்கிச
சூர்உறுவெங் கணைதொடுத்துத்
தோள்உறவாங் கிப்பகர்வான். 12

பரசுராமன் கருவபங்கம்

அரசரைக்கொன்று உளபகைநீ
அருந்தவம்செய் வோன்அதனால்
விரைசரத்தால் கொல்லஒண்ணா
வெங்கணைக்குஏது இலக்கம்என்றான்
பரசுஎடுத்தோன் பணிந்துஉரைப்பான்
பரஞ்சுடர்நீ என்றுஅறிந்தேன்
உரைசமத்தால் உன்சிலைதான்
உன்வசத்தே வந்ததுகாண். 13

சேடாரும் கடுங்கணைக்குஎன்
செய்தவமே இலக்கதுஎன்றான்
தாடாளன் விடுக்கஅவன்
தவத்தைஎல்லாம் வாரிவரக்
கோடாதாய் நினைத்ததுஎல்லாம்
கூடுகஎன்று அவன்வாழ்த்த
வீடாளும் மெய்ப்பொருளே
விடைகொடுஎன்றே தொழுதுசென்றான். 14

தயைக்கடலாம் வரராமன்
தந்தைதனைத் தாள்பணிந்து
துயர்க்கடல்நின் றேற்றிஇன்பத்
துறைக்கடலில் மூழ்குவித்தான்
புயற்கையினால் அணைத்துஉகந்தான்
பூமழைவா னவர்பொழிய
இயற்கைவில்லை வருணன்கையில்
ஈந்துஇறையோன் அயோத்திபுக்கான். 15

மன்னனும்மைந் தரும்பலரும்
வாழ்ந்திடுநாள் பரதனைத்தான்
அன்னைபிதா வருகஎன்ன
அரசனையும் தமையனையும்
பொன்னடிதாழ்ந்து இளவலொடும்
புகழும்உதா சித்துவொடும்
இன்னருள்கே கயம்புகுந்தான்
இறைவன்அயோத் தியில்இருந்தான். 16

அயோத்தியா காண்டம்

1 மந்திரப் படலம்

—தசரதன் மந்திரிமார்களுடன் இராமனுக்கு
முடிசூட்டுவது குறித்து ஆலோசித்தல்

வாழ்த்து

ஆனஉணர்வு இல்லேனை ஆளுதியோ? ஆளாயோ?
தீநரகம் சேர்த்துதியோ? தீர்த்துதியோ?—ஞான
ஒருவிளக்கே! சீரங்கத்து உத்தமரா மா!உன்
திருவுளத்துக்கு ஆனதுவே செய். 1

சீலமால் வந்துஉதித்துச் சீதைதனை வேட்டுவந்த
வாலகாண் டம்புகன்றேன் மன்னருளால்—ஞாலம்எலாம்
பூண்டதம்பிக்கு ஈந்துவனம் போமாறு அயோத்தியா
காண்டம்அதைக் கேளுநல்லோர் காள். 2

மந்திரி சபை கூடியது

முரசதிரக் கவரியிட
முழுமதிவெண் குடைநிழற்ற
அரசர்பிரான் தசரதன்தான்
அணிமணிமண் டபத்திருந்து
திரைசெய்கடற் சேனையையும்
சிறியரையும் புறத்துஅகற்றி
உரைசெய்முனி வசிட்டனுடன்
உகந்துஅமைச்சர் தமைஅழைத்தான். 3

கல்விவல்லோர் கேள்வியுள்ளோர்
காலம்இடம் பொருள்அறிவோர்
நல்வினையோர் குடிப்பிறந்தோர்
நாயகற்கு நலம்பயப்போர்
அல்வினைநோய் அகற்றிடுவோர்
அறுபதினா யிரஅமைச்சர்
சொல்வினையால் மன்னருளால்
தொழுதுஇறைஞ்சிச் சூழ்ந்திருந்தார். 4

தசரதன் பேச்சு

துங்கமுடி மன்னர்மன்னன்
சொலல்உற்றான் அமைச்சருடன்
செங்கதிரோன் குலத்துஅரசர்
செய்முறைமை தவறாமல்
உங்கள்பெரும் சூழ்ச்சியினால்
உயிர்கள்எல்லாம் வருந்தாமல்
அங்கடல்சூழ் உலகாண்டேன்
அறுபதினா யிரத்தாண்டும். 5

நாமநன்னீர்க் கடல்உலகை
நலிவுசெய்யும் பகைஅறுத்தேன்!
காமம்முதற் பகைஅறுத்தும்
கதிஅடையாது இருக்கைநன்றோ!
தேமொழியாள் கோல்தாங்கத்
தெசரதத்தை வெற்றிகொண்டேன்
மாமனம்பூண் ஐந்துஇரதம்
வலிமைசெய்ய மெலிகைநன்றோ. 6

செருக்களத்தில் படாதவரும்
தேகிஎன்றால் இடாதவரும்
பெருக்குவர விடாதவரும்
பிறவிஎன்னும் கடல்கடவார்;
இருக்குணர்வும் துறவும்என்னும்
இருசிறகால் கடப்பர்நல்லோர்
தருக்கும்உடல் நிலைஇதென்றால்
தனக்குஅதுவே கேடுஅலவோ. 7

5. சொ(ல்)லல். சூழ்ச்சி - ஆலோசனை.

6. மாற்றரசரான பல புறப் பகைவரை எதிர்த்து வென்ற யான், என் அகத்துள் ஒளிந்து வாழ்கிற காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியங்களான சில உட்பகையை ஒழித்து முக்தி பெறாமல் இருப்பது நல்லதா? சம்பராசுரன் முதலிய பகை அரசர் ஏறிய தேர் பத்தையும் வென்றேன்; மனப்பேய் பூட்டிய இந்திரியத் தேர் ஐந்தை வெல்லுதல் அருமையே. நாமம் - அச்சம். தேமொழியாள் - கைகேயி. கோல் தாங்க - சாரத்தியம் செய்ய. தெசரதம் - தசரதம் - வழக்குச் சொல்.

7. போரிலே இறவாதவர் ஈ என்று இரப்பார்க்கு ஈயாதவர். பெருக்கு - செல்வப் பெருக்கைத் துறவாதவர். வீடு பெறார். இருக்கு உணர்வு - வேத ஞானம். ஞானம், துறவு என்ற இரு சிறகால் பிறவி என்ற கடலைக் கடப்பர். தேகி - கொடு. தருக்கு - செருக்கு.

தலத்துஅரசு தனைவெறுத்தேன்
தனிஅரசை விருப்பம்உற்றேன்
கலத்துஇனிது அமுதுஇருக்கக்
கடுவிடந்தான் அருந்துவரோ?
இலத்தில்இந்நாள் வரையும்உண்டது
எச்சில்அன்றோ இவ்வாழ்க்கை;
நிலத்தில்இன்பம் உதவியநீர்
நெடுங்கதிஇன் பம்தருவீர். 8

காதல்மைந்தன் இன்றிநொந்தேன்
கருணைஇரா மன்பிறந்தான்
சீதைமணம் கண்டுஉகந்தேன்
செகமணமும் காணலுற்றேன்
ஆதலினால் இராகவற்கே
அரசுநல்கித் தவசுசெய்வேன்
ஓதஉங்கள் கருத்துஎனவே
உகந்துஅவரும் மனம்இசைந்தார். 9

வசிட்டர் சொன்னார்

மன்னர்மன்னன் தனைநோக்கி
வசிட்டமகா முனிஉரைப்பான் :
முன்னம்மன்ன, நினைப்போல்ஆர்
மூர்த்திஇரா மனைப்பயந்தார்;
சொன்னபல வேள்விசெய்தாய்
சொல்தவமும் செய்கைநன்றே
இன்னல்இன்றி உலகைஎல்லாம்
இராமபிரான் காப்பன்என்றான். 10

8. இல்லத்தில் இந்நாள் வரையும் உண்ட எச்சில் அல்லவா இவ் வாழ்க்கை? எச்சிலை நுகருவது இன்பம் ஆகுமோ என்பார் கம்பரும். கலத்து - பாத்திரத்தில். கதி - மோட்சம்.

9. பெருமகன் என்வயின் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகன் நிறைகுணத்து அவனி மாதுஎனும்
ஒருமகள் மணமும்கண்டு உவப்ப எண்ணினேன். —கம். 28.

ஓத - ஓதுக.

இராமனை அழைத்து வந்தான் சுமந்திரன்

விதித்தமொழிக்கு உகந்துமன்னன்
வியந்துதன்பால் இராமபிரான்
உதித்தஅந்நா ளினும்சிவன்வில்
ஒடித்தஅந்நா ளினும்மகிழ்ந்து
துதித்தபின்னை— சுமந்திரனும்
தோன்றல்முடி சூடியபின்
மதித்தவம்செய் எனமகிழ்ந்த
மன்,மகனைக் கொணர்களென்றான். 11

வல்விரைவாய்ச் சுமந்திரன்போய்
வரராமன் கோவில்எய்திச்
செல்வமொடும் தம்பியொடும்
சிறந்திருந்தான் தனைவணங்கிக்
கல்விமன்னன் வருகஎன்றான்
கண்ண,நினை என,எழுந்தான்;
நல்வியன்தேர் மீதுசென்றான்
நகரிசனம் சூழ்ந்திடவே. 12

சாளரவா சலில்மலரும்
தாமரையின் புதுமலரும்
வேள்அணைமாங் கணைமலரும்
விண்ணவர்தாம் சொரிமலரும்
வாள்அரம்போல் விழிமலரும்
மழையினும்போ தப்பொழியக்
கோள்அரிநேர் தம்பியொடும்
கொற்றவனைக் கண்டனனே. 13

11. விதித்த மொழி - வசிட்டர் சொன்னது.

மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன் பிடித்தஅப் பெருவில்
இற்ற அன்றினும் எதிமழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான். —கம். 41.

மன் - தசரதன்.

12. செல்வம் - சீதை.

13. கோள்அரி - சிங்கம்.

சாளரத்திலும் பூத்தன தாமரை மலர்கள். —கம். 53.

மாதவனைமு தல்வணங்கி
மன்னவனை வணங்க,அவன்
சீதைகொண்கன் தனைஅணைத்துச்
சேரஇருத் தியபோது
மாதலங்கல் மார்பையும்நல்
மற்புயத்தை யும்மார்பும்
பூதலம்தான் தாங்கியதன்
புயமும்ஒக்க அளந்ததொக்கும். 14

கெஞ்சாத குறையாகக் கேட்டான் தசரதன்

இருந்தருள்என்று இருத்திமன்னன்
எங்குலசி காமணியே
தரும்தனயன் கதிகொடுத்தான்
சகரர்என்று கூறலுற்றார்க்கு
அருந்தவம்செய் பகீரதன்தான்—
அருள்செய்நீ உனைப்பயந்தேன்
திருந்தவமே முயல்கின்றேன்
செயம்பெறுநீ உலகாண்டு. 15

இது கடமை என்று இசைந்தான் இராமன்

தந்தைமொழிக்கு இராமபிரான்
தாரணிமேல் ஆசைவையான்
மைந்தர்கடன் என்றுஇருந்தான்
மனதுஅறிந்த மன்னர்மன்னன்

14. நலங்கொள் மைந்தனைத் தழுவினன் என்பதுஎன் நளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்கல் அன்னதிண் தோளையும் மெய்த்திரு இருக்கும்
அலங்கல் மார்பையும் தனதுதோள் மார்புகொண்டு அளந்தான்.
—கம். 59.

மாது அலங்கல் மார்பு - மெய்த் திரு இருக்கும் அலங்கல் (மாலை) மார்பு. மாதவன் - வசிட்டர்.

15. தன் முதாதையரான சகரர்களுக்கு ஆகாய கங்கையைக் கொணர்ந்து கதி கொடுத்தான் பகீரதன். தவமே நான் மேற்கொள விரும்புவது. திருத்தவம், திருந்தவம் என மெலிந்தது.

இந்தவரம் தந்தருள்என்று
எழுந்துபுல்லி மகிழ்ந்திருந்தான்—
சுந்தரனும் கோயில்புக்கான்
சொல்முனிவன் அருள்நெறியால். 16

அவன் உம் மகன், உமக்கு அடைக்கலம்

மன்னவரை அழைத்துமன்னன்
மகற்குஉலகம் வாய்த்ததுஎன்றான்
அன்னவரும் தந்தமக்கா
அரசதுபோல் மனம்மகிழ்ந்து
'நன்னலம்'என்று உரைக்கமன்னன்
நயந்தனன்அன் பால்எனக்குச்
சொன்னவரோ சொலும்எனவே
தொழுதுமிக ஏதுசொல்வார். 17

'வல்லமன்னர் குலம்களைந்த
மழுவாளன் வலிபறித்த
வில்அழகன் சற்குணத்தான்
மேகமழை பொழிவதுவும்
நல்லமரம் பழுப்பதுவும்
நதிபெருக்கும் வேண்டார்யார்?
எல்லவர்பால் இனியவன்பால்
இனியதுஅல்லது யாது,என்றார். 18

16. சுந்தரன் - இராமன்.

தாதை அப்பரிசு உரைசெயத் தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன்இது என்றுஉணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவியது அதுசெயல் அன்றோ
நீதி எற்குஎன நினைந்தும்அப் பணிதலை நின்றான். —கம். 69.

17. மன்னர்கள் எல்லோரும் தாங்கள் தாங்களே ஆட்சி அடைந்தாற்போல ஆனந்தபரவசராய், நீ செய்யக் கருதியது மிகவும் சிறந்தது என்றார்கள். அதனால் உண்டான மகிழ்ச்சியை மறைத்துக்கொண்டு, தசரதன், புத்திர வாஞ்சையால் நான் கூறியதற்குப் பொருத்தமாகச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தாலோ, இது தக்கது என்பதாலோ, எதனால் இப்படிச் சொன்னீர்கள் ?

18. ஊருணி நிறையவும் உதவும் மாடுஉயர்
பார்நுகர் பயன்மரம் பழுத்தது ஆகவும்
கார்மழை பொழியவும் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின் றார்கள்யார். —கம். 81.

.... மன்னுயிர்க்கு
எனையவாறு அன்பினன் இராமன் ஈண்டுஅவற்கு
அனையவாறு அன்பின அவையும் என்றனர். —கம், 82,

வேந்தர்சொன்ன வாசகத்தால்
வேந்தர்பிரான் மனம்மகிழ்ந்தே
ஏய்ந்தகுணம் பெரிதுடையீர்
எம்மகனை நும்மகன்போல்
கூந்தருளால் காமின்என்று
கூறிவிடை கொடுத்தபின்னை
ஆய்ந்தகலைக் கணிதருடன்
ஆங்குஒருமண் டபத்திலுற்றான். 19

கோசலையின் தானதர்மம்

கோசலைக்கும் சுமித்திரைக்கும்
கோதையர்போய் ஓகைசொல்லத்
தேசமகன் பிரிவைஎண்ணிச்
செல்வமகன் திருவைஉன்னி
ஈசன்எம்மான் திருக்கோவில்
இருஞ்சிறப்பு மிகநடத்தி
மாசதுஇல்லாத் தானதர்மம்
மறையவர்க்கும் கொடுத்தனளே. 20

19. கூந்து - கூர்ந்து. கணிதர் - சோதிடர்.

20. ஓகை - உவகை(யான செய்தி). தேசமகன் - தசரதன், எம்மான் - எம்பெருமான் - திருமால். சிறப்பு - பூசனை.

குறிப்பு: கம்பராமாயணப் பதிப்புகள் சிலவற்றிலே இப் பாடலுடன் மந்தரை சூழ்ச்சிப் படலம் தொடங்குகிறது.

2 மந்தரை சூழ்ச்சிப் படலம்

—இராமன் முடிசூடுதலைத் தடுக்கும்படி கைகேயிக்குக்
கூனி தீய ஆலோசனை கூறல்

அரசியல் அறம் போதித்தார் வசிட்டர்

வேந்தன் மகனுக்கு முடிசூட்ட
மிகுந்த முகூர்த்தநல் நாள்கேட்டான்
ஆய்ந்த கணிதரும் நாளைஎன்றார்
அன்பால் வசிட்டனை வரவழைத்துச்
சேர்ந்த ராமர்க்கு இராசதன்மம்
செப்பி வருகென முனியும்சென்றான்
வாய்ந்த வரதனும் எதிர்வணங்க
மணிஆ சனம்தனில் இருத்தியபின். 1

வையம் தனைமன் உனக்குத்தந்தான்
வான்முதல் எங்கும் மகிழ்ந்துஆள்வாய்
ஐயர் மூவரின் பெருமைபெற்ற
அந்தணர்க்கு அன்பாய் ஏவல்செய்வாய்
வெய்ய வினைஆறும் பகைமூன்றும்
விலக்கி அருள்அன்போடு அறங்காப்பாய்
துய்ய மதியும்சொல் அமைச்சருடன்
சூழ்ச்சி இடம்காலம் அறிந்துசெய்வாய். 2

நோய்க்கும் பவம்சூது முதல்ஏதும்
நோக்காய் மனத்தாலும் எனிலும்சொல்வேன்
தீய்க்குள் புகைபோல்மங் கையர்ஆசைத்
திமிரம் கெடின்கேடு யார்க்கும்இல்லை
தாய்க்குச் சரியாக உயிரைஎல்லாம்
தாங்கும் தவம்போல வேள்விஉண்டோ
வாய்க்கப் புகழ்ந்துஈசன் அடிசேர்ந்தால்
வாழ்வாய் இம்மைக்கும் மறுமைக்குமே. 3

2. மன் - தசரதன்.
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால். —கம். 15.

3. வையம் மன்னுயிர் ஆகஅம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல்அன்ன மன்னனுக்கு

ஆய உபதேசம் பலவும்நல்கி
அழகன் தனைத்தர்ப்பை ஆசனத்தில்
மாயன் திருக்கோயில் தனிலிருத்தி
மாலுக்கு ஆரா தனையும்செய்து
தூய முனிசென்று தசரதன்பால்
சொல்ல அவனும்மன் நகரம்தன்னை
ஆய அலங்காரம் செயும்எனவே
ஆனை தனிற்சாம்பன் சாற்றிச்சொன்னான். 4

அயோத்தியை அலங்கரித்தனர்

நங்கோன் முடிசூடும் நாளைஎன்ன—
நகரி சனம்எல்லாம் அலங்கரித்துச்
செங்கோல் அரசனைப் புகழ்ந்துஏத்திச்
செப்பின வர்க்குஎல்லாம் நிதிசொரிந்து
பைங்கோ மளவண்ணன் திருமார்பில்
படர்மா மணிஒப்பம் செயுமாபோல்
அங்கோர் கனகப்பெண் குடிவாழும்
அயோத்தி தனைஎங்கும் அலங்கரித்தார். 5

கண்ணன் அணிகோலம் காணவந்த
கருடன் மயில்கிள்ளை முதல்பட்சி
வண்ணம் பலபெற்ற கொடிஆடை
மாதர் களம்போல நடும்கமுகும்
சுண்ண முலைபோலும் கனககும்பம்
தொடைகள் போலும்தோ ரணவாழை
வெண்ண கைபோலும் தரளம்பற்றி
வெயிலும் நிலவும்வெண் ணிலவும்ஒன்றாய். 6

ஐயம் இன்றி அறம்கட வாதுஅருள்
மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ. —கம். 25.

4. சாம்பன் - வள்ளுவன்.

5. திருமால் மார்பிலே அணிந்த கவுத்துவமணியை அதிகமாக அழகு படுத்துவார்போல இயல்பாகவே அழகுடைய நகரை அதிக அழகு அடையும்படி அலங்கரித்தார். ஒப்பம் - அழகு. கனகப்பெண் - இலட்சுமி.

6. வெண்மை கருமை செம்மை முதலிய வருணங்களை உடைய கொடிகள் பறப்பன, பல நிறப் பறவைகள் பறப்பன போன்றன. மாதர்கள் கழுத்துப் போலக் கமுகுகள்; தனங்கள்போலப் பூரண கும்பங்கள்; தொடைபோல வாழைகள் நாட்டப்பட்டன. அவர்களுடைய பல்வரிசைபோல முத்துமாலைகள் தொங்கவிடப்பட்டன. களம் - கழுத்து.

வெண்பட்டு உடுத்திய மாணிக்கத்தூண்
    வெண்ணீறு அணிந்திட்ட சிவனைஒக்கும்
வண்பட் டணிசெம்பொன் மரகதத்தூண்
    வளரும் கனகாம் பரனைஒக்கும்
எண்பட் டரிதென்னும் பரித்தேர்கள்
    இமையோர் மானம்வந்து உறைவதொக்கும்
ஒண்பட் டமும்கட்டித் திரியும்தந்தி
    உதய கிரியும்சூ ரியனும்ஒக்கும். 7

கூனி வெளிப்பட்டாள்!

பிடியா னையும்மத்த கசமும்ஒக்கும்
    பிறைவாள் நுதலாரும் ஆடவரும்
முடியார் அமரர்நற் பதிநாண
    மூதூர் அலங்காரம் செயும்போதில்
கொடியான் அரக்கன்செய் வினைப்பயனால்
    கூனி அதுகண்டு கோபம்உற்றாள்
நெடியோன் சிறுபோதில் தெரித்தஉண்டை
    நெஞ்சில் சுடக்கைகை இடத்திற்சென்றாள். 8

துயரம் என்ன?

போத பாற்கடற் பவளவல்லி
    போலப் பாயலில் துயில்வாள்தன்
பாத கமலத்தைப் பிடித்துஎழுப்பப்
    பள்ளி எழுந்தாளை முகம்நோக்கி
வாதத் துயர்வந்தும் துயில்என்?என்றாள்;
    மைந்தர் உளர்,என்ன துயரம்என—
ஏதச் சரராமன் அரசுபெற்றான்
    இதுபோல் இனிஉண்டோ துயரம்என்றாள். 9

7. கனகாம்பரன் - திருமால். எண்பட்டரிது - எண்ணத் தெரியாத. தேர்கள் தெய்வ விமானங்கள் போன்றன. நெற்றிப்பட்டம் சொலிக்கும் யானைகள் சூரியன் தோன்றும் உதயகிரி போன்றன.

8. கொடியோன் - இராவணன். நெடியோன் - இராமன்.
    இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
    துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள். —கம். 49.

9. நாற்கடல் படுமணி நளினம் பூத்ததோர்
    பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
    போற்கடைக் கண்ணருள் பொழியப் பொங்கணை
    மேற்கிடந் தாள்தனை விரைவின் எய்தினான். —கம். 49.

கைகை கருத்தும்அக் கௌசலைதன்
கருத்தும் நிகர்ஒத்தது, இருவர்நெஞ்சும்
மெய்கை தருமன்னன் இருக்கையினால்;
மின்னும் மணிமாலை வரிசைநல்க,
வைகை யுடன்வாங்கி நிலத்தில்இட்டாள்;
மகனும் நீயும்மாற் றவட்குஏவல்
செய்கை, அவள்தா தியர்க்குஅடிமை
செய்யத் தரியேன்என்று அழுதுசொல்வாள். *10*

தருணச் சனகியும் அவள்கொண்கனும்
தங்கச் சிங்கா தனத்துஇருக்க,
கருணைப் புதல்வன்உன் வயிற்றில்வந்த
கன்மம் வெறும்பாரில் இருக்கைநன்றோ?
இருணற் கடுங்கானில் உறைகைநன்றோ?
இறைவன் வகைஈதுஎன்று அறிந்துகொண்டே
பொருணற் பரதன்தன் அழகும்பண்பும்
புல்லிற் கவிழ்ந்தநல் அமுதொத்ததே. *11*

ஐயோ பரதா!

தாயும் தகப்பனும் பகைஆனால்
தமர்ஆர் உனக்குஐயோ பரதா!என்றாள்;
ஏயும் புகழ்ஐயர் முடிமன்னர்க்கே
எண்ணப் பிறந்தில்லாய் இருந்தாய்என்றாள்
மாயும் படிநன்றே, மாயாக்கால்
வனத்தில் தவம்செய்கை வாய்த்ததுஎன்றாள்;
நீயும் மதிமன்னர் மரபில்வந்தும்
நினைவுஅற் றனைஎன்னே எனவும்சொன்னாள். *12*

போத - போய். ஏதம் சரராமன் - ஏதம் - குற்றம் - தாடகையைக் கொன்றது.

10. கைகை - கைகேசி. மெய்கை - மெய்மை. வைகை - வகை.

மாற்றம்அஃது உரைசெய மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலை அறிவும் ஒத்தவால்
வேற்றுமை உற்றிலள், வீரன் தாதைபுக்கு
ஏற்றவள் இதயத்தின் இருக்க வேகொலாம். —கம். 58.

மன்னன் இருவர் உள்ளத்திலும் இருந்ததால் அவன்போலவே இருவரும் உவந்தனர்.

11. இருள்நல் கடுங்கான்; பொருள்நல் பரதன். அவன் பாரில் இருத்தலினும் கானில் இருத்தல் நல்லது.

12. முடிமன்னர் வரிசையிலே வைத்து எண்ணப்பெறும் பேறு பெறாத பரதன் இருந்தும் இல்லாதவனே. தமர் - தம்மவர்.

என்ன சொன்னாய்?

மந்தரை எனும்கூனி உரைத்தவன்சொல்
வன்னி யில்விடும்எண் ணெய்போலச்
சுந்தர மயில்அன்ன கைகைசொல்வாள்
சூரன் மரபோரை நீஎன்சொன்னாய்?
அந்தரம் எனக்கும்என் மகற்கும்நிற்கும்
ஆன, அயற்போஎன்று அதட்டப்பின்னும்
வெந்தரவு எனத்தாளில் விழுந்துசொல்வாள்
மீட்க மீளாள்வி டத்திற்பொல்லாள். 13

பெரியாற்கு அரசுஎன்னில் அரசன்நிற்கப்
பெறல்ஆ மோராமன் பார்ஆள—
கரியோன் பரதனைத் தவிர்த்தல்பண்போ?
கருத்தும் வேறாவார் அருத்தம்பெற்றால்;
உரியார் தரில்அன்றி உங்கட்குஉண்ண
உடுக்க ஒருவர்க்கும் கொடுக்கஉண்டோ?
தரியாய் கௌசலைசெல் வம்கண்டால்
தவிப்பார் உனைப்பெற்றார் தமக்கும்பொல்லாய். 14

மனம் திரிந்தாள் கைகேயி

அவர்க்கும் புதல்வர்க்கும் ஆகும்வையம்
ஆமோ பரதன்பின் புதல்வர்க்குஎன்றாள்;
உவர்க்கும் குணக்கூனி உரைத்தசொல்லால்
ஊனம் இலாக்கை கயர்பாவை

13. வன்னி - நெருப்பில் விடும் எண்ணெய்போல் ஆயிற்று. சூரன் - சூரியன். அந்தரம் - கேடு, தீமை.

.... மனுமுதல் மரபைச்
செயிர்உ றப்புலைச் சிந்தையால் என்சொனாய் தீயோய். —கம். 71.

வெந்த அரவு - துவண்ட பாம்பு.

எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லைஅத் தருமமே நோக்கின்
உவக்கு நல்லையும் அல்லைவந்து ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதிஇலா மனத்தோய். —கம். 72.

14. கரியோன் - இராமன், அருத்தம் - செல்வம்.

தவர்க்கும் அமரர்க்கும் புவிக்கும்நன் றாய்த்
    தருமம் தழைக்கப்பாவி யர்மாள
எவர்க்கும் சீராம சரிதைமுத்தி
    இசைக்கும் பொருட்டாலும் இசைந்தனளே. 15

பரதன் முடிசூடும் வகை என்ன?

எந்தன் மகனுக்கும் எனக்கும்நல்லாய்
    எங்கள் முடிசூட வகைசொல்என் றாள்;
மந்த ரையும்அந்த மொழிக்குஉகந்து
    வல்லாய் எனப்பாதம் பணிந்துஏத்தி
எந்தன் மொழிகேள்உன் ஒருமகற்கே
    ஏழ்உல கம்எய்தும் வரம்இரண்டும்
தந்த வனைஇன்று வேண்டிடுஎன் றாள்
    சம்பர னைச்செற்ற தகைமைகண்டு. 16

வேண்டும் வரம்ஒன் றால் அரசுபெற்று
    மிக்க வரத்தால்வெஞ் சரராமன்
ஆண்டு பதினான்கும் காடுஉறைந்தால்
    அகிலம் படியும்உன் மகனுக்குஎன் றாள்;
ஈண்டும் மணிஆர மேபூட்டி
    எனக்கு மகன்அன்று உனக்குமகன்
தூண்டு சுடர்க்கூனி போநீஎன்று
    சொரிபூ வணைநின்று இறங்கிக்கைகை, 17

15. அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்கம் இன்மைஅன் றோஇன்றுஇவ் உலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகநின் றதுவே. —கம். 85.

16. எங்களுக்கு முடிசூட வகை சொல்.

17, கைகை (18-ல்) புரண்டு அழுதாள்.

அலங்கோலமாய்க் கிடந்தாள்

வண்டார் குழல்சோரத் தொடைநீங்கி
மழைபோல் மயில்போல் மான்போலும்
கொண்டா டியதன்சீர் துறந்ததுபோல்
குலமே கலைஆரம் வளைதுறந்து,
அண்டார் மதிமறுத் துடைப்பதுபோல்
அழித்துத் திலகத்தைப் புரண்டுஅழுதாள்;
தண்டா மரைச்செல்வி பிரியும்முன்னே
தவ்வை போலேகை கயன்பாவை. 18

18. விளையும் தன்புகழ் வல்லியை வேர்அறுத்து என்னக்
கிளைகொள் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைது றந்தனள் மதியினின் மறுத்துடைப் பாள்போல்
அளக வாள்நுதல் அரும்பெறல் திலகமும் அழித்தாள். —கம். 2.

தண்தாமரைச் செல்வி - சிதை அயோத்தியை விட்டுப் பிரிவதற்கு முன்ன தாகவே மூதேவி அந்நகரில் குடிபுகுந்ததுபோலத் தோன்றியதாம் கைகேசியின் தோற்றம்.

நவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாம் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்கும்என்று அயோத்திவந்து அடைந்தஅம் மடந்தை
தவ்வை யாம்எனக் கிடந்தனள் கேகயன் தனயை. —கம். 4.

குறிப்பு: கம்பராமாயணப் பதிப்புகள் சிலவற்றிலே 18ஆம் பாடலுடன் கைகேசி சூழ்வினைப் படலம் தொடங்குகிறது.

3 கைகேசி சூழ்வினைப் படலம்

—இராமன் முடிசூடுதலைத் தடுக்கக்
கைகேயியின் துராலோசனை

வந்தான் தசரதன்

மன்னன்வந்தான் நள்ளிருளில்
மன்னரைவா சலில்அகற்றி
துன்னுகைகை கோயில்புக்காள்
சோகம்இதுஎன் என்றுஎடுத்தான்
பின்னும்அவன் கையைநீக்கிப்
பெருநிலத்தே விழுந்துஅழுதாள்
என்னுனையார் தீங்குசொன்னார்
இறப்பதுஇன்றே உரைத்திடுஎன்றான். 1

கேட்டேவிட்டாள் வரத்தை

பண்டைவரம் இரண்டுஇன்றே
பாலிஎன— நகைத்துமன்னன்
கொண்டதுஇரா கவன்அறியக்
கொடுப்பன்அவை கூறிடுஎன்றான்;
உண்டதுஎனில் என்தன்மைந்தன்
உலகைஆள்வது ஒருவரத்தால்
எண்டவம்செய்து ஏழிரண்டுஆண்டு
இராகவன்காடு உறைவதுஎன்றாள். 2

கைகைசொன்ன கடுவிடத்தால்
கலங்கிவிழும் களிற்றுஅரசன்
மெய்கைஉள்ளம் பொறிகலங்கி
வெய்துயிர்த்து நாவுலர்ந்து
செய்கைஅழிந்து அழுதுஅரற்றத்
தேவரும்தாம் இரக்கம்உற்றார்
நைகைகண்டும் சிறிதுஇரங்காள்
நாரியரை நம்புவரோ. 3

2. பாலி - பரிபாலி.
3. எண்டவம் – எண்தவம்.

உன்மதியோ கற்பனையோ
 உரைக்குகஎன் ஆணைஎன்ன—
என்மதியும் கற்பனையும்
 இல்லை,முன்நீர் கொடுத்தவரம்
பன்மதியே அறிகிலையேல்
 பழிபடநான் முடிவேன்என்றாள்;
சொன்மதியாள் சுட்டபுண்ணில்
 துளைத்தகைவேல் எனச்சோர்ந்தான். 4

காலிலே விழுந்து வேண்டினான் தசரதன்

ஆகொடியாய் எனநடுங்கும்
 அடிக்கஎண்ணும் பழிக்கும்அஞ்சும்
தீகொடிதோ தருமம்என்னும்
 செந்தழல்போல் மனம்சோரும்
காய்கொடிய மனமதுஉண்டோ
 கற்புடையார்க்கு என்றிரக்கும்
போய்,கொடியாள் காலில்விழும்
 புகழ்ந்துமன்னர் தொழுங்கழலான். 5

என்பெறும்உன் மகன்ஆண்டால்
 இராகவனே அருளானோ
கண்பெறினும் உயிர்பெறினும்
 கைகயர்மா தேதருவேன்
பெண்பெறுவன் பழிபெறவோ
 பேய்இரங்கும் நீஇரங்காய்
மண்பெறுவாய் புகழ்பெறுவாய்
 மற்றதுஒன்றே தவிர்த்திடுஎன்றான். 6

5. ஆகொடி யாய்எனும் ஆவி காலும் அந்தோ
ஓகொடி தேஅறம் என்னும் உண்மை ஒன்றும்
சாக எனாஎழும் மெய்த ளாடி விழும்
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான். —கம். 25.

கால்மேல் விழ்ந்தான் கந்துகோல் யானைக் கழல்மன்னர்
மேல்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான். —கம். 29.

6. வானோர் கொள்ளார் மன்னவர் உய்யார் இனிமற்றுஎன்
ஏனோர் செய்கை யாரோடு நீஇவ் அரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள இசைந்தான் முறையாலே
தானே நல்கும் உன்மக னுக்குந் தரைஎன்றான். —கம். 31.

உன் அபயம் என் உயிர்

கொடுத்ததில் ஒன்றில்லைஎன்று
கோபம்உற்றால் உலகில்இனி
எடுத்தமெய்யார் வளர்ப்பவர்என்று
இடர்உறுவாள் சொல்ல,மன்னன்
கடுத்தழல்பெண் உருவம்என்பான்
கண்ணன்எனும் ராமனைக்கான்
விடுத்தபின்றை வாழேன்நான்
மின்னேஉன் அபயம்என்றான். 7

ஈந்தேன் ஈந்தேன்

இரந்துஉரைத்தும் இரக்கம்இல்லாள்
ஈந்துஇலைஎன் றால்இறப்பேன்;
அரிந்துவைத்தான் உன்மரபில்
அரசன்அன்றோ உடலைஎன்றாள்;
தெரிந்துபெற்றாய் தரக்கடவேன்
சிராமன்கான் புகக்கடவான்
பரிந்துஇனிச்சா கவும்கடவேன்
பழிகடவாய் நீயும்என்றான். 8

கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன்என்
உண்ணேர் ஆவி வேண்டினும் இன்றே உனது அன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றையது ஒன்றும் மறஎன்றான். —கம். 32.

7. கடு - நஞ்சு. தழல் - நெருப்பு. கான் - காடு.
நச்சுத் தீயே பெண்உரு அன்றோ. —கம். 35.

.... நளினம்போல்
கையான் இன்றுஎன் கண்எதிர் நின்றும் கழிவானேல்
உய்யேன் நங்காய் உன்அப யம்என் உயிர்என்றான். —கம். 37.

சேண்உ லாவிய நாள்எ லாம்உயிர் ஒன்று போல்வன செய்துபின்
ஏண்உ லாவிய தோளி னான்இடர் எய்த ஒன்றும் இரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணி னாள்என ஏகி னாள்நளிர் கங்கு லாகிய நங்கையே.
—கம். 50.

8. வீழ்ந்தா ளேஇவ் வெய்யவள் என்னா மிடல்வேந்தன்
ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனம்ஆள
மாய்ந்தே நான்போய் வான்உலகு ஆள்வேன் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடும் நெடிதுஎன்றான். —கம். 84.

இரவு கழிந்தது

பொங்குதுன்பால் நினைவழிந்து
புரவலனும் உறக்கம்உற்றான்
அங்கைகளால் வயிறடித்தே
அழுவதுஒக்கும், சேவல்எல்லாம்
மங்கைகைகை கொடுமைதன்னால்
வைவதுஒக்கும் பறவைஎல்லாம்;
நங்கையர்முன் நிற்கவெட்கி
நள்ளிருள்பெண் போயினளே. 9

நிரைத்தமுத்தில் திரைத்ததுஒக்கும்
நீங்கினவான் மீன்கள்எல்லாம்
விரைத்தடங்கான் செல்வனபோல்
விரைந்துஎழுந்த வேழம்எல்லாம்
இரைத்தமுடி அரசர்என்ன
எழுந்துமயில் போலும்மின்னார்
உரைத்தகனாக் கண்ணனைக்கண்டு
உணர்ந்துஎழுந்தார் மயங்கல்உற்றார். 10

நுங்கஅரா இருசெவியின்
நுழைவதுஒக்கும் பாடல்இசை
மங்கையர்வாய் அடங்கினபோல்
வாய்குவிந்த சேதாம்பல்
கங்குல்உகம் விடிந்ததென்று
களித்துஎழுந்தார் குமரர்எல்லாம்
புங்கவனை எண்ணிமின்னார்
பொய்யுறங்கும் பொய்யமளி. 11

9\. .... அம்சிறை ஆவ காமர் துணைக்கரம்
கொண்டு தம்வயிறு எற்றி எற்றி விளிப்ப போன்றன கோழியே.
—கம். 51.

.... புள் எலாம் ....
மாக யத்தியை உள்கோ தித்து மனத்துள் வைவன போன்றவே.
—கம். 52.

10\. மேல், விரித்த பந்தர் பிரித்த தாம்என மீன்ஒளித்தன வானமே.
—கம். 54.

மாம யிற்குலம் என்ன உள்ளம் மலர்ந்து எழுந்தனர் மாதரே. —கம். 55.

11\. பைய ராநுழை கின்ற போன்றன பண்க விந்துஎழு பாடலே. —கம். 58.
பொய்உ றங்கு மடந்தை மார்குழல் வண்டு பொம்மென விம்மவே.
—கம். 60.

சூரியோதயம்

படிசூட்டும் மன்னுடல்போல்
    படர்தீபம் ஒளிமழுங்கக்
கொடிசூழ்ச்சி கண்டுவெய்யோன்
    கொதித்ததுபோல் சிவந்தெழுந்தான்
இடிசூட்டும் பேரிசங்கம்
    யானைதிண்தேர் பரிமுழங்க
முடிசூட்டக் கண்டவர்போல்
    முகமலர்ந்த முளரிஎல்லாம். 12

திருவிழாக் கூட்டம்

பொருள்நகரம் புகழ்பவரார்
    புனிதர்சிந்தை கொளுமடவார்
அருணமணிச் சங்குதொடை
    அஞ்சனம்செய் நஞ்சிடுவார்
கருணைமின்னார் கௌசலைபோல்
    கலைமறையோர் வசிட்டனைப்போல்
தருணமைந்தர் ராகவன்தன்
    தம்பியர்போ லேசிறந்தார். 13

மன்னர்எல்லாம் அமுதருந்த
    வந்துஈண்டும் வானவர்போல்
பொன்நகர்வீ தியின்நெருக்கம்
    போகஒண்ணா மீளஒண்ணா

12. வையம் ஏழும்ஓர் ஏழும் ஆருயி ரோடு கூட வழங்கும்அம்
மெய்யன் வீரருள் வீரன் மாமகன் மேல்வி ளைந்தெழு காதலால்
நைய நைய நல்ஐம்பு லன்கள் அவிந்த டங்க நடுங்குவான்
தெய்வ மேனி படைத்த சேயொளி போல்ம ழுங்கின தீபமே.
—கம். 63.

13. குஞ்சரம் அனையார் சிந்தைகொள் இளையார்
பஞ்சினை அணிவார் பால்வளை தெரிவார்
அஞ்சனம் எனவாள் அம்புகள் இடையே
நஞ்சினை இடுவார் நாள்மலர் புனைவார். —கம். 68.
மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வசிட்டன் ஒத்தார். —கம். 70.

அன்னவர்ஆ கியகுமரர்
  அரிவையரே மிகுதிஎன்பார்
இன்னர்அன் றி யாரும்வந்தார்
  இலங்கையும்எண் கயமும்அல்லால். 14

மன்மதிபோல் குடைநிழற்ற
  மடஅனம்போல் கவரிஇட
நன்மகிபர் முடிசூட்ட
  நவமணிமண் டபம்புகுந்தார்
பன்மறையோர் சூழமுனி
  பல்பொருள்மங் கலம்கூர்வான்
பொன்மழையும் இசைமழையும்
  பூமழையும் பொழிந்தனவே. 15

தசரதன் வரவேண்டியதுதான்

தணிகடல்நீர் கங்கைமுதல்
  தான்நிறைத்து வேள்விசெய்து
மணிஅணிஆ சனம்இருத்தி
  மற்றுமுற்றி வசிட்டமுனி
கணிதுஅரிது காலம்என்னக்
  காவலனைக் கொணர்கஎன்றான்
பணிதலைகொள் சுமந்திரன்போய்ப்
  பார்த்திபன்தன் கோயில்புக்கான். 16

இராமனை அழைத்துவரச் சொன்னாள் கைகேயி

சென்றுகைகை மனையில்என்ன,
  தெரிவையர்க்குச் சொல்கைஎன் றான்;
என்றுசொல்லக் கைகைவந்தாள்
  இராமனைநீர் கொணர்கஎன் றாள்;

14. ஏகுமின் ஏகுமின் என்றுஎன்று இடைஇடை நிற்றல் அல்லால்
  போகில மீள கில்லா; பொன்னகர் வீதி எல்லாம். —கம். 72.

முடிசூட்டு விழாவுக்கு வராதவர் இலங்கையின் அரக்கரும் எண்திசை யானைகளுமே.

15. அனம் - அன்னம் - இடைக்குறை.

16. கணிது அரிது காலம் - கணித்து அறிந்த அரிய முகூர்த்த நேரம்.

நன்றுஇதென்று தேர்வலவன்
நாதனைக்கோ யிலில்வணங்கும்
துன்றுபுகழ் இராகவனைத்
தொழுதுநின்று சொல்லல்உற்றான். 17

முடிபுனையும் மண்டபத்தே
முனிவர்விண்ணோர் மன்னர்எல்லாம்
படிபுனையும் தந்தையைப்போல்
பரிவுடையார் நிறைந்துஇருந்தார்
பிடிபுனையும் நடைச்சிறுதாய்
பிள்ளைதனைக் கொணர்களன்றாள்
வடிபுனையும் சுடர்வேலோய்
வருகெனவே விரைந்தெழுந்தான். 18

தேர் ஏறி வந்தான் இராமன்

ஆயிரவாய் நாகணைமேல்
ஆயிரமாம் முடியானை
ஆயிரம்பே ரால்இறைஞ்சி;
அரசர்வெள்ளம் தொழுதுசுற்ற
ஆயிரவே தமும்இசையும்
அமரருடன் புகழ்ந்துஇறைஞ்ச
ஆயிரம்கோ டியர்மடவார்
ஆதரிக்கத் தேரில்வந்தான். 19

இராமனைச் சூழ்ந்தனர் நகர மாந்தர்

கொடியள்சொல்லால் வனம்புகுமுன்
கோதைநல்லார் தோள்வேயும்
கடியகண்வே லும்மிடைந்த
கன்னிவனம் தனிற்புகுந்தான்

17. தேர்வலவன் - சுமந்திரன்.

18. படி புனையும் - உலகு ஆளும். பிடி புனையும் - பிடிபோன்ற. வடி புனையும் - வடித்த.

19. இறைஞ்சி, வந்தான், 'தன் திரு உள்ளத்துள்ளே தன்னையே நினைந்து' இருந்த இராமன், அரசர் தொழுது சுற்ற........ தேரில் வந்தான்.

தொடிவளைமே கலைநாணும்
    கண்ணுமும்பூ வும்சொரிவார்
அடியர்என்னும் பரிவதுஇல்லான்
    அவனிஎங்ஙன் காப்பன்என்பார். 20

பொழிகாதல் நகரிசனம்
    பொலிவுகண்டு வாழிஎன்பார்
விழிகாணத் தந்தமைந்தன்
    மிக்கஉப காரிஎன்பார்
எழில்காணத் தான்நாண
    எழிலிகஞ்சம் நோற்றதென்பார்
தொழில்மாயன் காப்பவனாம்
    என்றுகண்ணீர் சொரியநிற்பார். 21

வாரிதந்தோர் கங்கைதந்தோர்
    வானவர்க்காத் தானவரைப்
போரில்வென்றோர் சீர்த்திஜயன்
    புகழாலே விளங்கும்என்பார்
சீரியபொன் மணிசொரிந்து
    தேகிஎன்பார்க்கு அருளும்என்பார்
காரிகைதாய் கையில்அன்றே
    கைகைகையில் வளர்ந்ததென்பார். 22

கைகேயியைக் கண்டான் இராமன்

சிற்றவைதன் கோயில்புக்குத்
    தேர்இறங்கிச் சிராமன்
மற்றுஅவளை அடிவணங்கி
    வாய்புதைத்து நின்றளவில்

20. அங்கணவ் அவனி காத்தற்கு ஆம்இவன் என்ன லாமோ
நங்கண்அன் பிலன்என்று உள்ளம் தள்ளுற நடுங்கி நைவார்.
—கம். 90.

22. தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தைகிளர் ஞாலம்இவன் ஆள
ஈகையில் உவந்தவள் இயற்கைஇது என்றால்
தோகைஅவள் பேருவகை சொல்லஅரிது என்பார். —கம். 101.

பெற்றவன்பே சான்எனவே
பேதையரில் கூற்றனையாள்
கொற்றவன்தான் உனக்குஒருசொல்
கூறினன்காண் எனஉரைத்தாள். 23

செந்தாமரையை வென்றது

வரதமன்னன் பணிவிடையாம்
மாதாநீ அருளியதாம்
திரதவம்தான் இங்குஇதுபோல்
சிறந்ததுஉண்டோ செப்புமென—
பரதன்அவன் பாராளப்
பதினாலாண்டு அடவிதன்னில்
விரதமுடன் தவம்புரிந்து
மீள்கஎன்றான் உன்னைஎன்றாள். 24

மின்னுபத்மம் போலுமுகம்
வென்றதுஅப்போது அம்மலரை
வன்நுகப்பூண் கழற்றிவிட்ட
வல்லேறு போல்மகிழ்ந்தான்
என்னதுஅன்றோ தம்பிசெல்வம்
என்றுகைகை தனைப்பணிந்து
மன்னனையும் திசைநோக்கி
வணங்கிநல்தாய் கோயில்புக்கான். 25

23. நாயகன் உரையான் வாயால் நான்இது பகர்வன் என்னாத்
தாய்என நினைவான் முன்னே கூற்றுஎனத் தமியள் வந்தாள்.
—கம். 107.

24. எந்தையே ஏவ நீரே உரைசெய இயைவது உண்டேல்
உய்ந்தனென் அடியேன் என்னின் பிறந்தவர் உளரோ வாழி
வந்ததுஎன் தவத்தின் ஆய வருபயன் மற்றுஒன்று உண்டோ
தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின் என்றான்.
—கம். 110.

திரதவம் - ஸ்திரமான - உறுதியான தவம்.

25. இப்பொழுது எம்ம னோரால் இயம்புதற்கு எளிதோ யாரும்
செப்பரும் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்புஅவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா!
—கம். 112.

மன்னவன் பணிஅன் றாகில் நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ
என்இனி உறுதி அப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்ஒளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்.
—கம். 114.

நகர் நீங்கு படலம்

—இராமன் அயோத்தி நகரினின்றும் நீங்கியது

கோசலை ராம சம்வாதம்

மைந்தன் முடிசூடி வருவன்என்றே
    மகிழும் திருத்தாயைத் தனித்துஇறைஞ்ச,
சந்தங் கமழ்ஒதியாள் குழைந்துவாழ்த்தித்
    தடைஏது அபிடேகம் புனைதற்குஎன்றாள்;
எந்தன் இளையோன்உன் மகன்பரதன்
    எழில்மா முடிசூட இனியதுஎன்றான்;
உந்த னிலும்நல்லன் உந்தைஅருள்
    உலகம் கொடுத்துஒன்றி வாழ்கஎன்றாள். 1

அரசன் பணித்திட்ட பணிஒன்று,எனை
    ஆண்டு பதினாலு முனிவருடன்
வரிசை பெறும்கான மதில்உறைந்து
    வாஎன் றான்என்ன; கேட்டவன்னை
விரசு நாராசம் செவிபுக்கபோல்
    விழுந்தாள் புரண்டாள்உள் விம்மல்உற்றாள்
உரைசெய் தலைவற்குப்பிழை என்செய்தாய்?
    உபாய மோபட்டம் கொடுத்ததுஎன்றாள். 2

1. முறைமை அன்றுஎன்பது ஒன்றுஉண்டு மும்மையின்
   நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனால்
   குறைவி லன்எனக் கூறினள் நால்வர்க்கும்
   மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள். —கம். 4.
2. வஞ்ச மோமக னேஉனை மாநிலம்
   தஞ்ச மாகநீ தாங்குஎன்ற வாசகம். —கம். 9.

நாராசம் - அம்பு.

வீழ்ந்து மெலிவாளைக் கையில்எடுத்து
வேந்தன் தனைக்குற்றம் சொல்லலாமோ?
வாழ்ந்து பெரும்தம்பி அரசாள
மன்னன் வசனம்பொய் இலதாக்கிச்
சூழ்ந்த வனமதனில் நோற்கப்பெற்றேன்
சொல்லின் இதுபோலச் சிறந்ததுஉண்டோ?
தாழ்ந்து சகமுற்றும் அழிந்தாலும்
தந்தை மொழிமீறத் தகுமோ?என்றான். 3

திறமே அரசன்சொல் மறுக்கச்சொல்லேன்
சேர வருவேன்நான் எனும்தாயை,
புறமே எனைநீங்கி வருந்துமன்னைப்
போற்றாய் வனம்போதல் புகழோதான்;
விறல்மே வியஎம்பி உலகாள
வேந்த னுடன்கூடத் தவம்நீசெய்
அறமே பெரிதுஅன்னே பதினாலாம்
ஆண்டு பதினான்கு நாள்அலவோ! 4

முன்னம் சகரர்பெற் றவர்பணியால்
முடிந்தும் முடியாத கீர்த்திபெற்றார்;
அன்னை தனைக்கொன்றும் எழுப்பப்பெற்றார்
ஐயன் மொழிகேட்ட முனிராமன்;
மன்னன் முதல்ஏவக் கவுசிகன்பால்
வரமும் பெருவாழ்வும் பெற்றுவந்தேன்;
இன்னம் பிதாவின்சொல் முனிவர்க்குஅன்பாய்
இமையோர்க்கு இதம்செய்து வரக்காண்பாய். 5

கைகேயி மாளிகையில் கோசலை

என்றே சொலித்தேற்றி அடிவணங்கி
இராமன் சுமத்திரை கோயில்புக்கான்—
நன்றே பரதன்பா ராளஇவன்
நாடு துறந்துகாடு உறையாமல்

5. சகர புத்திரர்கள் தம் தந்தையின் பணியால் உயிரைப் போக்கிப் பெரும் புகழ் பெற்றார்கள் அல்லவா? பரசுராமன் தந்தைசொல் மறுக்காது தன் தாயின் தலையைத் துணித்தானே! எனக்குத் தந்தை இட்ட பணி அத் தகையது அல்லவே; முன்னம் தந்தை ஏவக் கவுசிக முனிவருடன் போய், அவர் அருளால் வித்தைகளும் பெருவாழ்வும் பெற்று வந்தேன் இல்லையா?

ஒன்றே பெறஎண்ணிக் கௌசலைபோய்
உறாத கைகேசி மனையில்உற்றுக்
குன்றே போல்மண்ணில் வீழ்ந்துஅழுந்தும்
கோமுன் னேதானும் விழுந்துஅழுதாள். 6

புலம்பினாள் கோசலை

உனது பெருமைந்தன் வனம்செல்ல
உலகு குலையவோ அரசுதந்தாய்!
எனது வலியேநல் லறத்தின்கண்ணே—
என்னே இதுஎன்று மன்னன்உன்ன—
மனது துயரம்கண்டு இரங்கி,பின்னை
வாராய் மகனே வரராமா!
நினது திருத்தந்தை தனைப்பாராய்
நீங்கத் தகுமோஎன்று அரற்றல்உற்றாள். 7

வந்தார் வசிட்டர்

ஏங்கும் துயர்கேட்ட ஆஸ்தானம்,
ஏதோ துயர்என்ன, வதிட்டன்வந்து
வீங்கு முலைகைகை தனைக்கேட்க,
விளம்பி னாள்,தன்னால் விளைந்ததெல்லாம்—
தாங்கி அரசனை முனிதேற்றித்
தானே தரும்கைகை எனச்சொல்ல;
ஈங்கு உன்அருளாலே முடிசூட்டி
இறவாது எனைச்செய்வாய் முனியேஎன்றான். 8

பெண்ணா, மாயப் பேயே

இனிஉன் பெருமைந்தர்க்கு அரசுநல்கி
இறைவன் இறவாமல் இசைகொள்என்று
முனிவன் சொல,கைகை அரசன்பொய்த்தால்
முடிவேன் நான்என்று மறுத்துஉரைக்க;
தனிஉன் கணவன்தன் பாடுகண்டும்
தயவுஒன் றிலைபாவம் பழிபாராய்
கனியும் மனத்தானை வனம்செல்என்றாய்
கடியாய் கடுந்தீயிற் கொடியாய்என்றான். 9

7. கண்ணே என்று கோசலை புலம்ப. மனது - மன் - மன்னன், மன்னனது.
9. என்றான் வசிட்டன்.

கைகேயி மனைவி அல்ல, பரதனும் மகன் அல்ல

ஞானி மொழிகேட்டு அயர்ந்துமன்னன்
நாரி இனிஅல்லை எந்தன்கண்ணைக்
கானில் விடுத்தாய் கெடுவாய்உன்
கடுவாய் விடம்உண்டேன் உயிரைஉண்டாய்
ஆனி வரக்கொண்ட கூற்றேநின்
அணிமங் கலநாணிற் காப்புக்கண்டாய்
தான்இவ் அரசாளில் மகனும்அல்ல
தகாதுஎன் உரிமைக்குப் பரதன்என்றான். 10

உன்னைக் காணாது பிழையேன் பிழையேன்

அன்றுஅம் முனிவர்க்கும் அஃதுணர்த்தி
அரசன் கௌசலை தனைநோக்கி,
என்றன் முகங்கண்டு போகாதான்
ஏன்கண் டிலனோ உனையும்என்ன—
தன்றன் முகம்கண்ட வாறுசொல்ல—
தளர்ந்து தலைவன்தன் நெஞ்சுஊன்றி
உன்றன் போல்அல்ல மகனேயான்
உய்யேன் உனைக்காணாது உய்யேனே. 11

பொன்கண் பொலிவேமெய் யின்மெய்யே
புகழின் புகழே போர்ஏறே
மின்கண் மழுவாளன் சிலைமுறித்தாய்
மீண்டுஓர் மழுவாளன் சிலைபறித்தாய்

10. கண்டேன் நெஞ்சம் கனிவாய்க் கனிவாய் விடம்நான் நெடுநாள்
உண்டேன் அதனால் நீஎன் உயிரை முதலோடு உண்டாய்.
—கம். 47.

பழிக்கும் நாணாய் மாணாப் பாவி இனிஎன் பல,உன்
கழுத்தின் நாண்உன் மகற்குக் காப்பின் நாண்ஆம் என்றான்.
—கம். 48.

மன்னே ஆவான் வரும்அப் பரதன் தனையும் மகன்என்று
உன்னேன் முனிவா அவனும் ஆகான் உரிமைக்கு என்றான்.
—கம். 49.

தகாது என் உரிமைக்கு - என் இறுதிச் சடங்கு செய்யப் பரதனுக்கு உரிமை இல்லை.

என்கண் மணியேஎன் ஆருயிரே
　　ஏது பரிவுஅற்றாய் பிரியலுற்றாய்
வன்கண் மகனேயான் உனைப்பிரிந்து
　　வாழேன் ஒருபோதும் வாழேன்என்றான். 12

வளர்சத் ரிகையும்சிங் காசனமும்
　　மகுடம் புனையும்கோ லமும்காணேன்
கிளர்வற் கலையும்கிருஷ் ணாசனமும்
　　கெடுவேன் இனிக்காணக் கடவேனோ
முளரிப் பதச்சீதை மணவாள
　　முனிரா மனைமன்னர் பழிமீட்டாய்
களரிற் கொடுகைகைக்கு உலகம்தந்த
　　கருணா கரனேஎர களிறுஏறே. 13

புலம்பும் தசரதனைத் தேற்றினர் வசிட்டரும் கோசலையும்

அலங்கா ரனைச்செல்லா வகைகாப்பேன்
　　அவலம் தவிர்என்று முனிதேற்ற;
விலங்காது உயிர்ஒக்கச் சோர்வானை,
　　விம்மி அழுதுஏங்கும் கௌசலையும்
தலங்கா வலனேநின் மகன்பொருட்டால்
　　தயவும் புகழும்நின் சத்தியமும்
கலங்காது அருள்என்று முகமும்மெய்யும்
　　கையும் இருதாளும் வருடல்உற்றாள். 14

12. மழுவாளன் - சிவன், பரசுராமன்.

பொன்னின் முன்னம் ஒளிரும் பொன்னே புகழின் புகழே
மின்னின் மின்னும் வரிவில் குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனம்நீ அடைதற்கு எளியேன் அல்லேன்
உன்னின் முன்னம் புகுவேன் உயர்வா னகம்யான் என்றான்.

—கம். 58.

13. சத்ரிகை - வெண்கொற்றக்குடை. வற்கலை - மரவுரி. கிருஷ்ணாசனம் - மான்தோல். முனி ராமன் - பரசுராமன்.

கள்ளக் கைகே சிக்கே உதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளல் தனம்என் உயிரை மாய்க்கும் மாய்க்கும் என்றான்.

—கம். 61,

தன் சாப வரலாற்றைக் கூறினான் தசரதன்

தன்மைந் தனும்தானும் அரசாளத்
　　தானே எனக்குக்கூற் றுவனாகி
என்மைந் தனைவன்காடு உறையச்சொன்னாள்
　　இவள்கை கசிகண்டாய் கௌசலைகேள்
நன்மைந் தனும்கான்பு காதுநில்லான்
　　நானும் இனிவானம் புகுதல்மெய்யே
முன்மைந் தனேகண்ணாம் இருகண்ணிலா
　　முனியும் மனையாளும் இடும்சாபம்; 15

தனிவல் நெடுங்கானில் வேட்டைசென்றேன்
　　தந்திவரு மத்தில் மறைந்துநின்றேன்
முனிவன் மகன்நீர்மொண் டிடும்சத்தம்
　　முரண்மா எனஎய்தேன் கணிற்காணேன்
கனிவன் குரல்கேட்டு ஓடிச்சென்றேன்
　　கையிற் குடம்சோர வீழக்கண்டேன்
குனிவன் சிலைசோர வீழ்ந்துஅழுதேன்
　　கூறி அருள்ஐயா உனைஎனவே. 16

தாக தீர்த்தம்கொண்டு இருகண்ணிலாத்
　　தாய்க்கும் தந்தைக்கும் தரப்போந்தேன்
வேகக் களிறுஎன்றே கணைவிடுத்தாய்
　　விதிகாண் இதுமன்னு மெலியாதே
ஏகப் புனல்நல்கி இதுவும்சொல்லி
　　எந்தை தாய்க்குஎந்தன் வணக்கம்சொல்லிச்
சோகத் தையும்தீரச் சொல்எனலும்
　　சுரர்வந்து எதிர்கொளச் சுவர்க்கம்சென்றான். 17

நன்னீர் கொடுமைந்த னையும்கொண்டு
　　நடக்க அவனும்தன் மகன்என்றுஎன்னை
இன்னே ரம்என்னைத் தழுவிடவா
　　என்றான் — எனவே,யான் ஒருவேந்தன்

16. தந்தி - யானை. வருமத்தில் - வரும்வழியில். மா - யானை கண்ணிற் காணேன். கனிவன் - அம்புபட்டுக் கதறுபவன். குனிவன்சிலை - வளைந்த வலிய வில். முனிவன் மகன் என்றது சலபோசன முனிவன் புதல்வன் சுரோசனனை.

பொன்நேர் அயோத்திமன் வேட்டைவந்தேன்
பூட்கை எனஎய்தேன் அறியாமல்
தன்நேர் குரல்கேட்டு ஓடிக்கண்டேன்
தவித்தேன் யார்நீ எனக்கேட்டேன். 18

உற்ற பொருள்எல்லாம் உணர்த்திமைந்தன்
உம்மைப் பணிந்துஉம்பர் பணியச்சென்றான்
இற்றை முதல்நான்உம் ஏவல்செய்வேன்
என்றேன்— வரமைந்தா எனவீழ்ந்தார்
பெற்ற விழிஇன்று போயிற்றுஎன்றார்
பின்னே தொடர்வோம்என்று அழுதுஉரைத்தார்
சொற்ற எனையும்நின் மகன்பிரிவால்
சுவர்க்கம் புகுகென்று துறக்கம்புக்கார். 19

நிகழ்ந்ததை அரசவையிலே கூறினார் வசிட்டர்

மகன்உண்டு எனத்தேறி நகரில்வந்தேன்
மங்காமுனி சொல்லால் வெங்கானம்
மகனும் செலநானும் மடிவேன்என்று
மன்னன் மொழிந்தபின், விரிஞ்சன்பெற்ற
மகனும்ஆஸ் தானம் புக,வேந்தர்
'வரலாறு என்என, வரம்இரண்டால்
மகனும் தானும்மண் ஆளக், கைகை
வரரா மனைஉய்த்தாள் வனத்தில்'என்றான். 20

நகரமாந்தர் துயரம்

குருக்கள் உரைசெய்ய, மறையவரும்
கொற்ற வரும்புண்ணிற் சுடுதீப்போல்
தருக்கள் விழச்சண்ட மாருதத்தால்
சாயும் கொடிபோலத் தையல்நல்லார்
உருக்கள் நிலம்சோரச் சொரியும்கண்ணீர்
ஓசை கடல்சேர, அழும்ஓசை
மருக்கொள் வான்சேர— தான்சேர்ந்தார்
மாதர் அனைவரும் தசரதன்போல். 21

18. பூட்கை - யானை.
20. விரிஞ்சன் பெற்ற மகன் - வசிட்டர்.
21. புண்ணுற்ற தீயில் புகைஉற்று உயிர்பதைப்ப
மண்ணுற்று அயர்ந்து மறுகிற்று உடம்பெல்லாம்
கண்ணுற்ற வாரி கடல்உற்றது அந்நிலையே
விண்ணுற்றது எம்மருங்கும் விட்டழுத பேரோசை. —கம். 93.

தலைவன் பரிவுஅற்ற வாறுஎன்என்பார்
தருமம் தனைநம்பும் படிஎன்என்பார்
கொலைவெங் காட்டில்எங் கோவைவிட்ட
கூனி யுடன்கைகை கொடியள்என்பார்
முலைவெண் தரளம்கண் தரளம்சிந்த
முறையிட்டு அழுதார்கள் மாதர்எல்லாம்;
மலைவெங் கரிமாவும் பசுவின்கன்றும்
வளர்கிள் ளையும்புள்ளும் அழுதிட்டவே. 22

சுண்ணம் தெருவெங்கும் சொரிந்ததெல்லாம்
துடைக்கும் விழிஆறு சொரிந்திடுவார்
கண்ண னுடனேகாடு உறைவம்என்பார்
காடு நாடாகும் காணும்என்பார்
மண்ணும் திருவும்செய் பாவம்என்பார்
மாது கவுசலை வாழாள்என்பார்
அண்ணல் இலக்குவன் தரியான்என்பார்
ஆளான் பரதாழ்வான் உலகைஎன்பார். 23

கேட்டான் இளையோன்

காற்றார் விளக்குப்போல் நடுங்குமின்னார்
கண்ணன் அருட்பார்வைக்கு உருகிநைவார்
ஆற்றார் துயர்என்னும் அழலாலே
அயோத்தி நகர்பொங்கி எழலாலே
கூற்றாய் வரங்கொண்டு கைகேசி
கொடுத்தாள் பரதற்கே அரசுஎன்னும்
மாற்றாள் செயல்கேட்டு இளையபிரான்
வடவாக் கினிபோலக் கொதித்தெழுந்தான். 24

22. கிள்ளையொடு பூவை அழுத கிளர்மாடத்து
உள்ளுறையும் பூசை அழுத உணர்வுஅறியாப்
பிள்ளை அழுத பெரியாரை என்சொல்ல
வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால். —கம். 96.

போர்க்கோலம் பூண்டான்

உடைவாள் கணைபுட்டில் கவசம்கட்டி
உகாந்த காலத்தில் உருத்திரன்போல்
படைவார் சிலையின்நாண் கடல்ஏழும்
பருகு மழைஇடி எனமுழங்க,
தொடைவாள் மகுடம்எம் பெருமாற்கே
சூட்டு வேன்இதை விலக்கவந்தால்
கொடைவா சவன்முதல் யார்எனினும்
கொல்வேன் யான்என்று கோபம்உற்றான். 25

இராமலக்குவர் சம்வாதம்

ஓங்கும் திரைபோலக் கதிர்வேலை
உயர்மந் தரம்போலத் திரிவேலை
ஏங்கும் சிறுதாயர் அருகுஇருந்தான்
இளையோன் சிறுநாண் ஒலிகேட்டான்
தேங்கும் முகில்போல் ஆற்றவந்தான்
சீறிச் சிலைகொண்ட கருத்துஎன்என்றான்
நீங்கும் வகைசெய்த கொடியாள்முன்னே
நின்னை முடிசூட்ட வேண்டிஎன்றான். 26

உதிக்கும் தருமமெய் உணர்வுடையாய்
உனக்குத் தகுமோ கோபம்என்றான்;
கதிக்கும் பகையாலே அரசிழந்தாய்
கானந் தனில்தானோ கோபம்என்றான்;
மதிக்கும் பொழுதுஆரும் பகைவர்இல்லை
வலிய விதிகாண் பெரியதென்றான்;
விதிக்கும் விதிஆகி வெல்லும்எந்தன்
வில்லின் வலிஇன்று காண்கஎன்றான். 27

26. தாயர் அருகு இருந்தான் - இராமன்.
.... தனிமந்தர மேரு முந்தை
வேலைத் திரிகின் றதுபோல்திரி கின்ற வேலை. —கம். 119.
மந்தரமலை பாற்கடலில் மத்தாகிச் சுழன்றதுபோல.
27. விதியின் பிழைநீ இதற்கு என்னைகொல் வெகுண்டது என்றான். —கம். 129.

உதிக்கும் உலையுள் உறுதீஎன ஊதை பொங்கக்
கொதிக்கும் மனம்என் னவம்ஆறும் இக்கோள் இழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல்வான வர்க்கும் வலிதாம்
விதிக்கும் விதியாகும்என் வில்தொழில் காண்டி என்றான். —கம். 130.

தந்தை மாதாவைத் தமையன்என்போர்
தமைவென் றோகோபம் தணிவது,என்றான்;
இந்த மாதாஅத் தந்தைஅண்ணன்
எம்பிரான் எல்லாம்நீ யேஎன்றான்;
எந்தை சொலைமீறி அரசாளேன்
என்சொல் மீறல்இங்குஇயல் போஎன்றான்;
அந்த உரைக்குஅங்ஙன் அடங்கிநின்றான்;
ஆழி அவன்ஆணைக்கு அடங்குகைபோல். 28

சுமித்திரை மாளிகையில்

தானும் சிவனும்போல் தழுவிஎம்மான்
தம்பி யொடும்சிற்றாய் கோயில்புக்கான்;
மானும், தன்கண்போல்வார் வனம்சேர
வரும்மக் களைக்கண்டு புரண்டுஅழுதாள்;
கோனும் தொழுதுஎடுத்து ஆற்றும்எல்லை,
கொடியாள் மரவுரி வரவிடுத்தாள்;
தேனின் மொழிமாதர் அழுதுஇரங்க—
சிலைஏன் எனக்கு?என்றான் இளவீரன். 29

சீரை அணிந்துஅன்னை தவம்செய்என்றாள்;
சீரே எனக்கொண்டு சிராமன்
வாரை அணிகொங்கை சுமித்திரையாம்
மாதா இணைபாதம் வணங்க,அவள்
ஏரை அணிவல்வில் இளையோனே!
இராமன் நம்மன்னன், சிதைஅன்னை,
ஆரை மணிமாடம் மலைகானம்
அயோத்தியாக் கண்டுஉடன் செல்கென்றாள். 30

29. இராமன் இலக்குமணனைத் தழுவியது, திருமால் சிவனைத் தழுவியது போலத்தான். சிற்றாய் - சுமித்திரை. மான் - சுமித்திரை. கோன் - இராமன். வனம் சேர வரும் தன் கண்போன்ற மக்களைக் கண்டு.

30. ஆகாதது அன்றால் உனக்கு அவ்வனம் இவ்அயோத்தி
மாகாதல் இராமன்நம் மன்னவன் வையம் ஈந்தும்
போகாத உயிர்த் தாயர்நம் பூங்குழல் சிதை என்றே
ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றாள். —கம். 146.

தம்பிஅன்றால் அடியவர்போல்
　　தரும்பணிசெய், திரும்பிஇந்த
நம்பிவந்தால்நீ வருவது,இன்றேல்
　　நடந்துமுன்னே முடிந்திடுஎன்றாள்;
வம்பிருபால் பொழிதாயை
　　வணங்கிஇரு வரும்அகன்றார்;
வெம்பிஇரு கன்றுஅகன்ற
　　மென்பசுப்போல் தாய்மெலிந்தாள். 31

என்னை விட்டுப் போகவும் செய்வாயோ?

தனைப்போல்வற் கலைஉடுத்தும்
　　தம்பிதனை இராமபிரான்
எனைப்போல்கண்டு இருப்பர்இங்கே
　　இருநீஎன்று அருள,அவன்
உனைப்போஎன்று இசைப்பவள்பால்
　　உதித்தமைந்தன் என்றுரைத்தாய்
தினைப்போதும் உனைப்பிரியோம்
　　செனகன்மின்னும் யானும்என்றான். 32

எடுத்தசினம் தவிர்த்துஅதிலும்
　　இந்தஉரை கொடியதுஅய்யா!
விடுத்தசெல்வம் போல்அலவே
　　விடுத்துஅகல என்னைஇன்று—
கடுத்தமுகம் கண்டுஇறையோன்
　　கண்கலுழ்வான் ஒன்றுஉரையான்;
அடுத்தமுனி அங்குவந்தான்
　　அவனைஇரு வரும்பணிந்தார். 33

பின்னும் பகர்வாள் மகனேஇவன் பின்செல் நம்பி
என்னும் படியன்று அடியாரினும் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன்வந்திடின் வாஅது அன்றேல்
முன்னம் முடிஎன்றனள் பால்முலை சோர நின்றாள். —கம். 147.

சிரை - மரவுரி. வம்பு இருபால் பொழி தாயை - கச்சு அணிந்த தனங்கள் பால்பொழிய நின்ற தாயை.

32. ....நாலும் சிதையும்
ஆர்உளர் எனின்உளேம் அருளுவாய் என்றான். —கம். 152.

33. செய்துடைச் செல்வமோ யாதும் நீர்ந்துளனைக்
கைதுடைத்து ஏகவும் கடவையோ ஐயா. —கம். 154.

ஒழிக்கற்பாலதோ ஊழ்வினை

வடிவுடையார் செய்கைகண்டு
　　மாமுனியும் தாபமுற்றான்;
முடிபுனைநாள் சீரைகட்டி
　　முடித்தவிதி வலியதுஎன்பான்;
நெடியவன்பால் இதுவருமோ
　　நினைக்கில்நன்றாம் பின்னைஎன்பான்;
கொடியவெங்கான் நீஅடைந்தால்
　　கோன்பிழையான் குமரஎன்றான். 34

மன்பணியான் கேட்கைகடன்
　　மன்இடர்நீர் தீர்க்கைகடன்;
தன்பணிதாய் சொலத்துணிந்தேன்
　　தடுக்கநன்றோ என,முனிவன்
அன்பணிசிந் தனைஉருகி
　　அழுதுநின்றான் தனைவணங்கி,
முன்பணிமேல் துயின்றபிரான்
　　முதுநகர்வீ தியில்நடந்தான். 35

பார்த்தவர் பரிதவிப்பு

கமலவண்டு கடிவதுபோல்
　　கண்டவர்கண் அறைந்துகொள்வார்;
குமரமின்னார் கண்ணீரில்
　　குளித்திடுவார்; கூடிஅங்கே
தமதமன்பால் இருவினைபோய்த்
　　தசரதற்கு முந்திடுவார்;
அமரர்நொந்தார் பயன்வேண்டார்
　　அவனிமன்னர் அரற்றுவரே. 36

34. வாழ்வினை நுதலிய மங்கலத்துநாள்
தாழ்வினை அதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ. —கம். 158.

தாபம் - வெப்பம்.

35. சான்றென நின்றநீ தடுத்தியோ என்றான்
தோன்றிய நல்லறம் நிறுக்கத் தோன்றினான். —கம். 166.

பணி - ஆணை. அன்பணி - அன்பு அணி. பணி - பாம்பு.

36. கடிவது - விரட்டுவது. தம தம் அன்பால். மாரி - மழை.

அரும்பொருளை இழந்தவராய்
அழாமல்மரம் போலநிற்பார்;
வரும்புனல்போல் சொரிந்துகண்ணீர்
மாறி,ரத்தம் சொரிந்திடுவார்;
சுரும்பனகண் இடந்துகொள்வார்;
சுரிகையில்வீழ்ந்து இறந்திடுவார்;
விரும்புகலை ஆபரணம்
வெறுத்துமர வுரிஉடுப்பார். 37

அரந்தைமன்னன் தேவியர்தாம்
அறுபதினா யிரமடவார்
பரந்துசெவ்வாய் திறந்தழுது
பகல்ஆம்பல் அலர்ந்ததுபோல்
நெரிந்துமொழி குடர்குடைந்து
நிறைமதிக்கு முகம்தோற்று
இரைந்துபின்னே ஏங்கிவந்தார்
இராமன்அல்லால் மைந்தர்இல்லார். 38

மலையாறு மலையில்விழ
மறிகடலில் பரந்ததுபோல்
அலையாரும் மாதர்முகம்
ஆதவனும் அன்றுகண்டான்;
கலையார்வே தியர்அன்னை
காவலர்சூழ்ந்து அழுதுவரச்
சிலையார்தோள் அழகனும்தன்
திருமனையே போகலுற்றான். 39

37. சுரிகை - வாள். சுரும்பு - வண்டு. கலை - ஆடை.
39. மிடைமுலைக் குவடோரீஇ மேக லைத்தடம்
கடலிடைப் புகுந்தகண் கலுழி ஆறரோ. —கம். 171.

தேரேறி வீதிவந்தோன்
சிரைசுற்றி வரவுகண்டோம்;
பாரோர்காள்! பாவம்என்பார்;
பகாநெஞ்சம் கொடியதென்பார்;
போரேறாம் இலக்குவனோ
புணைபிரியாச் சுற்றம்என்பார்;
பேரேறும் கைகைநெஞ்சின்
பிரான்மனமே வலியதென்பார். 40

புதல்வர்பல பெறினும்ஒரு
புன்மகனோடு இறந்திடுவார்,
முதன்மைமகன் பிரியஎன்னே
மொழிதிறம்பான் அரசன்என்பார்;
குதலையர்சா ளரக்கிளிபோல்
குலைந்துஅறிவைத் துயர்துறக்க
மதலையைஅன் னையர்மறந்தார்;
மைந்தரும்தா யரைமறந்தார். 41

பொலிவு இழந்தது நகரம்

தறுகணினார் அம்புபட்ட
தடவரைமேல் மயில்அனையார்
உறுகணின்நீர் விழவந்த
உயர்மனையும் அழுவதுஒக்கும்;
தெறுகணையால் கதறிடும்மான்
திரள்போலப் புலம்பிமினார்
மறுகில்வர— திருப்பிரிந்த
மலர்போன்ற மணிமாடம். 42

40. முறைமகன் வனம்புக மொழியைக் காக்கின்ற
இறைமகன் திருமனம் இரும்புஎன் றார்சிலர். —கம் 190.

பிரான் - தசரதன்.

41. நிறைமக உடையவர் நெறிசெல் ஐம்பொறி
குறைமகக் குறையினும் கொடுப்ப ராம்உயிர். —கம். 190.

மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கஇடம் அறிந்திலர் புதல்வர் பூசலிட்டு
உக்கனர் உயங்கினர் உருகிச் சோர்ந்தனர்
துக்கம் நின்று அறிவினைச் சூறையாடவே, —கம், 195,

துகிற்கொடிமா றினபுரிசை
துவைப்புஒலிமா றினமுரசம்
அகிற்புகைமா றினமாடம்
அடும்புகைமா றினசாலை
முகிற்கணம்மா றினதாரை
மும்மதம்மா றினஆனை
பகுப்பனமா றினஅமுதம்
பாலுணல்மா றினமகவே. 43

வேள்அடங்கிப் பண்ஓசை
வீறுஅடங்கிக் கண்ணீரால்
தூள்அடங்கித் தேர்வீதி
சொல்அடங்கி மெய்வேதம்
தாள்அடங்கிக் கழல்ஓசை
சலம்அடங்கிப் புள்ஒலிமா
வாள்அடங்கி விளையாடல்
வளம்அடங்கிற்று அந்நகரே. 44

ஆடினரும் அன்பருடன்
ஊடினரும் ஒருமுகமாய்க்
கூடினரும் அரற்றலுற்றார்;
குலையலுற்றார் யோகியரும்
நீடினநாற் காலிபுள்ளும்
நீரும்உண்ணா முலையும்உண்ணா
வாடினமா மன்னவன்போல்
வாழ்வதுஒத்தது அந்நகரே. 45

இராமசீதையர் சம்வாதம்

பலசனமும் புலம்பிவர
பரமாத்மன் வரராமன்
குலசனகி பால்வரவும்
குலைந்துஎழுந்து துணுக்கம்உற்றாள்;

43. அட்டிலும் இழந்தன புகைஅ கிற்புகை
தெட்டிலும் இழந்தன நிறைந்த பால்இளி
வட்டிலும் இழந்தன மகளிர் வான்மணித்
தொட்டிலும் இழந்தன மகவும் சோரவே. —கம். 199.

கலசநகில் மாமியரும்
கட்டிஅழ ஏன்?என்றாள்;
நலசனகன் சனந்தன்முதல்
நற்றவர்நா யகன்நவில்வான். 46

எங்கள்தந்தை தாய்பணியால்
எம்பிஇந்த நாடாள
வெங்கடுங்காடு உறைந்துஇனிநான்
மீள்வேன்நீ வருந்தல்என்றான்;
அங்குவெங்காடு உறைவதற்கும்
அரசுதுறந்த தற்கும்அல்ல,
இங்குஇருஎன்ற மொழிக்குஅழுதாள்
இறைவிஇறை அகலாதாள். 47

தான்தரும்பாற் கடலைவிட்டுத்
தலத்தில்வந்தும் பிரியாதாள்,
ஈன்றவர்சொல் கேட்கைநன்றே
எனைஇருஎன்றது என்கொல்என்றாள்;
வான்தடங்கான் நீஆற்றாய்
வன்னியிலும் கொடியதுஎன்றான்;
ஆன்றஉன்னைப் பிரிவதிலும்
அரும்சுரமோ கொடியதுஎன்றாள். 48

நினைவறிந்தான் ஒன்றுரையான்
நிமலனும்கண் ணீர்சோர,
மனைபுகுந்தாள் சீரைசுற்றி
வள்ளல்பின்னே வந்துநின்றாள்;
அனைவரும்வீழ்ந் தனர்இறவார்
அவதிஅல்லால் நாள்வருமோ?
நனைவரும்தார் இராமபிரான்
நாரியைப்பார்த்து ஒன்றுரைப்பான். 49

46. நல்தவர் நாயகன் - தவசிகளின் நாயகனாகிய இராமன்.
47. இறை - சிறிதும். 'அகலகில்லேன் இறையும்' என்பார் நம்மாழ்வார்.
நாய கன்வனம் நண்ணலுற் றான்என்றும்
மேய மண்இழந் தான்என்றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவென் யான்என்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள், —கம். 217.

வருந்துயரை அறிந்திலை,நீ
    வரில்துயர்,இங்கு இருளன்றான்;
பெருந்துயர்நான் இருந்தாலோ,
    பிரிந்தபின்னே நல்லதுஎன்றாள்;
திருந்தியகார் வண்ணன்ஒன்றும்
    செப்பிலன்;ஆ டவர்மடவார்
அருந்துயரால் விழும்நெருக்கில்
    அருமையினால் சேறல்உற்றான். 50

மூவரும் தேர் ஏறிப் போயினர்

சோதிமின்ஆ ரம்துறந்து
    தூயமர வுரிஉடுத்து
மாதுபின்னே தம்பிமுன்னே
    வரநடுவே வரராமன்
போதுமுன்யா வரும்காணப்
    போதும்என்றே உடன்நடந்தார்
தாதைதன்னை ஆற்றும்என்று
    தாயர்எல்லோ ரையும்பணிந்தான். 51

மைந்தனையும் மருகியையும்
    மன்இளங்கோ வையும்வாழ்த்திச்
சிந்தைமகிழ்ந்து அருள்புரியும்
    தேவதைகாள் என—இரங்கி
அந்தணனை அடிவணங்கி
    ஆருயிர்த்தம் பியும்தானும்
செந்திருவும் சேரஒரு
    தேரில்எழுந் தருளினனே. 52

50. சேறல் - செல்லுதல்.

51. சீரை சுற்றித் திருமகள் பின்செல
    மூரி விற்கை இளையவன் முன்செலக்
    காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்
    ஊரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ! —கம், 228.

5 தயிலம் ஆட்டுப் படலம்

—தசரதன் உடலைப் பரதன் வரும் அளவும் கெடாது பாதுகாத்தற்காக எண்ணெய்க் கொப்பரையுள் இட்டுவைத்தது

சூரியாத்தமனம்

புத்திரன் விரதம்கொண்டு இரதம்தன்மேல்
போந்த பரன்பின்ஆர் போகாதார்
சித்திரங் களும்மன்னன் தேவியரும்
செல்லாது ஒழிந்தனர்உயிர் இன்மையால்;
மித்திரர் விழிவெள்ளம் கடலிற்செல்லும்
வேதம்தரு மீனம்போ லும்திண்தேர்;
இத்திறம் இனிக்காணேன் அருவரைமேல்
யானும்செல் வேன்என்று இரவிசென்றான். 1

சோலையிலே தங்கினான் இராமன்

மானின் விழிமாதர் அழுமுகம்போல்
வாடிக் குவிந்தன மலர்க்கமலம்;
கூனி உரைநஞ்சால் இருண்டகைகைக்
கொடியாள் மனம்போல இருண்டகங்குல்;
ஞானி இடும்சாபத்து இந்திரன்தன்
நயனம் போல்நட்சத் திரம்பூத்த;
தேனின் நகர்க்குஇரண் டோசனைபோய்
செழுஞ்சோ லையைஉற்றான் சீராமன். 2

குறிப்பு: இப் படலத்தின் முதல் எட்டுப் பாடல்கள் முடிய சுமந்திரன் மீட்சிப் படலம் என்றும், பின் ஒன்பதாம் பாடல் முதல் தசரதன் மோட்சப் படலம் என்றும் கம்ப ராமாயணப் பதிப்புகள் சிலவற்றிலே காணப்படுகின்றன.

1. ஏவிய குரிசில்பின் யாவர் ஏகிலார்
மாவியல் தானையின் மன்னை நீங்கலாத்
தேவியர் தவிர்ந்தனர் தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன உயிர்இ லாமையால். —கம். 1.

வேதம் தரு மீன் - திருமாலின் மச்சாவதாரம். ஊழிவெள்ளத்திலே தெய்வ மீன் உலாவியது போன்றதாம், கண்ணீர்ப் பெருக்காகிய கடலிலே மெல்லச் சென்ற சுமந்திரன் தேர்.

2. ஞானி - கௌதமன். கௌதமன் சாபத்தால் இந்திரன் ஆயிரங் கண்ணன் ஆனான்; இமைத்தல் இல்லாத அவனுடைய கண்கள்போல வான் எங்கும் விண் மீன்கள் பரவித் தோன்றின.

பலரும் பலவகையாக உறங்கினர்

சேரை வரராமன் தேர்இறங்கிச்
செழுமா தவரைக்கண்டு உறைசோலை
ஆரை வளையமுக் காதவட்டம்
அடுத்த பெருஞ்சேனை விடுத்துத்தன்பால்
பாரை அணையாகச் சிலர்வைகினார்;
புசும்புல் அணையாகச் சிலர்படுத்தார்;
கூரை அணையாகச் சிலர்சாய்ந்தார்;
கூந்தல் அணையாத்துஞ் சினர்சிலரால். 3

கன்னி யரும்தாயர்க்கு உறங்கும்,கொங்கை
கைகை அணையாகச் சிலர் துஞ்சினர்;
மன்னும் கமுகிற்செம் பகக்காவில்
மாதவி நீழற்கீழ்ச் சிலர் துயின்றார்;
பின்னும் பெரும்துன்பால் ஆணும்பெண்ணும்
பிடியும் களிறும்போல் உறக்கம்செய்தார்;
என்னும் படியாரும் துயில்கொண்டார்—
இராமன் சுமந்திரற்கு இயம்பலுற்றான். 4

சுமந்திரன் சொன்னது

அன்பால் வருவோரை மீட்கஒண்ணா
அடவி தனிற்கொண்டு செலவும்ஒண்ணா
மின்போல் மணித்தேரை நீமீட்டால்
மீண்ட சுவடுஎன்று மீள்வர்என்னா—
மன்பால் யான்சென்றுஉன் கருணைமைந்தன்
வனம்சென் றான்என்னில் உடன்மாய்வான்
நன்பால் அருள்அற்ற கைகைதன்னில்
நானே கூற்றுஎன்று நடுங்கிச்சொன்னான். 5

3. கூரை - கூறை - சேலை.
5. மன் - மன்னன். நன்பால் - நல்இயல்பு.

சுமந்திரனுக்கு இராமன் கூறியது

நிறைந்த குணம்ஆரும் சுமந்திரனை
நெறியாய் எடுத்துஅக்கண் ணீர்துடைத்து,
இறந்து விடினும்மெய் விடலாமோ?
இறந்தார் அலரேமெய் அறம்காப்பார்;
துறந்த முனிவனும்நீ யும்மன்னன்
துன்பம் ஆற்றிஎன் வரவும்சொல்லிச்
சிறந்த புகழ்எம்பி அன்னைதன்னைச்
சீறாது உலகாளச் செப்பிடுஎன்றான். 6

சுமந்திரனிடம் சீதையும் இலக்குவனும் சொன்னது

மன்னன் தனக்கும்என் மாமியர்க்கும்
வணக்கம் சொல்லி,என் தங்கையரை
அன்னம் கிளிபூவை களைப்பேண்என்று
அருள்வாய் எனப்;பாகன் அழுதுஇரங்கி,
பின்னங்கு இளையோனை உரைசெய்என—
பெருமான் ஆறாஇத் துயர்கண்டு
இன்னும் இறவாத்தறு கண்சொலவோ
இறைக்கும் பரதற்கும் என்றுஉரைத்தான். 7

கொடிமை உரையற்க தம்பிஎன்ற
கொற்ற வனைப்,பாகன் தொழுதுஇறைஞ்சிக்
கடிமை யுடன்ஆரும் அறியாமல்
கடவிப் பரித்தேரை மீட்டுச்சென்றான்—
அடிமை இளையோனும் திருவும்கற்பும்
அருளும் கைவில்லும் துணையாக
நெடிமை இருள்தன்னில் நிமலன்சென்றான்—
நிலவோன் இருள்தீர உதயம்செய்தான். 8

6. முன்புநின்று இசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின்று உறுதியைப் பயக்கும் பேரறம்
இன்பம்வந்து உறும்எனில் இயைவதாய் இடைத்
துன்பம்வந்து உறும்எனில் துறக்கற் பாலதோ. —கம். 28.

7. பெருமான் - இராமன். தறுகண் - இங்கே துணிவு. இறை - தசரதன்.

8. தையல்தன் கற்பும்தன் தகவும் தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேமமா கக்கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே. —கம். 47.

சந்திரோதயம்

நிருதர்க்கு உதவிசெய் பாவத்தைப்போல்
நெறியைத் தடுக்கும்அவ் இருள்ஓட்ட
வரதர்க்கு உதவிசெய் தருமம்என்ன,
மதியம் உதிக்கச்;செங் கழுநீரும்
கருதிக் குவிந்தன குமுதங்களும்
கணவன் முகம்கண்டு இரங்கினள்போல்
விரதர்க்கு அடிகள் உறையாமல்
வெண்ணி லாப்பஞ்சு படுத்ததுஒக்கும். 9

அன்பினும் வலியது எதுவும் இல்லை

பஞ்சிற் பதத்தாளும் வனத்திற்சென்றாள்
பரிவிற் பெரிதான வலிஒன்றுண்டோ?
இன்சொற் குயிலும்தம் பியும்தொடர
இரண்டோ சனைதெற்கே இறைவன்சென்றான்;
நஞ்சிற் கடிகைஒரு மூன்றதிலே
நகரிற் சுமந்திரன்தே ரோடும்போய்
விஞ்சைத் தவத்தோனை வணங்கிச்சொன்னான்;
விநயம் கேட்டுஅவன் மிகநொந்தான். 10

9. உறையாமல் - உறுத்தாமல். வரதர், விரதர் - இராமலக்குவர்.
பொய்வினைக்கு உதவும் வாழ்க்கை அரக்கரைப் பொருந்தி அன்னார்
செய்வினைக்கு உதவும் நட்பால் செல்பவர்த் தடுப்பது ஒக்கும்
மைவிளக் கியதே அன்ன மயங்குஇருள் துரக்க வானம்
கைவிளக்கு எடுத்தது என்ன உதித்தது கடவுள் திங்கள்.
மருமத்துத் தன்னை ஊன்றும் மறக்கொடும் பாவம் தீர்க்கும்
உருமொத்த சிலையி னோரை ஒருப்படுத்து உதவி நின்ற
கருமத்தின் விளைவை எண்ணிக் களிப்பொடும் காண வந்த
தருமத்தின் வதனம் என்னப் பொலிந்தது தனிவெண் திங்கள்.
—கம். த. மோ. 1, 2.
பஞ்சிடைப் பதித்நால் அன்ன வெண்ணிலாப் பரப்பப் போனார்.
—கம். 4.

10. விஞ்சைத் தவத்தோன் - வசிட்டர். பரிவு - அன்பு.
உறுவலி அன்பின் ஊங்குஒன்று உண்டுஎன உணர்வது உண்டோ.
—கம். 5.

இராமன் வந்தானோ?

ஆண்டு முனிதானும் சுமந்திரனும்
அரசன் பாற்செல்ல அருகில்உள்ளோர்
மீண்டும் தேர்வந்த தெனவேந்தன்
விழித்து மகன்எங்கே? என—முனிதான்
திண்டும் துயர்காணாது அகலச்சென்றான்;
தேர்ப்பா கனைக்கேட்க— வனவாசம்
பூண்டு திருவும்தம் பியும்தானும்
போனான் என—மன்னன் உயிர்போனான். 11

புலம்பினாள் கோசலை

மருவும் வானவர் தொழுதுஏத்த
மானம் தனில்ஏறி வானம்புக்கான்;
சருவம் ஈன்றவன் தனைஈன்றான்
தனையும் ஈன்றவள் தலைவன்தன்மேல்
பருவ மயில்போலப் புரண்டுஅரற்றிப்
பாணி அகல்மீனிற் பதைபதைத்துச்
செரியும் வாழைகற்க டம்வேய்போல்
சேயால் முடிந்தாயோ எனவிழுந்தாள். 12

11. நாயகன் பின்னும் நல்தேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனோ அணிய னோஎன்று உரைத்தலும் தேர்வ லானும்
வேய்உயர் கானில் தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினான் என்றான் என்ற போழ்தத்தே ஆவி போனான்.
—கம். 12.

12. இருந்த அந்தணனோடு எல்லாம் ஈன்றவன் தன்னை ஈனப்
பெருந்தவம் செய்த நங்கை. —கம். 15.
வாவிர் கண்டி மண்ணற வற்றி மறுகுற்ற
மீனே என்ன மெய்தடு மாறி மெலிகின்றாள். —கம். 16.

பாணி - தண்ணீர். வாழை, கற்கடம் (நண்டு), வேய் (மூங்கில்).

நோய்வாய்ப்பட்டு இறத்தல் உலகோர் இயல்பு; மன்னர்க்கோ என்றால் போரிலே புண்பட்டு மாய்தல் சிறப்பு. இவ்வகையில் அன்றித் தான் பெற்ற மக்களாலேயே மாய்தல் மானிடர்க்கு இயல்பு அன்று. எனவே தான் கொண்ட கருவால் உயிர் இழக்கும் வாழை, நண்டு, வேய் போன்றானாம் தசரதன். வாழை குலை ஈன்ற பின் வளர்ச்சி இன்றி அழியும்; தான் கொண்ட சூல் முற்றிக் கரு உயிர்த்தபின் மாண்டு ஒழியும் நண்டு; மூங்கில் பூத்துக் காய்த்தபின் வளர்ச்சி இன்றி அழியும். எனவே இவை மகனால் இறந்த தசரதனுக்கு உவமை ஆயின.

சம்ப ரனைக்கொன்று சுரலோகம்
　　தன்னை மகவானுக்கு அருள்புரிந்தாய்
உம்பர் விருந்தாக வேள்விச்செல்வம்
　　உவந்தா யோஎன்ன, சுமித்திரையும்
அம்ப வளவாயால் அழுதுஅரற்ற;
　　அறுப தாயிரமாம் மனையாரும்
தம்பம் அனையானைச் சூழ்ந்திருந்தார்
　　தருவா னகம்தன்னிற் காணஎன்றே. 13

பரதனுக்கு ஓலை போயிற்று

முனிதன் பாற்சென்று சுமந்திரன்தான்
　　மொழிய அவன்வந்து விதியைநொந்து
தனிதன் பாற்சென்று உடலந்தன்னைத்
　　தயிலக் கடல்வைத்துப் பரதன்என்னும்
வினிதன் பாற்செல்ல ஆள்ஓலை
　　விரைய வருகென்று விடுக்க;இப்பால்
புனிதன் பாற்சென்ற நகரிசனம்
　　புரிந்த செயல்தன்னைப் புகலலுற்றாம். 14

சூரியோதயம்

உலகம் தொழவாரி முரசார்க்க
　　உடைவாள் இலங்கத் திண்தேர்ஏறித்
திலகன் திருமைந்தன் வரும்அளவும்
　　தேயம் காப்பேன்என்று இரவிவந்தான்—
நலகண் விழித்துஅய்யன் தனைக்காணார்
　　நகரோர் துயர்உற்று நாடிஎங்கும்
விலகம் இனிப்பின்னே தொடர்வம்என்பார்
　　மீண்ட சுவடுகண்டு ஆர்ப்பரித்தார். 15

14. வினிதன், வினிதன் என்று வந்தது - விநயமுடையவன்.
15. வாரி - கடல். விலகம் - விலகோம்.

நகர மாந்தர் நிலை

மின்ன வளும்தானும் வேலைஎன்ன
    மீண்டார் எனஅன்பால் நகர்புகுந்தார்;
மன்னன் வீடுற்ற செயல்கேட்டார்;
    மைந்தன் நகர்ஏகா வாறுஅறிந்தார்;
இன்னும் உளகாலம் இருக்கத்தக்கார்
    என்ன துயர்உற்றும் இறப்பாரோ?
அன்ன முனிதேற்ற வடவைஅஞ்சி
    அடங்கும் கடல்போலே அமர்ந்திருந்தார். 16

16. வேலை என்ன - கடல்போல் ஆரவாரித்து.

ஆவி, அக்காலத்தே அகலுமோ அவதி என்றுஒன்று உளதானால்.

—கம். 36.

வடவை - வடவாமுக அக்கினி.

வடவனலை யஞ்சி வேலை கடவாத பள்ளக் கடல். —கம். 38.

6 குகப் படலம்

—இராமன் கங்கைக் கரையை அடைந்தது;
குகனைக் கண்டது; கங்கையைக் கடந்தது.

பார்த்திபர்கோன் பரமபதம் பெற்றவாறும்
பரதன்பால் முனிஓலை விடுத்தவாறும்
சீர்த்திருமால் பின்போன சேனைமீண்டும்
திருநகரம் சேர்ந்தமையும் செப்பினேமால்;
தார்த்திகழும் புயத்தந்தை ஏவலாலும்
தாபதவா னவர்மறையோர் தவத்தினாலும்
கார்த்திகழும் இரவிடைவெண் நிலவிற்போன
கண்ணபிரான் திறம்பகர்வோம் கலைவலீரே. 1

வழிநடைக் காட்சி

செஞ்சுடரோன் வெஞ்சுடர்தான்
செஞ்சுடரில் ஒளித்திடவே
பைஞ்சுடர்வண் ணனும்திருவும்
பரிந்துஇளையோன் முன்நடக்க
மைஞ்சுடர்மா முகிலின்மின்னும்
மதகரியும் பிடியும்எனத்
தஞ்சுடைய நாட்டுவளம்
தகமைகண்டு மகிழ்ந்துசென்றார். 2

குறிப்பு: இப் படலம் கம்பராமாயணப் பதிப்புகளிலே கங்கைப் படலம் என்று காணப்படுகிறது.

1. மை - கரிய முகில். கடரும் மின்வல்போலவும் மதகரியும் பிடியும் போலவும். தஞ்சுடைய - தம்முடைய.

2. வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதுஓர் அழியாஅழகு உடையான்.

—கம். 1.

தரும்பாலை முலைஎருமை
சாலிஉண்டு கடைவாயில்
பெரும்பாலை வாளைஉண்ண;
மலர்ஆம்பல் குவளைகஞ்சம்
அரும்பாலை உருவாய்க்கண்
அவைநோக்கித் தவம்புரியும்
கரும்புஆலை செறிநாட்டைக்
கடந்துகங்கை ஆறுகண்டார். 3

முனிவர்கள் உபசரித்தனர்

திருந்துகங்கைக் கரை,முனிவர்
திரண்டுஆடிப் புகழ்ந்துஎதிரே
விருந்தனைக்கண் ணீராட்டி
வேதமலர் எட்டும்இட்டுப்
பிரிந்தமைந்தர் வந்ததுபோல்
பேணிஅன்பால் உறையுள்எய்தி
அருந்தநல்ல காய்கனிகள்
அமுதுசெய்,நீ ராடுகென்றார். 4

கங்கையில் நீராடினர்

பாரியையும் செங்கைபற்றிப்
பரன்ஆடும் பகீரதிதான்
பாரில்உள்ளோர் எனைவிடுத்த
பாவம்அது போனதுஎன்றாள்;

3. அரும்பு ஆலை உருவாய். ஆலை - கருப்பஞ்சாறு விழும் கலம். கலம் போன்றதாம் கண். ஆம்பல், குவளை, கஞ்சம் - தாமரை போன்றதாம் கண்.

4. எட்டு மலர்கள் : (1) அஹிம்சை, (2) பொறியடக்கம், (3) கருணை, (4) பொறுமை, (5) ஞானம், (6) தவம், (7) தியானம், (8) சத்தியம் என எட்டு மாமலர் என்பர் தேசிகர்.

வேதம் 4 (இருக்கு, யசுர், சாமம். அதர்வணம்); உபவேதம் 4 (ஆயுர், அர்த்த, தனுர், காந்தர்வம்) என்பதாகும். இந்த எட்டு வேதங்களையும் கூறி எனலாம். வேதமலர் எட்டையும் அஷ்டாட்சரம் என்றும் சொல்லலாம்.

பார்இதுஒன்றே இவன்ஒருதாள்
பங்கயன்பூ சித்தகங்கை
பாரியமெய் முழுதுஅளைந்தால்
பாழ்படுமே நரகம்எலாம். 5

கானவன்நா கக்கரத்தால்
கங்கைதங்கும் படர்சடையால்
தான்அரன்போல் ஆடும்ஐயன்
தண்நிழல்போல் தாழ்குழலாள்
தூநறும்பாற் கடலின்முன்நாள்
தோன்றுகைபோல் முழுகிஎழும்
சானகிக்குத் தாதியைப்போல்
சானவிநீ ராடினளே. 6

கோதைபங்கன் செஞ்சடையின்
கொன்றைதும்பை மணம்அடங்கிச்
சிதைகுழல் மல்லிகையும்
செண்பகமும் மணந்தகங்கை
நாதனும்அந் நீராடி
நாயகன்கை தொழுதுஏத்தி
மாதவர்காய் கனிஉகந்தான்
வானவர்க்குஅன்று அமுதுதந்தான். 7

5. உலகோர் தம் பாவத்தை என்விடை முழுகுதலினால் நீக்கப்பெறுவார்கள். நான் ஏற்றுக்கொண்ட அவர்கள் பாவத்தை என்விடை மூழ்கிய உன்னால் நீக்கப்பெற்று உயர்ந்தேன். திருமாலைப் பிரமன் பூசித்தபோது திருமால் திருவடியிலே தோன்றியது கங்கை. திருமாலின் பாதங்களை மட்டும் பரிசிக்கப் பெற்றதால் பாவங்களை ஒழித்து விளங்கிய கங்கை, இப்போது அந்த இறைவன் திருமேனி முழுவதும் தீண்டப்பெற்றதால், அதிலே நீராடும் பாவிகள் நரகம் போதல் இனி இல்லை. எனை விடுத்த - என்னிடம் விட்ட.

6. நாகக்கரம் - யானையின் துதிக்கை போன்ற தடக்கை; பாம்பணிந்த கரம் - சிவனார்க்கும் இராமனுக்கும் சிலேடை.

கங்கையின் வெண்ணிற நுரை விளங்கும் அலைகளூடு சிதையுடன் முழுகி எழும் இராமன், பாற்கடலிலே இலக்குமியுடன் தோன்றும் விஷ்ணுவை ஒத்தான். சானவி - கங்கை.

7. மர்ரே கம்பன் பதிப்பிலே இப் பாடலுடன் கங்கைப் படலம் முடிகிறது. பின், குகப்படலம் தொடங்குகிறது.

மாதவர் தந்த காய்கனி.

வந்தான் குகன்

அப்பொழுது குகன்எனும்பேர்
ஆயிரம்ஓ டத்தலைவன்
கைப்பொருவில் கச்சுஉடைவாள்
கால்கழலான் தோல்செருப்பான்
எப்பொழுதும் சிவந்தகண்ணன்
இரும்புருவன் கரும்புருவன்
மைப்பொருவும் மழைஇடிபோல்
மலாரிபம்பை அதிர்படையான்; 8

கழைநீடும் குறங்குஉடையான்
கங்கைநிலை கண்டமெய்யான்
உழைநீடும் புலிவாயான்
உரகம்அஞ்சும் பார்வையினான்
தழைநீடும் பனைசெரும்பில்
தழைத்தமுன்கை ரோமம்உளான்
மழைநீடும் வாசவன்தன்
வச்சிரம்போல் மருங்குஉடையோன்; 9

மன்னுகங்கைக் கரைஅதன்மேல்
வாழ்சிருங்க பேரபுரம்
என்னும்நகர்க்கு அதிபன்அவன்
இனிதுடனே மீனொடுதேன்
தன்னுயர்கா ணிக்கைகொண்டு,
தடஞ்சேனை தனைநிறுத்திப்
பொன்உடைவாள் சிலைதுறந்து
புண்ணியனைக் காணவந்தான். 10

8. இரும்பு உருவன். கரும் புருவன்.

9. கழை - மூங்கில். குறங்கு - தொடை. உரகம் - பாம்பு. வாசவன்- இந்திரன். மருங்கு - இடை.

இராமனைச் சந்தித்தான் குகன்

இளையபிரான் அங்குஅணுகி
    யார்தான்நீ எனக்கேட்க;
வளையஅவன் வணங்கிஉம்மை
    மலர்அடிசே விக்கவந்தேன்,
உளைவதுஇல்லா நாய்அடியேன்
    ஓடம்விடு வேடன்என்ன;
விளைவைஅவன் பணிந்துஉரைக்க,
    விமலன்வரச் சொல்என்றான். 11

நம்பிபின்போய்ப் பணிந்துஇறைஞ்சி
    நாதனைகண்டு உருகிஅன்பால்
தும்பிஅன்னான் ஒடுங்கிநிற்க;
    சுந்தரனும் இருக்கஎன்ன;
வம்புஇலதா தேன்மீனும்
    வந்தனகா ணிக்கைஎன்ன;
அம்புயமா முகைநகைமால்
    அருந்தவத்தோர் உடன்உரைப்பான். 12

தம்மனத்தில் அன்புடையோர்
    தந்ததெல்லாம் பவித்திரமே
எம்மனத்தால் உண்டுஉகந்தோம்
    என்று,பின்னைக் குகனுடனே
செம்மனத்துஉன் ஊரில்இன்று
    சென்றுவா நாளைஎன்ன;
பொய்ம்மனைப்பா சம்வேண்டேன்
    போற்றிசெய்வேன் அடிமைஎன்றான். 13

11. அவன் - இளையபிரான் ஆகிய இலக்குவன்.

12. யானை நாதத்துக்கு அடங்கும். நாதன் - நாதத்தை உடையவன். நாதனுக்குத் தும்பி அனையான் அடங்கினான். தும்பி - யானை.

13. அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமுதினும் சீர்த்த அன்றே
பரிவினில் தழீஇய என்னின் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான். —கம். 14.

சீதையைத்தம் பியைநோக்கிச்
சிறந்தநண்பன் என்றுஇறைவன்
மாதயத்தால் இருத்திஎன்ன;
மகிழ்ந்து,குகன் தன்சேனை
ஆதரத்தால் புறம்காக்க
ஆதரத்தோடு இறைஞ்சிநின்றான்;
தாதைசொல்கொண்டு உற்றதுஎல்லாம்
தலத்துஇளையோன் சொலத்துயரால். 14

சூரியாத்தமனம்

இருள்துறந்து மேலாகி
எவர்மனத்தும் உளன்ஆகி
வருதிகிரி திசைநடத்தி
மன்னவன்போல் இரவிசென்றான்;
திருவினிடத் தோள்நலனைச்
சேர்ந்துகண்ணன் கண்துயின்றான்;
பொருவிலுடன் கண்ணிமையான்
புகர்இளையோன் காத்துநின்றான். 15

சூரியோதயத்தில்

தொடுத்தவில்லான் இருகண்ணீர்
சொரியநின்றான், குகனும்அங்கே—
விடுத்தஉயிர் பிறப்பதுபோல்
விழுந்தவெய்யோன் எழுந்தனனால்;
அடுத்தவல்லி முகம்மலர
அஞ்சனஞா யிறுபோல்வான்
முடித்தனன்கா லையில்நியமம்
முனிவருடன் கங்கையின்பால். 16

14. மாதயம் - கருணை. துயரால் இறைஞ்சி நின்றான்.
16. வல்வி - சிதை. அஞ்சன ஞாயிறு - கருஞ்சூரியன் - இராமன்,

குகனுடைய வேண்டுகோள்

மன்குகனை அம்பிகொண்டு
　　வாஎனவே, மற்றவனும்,
நன்குஉளகாய் கனிதினைதேன்
　　நவையில்கங்கா தீர்த்தம்உண்டு;
மின்குனிவில் வானைவெல்வோம்
　　வேண்டுவநூ றாயிரம்பேர்
இங்குஉளம்நின் அடிமைசெய்வோம்
　　இருந்தருள்என்று அடிபணிந்தான். 17

கங்கையைக் கடந்தனர்

ஆண்டகைகேட்டு உவந்தருளி,
　　அருந்தவரை வணங்கிஅன்பால்
மீண்டும்இங்கே வருதும்என்ன;
　　விரைந்துஅவன்ஓ டம்கொணர்ந்தான்—
ஈண்டுமுனி வரைவிடைகொண்டு
　　ஏறியநா வாய்குகனும்
தூண்ட,எங்கோன் நீர்சிதறித்
　　தோகையுடன் விளையாடி; 18

குகனுடன் உறவுகொண்டான் இராமன்

நத்துலவும் பகிரதியாம்
　　நதிகடந்தே ராமபிரான்
சித்திரகூ டத்துநெறி
　　செப்பெனலும், குகன்வணங்கி,
எத்திசையும் நெறிஅறிவேன்
　　இன்கனிகாய் நீர்தருவேன்
சுத்திஎங்கும் சாரிசெய்வேன்
　　துட்டமிரு கம்கடிவேன்; 19

17\. தேனுள தினைஉண்டால் தேவரும் நுகர்தற்காம்
ஊனுள துணைநாயேம் உயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையும் உளதன்றோ
நானுள தனையும்நீ இனிதிரு நடஎம்பால். —கம். 27.

19\. நத்து - நந்து (சங்கு) அல்லது நத்தை. சுத்தி - சுற்றி; வட்டார வழக்கு. சாரி - சஞ்சாரம்.

சேனையுடன் வரஎனிலும்
        சேவைசெய்துஉன் பகைவர்வந்தால்
ஊனைமென்று உயிர்களைவேன்
        உடன்வருவேன் எனும்குகனை—
யான்எனநீ எனவேறோ?
        எம்பிஉம்பி, இவள்கொழுந்தி,
நானிலம்எல் லாம்உனதே,
        நாம்ஓர்ஐவ ருடன்பிறந்தோம். 20

உங்கிளைஎன் கிளைஅலவோ
        உளையாமல் காத்திருநீ
இங்குஇனியான் வரும்அளவும்
        என்றன்பணி மீறாமல்—
அங்குகனும் விடைகொளவே,
        ஆண்டவனும் இளங்கோவும்
பைங்கிளிபோல் மொழிமாதும்
        பலவனமும் கடந்துசென்றார். 21

20. அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவல்உன் இளையான்இந்
நன்னுதல் அவள்நின்கேள் நளிர்கடல் நிலம்எல்லாம்
உன்னுடை யதுநான்உன் தொழிலுரி மையின்உள்ளேன். —கம். 40.

துன்புளது எனின்அன்றோ சுகம்உளது அதுஅன்றிப்
பின்புளது இடைமன்னும் பிரிவுளது எனஉன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுளது எனஉன்னா
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம். —கம். 41.

7 வனம் புகு படலம்

—கங்கையைக் கடந்த இராமன் அப்பால் உள்ள வனத்திலே சென்றது

வெயிலும் நிலவு ஆயிற்று

அளித்தர் அணைமாதர் பொதுமனம்போல்
அன்புஅற்று இளவேனில் கடுங்கானில்
மனித்தர் வடிவான தேவர்பிரான்
வரவே வெயிலும்வெண் நிலவேபோல்
பனித்தண் துளித்தென்றல் மணம்வீசப்
பயில்வண்டு இசைபாட மயில்ஆடும்
களித்தண் கமலக்கா வளப்பம்எல்லாம்
கண்ணன் சிதைக்குக் காட்டிச்செல்வான். 1

வழிநடைக் காட்சிகள்

துன்று வரைபோலும் தனத்தாளே!
சூதத் தளிர்போலும் நிறத்தாளே!
கொன்றை மலர்மேல்இந் திரகோபம்
குலவ மணிப்பூணின் குணம்பாராய்;
உன்றன் விழிகண்டும் சாயல்கண்டும்
உழையும் மயிலும்இன் புறல்பாராய்;
மன்றல் கமழ்நின்கைக் கிளிபோலே
மலர்கோ திடும்காந்தள் கிளிபாராய். 2

1. அளித்தர் - கீழ்மக்கள். கீழ்மக்கள் சேர்கிற பொது மாதர்தம் மனம் போலப் பசை அற்ற இளவேனில்.

2. சூதத் தளிர் - மாந்தளிர். பொன் நிறமுடைய கொன்றை மலர்களின் மேல் செந்நிறம் வாய்ந்த இந்திரகோபப் பூச்சிகள் துயில்வது மாணிக்கக் கற்கள் பதித்த பொன்னாரம் போன்றது. உழை - மான். மருண்ட பார்வையால் மான்களும் சாயலால் மயில்களும் தம் இனம் என்று சிதையைக் கருதி மகிழ்ந்தன வாம். செங்காந்தள் பூவிலே தங்கிய கிளி சிதையின் கையிலே அமர்ந்திருக்கும் கிளி போன்றதாம்.

ஏந்த அருந்ததி தொழும்மாதே!
    எழுதற்கு அரியநல் எழிலாளே!
பூந்தண் மயில்தோகை மணம்நாறப்
    போதப் பெடைஊடும் படிபாராய்;
காந்தள் பணிஎன்று மயில்கௌவக்
    கண்டு நகுமுல்லை மலர்பாராய்;
ஆய்ந்த செருந்திப்பொன் கருவண்டு
    அவிசேர் தழல்போலும் அதுபாராய். 3

தெரிக்கக் கேளாய்நுண் இடைமானே!
    தெய்வச் சிலைபோலும் நுதலாளே!
அரிக்கன்று ஆனைக்கன் றுடன்ஆடும்
    ஆயர் ஆவின்கன் றினம்பாராய்;
வரிக்கண் ணியர்ஆடும் துறைபோலே
    மலர்க்கொம் புகள்தோயும் திரைபாராய்;
தரிக்க வெறிவண்டும் கோங்குஅலரும்
    தண்நீ லமும்பொன்னும் சரிபாராய். 4

பற்ப மலர்போலும் முகமானே!
    பாவாய்! உன்செம்பொன் பாதங்களில்
புட்ப நிறைதூவி வணங்கிஎழும்
    பூங்கொம் புகள்செய்த தவம்பாராய்;
சொற்புன் னகைபோலும் முகைபாராய்;
    துணைசேர் முலைபோலும் மலைபாராய்;
நற்பைந் தோள்போலும் கழைபாராய்;
    நறுமென் குழல்போலும் மழைபாராய். 5

3. ஆண்மயில் ஒன்றின் தோகையிலே பூமணம் நாற, பெடை அதனோடு ஊடித்திரிகிறதாம்; காந்தள் அரும்பைப் பாம்பென்று மயில் கௌவ, அதைக் கண்டு முல்லை முறுவலிக்கிறதாம்; செருந்திப் பூவிலே பொருந்திய கருவண்டு கரியிடை எழும் தழல் போன்றதாம்.

4. அரிக்கன்று - சிங்கக்குட்டி. வரி - செவ்வரி. வண்டு நீலம், கோங்கம்பூ பொன்.

5. பற்பம் - பத்மம். சொல் புன்னகை; நல் பைந்தோள்.

பரத்துவாசன் ஆசிரமத்தில்

மாதி னுடன்எங்கோன் விளையாடி
    வனம்செல் லவும்வெய்யோன் வரைசென்றான்—
வேத முனிபரத்து வாசன்தன்
    வேணிச் சடையும்கைக் குடையும்கொண்டு
நாதன் எதிர்கொள்ள; நாதனும்தான்
    நன்றாய் வணங்கிட; மாதவனும்
போத இருகண்ணீர் சோரநின்று,
    புதல்வ! தவவேடம் உனக்குஎன்?என்றான். 6

வரலாறு உரைசெய்ய; இரங்கிஉன்னை
    மன்னன் பிரிந்துஎவ்வாறு உயிர்பிழைத்தான்;
கரவா விதிஅன்றோ வலியதுஎன்று
    கையால் அணைத்துக்கொண்டு, உறையுள்புக்கு,
மரபால் முறைகூறி மக்கள்போல்
    மகிழ்ந்து பூசித்துக் கனிகாயும்
தரஆ தரவாலே அமுதுசெய்து
    தங்கி மகிழ்வுஉற்றான் தவத்தின்உற்றான். 7

பருதி உதித்திடவே மறையோரும்
    பாரத் துவாசமுனி யும்பண்பால்
கருதி, திரிவேணி கலந்தகங்கை
    கனிகாய் உளதுஇங்கே இருக்கைஎன்ன;
சுருதி உடையோனும் நீண்டதுஅன்று
    சுற்றம் நெருங்குவார் என;முனியும்
வருதி பதின்காதம் கடந்துவைகும்
    வானோர் தொழும்சித்ர கூடத்துஎன்றான். 8

7. பூசித்து - உபசரித்து. ஆதரவு - அன்பு.

8. பருதி - பரிதி - சூரியன். சுருதி உடையோன் - வேதநாயகன் ஆகிய இராமன். இந்த இடம் அயோத்திக்குத் தொலைவானது அன்று. வருதி - இங்கே செல்வாய் என்னும் பொருளது.

யமுனையைக் கடந்தனர்

தொடர்ந்து முனிவன்பால் விடையும்கொண்டு
    தொழுது கோபாலர் முல்லைநிலம்
கடந்து செல்லஅங்ஙன், கழைகள்வெட்டிக்
    கட்டி னான்தெப்பம் இளங்கோமான்;
அடர்ந்த தெப்பத்தின் அழகுகண்டான்
    அய்யன் பிராட்டியின் முகம்நோக்கி,
மடந்தை மார்பலர் வந்துஏத்தும்
    மயிலே இதில்ஏறாய் மகிழ்ந்துஎன்றான். 9

கோவும் கோதையும் அதிலிருத்திக்
    குமரன் நீந்தலுமே இடக்கைவெள்ளம்
மேவும் குணக்கடல் விரைந்துசென்ற
    மேலைக் கடல்சென்ற மீண்டவெள்ளம்—
பாவும் கரைஏறி பலவனம்போய்ப்
    பாலை வனம்கண்டுஇச் சுரத்தைஎங்ஙன்
கூவும் குயில்சொல்லி, கடப்பதுஎன்று
    நினைக்கக் குளிர்ந்தது நெடுஞ்சுரமே. 10

பாலைவனம் கடந்து சென்றனர்

வெயிலும் நிலவாய்க்கா னல்மஞ்சாய்
    வெங்கண் அரவின்பல் அமுதுஊற;
மயிலும் குலவண்டுஇன் இசைபாட,
    வானம் துளித்துஇந்திர கோபம்துன்ன,
குயிலும் கூவவேட ரும்தவராய்—
    கொல்லும் புலிமுலைமான் கன்றுஉண்ண;
பயிலும் கனிகாய்பூ நிறைந்துஎங்கும்
    பரமன் செயல்போல்தவம் ஒன்றுஉண்டோ. 11

9. குறுக்கிட்ட யமுனை நதியைக் கடக்க, இலக்குவன் தெப்பம் கட்டினான்.

10. குயில்போலும் சொல்லுடைய சிதை. இலக்குவன் தன் கையால் நீரைத் தள்ளித் தெப்பத்தை மேலே செலுத்தும்போது, அவனால் தள்ளப்பட்ட வெள்ளம் கீழ்க்கடலைச் சேர்ந்ததாம். தெப்பத்தின் விசையால் மீண்ட நீர் மேல் கடலிற் பாய்ந்ததாம்.

11. தகிக்கும் சூரியன் குளிர்ந்த நிலவாய், கானல் மஞ்சாய், அரவின் நச்சுப் பல் அமுது சொரிய....கொலை வேடரும் முனிவர் போலச் சாந்தமூர்த்திகள் ஆக....காலம் இன்றியும் மரங்கள் கனிந்தன.... இப்படி ஆனது இராமனது சிலத்தால் - நற்குண நற்செயல்களால். 'சிலம் அன்றியும் செய்தவம் வேறும் ஒன்று உளதோ' என்பார் கம்பர்.

பிரிந்த கணவரை வரவுகண்ட
பேதை மடமாதர் மனம்போலே
எரிந்த வனம்மீளக் குளிர்ந்ததுஅம்மா!
இனிதிற் பாலையைக் கடந்துசென்று
புரிந்த மதிக்கன்றை வயிற்றில்கொண்டு
புலம்பு மேகத்தைப் பிடிஎன்றுதான்
பரிந்த மதகரிகை நீட்டுமிந்தப்
படர்சித் திரகூட வரையும்கண்டார். 12

8 சித்திரகூடப் படலம்

—சித்திரகூட மலையிலே இலக்குவன் சமைத்த
சாலையில் இராமன் தவம் செய்திருந்தது

மலைவளம் கூறியது

வானவர்க்கும் மாதவர்க்கும்
மானிடர்க்கும் பல்உலகோர்
ஆனவர்க்கும் பொதுநிலையான்
ஆயிரம்ஆ யிரம்பேரான்,
தேனவர்க்க மொழிமயிற்குச்
சித்திரகூ டக்கிரியின்
தானவர்க்கம் அத்தனையும்
தனதுஅருளால் சாற்றல்உற்றான். 1

மின்னுமஞ்சும் வடிவாளே
வேலுமஞ்சும் மலர்வாளி
என்னுமஞ்சும் வடிவாளும்
ஏவுமஞ்சும் விழியாளே!
மன்னுமஞ்சு பல்காவும்
வளர்தாளே தமதாளாய்த்
துன்னுமஞ்சு களிற்றினம்போல்
தோன்றுகின்ற படிபாராய். 2

1. யாவர்க்கும் ஒத்து ஒரே நிலையில் - பொது நிலையில் நிற்பவன் - யாவராலும் அறிதற்கு அரியவன் என்றபடி; அல்லது, மேலோர் தாழ்ந்தோர் என்று இல்லாது யாவர்க்கும் அருள் புரிபவன்; ஆயிரம் பெயருடை அமலன்.

2. மின்னும் அஞ்சும், வேலும் அஞ்சும். மலர் வாளி - அம்பு ஐந்தும் அஞ்சும்; ஏவும் அஞ்சும். சோலையிலே படிந்த மஞ்சு - மேகம். 'காள மேகமும் நாகமும் (யானை) தெரிகில காணாய்' என்பார் கம்பரும்.

செங்கதிர்வாள் உருவம்எனச்
சிவந்துவரி பரந்தகண்ணாய்!
பைங்கதிர்மா பலவருடை
பசுத்தனபார், மரகதத்தால்;
துங்கஅரா உரிகழைமேல்
தோன்றுகைபார், துகில்கொடிபோல்;
சங்கரன்மேல் கங்கையைப்போல்
சாரலும்சோ மனும்பாராய். 3

இழைசுமந்த குடம்சுமந்த
இடையைமின்என்று அரவுஓட,
மழைமுழங்க மடங்கல்என்று
மதகரிகள் பரிந்துஓட,
கழைசுமந்து பொதியதுஎனக்
கவலைகொண்ட கைம்மாவின்
தழைசுமந்து சூல்பிடிபின்
தந்திகள்ஓ டுகைபாராய். 4

நல்லசெந்தேன் பிடிவாயில்
நல்கும்மத கரியினைப்பார்;
கல்லருவி மந்திசிந்தக்
கடுவன்மழை உதிர்ப்பதுபார்;
வல்லரிமா ஒளித்தவற்றை
வண்பளிங்கு காட்டுகைபார்;
செல்லகலா ஞாயிறுபோல்
செம்மணிப்பா றைகள்பாராய். 5

3. மரகத மணிகளின் பச்சொளி பரவப்பெற்ற வரைஆடுகள் சூரியனது பச்சைக் குதிரைகள் போன்றன. மூங்கில்மேல் பாம்பின் உரிகள் கொடிச்சீலை போல அசைகின்றன. மலைமீது தோன்றும் மதியும் அருவிகளும் சங்கரனார் சடையிலே தோன்றும் சந்திரனும் கங்கையும் போன்ற.

4. இழை – ஆபரணம். குடம் - தனபாரம். மடங்கல் - சிங்கம். கழை - மூங்கில். கைம்மா - யானை. தந்தி - யானை.

அருந்ததியும் பணிந்துஏத்த
அற்புதமாம் கற்புடையாய்!
செருந்திமலர் வேங்கைமலர்
சிந்திநின்னை வணங்குகைபார்;
இருங்குறவர் கவண்எறிகல்
எரிசுடர்போல் வீழ்வனபார்;
அரும்புனம்கா வல்பறையை
அடிப்பனவா னரம்பாராய். 6

உற்றிசைபா டும்கொடிச்சி
ஒண்குறிஞ்சிச் சுணம்அரைக்கச்
சுற்றிஅரம் பையர்ஆடும்
சுனைஅருவி மணம்கமழ
வற்றியகான் ஆற்றுமுத்தம்
வானகம்மீன் போல்விளங்க,
பற்றிவரைக் கொழுந்துகள்போல்
படர்வேள்விப் புகைபாராய். 7

மரகதப்பா றையில்தெரிசெம்
மணிப்பாறை தனில்அமையும்
விரகவிஞ்சை மாதர்அடி
மிக்கசெம்பஞ்சு ஊட்டுதலால்
நிரைகொளச்செம் பாறைஎங்கும்
நீண்டகழை முத்துஉதிர
உரைகொள்செவ் வான்பூத்த
உடுக்குலம்போல் வனபாராய். 8

7. சுணம் - சுண்ணம்.
8. கழை - மூங்கில். உடு - நட்சத்திரம்.

வேழம்எல்லாம் மாதவர்க்கு
விரும்பினநீர் கொணர்வனபார்;
வாழைபலா மாங்கனிநீள்
வானரம்போய்த் தருவனபார்;
தாழஅடங்கு எரியைமயில்
தன்சிறகால் எழுப்புவபார்;
கேழைவளக் கழைஅரிசி
கிளிதினையோடு அளிப்பதுபார். 9

ஆம்புயலின் கருங்குழலாய்!
அரும்புமுலை மடமயிலே!
காம்புநிகர் தோள்மாதே!
கரும்பினும்இன் மொழியாளே!
பாம்பும்அருந் தவர்நடக்கப்
படியாகும் படிபாராய்;
போம்புனிதர் உழைமான்கள்
புகுவனபோ வனபாராய். 10

வேதியர் விருந்தானான் இராமன்

மின்தனுடன் விளையாடி
மெய்த்தவன்தன் புத்திரன்தான்
வன்தவர்வந்து எதிர்கொளவே
வணங்கிஅவர் விருந்தானான்—
என்றுள்சென்றான் மாநேமி
எதிர்கால நேமிவிடச்
சென்றதுபோல்; செக்கர்அந்தச்
செந்நீர்போல் பரந்ததுவே. 11

9. கழை அரிசி - மூங்கில் அரிசி. மூங்கில் அரிசியைத் தினையோடு கிளிகள் மாதவர்க்கு அளிப்பது பார்.

11. உதயகிரியானது, அத்தமனகிரி ஆகிற காலநேமிமேல் சூரியன் ஆகிய சக்கரத்தை ஏவியதுபோலக் கதிரவன் மறைந்தான். என்றுள் - கதிரவன்.

தம்பி அமைத்த தவச்சாலையில் தங்கினான் இராமன்

தளைஅவிழ்தா மரைகுவிந்த
    தரணிகடல் மூழ்கியபின்
திளைபுனல்வா னகம்பூத்த
    சேதாம்பல் தேன்சொரிந்த
கிளையொடும்தேக்கு இலைநாணல்
    கிளர்மணிக்குங் குமமலரால்
இளையவன்ஓர் சாலைகட்ட
    இறைவனும்தே வியும்உறைந்தார். 12

தம்பியைப் பாராட்டினான் இராமன்

மின்னாள்தாள் வனம்நடந்த
    வேலைசெய்த இளையவன்கை
தன்னாள்இல் லாதவர்க்குச்
    சகலமுமாம் என்பதுஉன்னி
என்னால்இத் தொழில்அறிந்தாய்
    என்றுஇருகண் நீர்சோர
மன்னாளும் தம்பிஉனைப்
    பாட்டில்வைத்தேன் எனப்பகர்ந்தான். 13

என்இடர்உன் வருத்தம்அன்றி
    இல்லைஎன்ற தம்பியுடன்—
மன்னுதவி, பின்னுதவும்
    வண்புகழ்பேர் இன்பம்என்று—
பன்னுமறை பத்தர்உளம்
    பரமபதம் பாற்கடல்போல்
உன்னுபன்ன சாலைதன்னில்
    உம்பர்பிரான் உகந்திருந்தான். 14

12. தரணி - சூரியன்.
13. பாட்டில் - துன்பத்தில்.
14. தசரதன் செய்த உதவி, தவத்தால் பேரின்பம் பெறுதல் அல்லவா?
    பின்னும் தம்பியை நோக்கிப் பெரியவன்
    மன்னும் செல்வத்திற்கு உண்டு வரம்புஇதற்கு
    என்ன கேடுஉண்டுஇவ் எல்லையில் இன்பத்தை
    உன்னு மேல்வரும் ஊதியத் தோடுஎன்றான். —கம். 55.

9 பள்ளிப் படலம்

—தைலத்திலே இடப்பட்டிருந்த தசரதன் சரீரத்தை
ஈமப்பள்ளியிலே சேர்த்தது

சித்திரகூ டத்துஇருந்த சிராமன் சீர்உரைத்தேன்;
புத்திவசிட் டன்தூதர் போந்ததுவும்—மெத்தவும்நூல்
கற்றபர தன்தன் கடிநகர்க்கு வந்ததுவும்
உற்றதுவும் சொல்வேன் உகந்து. 1

நாள் நட்சத்திரம் எதற்கு?

தூதர் இரவுநற் பகலும்சென்று
தோன்றல் பரதன்தன் கோயில்எய்தி
வாய்தல் வரத்தம்மால் அறிக்கைபண்ணி,
வருக எனப்புக்கு வணங்கிக்கண்டார்;
தாதை செயல்நன்றோஎன, நன்றுஎன்ன,
சால மகிழ்ந்துநல் இளவலுடன்
நாதன் செயல்நன்றோஎன, நன்றுஎன்ன,
நளினக் கரம்சென்னி தனிற்குவித்தான். 2

மற்றும் சொலிமன்னன் திருமுகம்காண்
வந்தது இதுஎன்ன, வாங்கிக்கண்ணில்
ஒற்றிப் பரதன்தான் வாசித்துஉள்ளம்
உருகித் தமயனைக்கா ணும்அன்பால்
சுற்றும் சேனையை எழுகஎன்று,
தொழுகே கையராசன் வாழ்த்திடவே
நற்றிண் தேர்ஏறித் தம்பியுடன்
நாளும் பொழுதும்கே ளாமல்சென்றான். 3

குறிப்பு : இப் படலம் கம்பராமாயண அச்சுப் புத்தகங்களிலே பள்ளிபடைப் படலம் என்றும், பள்ளிவடைப் படலம் என்றும் காணப்படும்.

2. வாய்தல் வர - சமயம் பார்த்து. நாதன் - இராமன்.

3. நல் திண் தேர்.

பரிவாரங்கள் சூழச் சென்றான் பரதன்

கொடியும் தடந்தேரும் குலமன்னரும்
குடையும் மதமாவும் மாவுத்தரும்
சுடியும் பரியும்இ ராவுத்தரும்
தொடரும் சிவிகையும் சூழ்வண்டிலும்
பிடியும் பிடியூரும் மடவாரும்
பிறழ்வேல் வீரரும் பெருமல்லரும்
துடியும் முரசமும் தாரைசங்கும்
துன்று பெருஞ்சேனை சூழச்சென்றான். 4

கோசல நாடு சேர்ந்தான்

சூழும் நாட்டம்தி எழப்பாயும்
துருமை தகர்சேவல் சிவல்குறும்பூழ்
தாழும் நாட்டமான வரும்சுற்றச்
சனித்தோர் பிறப்புஏழும் கடப்பதுபோல்
ஏழு நாள்தங்கி எட்டாம்நாள்
இனிய கோசலம் எனும்பெயரால்
வாழும் நாட்டதின் வளமைபொன்றி
மகிழ்ச்சி வறிதான வாறுகண்டான். 5

கோசலநாட்டின் அவலத் தோற்றம்

வயலும் உழவில்லை; நடவும்இல்லை;
மழையும் மணம்இல்லை; அடைவும்இல்லை;
முயலும் தொழில்இல்லை; எழிலும்இல்லை;
முகமும் ஒளிஇல்லை; மொழியும்இல்லை;
இயலும் இசையும்நா டகமும்இல்லை;
இன்ப மாதர்க்கும் இளைஞருக்கும்
மயலும் இலை;மாலை குழலில்இல்லை;
மணிமே னியில்பூண்ஆ ரமும்இல்லையே. 6

5. துருமை - எருமை. தகர் - ஆடு. சிவல் - காடை. குறும்பூழ் - கவுதாரி. இவற்றில் பயில்பவராய்த் தாழ்ந்த மக்களும் சூழ்ந்து வர.

உறைந்த மலர்கொய்து தொடுக்கைஇன்றி
உதிர்ந்த, தியர்தம் திரவியம்போல்;
நிறைந்த குளக்கீழும் பயிர்வாடி
நின்றது, உலுத்தரை அடைந்தவர்போல்;
சிறந்த பலமாவின் கனிகள்சிந்தித்
தேறல் துறைதோறும் பாய்ந்துசெல்ல
வறந்த கதிர்ச்செந்நெல் படிந்துமண்மேல்
மறித்து முளைத்தது கனிநறவால். 7

அயோத்தியின் அலங்கோலம்

சிவன் நீங்கியஉ டல்போலே
திருவை நீங்கியநாட் டினைக்கண்டு,
தாவம் உளதுஎன்று மனம்கவன்று
சாரும் பரதன், தன் நகர்நோக்கி
மேவும் இரவியை விருந்துசொல்லி
விலக்கும் படிபோலும் கொடிகாணான்;
நாவ லோர்தமை வருகஎன்று
நவிலும் முரசின்கோ ஷமும்கேளான். 8

கொலையா னையும்பொன்னும் வயிரியர்தான்
கொள்ளை கொடுபோகும் குறிகாணான்;
நிலையாறு அதுவெள்ளம் வடிந்தாற்போல்
நிர்மா னுடமான தெருவிற்சென்றான்;
சலியா மாதுஇல்லா நகர்போலும்
தம்பி என, வந்த சத்துருக்கன்
சிலையார் புயஐயா, ஒரு துன்பல்ல
திருவும் பிரிந்தாள்என்று இறைஞ்சிச்சொன்னான். 9

7. உலோபிகளின் தலைவாசலிலே வாடிக் கிடக்கின்ற பரிசிலர்போலப் பயிர் வாடி நின்றது.

8. உயிர் நீங்கிய உடலைப்போலத் திருமகள் நீங்கிய நாடு, பொலிவு இழந்து இருப்பக் கண்டு. தாவம் - தாபம் - தீங்கு.

9. வயிரியர் - பாடகர். நீர் அற்ற ஆறுபோல் வெறிச்சோடிக் கிடந்த தெரு. மாது - இலட்சுமி.

கைகேயியைக் கண்டான் பரதன்

நீடி வளர்வாசல் தனிற்புகுந்து
நிருபர் கோமானைப் பணியஎன்று
தேடி இடம்எங்கும் காணாமல்
சிந்தை கலங்கும்பர தன்தன்பால்
ஓடி ஒருத்திவந்து அடிவணங்கி
உன்தாய் வரச்சொன்னாள் எனவும்எய்தி,
சூடி முடியார அன்னைபாதம்
தொழவே தழுவிக்கொண்டு அவள்சொல்வாள்: 10

தந்தையின் மரணச் செய்தி

என்அப் பரும்தாயும் எங்கையரும்
இனிய ரோஎன்ன, இனியர்என்றான்;
தன்அப் பனைஎப்பால் உளன்எனவே,
தகுவா னகம்உற்றான் சுரர்போற்ற;
உன்னப் பரிதாபம் ஒழிஎன்றாள்;
உரைத்த மொழிஎன்னும் உரும்இடியால்
வன்னப் பனைஒத்த கரவேழம்
மண்ணில் வீழ்ந்தாற்போல் அவன்வீழ்ந்தான். 11

புலம்பினான் பரதன்

பொழிந்தான் இருகண்ணீர்; கொடியஇச்சொல்
புகன்ற தறுகண்மை புதியதுஎன்றே
எழுந்தான் பதைத்திட்டான் அரற்றல்உற்றான்;
எந்தை யேஎந்த முடிமன்னரும்
தொழும்தாள் அரசே,இத் தலம்வருந்த
சுரர்க்கு விருந்தாகச் சுகித்தனையோ?
செழுந்தார் உமைபங்கன் சிலைமுறித்த
திறல்மைந் தனைஎங்ஙன் பிரிந்துசென்றாய்? 12

மாலுக்கு அடல்ஆழி கொடுக்கஎன்றோ
மற்றும் போர்வந்த தானவர்தம்
மாலுக்கு இமையோரும் தானும்நின்பால்
மறையப் புகன்றாரோ அதனாலே

மாலுக்கு உறுபகை அறுக்கஎன்றோ
வாழ்வுற் றார்உனைக் காணஎண்ணும்
மாலுக்கு இரங்கியோ வானம்சென் றாய்
மைந்தன் முடிசூடக் காண்பதுஎந்நாள்? 13

நின்றுஇவ் உலகோர்உன் மதிக்குடையின்
நிழல்இன் றியேவாடல் நினைந்திலைநீ
சென்று வானில்கற் பகநிழலில்
சேர்வா யோஎன்று சோர்வானை,
அன்று தாய்தேற் றிடத்தேறி,
அண்ணல் தாய்தந்தை குருதெய்வம்
வென்றி வரராமன் திருப்பாதம்
மேவித் துயர்தீர்வேன் என்றுஉரைத்தான். 14

இன்னமும் கேட்க இருப்பது எத்தனை துன்பமோ?

தானும் சிதையும் இளையோனும்
தடங்கான் நடந்தனர் எனக்கேட்டான்;
ஊனும் உயிரும்வெந்து உலையஎன்றோ
உரைக்கக் கேட்பதுஎத் தனைபாவம்!
கோனும் இறக்கவோ இறந்தபின்னோ
கூறுக எனக்,கோனும் இருக்கஎன் றாள்;
மானும் இருக்கவே வனத்திற்செல்ல
வந்த பழுதுஎன்ன மொழிவை?என் றான். 15

மறாத வரம்பெற்று இராமன்தன்னை
வனத்தே விடுத்துஉனக்கு அரசுகொண்டேன்;
பொறாதே இறந்திட்டான் மன்னன்எனப்
புதல்வன், தொழும்கையால் செவிமூடி
அறாதே உதிரம்கண் சொரியப்பொங்கி
ஆகம் புகைந்துவெந்து அழல்உயிர்த்துப்
பெறாதே இனிப்பாரில் இருக்கஎன்னாப்
பிறழ்வாய் மடித்துக்கை அடித்துமண்மேல்; 16

13. மாலுக்கு - திருமாலுக்கு - இராமனுக்கு. தானவர் தம்மால் உக்கு - அசுரர்களால் தோற்று. தான் என்றது இந்திரனை. மாலுக்கு உறுபகை, மால் - இந்திரன். மானும் - மன்னனும் (மன் - மான்).

பரதனது கோபாவேசம்

குழிப்பு: தனதனத்தன தனதனத்தன

அடிவிடப்புவி அலைகடல்தலை
　　அலைமரக்கலம் அதனைஒத்துஉக
　　அமரர்உட்கிட இரவிமட்கிட
　　அடர்திசைக்கரி உடல்நடுக்குஉற
இடிபுடைக்குரல் உணர்வுகெட்டுஉக
　　விழிபுதைத்துஇய மனும்வெருக்கொள
　　இதயம்இப்படிக் கொதிகொதித்துஇவள்
　　இனிதுபெற்றவள் எனமதித்திலன்;
நெடியஉத்தமன் முனியும்முற்றெழு
　　நினைவுறப்படர் சினம்அடக்கினன்;
　　நிலைநிறுத்தினன், அலதுஇமைப்பினில்
　　நினைவதைப்பன் நெறிகெடுத்தனை;
முடியுடைத்தலை வனைமுடித்தனை;
　　அடவியிற்கும ரனைவிடுத்தனை;
　　முழுதுஅளித்தனை உலகைஎற்கு,இனி
　　முதல்மநுக்குலம் முறைமைதக்கதே.　　17

தாயைக் கோபித்தும் தன்னை நொந்தும்
கொடுஞ்சொல் கூறினான் பரதன்

வாயால்மன் உயிரைஉண்டீர்;
　　வாழ்வுஎன்றால் பூமிபொறாள்;
தூயோன்காடு உறைந்ததுஎன்னை?
　　சூழ்ச்சி,யான்பார் ஆள்வன்என்றோ!
தீயான்என்று எண்ணினரோ
　　சிந்தையுள்ளே தந்தைஎன்னை;
தாயாரே நன்றுதந்தீர்
　　தடமுலைப்பால் அன்றுதந்தீர்.　　18

18. வாழ்வு என்றால் பூமி பொறாள் – 'திரு எய்தி என்றும் நீரே வாழ உவந்தீர்' – இது நடக்காது; உலகோர் ஒப்பார். வாழ்ந்தால் நீ ஒருத்தியே வாழலாமே அன்றி, உலகோருடன் சேர்ந்து வாழ்தல் இயலாது என்பது கருத்து.

　　நோயிர் அல்லிர் நும்கண வன்தன் உயிர்உண்டீர்
　　பேயி ரேநீர் இன்னம் இருக்கப் பெறுவீரோ
　　மாயிர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
　　தாயி ரேநீர் இன்னம் எனக்குஎன் தருவீரே.　　—கம். 74.

அனவரதன் அடகுஅருந்த
 அமுதநெய்பால் உணஇருந்தேன்
உனைவதையேன் நான்இறவேன்
 ஒள்ளியர்போல் இங்குநின்றேன்
இனவிடம்உண் ணாதுகொல்லாது
 என்றுஇருந்தேன் அன்றிஇரேன்
முனிவர்விண் ணோர்உலகுஅறிய
 முயலுகின்றேன் தவம்இனியே. 19

கோசலையிடம் போனான்

பெற்றாய்வெம் பழிபாவம்
 பெருந்துயரம் கெடஇனிநான்
நற்றாய்தாள் பணிவன்என்று,
 நண்ணியகோ சலைத்திருமுன்
கற்றானும் விழுந்துமண்மேல்
 கடவுளரும் கண்கலங்கப்
பொற்றாளை இருகையினால்
 பூண்டுகொண்டு புலம்பல்உற்றான். 20

கைகேயி செய்த கபடத்தை அறியாயோ?

எந்தைஎங்கே? என்முன்எங்கே?
 எந்தாயிர்! உரைத்தருளீர்;
நிந்தைஎன்னால் நெறிமரபில்
 நிகழ்ந்தது,மாண்டு ஒழிவன்என்பான்;
சிந்தைகண்டாள், கைகைசெய்த
 திங்குஅறியா யோ?எனத்தான்
நொந்துஅயர்வான் நல்லறமும்
 நொந்திடவே நுவலல்உற்றான். 21

19. உண்ணாத நஞ்சு கொல்லாது என்பதால் இருந்தேன். இல்லை என்றால் உயிரோடு இருக்கமாட்டேன். பழிக்கு அஞ்சி உயிர் விடுதலினும் உயிரோடு இருந்து நான் குற்றம் அற்றவன் என்பதை மெய்ப்பிப்பது மேல் அல்லவா? நஞ்சு உண்டவரைத்தான் கொல்லும். நஞ்சனைய உன் செயலில் பங்கு கொண்டால் தானே அது என்னைப் பழிக்கும் பாவத்துக்கும் ஆளாக்கும் என்பது குறிப்பு.

அனவரதன் - எப்போதும் இருப்பவன் - இராமன்.

அறியேன், சத்தியம் தாயே

திறம்தெரியாள் செயும்கொடுமை
 தீவினையேன் முன்புஅறிந்தால்,
அறம்தணந்தோன் அருள்மறந்தோன்
 அந்தணர்க்குத் தீமைசெய்தோன்
மறம்தலையில் புறங்கொடுத்தோன்
 மதலையைமா தரைப்பசுவை
இறந்துபடக் கொன்றவர்வீழ்
 எழுநரகில் புகக்கடவேன்; 22

மறைநெறியை இகழ்ந்துஉரைப்போர்;
 மால்பரமன் தனைமறப்போர்;
இறைநெறியில் கொள்ளாதோர்;
 இரவலர்தம் பொருள்பறிப்போர்;
முறைநெறியில் நில்லாதோர்;
 முயன்றுபிறர் தாரம்என்னும்
நறைநெறிசேர் குழலியரை
 நற்பொருளை அபகரிப்போர்; 23

பெற்றவர்தாம் பசித்திருக்கப்
 பெண்டுடன்தா னும்புசிப்போர்;
உற்றவரைக் கைவிடுவோர்;
 ஊர்மனையில் நெருப்புஇடுவோர்;
குற்றமது பெருகிடஓர்
 குரவரைத்தே வரைப்பழிப்போர்;
கற்றவரைத் தூற்றிடுவோர்;
 கன்னியரைக் கட்டழிப்போர்; 24

நன்றிதனை மறந்திடுவோர்;
 நட்டாற்றில் கைவிடுவோர்;
மன்றில்அழி வழக்குஉரைப்போர்;
 வைத்தஅடைக் கலம்மறப்போர்;
கன்றுஅகன்ற பால்கறப்போர்;
 களரியில்பொய்க் கரிஉரைப்போர்;
ஒன்றுசெய்வேன் என்றுபின்னில்
 உண்டுஇலைஎன் னாதுபொய்த்தோர்; 25

இடம்வருதன் நாட்டைஎல்லாம்
இடைந்துஓடக் கொள்ளைகொள்ளும்
திடம்வருமாற் றாரைவெல்லச்
சேவகம்இல் லாதமன்னர்;
உடன்வருமா தரைவழியில்
உடைபறிக்க ஓடிவந்தோர்;
புடம்வருபொன் களவுகொள்வோர்;
புகுநகரம் புகுவன்என்றான். 26

பரதனை வாழ்த்தினாள் கோசலை

என்னும்உரை பகர்ந்தவனை
இராமன்வரக் கண்டவள்போல்
மின்னுமுலைப் பால்சொரிய
விம்மிவிம்மி அழுதுஇரங்கி,
மன்னுலகில் உனக்குஇணையார்
வாழிஎன்று வாழ்த்தி,உந்தை
இன்னுடல்விட்டு எட்டாம்நாள்
இன்றுசெயும் கடன்செய்என்றாள். 27

தசரதன் சரீரத்தைக் கண்டு கதறினான் பரதன்

தாயைஇரு தாள்பணிந்து,
தவமுனிவனு டன்போந்து,
தூயதந்தை மேனிகண்டு,
சோர்ந்துமண்ணில் வீழ்ந்துஅலறி,
காயம்தன்னை ஈன்றவனைக்
கண்ணீர்மஞ் சனம்ஆட்டி,
நேயமுடன் பூண்டவனை
நெறிமுறையோர் வாங்கியபின்; 28

27. முன்னை நின்குல முதலு ளோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்
மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள்
உன்ன உன்னநைந்து உருகி ஏங்குவாள். —கம். 120.

தந்தை இறந்து எழு நாள்கள் கழிந்தன. இன்று செய்கடனைச் செய்க என்றாள் கோசலை. அப்படிச் சொன்னது வசிட்டர் என்பார் கம்பர்.

28. தன்னை ஈன்றவனாகிய தசரதன் காயம் - சரீரத்தை.

தசரதன் சரீர தகனம்

திண்புடைப்பூ மானம்மிசைத்
திறல்வேந்தன் தனைஏற்றி
நண்புடைப்பூ பாலர்மினார்
நகரிசனம் பேரிசங்கம்
கண்புடைத்தே அழுதுவிம்மக்
கரிபரித்தேர் முன்புசெல்ல
பண்புடைத்தே வியருடனே
பாய்திரைநீர்ச் சரயுஉற்றார். 29

இதுவோ என் அன்னை எனக்குச் செய்த நன்றி

மொழிந்தமறை நெறிமுறையால்
முனிவீரா கடன்செய்என;
எழுந்தவனை, வசிட்டன்,உன்னை
இகழ்ந்துசென்றான் உந்தைஎன;
பொழிந்தகண் ணீருடன்புரண்டு
புதல்வர்செய்பூ சனைக்குஉரிமை
ஒழிந்தபுல்லேன் உலகுஆள
உரியவனோ என்றுஅழுதான். 30

அருமரபில் பிறந்துஒருநான்
அவம்ஆனேன் பதர்ஆனேன்
பெருமைஅன்னை செய்ததுஎன்ன;
பின்இளையோன் முனிமொழியால்
உரிமைசெய்தான்— மலர்க்கொடிபோல்
ஒண்ணுதலார் முகம்மலர்ந்து
வருமயில்போல் அனல்புகுந்தார்;
வன்னிநன்னீ ரிலும்குளிர்ந்தான். 31

29. பூ மானம் - மலர் விமானம்.

30. முனி - வசிட்டர்.
பிரேத பூசனைக்கு உரிய பேறிலேன்
அரசு செய்யவோ. —கம். 127.

31. ஆவ நான்பிறந்து அவத்தன் ஆனவா. —கம். 128.
என்னை என்னையே ஈன்று காத்தஎன்
அன்னை யார்எனக்கு அழகு செய்தவா. —கம். 129.

பத்து நாள்கள் கழிந்தபின்

இறையவன்தன் கடன்இயற்றி
    எழிற்பரதன் மனையில்உற்றான்;
நிறையவரு பத்தாம்நாள்
    நெறிமுறையால் வினைமுடித்து
மறையவரும் மாமுனியும்
    மந்திரிக ளுடன்நாட்டில்
உறையவரும் துயர்தீர
    உயர்குமரன் பால்நடந்தார். 32

10 ஆற்றுப் படலம்

—வனம் போன இராமனை அழைத்துவரப்
பரதன் சென்ற வழியிலே நிகழ்ந்தவை

பரதனை அரசாளும்படி வேண்டினார் வசிட்டர்

விரத மறையோரும் விறல்மன்னரும்
விறல்நாட்டு அறிஞரோடு அமைச்சர்களும்
பரதன் தனைக்கண்டு சூழ்ந்துஇருந்தார்;
பாரின் பொருட்டாக, சுமந்திரன்தான்
வரதன் முனிவனை முகம்நோக்க,
வசிட்டர் குமரனை முகம்நோக்கிச்
சரதம் இவர்வந்த காரியம்நீ
தரணி தனைத்தாங்க வேண்டும்என்றான். 1

புரக்கும் அரசில்லா உலகில்உள்ள
புண்யம் நெறிநில்லா; மதியம்இல்லாப்
பரக்கும் இரவும்,நல் இரவிஇல்லாப்
பகலும், உயிர்இல்லா உடலும்ஒக்கும்;
இரக்கும் புவியோரை இடர்தீர்க்க
ஈன்ற தாய்தந்தை தமையன்தந்தால்
கரக்கும் படிஅன்று, தருமம்தன்னைக்
காக்கும்படி நன்றுஇப் படிசெய்என்றான். 2

கலிகாலம்தான் இது

நாட்டைப் புரஎன்று முனிவன்சொல்ல;
நஞ்சை அருந்துஎன்றால் நடுங்குவர்போல்
வாட்டத் துடன்உள்ளம் தடுமாறி,
வள்ளல் இருக்கவே எனக்குமுடி
சூட்டத் தகும்என்றுஎன் ஐயர்சொன்னால்
சொற்ற தாய்மேல்ஓர் குற்றம்உண்டோ?
கேட்டைச் சூழ்ந்தவள்செயல் நன்றுஎன்றீர்!
கெட்ட கலியோஇக் காலம்என்றான். 3

மூத்தோன் இருக்கமண் ஆளப்பின்னோன்
முன்னோர் தமிலுண்டோ? மொழிந்திடுவீர்;
காத்தோர் உளர்,ஈது நன்றுஎனினும்
கருதேன் மனத்தாலும்; அனைவரும்போய்
வாய்த்தோன் தனைஇங்கே வரக்கொணர்ந்து
மகுடம் சூட்ட—அல் லாதிருந்தால்
நீத்தேன், அவனோடும் வனத்திற்செல்ல
நினைத்தேன் இனிச்சொன்னால் இறப்பேன்என்றான்.

வாழிய நின்புகழ்

வேந்தும் பெருமானும் கொடுத்தசெல்வம்
வேண்டாது இகழ்ந்திட்டான்; வேள்விசெய்து
ஈந்து பரவலுறும் கீர்த்திவேறுஎன்
என்று,என்று அனைவோரும் வாழிஎன்ன—
பூந்திண் புயனும்தம் பியைக்கூவிப்
புனிதன் தனைஇங்கே கொணர்வோம்என்ன;
ஏந்தும் முரசுஏற்றித் தானைதன்னை
எழவே சாற்றச்சொல், எனஉரைத்தான். 5

நகரமாந்தர் எழுச்சி

முரசம் சாற்றஅந் நகர்,சோமன்
முளைத்த கடல்போல எழுந்துஆர்க்க,
இரசம் செவிஆர, பெருஞ்சேனை
இரதம் கரிவாசி தரைமூட,
விரசு கொடிஆடை வெளிமூட,
விரிஞ்சன் வழியையும் துகள்மூட,
அரசின் மேல்வைத்த கைகைநெஞ்சில்
ஆசை போய்த்துன்பம் மூடியதே. 6

5. வேள்விகளைப் புரிந்து தருமம் செய்து பெறுகிற புகழ் வேறு இல்லை. தசரதன் உனக்குத் தந்த அரசை மறுத்தாய். அரச குமரரிலே உன்னைப்போலச் சிறந்த குணம் படைத்தோர் யாரும் இல்லை.

ஆழியை உருட்டியும் அறங்கள் போற்றியும்
வேள்வியை இயற்றியும் வளர்க்க வேண்டுமோ
ஏழினோடு ஏழெனும் உலகம் எஞ்சினும்
வாழிய நின்புகழ் என்று வாழ்த்தினார். —கம். 20.

6. சந்திரனைக் கண்ட கடல்போல.

மழையின் ஒலிபோலும் நகர்ஓசை
　　மாவின் மால்போலும் வளர்சேனை
விழையும் திருவோடு நடந்தவன்போல்
　　வேழம் பிடியோடும் அடைந்துசென்ற
தழையும் பிடியானை நடைதோற்றுத்
　　தகும்பொன் முலையாரைச சுமப்பதுஒக்கும்;
குழையும் கொடி,கீதம் பொழிந்தகண்ணன்
　　கோலம் காணச்செல் மடவார்போல். 7

வனைந்த முகிலோடு மதிநிழற்ற
　　வானில் ஆதித்தன் பாரில்எய்த
அனந்த உருவானான் என,வேந்தர்
　　ஆனை மேல்சென்றார், குடைநிழற்ற;
புனைந்து தேரில்செல் வாரிஒன்றும்
　　புரவி மீதில்செல் புணரிஒன்றும்
நனைந்த மாவில்செல் வேலைஒன்றும்
　　நடக்கும் கடல்ஒன்றும்— நாற்கடலே. 8

சங்கம் குழல்வீணை பேரிபம்பை
　　தாளம் முதல்மற்றும் மேளம்எல்லாம்
எங்கும் தொனிஇன்றி அடங்கிச்சென்ற,
　　இதரர் கூட்டத்துள் அறிஞரைப்போல்;
பொங்கும் சுடர்ஆரம் அணியாமல்
　　புதல்வர் மருள்கொள்ளத் தோன்றுமெய்யார்
கொங்கு கமழ்கோல மலர்உதிர்ந்த
　　கொம்பு போல்சென்றார் கோதைநல்லார். 9

7. திருமால்போல வளர்ந்தது சேனை. இராமனை வேழமாகவும் சீதையைப் பிடியாகவும் கொள்க. பெண்களின் நடைக்குத் தோற்ற பிடிகள், தோல்விக்கு அறிகுறியாக அவர்களைச் சுமந்து சென்றன. துகிற் கொடிகள் துவண்டு அசைதல், இராமனைக் காணச் செல்லும் மகளிர் போன்றதாம்.

8. தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைப் படைகளையும் தனித்தனி கடலாகக் கூறினார்.

9. இதரர் - கீழோர். அறிஞர் கூட்டத்துள் இதரர்போல அடங்கிச் சென்ற.

தக்க புகழ்மன்னன் குடைஒன்றுஇன்றிச்
சகல குடைபெற்றும் தடஞ்சேனை
தொக்க பலமீனும் பூத்துவிண்ணில்
சோதி மதிஇல்லா இரவுஒத்ததால்;
மிக்க படைதன்னைச் சுமந்தஇப்பார்
மெல்லி யாள்என்ற விபரம்என்னே!
மைக்கண் மடமங்கை செய்தநன்றி
மடவார் மருங்குக்கோ வாய்த்ததுஎன்றார். 10

மன்னர் புயம்மாலை சாந்தம்இன்றி
மாசு நீங்கிய மலைகள்ஒத்த;
முன்னம் மணிஆரம் துறந்துபெண்ணார்
முலைகள் நெரிந்தசெவ் இளநீர்போல்;
மின்னில் விழியில்மை எழுதாமல்
விளங்கக் கழுவிய வேல்போன்ற;
சொன்ன பரிபுரம் துறந்துசெந்தாள்
சுரும்பு முரலாத மலர்ஒத்தவே. 11

வெறிச்சோடிக் கிடந்தது அயோத்தி

திருவும் அருந்தவம் புரியப்புக்காள்;
சிலைமா ரனும்துன்பக் கடலுட்புக்கான்;
துருவு மலைபாரில் அழுந்துகையால்
சுவர்க்கம் அலைநீரைக் குடிக்கையினால்
மருவு தமிழ்க்குறு முனியைஒத்த;
மலரோன் மதிஒத்த மகசேனை;
மருவு தமிழ்க்குறு முனிகுடித்த
வாரி போன்றது மாநகரே. 12

12. சேனை, செல்லும் வழியிலே மலைமீது ஏறி மிதிப்பதால் அது பூமியிலே புதையும்படி அழுந்தியது. ஆறு, குளம், குட்டைகளின் நீர் அறப் பருகியதால் அவை வறண்டிருந்தன. இதனால் அச் சேனை அகத்தியரைப் போன்றதாம். அகத்தியர் விந்திய மலையை அடக்கினார், கடலைப் பருகினார் அல்லவா? அவர் கடல்நீர் முழுவதையும் பருகியபோது வறிதான கடல்போல வெறிச்சோடித் தோன்றியதாம் அயோத்தி.

வேழ மதம்அன்றி மணம்ஒன்றில்லை
மின்னார் இடைஅன்றி மின்ஒன்றில்லை
சூழ வரும்மேளத் தொனிஒன்றில்லை
சுவரில் எழுதிய சித்திரம்போல்;
மாழை விழிமார்பில் உருவாமல்
மால்காடு உறைந்தது, கவசம்ஒத்த;
ஆழ முலையில்கண் அழுந்தாமல்
அகற்றி யதுகைகை மேல்கோபம். 13

கூனியைக் கண்டு கோபித்தான் சத்துருக்கன்

தானைக் கடல்இங்ஙன் விரைந்துசெல்லத்
தானும் பரதன்வற் கலைஉடுத்தி,
வானைத் தொடுதேர் இளவலுடன்
மணிவா கனம்தன்னில் அனைவோரும்
ஏனைக் கிளைஞரும் மறையோரும்
இனிய அமைச்சரும் சூழச்சென்றான்—
கோனைக் கொலும்கூனி செலவும்கண்டு
கோபித்து இளையோனும் போய்ப்பற்ற; 14

நடந்தே சென்றான் பரதன்

தாய்என்று உணரேன்நான் வதைத்திடுவேன்
தலைவன் முனிவான்என்று ஒழிந்ததுஎன்று
நேயன் பரதனுமே விலக்கிஅப்பால்
நெடிய விமலனும் தங்கியகாவில்
போய்அங்கு அதில்தங்கிக் காய்கனியும்
புனலும் அருந்தாமல் பொடியுள்வைகி,
தூயன் நடந்துசென் றனன்எனவே
துயரத் தொடுதானும் நடந்துசென்றான். 15

13. சேனையில் எவ்வித ஆரவாரமும் இல்லாததால் அது சுவரிலே எழுதிய சித்திரம்போன்றிருந்தது. மகளிர் கண்கள் என்னும் அம்பு ஆடவர் மார்பிலே பாய்ந்து தொளைத்து உயிர் உண்ணாதிருக்க அவர் தரித்த கவசம் போன்றதாம், இராமன் காடுறைந்தது.

11 கங்கைப் படலம்

—கங்கைக் கரையிலே குகன் பரதனைச் சந்தித்ததும்
அப்போது நிகழ்ந்ததும்

கங்கையை அடைந்தான் பரதன்

பொன்னிநல்நாடு ஆனநாட்டைப்
புனைகழற்கா லால்நடந்து
மன்னிஅகல் மாஇரங்க
வள்ளல்உற்றான் கங்கைதனை;
துன்னிநல்நீர் கரிமதத்தால்
சுரும்புஅலது விரும்பரிதாய்
உன்னிஉண்டும் நீந்தியுண்டும்
உயிர்ப்புடனே நடந்தனவால். 1

வடகரையைப் பார்த்தான் குகன்

கருங்கடலைக் கலந்தகங்கை
கடந்ததுஇச் சேனைஎன்னும்
பெருங்கடலைக் கண்டு,குகன்,
பெருமான்மேல் பொரஎழுந்தான்;
அருங்கடன்,என்று— அக்குரோணி
அறுபதினா யிரம்தனையும்
ஒருங்கிடவே கண்சிவந்து
உரும்இடிபோல் உடன்றுஎழுந்தான். 2

குகனுடைய கோபாவேச வீரவுரை

கச்சைகட்டி வில்பிடித்துக்
கச்சையின்மேல் சாட்டைகட்டிச்
செச்சைகொட்டி, இப்படைஓர்
சிற்றெலிகாண், நான்அரவம்;

குறிப்பு: கம்பராமாயண அச்சுப் புத்தகங்களிலே இப் படலத்தின் பெயர் குகப் படலம் என்றே காணப்பெறும்.

2. பொர - போர் செய்ய. எழுந்தானைத் தடிதல் என்று. ஒருங்கிட - ஒழித்திட.

விச்சைகெட்ட இவரைவிண்மேல்
விடுவன்என்றான்; மேதினிமேல்
இச்சைகெட்டு வந்ததுஎன்றான்;
எழுகஎன்றான் தன்படையை. 3

வெம்புலிபோல் அந்தகன்போல்
வெவ்அழல்போல் வீரமுடன்
கொம்புபம்பை துடிமுழங்கக்
கூடியநம் வேடுவரே,
நம்புனிதன் மேல்எழுந்த
நண்ணார்தன் சேனைபட,
சம்புவனை, துடிஎறிமின்
தடங்கள்எலாம் ஓடிஎறிமின். 4

குழிப்பு: தன்னதன தன்னதன தன்னதன தான

மஞ்சனைய நம்பரமன் அம்புவியை ஆள
வஞ்சனைபு ரிந்துஅரசு கொண்டகொடி யாரோ
வெஞ்சமர்ம லைந்திடவும் வந்துஅணுகி னாரோ
வெம்பும்எனது அம்பும்அவர் கும்புகுலை யாதோ
குஞ்சரம்நி றைந்தபடை நம்படைமுன் நேரோ
கொண்டுநதி யின்கரைக டந்துசெலு வாரோ
பஞ்சமிகு தம்பிஎனும் நம்பிபொரு ளாலே
தந்துஉயிர்வ ழங்கிடினும் நன்றுதக வாமே. 5

3. கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
கிட்டியது அமர்எனக் கிளரும் தோளினான். —கம். 9.
எலியெலாம் இப்படை அரவம் யான்என. —கம். 10.

5. அஞ்சன வண்ணன்என் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யால்அரசு எய்திய மன்னரும் வந்தாரோ
செஞ்சரம் என்பன தீஉமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றுஎனை ஓதாரோ. —கம். 14.
ஆழ நெடுந்திரை ஆறு கடந்துஇவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்ஒரு சொல்அன்றோ
ஏழைமை வேடன் இறந்திலன் என்றுஎனை ஏசாரோ. —கம். 15.

வரும்பழியும் வெந்தொழிலும் இங்கிவர்ள ணாரோ
வனம்பொரவ ளைந்திடின்வ ளங்கள்பெறு வாரோ
இரும்பொன்மகு டம்தனைஇ கழ்ந்தவனோடு ஏகாது
இருந்ததுவும் நன்று,கடன் இன்றுகழி யேனேல்
விரும்புஅடி மையும்பெரு மையும்பழுது றாதோ
விடம்பொருவு சிந்தையள்ம கன்படையை நானே
பொரும்படைசொ ரிந்துமத வன்களிறு மாஆள்
புரண்டுஉருள வென்றுபுகழ் இன்றுபுனை வேனே.

கான்றவர்க்கோ திரணம்ஒரு
கணைக்குஇரைபோ தாப்படையை
ஏன்றவர்க்காச் சுரர்வரினும்
இன்றுகொன்று வேடர்தந்தார்
சான்றவர்க்காய் அரசுஎனும்பேர்
தனைப்பெறுவோம்; அனைத்துஅறமும்
போன்றவர்க்கோ இடர்நினைந்தார்,
புடவிதந்தார்க்கு அடவிதந்தார். 7

பரதனுக்குக் குகனை இனங்காட்டினான் சுமந்திரன்

என்றுகுகன் சேனையொடும்
எதிர்த்துநின்றான்; சுமந்திரனும்
ஒன்றுசொல்வான் பரதனுடன்
உன்தமையன் தோழன்இவன்
துன்றுபெரும் படையுடையான்
துறைஓடம் பலவுடையான்
இன்றுநினைக் காணநண்பாய்
எதிர்கொளநின் றான்எனவே. 8

வடகரையில் நின்ற பரதனைப் பார்த்தான் குகன்

என்னுடையான் தோழன்என்றால்
யானேபோய்க் காண்பன்என்று
தன்னுடைய தம்பியொடும்
தயங்குகங்கைக் கரையில்நிற்க;

7. கான் தவர் - கானில் தவம் புரியும் இராமலக்குவர்.
8. நின்றான் எனவே ஒன்று சொல்வான்.

மன்னிடையில் வற்கலையும்
மாசுடம்பும் கண்டுகுகன்
மின்னுடைக்கைச் சிலைபாரில்
விழஉள்ளம் விம்மல்உற்றான். 9

எங்கோனும் இளவலும்போல்
இருந்ததுஇந்த இருவர்பண்பும்;
நங்கோமான் உடன்பிறந்தார்
நற்றுவரோ குற்றவினை?
செங்கோல்நீங் கியவேடம்
சென்றுஅறிவேன்; வரும்அளவும்
இங்குஓடம் விடவேண்டா
என்றுஓடம் ஒன்றில்வந்தான். 10

குக - பரதர் சந்திப்பு

மெத்தயனும் தொழப்பெறுவான்
வேடுவர்வேந் தனைத்தொழவே,
மைத்தமெய்யால் அணைத்து,அவனும்
வந்ததுஎன்ன வாறுஅதுஎன்ன,
அத்தனைநாடு ஆளஅங்கே
அழைக்களனக் கேட்டகுகன்,
உத்தமரா கவற்குஇளையீர்!
உனக்குகிணையார்? என—பணிந்தான். 11

9. என் உடையான் - என்னை உடைமைப் பொருளாகக் கொண்ட இராமன். கையில் மின்னல் போன்ற சிலை.

10. நற்றுதல் - நத்துதல் - விரும்புதல்.

நம்பியும்என் நாயகனை ஒக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடம் தலைநின்றான்
துன்பம்ஒரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்.
—கம். 30.

11. மைத்த - கருத்த. அத்தன் - இராமன்.

வந்தெதிரே தொழுதானை வணங்கினான்; மலர்இருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனும்அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத் தழுவினான்— தகவுடையோர்
சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக்கும் சீர்த்தியான். —கம். 32.

கம்பனிலே இந்தக் கட்டத்தைச் சர்ச்சைக்கு இடம் ஆக்கினார் சிலர். பரத குகர் சந்திப்பிலே முதன்முதல் யார் பாதத்திலே யார் விழுந்தது? பரதனே

நின்மரபோர் புகழைஎல்லாம்
நின்புகழா கப்படைத்தாய்
தன்மமெய்யாய் என;பரதன்
தலைவன்இங்கே உறைந்தஇடம்
நன்மையுள்ளோய் காட்டு,எனவே—
நண்பனும்அவ் விடம்காட்ட,
மன்மலைபோல் வருத்தம்என்னால்
ஆனதுஎன்றே வாடிநொந்து; 12

கான்இலைகாய் அமுதுசெய்தாய்!
கல்லினும்புல் லினும்துயின்றாய்!
யான்உலகை ஆளநின்றேன்
எங்கோவே என்றுஅரற்றி,
தான்,இளையோன் செயல்கேட்டான்;
தலைவனும்சி தையும்துயில
மேனிகள்காத்து இமையாமல்
வில்லுடன்நின் றான்எனவே. 13

அடியன்நின்றேன் துயர்விளைக்க
ஆற்றநின்றான் இளவல்என்று
பொடிஅதின்மேல் அன்றுதங்கிப்
புகழ்க்குகனை முகம்நோக்கி,

குகன் பாதத்தில் விழுந்தான் என்பதுதான் நேர் பொருள். இதையே பாடுவார் எம்பெருமானாரும்.

ஓடத்திலே தனி வந்த குகன், பரதனை நமஸ்கரித்தான். அவ்வளவிலே குகன் பாதத்திலே விழுந்து பணிந்தான். குகனும் தன் அடி விழ்ந்த பரதனை வாரி எடுத்து அணைத்து அங்கே அவன் வந்தது எதற்கு என்று கேட்டான். அரச நீதியினின்றும் தவறிவிட்டான் தசரதன்; அந்த அநீதியை நீக்க இராமனை அழைத்துப் போக வந்ததாகப் பகர்ந்தான் பரதன். இதைக் கேட்டானோ இல்லையோ குகன், இப்படியும் ஒரு சகோதரன் இருக்கவா செய்கிறான்! ஆயிரம் இராமர் உளரானாலும் பரதன் ஒருத்தனுக்கு ஒப்பாகார் என்று, பரதன் பாதத்திலே நெடுஞ்சாணாய் விழ்ந்தான் குகன்.

12. தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்துத் தேக்கிப்
போயினை என்றபோது புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா! —கம். 35,

13. மேனிகள் - திருமேனிகள் - இராமன், சீதை.

நெடியகங்கை கடத்திஎம்மை
நேமியன்தாள் சேர்த்திடுஎன;
கொடியவில்வே டரைஓடம்
கொணர்மின்என்று குகன்அழைத்தான். 14

கங்கையைக் கடந்து செல்கையில்

கங்கைஇடம் இல்லைஎனக்
கயிலையைப்போல் புட்பகம்போல்
எங்கனும்வந் தனநாவாய்
என்றுகுகன் சொல,பரதன்
துங்கமிகு சேனைஎல்லாம்
சுமந்திரனே ஏற்றிடுஎன;
அங்குஅவனும் ஏற்றலுற்றான்
அடல்கரிதேர் பரிகாலாள். 15

ஊழியின்கண் முகில்முழங்கி
உவரிஎங்கும் படர்வனபோல்
பாழிஅங்கை மேல்எடுத்துப்
பரவைவங்கம் போன்றகரி;
வாழிகங்கை, மணிகள்சங்கம்
வளர்தரங்கக் கடல்கடந்து
ஆழிஅம்கை யனைக்காணும்
ஆசைகொண்டே நடந்ததம்மா! 16

கண்கோடா மனத்திகிரி
கனகொடிஞ்சும் தட்டுவைத்து
விண்கோடும் தேர்ப்பரியும்
வெவ்வேறுஏற் றினர்வினைபோல்;

14. நேமியன் - இராமன்.

15. ஏறல் - ஏற்றல்.

16. யுக முடிவிலே மேகங்கள் முழங்கி, கடலெங்கும் மொய்ப்பன போலவும், கடலிலே கூம்புடனே வங்கம் - மரக்கலம் செல்வது போலவும் தோன்றின, யானைகள் கங்கையிலே துதிக்கையினைத் தூக்கி நீந்திய காட்சி. யானைகள் நீந்திச் செல்லும்போது, சங்கு முத்து முதலிய இரத்தினங்களைச் சிதறி, கடலும் தன்னிடத்து வந்து பரவும்படி, அந்தக் கங்கை இராமனைக் காணும் ஆசையால் கரை கடந்து முந்திப் போயிற்று.

எண்கோடி நாவாய்மேல்
இடைமலைந்து புரவிசென்ற
திண்கோடு நெருக்கினபோல்
செவ்விளநீர் திரண்டனபோல். 17

நீந்துகரிக் கும்பம்எல்லாம்
நெருங்குகங்கைக் கொங்கைஒக்கும்;
பாய்ந்துஉலவும் சேல்கயல்போல்
பயந்துமின்னார் விழிபார்க்க
வாய்ந்துடுப்பின் திவலைசிந்த
மாதர்கலை நனைந்துவெட்க
ஈந்துவரும் வெண்முகில்போல்
ஏற்றிவரும் அம்பிகளே. 18

மெய்ந்நெறியே பெரியதுஅன்றே
விண்ஏறியே முனிவர்சென்றார்;
அந்நகரும் அக்குரோணி
அறுபதினா யிரம்படையும்
நன்னதியைக் கடந்து,பின்னே
நானிலத்துஆ சையைக்கடந்த
மன்னவன்தா னும்கடந்தான்
மன்னுகங்கை பின்னிடவே. 19

17. தேர்களைத் தனித்தனி உறுப்புகளாகப் பிரித்து வெவ்வேறு மரக் கலங்களிலே ஏற்றியது, இறந்த பின் உயிரை வெவ்வேறு உடலிற் சேகரிக்கிற வினைபோன்றதுதானாம். மடிஞ்சபின் உடம்பு கூட்டும் வினை என்பார் கம்பரும். கஸ்கோடா - கஸ்கோளா. மனத்திகிரி - மனோவேகம் வாய்ந்த சக்கரம். விண்கோடு - விண் அளாய சிகரம். என்(ணிக்கை) கோடி. கோடு - மலை.

18. வாய்ந்த துடுப்பின்.

19. மெய் நெறி - தவம். வசிட்டர் ஆதிய முனிவர் தவத்தால் சித்தி பெற்றவர் ஆதலின் விண்வழியே ஆற்றைக் கடந்து சென்றனர்.

மெய்வினைத் தவமே அன்றி வேறும்ஒன்று உளதோ. —கம், 61,

குகனுக்குத் தாயரை இனங்காட்டினான் பரதன்

ஏருலவும் குலக்கொடியை
    யாவர்என்று குகன்வினவ;
பேருலகம் பெற்றவனைப்
    பெற்றவள்காண் என்றுஉரைத்துச்
சீருலகம் பெற்றசெல்வம்
    தீர்ந்தவள்என் னால்எனவே,
தாருலவும் வேலன்அன்னை
    தாள்இணைமுன் வீழ்ந்துஅழுதான். 20

மகன்ஆர்என்று அவர்வினவ,
    வரராமற்கு உயிர்த்துணைவன்
குகநாமன் எங்கள்முன்னோன்
    குலவுகங்கைத் துறைவன்என்ன;
மிகன்ஆம்மன் ஐவீரும்
    வீற்றிருமின் எனவாழ்த்த—
அகனாரும் அன்புடைய
    இளங்கொடியை யார்எனவே 21

20. சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
    கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசில்இவர் ஆர்என்று
    குகன்வினவ வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி மூன்றுலகும்
    ஈன்றானை முன்ஈன் றானைப்
பெற்றத்தால் பெருஞ்செல்வம் யான்பிறத்த
    லால்துறந்த பெரியாள் என்றான். —கம். 64.

நைவீர் அலீர்மைந்திர் இனித்துயரால் நாடுஇறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலம்ஆயிற்று ஆம்அன்றே விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறுஅனைய காளைஇவன் தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர் என்றாள்.
—கம். 66.

மிகன் - நால்வருடன் அதிகன் ஆன மன் - குகன்.

நெறியாளன் பின்,பிரிய
    நேயனைஈன் றவள்ளனவே;
மறியாளைக் குகன்வணங்கி,
    மற்றொருதாய் யார்எனவே;
பிரியாததுயர் விளைத்தும்
    பேதலியா முகத்தாளை
அறியாயோ? இன்னம்என்ன—
    அவள்தனையும் அடிபணிந்தான். 22

கங்கையைக் கடந்தனர்

சிவிகையின்மே லாயர்வரச்
    சிந்துகண்ணீர் தனிற்பரதன்
கவிகைஇல்லான் பலகாதம்
    கால்நடையாய்க் குகனுடனே
அவிகைஇல்லாப் பரத்துவசன்
    அனல்வளர்க்கும் ஆசிரமம்
குவிகையினால் சென்றுஅடைந்தான்
    குலமுனிவந்து எதிர்கொளவே. 23

23. அவிகை இல்லா - யாகாக்கினி அவிதல் இல்லாத. குவிந்த கையினால் - கும்பிட்டவண்ணம்.

12

திருவடி சூட்டு படலம்

—பரதன் முதலியோர் இராமனைக் கண்டு
அயோத்தி திரும்பியது

பரத்துவாசன் ஆசிரமத்தில்

பலமா முனிவரும்தா னும்வந்து
  பரத்து வாசனைஅ டிவணங்க
நலமார் பரதனைமு னிவாழ்த்தி,
  நடுவற்கலை சுற்றிச்ச டையும்கட்டி
தலம்ஆ ளாதுஎய்த தகவுஅன்றுஎன்றான்;
  தவனே சொலநிற்கும் தகவுஅன்று,
குலமா முடிவள்ளல் புனையானேல்
  கொடும்காடு உறைவேன்நான் கூடஎன்றான். 1

தவர்க்கு மிகஉள்ளம் மகிழ்ச்சிஎய்தத்
  தழுவிக் கொடுபன்ன சாலைநண்ணி
எவர்க்கும் இமைப்போதில் விருந்துசெய்வேன்
  என்றுஓ ராகுதிமுனி வன்செய்ய
சுவர்க்க உலகுஅங்கே பறந்துவந்து
  தோன்றல் முதலோர்கள் நினைவுஎல்லாம்
கவர்க்க, அனைவரையும் தெய்வமின்னார்
  கனக மனைதோறும் கொண்டுபுக்கார். 2

நான நெய்இட்டுஆ காசகங்கை
  நன்னீர் ஆட்டிக்கற் பகஆடை
ஆனது உடுத்திப்பொற் கலத்துஅமுதம்
  ஆர ஊட்டிப்பஞ் சணைமேலே
மீன விழியாரும் குமரர்களும்
  மேவித் துயில்உற்று வேந்தர்முதல்
சேனை அனைவோரும் தவிராமல்
  தெய்வ மணம்கொண்டு சிறந்தனரே. 3

குறிப்பு: கம்பராமாயண அச்சுப் புத்தகங்களிலே இப் படலத்தின் பெயர் கிளை கண்டு நீங்கு படலம் என்று காணப்படுகிறது.

தேனார் கவளம்கற் பகம்ஈன்ற
 செந்நெல் தழையொடும் கரிகள்உண்ண,
வானார் புனல்ஆடி மரகதம்போல்
 வளர்ந்த பசும்புற்கள் வாசிஉண்ண,
மீனார் விழிமாதர் அரம்பைமின்னார்
 மிகுசே டியர்போல ஏவல்செய்ய,
கோனார் குலமைந்தன் பலமூலம்
 கொண்டு பொடியில்மெய் யுறவைகினான். 4

சித்திரகூடம் சென்றனர்

பருதி உதயம்செய்து இருள்நீங்கப்
 பரதன் பரத்துவச முனிவனுடன்
கருதி வரஅந்த மாசேனை
 கடும்பா லையிற்செல்ல, கடும்பாலை
சுருதி நிகர்மைந்தன் வடிவம்கண்டு
 துளிராய் மரம்எல்லாம் குளிர்ஆர
வருதிர் எனச்சித்ர கூடம்கிட்ட
 வருதா ளியைக்கண்டான் இளையவள்ளல். 5

கண்டான் இலக்குவன்

கார்கொள் மலைஏறி இளவீரன்
 கடலிற் பெரிதான சேனைகண்டு
வார்கொண் டலில்நின்று குதித்துமண்மேல்
 வள்ளல் பெரியோனை அடிவணங்கிப்
பார்கொண் டதும்அன்றிப் பரதன்நம்மேல்
 படைவந் தான்எனக் கவசம்இட்டு
ஏர்கொண்டு உயர்புட்டில் சுரிகைகட்டி
 இயல்வெஞ் சிலைகைக்கொண்டு இயம்பலுற்றான். 6

போர்க்கோலம் பூண்டான்

பாரும் புரந்துஉன்மேல் மலையவந்த
 பரதன் வலியும்என் படைவலியும்
நேரும் தமியேன்கைச் சிலைவலியும்
 நேராய் நிமிடத்தில் படுவதுவும்

6. கொண்டல் - மேகம் படியும் மலை.

தேரும் பிணம்முற்றும் சுமந்துஉதிரம்
சேரக் கடல்ஏழ்ஒன்று ஆவதுவும்
மாரும் கவசமும் உருவிஅம்பு
வானும் கடப்பது காண்கமன்னா. 7

கவந்தம் அலகையோடு ஆடுவதும்
கணைவாள் சிலைசூலம் துணிவதுவும்
உவந்த கரிமாஆள் உதிருவதும்
ஓரிக் குரல்காகத் தொனிக்குரலும்
நிவந்த உயிர்வானில் நிறைவதுவும்
நின்றாய் கண்டுஉளம் மகிழ்ந்து,கைகை
அவன்தன் பாடுகண்டு அரற்றிமண்மேல்
அழுது புரள்வதும் காண்பைமன்னா. 8

இலக்குவனைப் பொறுத்திருந்து பார் என்றான் இராமன்

கைம்மான் அவன்சுட்ட புரம்ஆக்கிக்
கதிர்போல் பொலிவேன்நான் காண்பைஎன்ன—
எம்மான் அருள்செய்வான்: இலக்குவனே!
ஏழேழ் உலகம் உனக்குஎதிரோ?
நம்மாற் றலர்யாரோ இங்குஅடர்ந்தார்
நால்வே தமும்சொல்லும் பரதன்செம்மை
இம்மா நிலம்நல்க வந்ததைநீ
எண்ணாது ஒழிந்தாய் என்பால்அன்பால். 9

9. இலக்குவ உலகம்ஓர் ஏழொடு ஏழும்நீ
கலக்குவென் என்பது கருதி னால்அது
விலக்குவது அரிது விளம்ப வேண்டுமோ
புலக்குரித்து ஒருபொருள் புகலக் கேட்டியால். —கம். 40.

கைம் மான் அவன் - கையிலே மான் ஏந்திய சிவன். புரம் - திரிபுரம். மாற்றலர் - பகைவர்.

எனைத்துள மறைஅவை இயம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திறம் அல்லன அல்ல அன்னது
நினைத்திலை என்வயின் நேய நெஞ்சினால். —கம். 42.

இரதம் முதலாம்இப் படையைநல்கி
　　என்மேல் மிகும்அன்பால் காணவந்தான்;
பரதன் பொரவந்தான் எனத்தகுமோ?
　　பண்பன் தனைஇது நினைக்கைபண்போ?
விரதன் தனைஇன்னம் பார்எனவே;
　　மிக்க படைபின்னே வருகஎன்று
வரதன் பதம்உன்னித் தொழுதகையான்
　　வந்தான் இளையோனும் தானும்முந்தி. 10

தன்செயலுக்கு வருந்தினான் இலக்குவன்

துக்க ரூபத்தில் இருகணில்நீர்
　　சொரிய வருகைகண்டு இரங்கி,எங்கோன்,
பக்கம் அதில்நின்ற இளையோனைப்
　　பரதன் போர்க்கோலம் பார்எனவே—
மிக்க தனைத்தானே முனிந்துவைது
　　வில்லும் விழிநீரும் வீழநின்றான்;
தொக்க நிலமங்கை வருந்திவிட்ட
　　தூதன் போலவே பரதன்வந்தான். 11

இராமனைப் பணிந்தான் பரதன்

அரசு துறந்தாய்அம் புவிவருந்த
　　அருளை மறந்தாய்என்று அமலன்முன்னே
கிரசு படிஆர அடிபணிந்தான்
　　திருத்தா தையைக்கண்ட செயலேபோல்—
சரசு நிகர்கண்ணன் இருகணில்நீர்
　　தம்பி சடைஎங்கும் நனைந்துசிந்த
விரசும் இருகையால் எடுத்துஅணைத்தான்
　　விளங்கு தருமம்சேர் அருள்என்னவே. 12

11. மிக்கதனை - மிகுந்த கோபத்தை.

12. சரசு - தாமரை.
தயாமுதல் அறந்தினைத் தழீஇயது என்னவே. —கம். 53.

தந்தை இறந்ததை அறிந்தான் இராமன்

இளவல் வடிவம்கண்டு இதயத்துஎண்ணி
என்ன மெலிந்தாய்என்று இரங்கி,அண்ணல்
வளவில் விறல்தானை மன்னன்தன்மெய்
வலிதோ என;நின்னைப் பிரிந்ததுன்பால்
உளவல் வினைஉற வாகக்கூற்றால்
உண்மை வளர்த்துஉற்றான் உயிர்விண்ஏன;
துளவ முடியான்தன் மனமும்கண்ணும்
சுழல விழுந்தனன் சோர்ந்துமண்மேல். 13

பல கூறிப் புலம்பினான் இராமன்

அடங்கி உயிர்ப்புஅற்று நினைவும்இன்றி
அரிதால் உயிர்வந்து பொருமிவிம்மி—
நுடங்கி வருந்தாமல் உலகோரை
நூலார் மறையோரைத் துயரம்என்னும்
கிடங்கில் அழுந்தாமல் காப்பவர்ஆர்?
கிளரும் பெருவேள்விக்கு உறுவோர்ஆர்?
தொடங்கி எனைப்பெற்று மரணம்பெற்றாய்;
தோன்றி னேனேநான் கூற்றுவன்போல். 14

தனம்முற் றாய்வையம் எனக்குத்தந்து
தவத்தை விளைத்திட்டுப் பலித்ததுஇதோ!
வினைமுற் றேன்இங்கே மாள்வதன்றி,
மீள்வதுஇனி யாரைக் காணஅங்கே?
வனம்உற் றேன்என்று வானம்உற்றாய்;
வான்உற்றாய் என்றும் வாழல்உற்றேன்;
கனம்உற் றார்வல்லார் ஆர்உனைப்போல்
கருணை கொடைஉண்மை அறம்காப்பார்? 15

14. நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனிஅறத்தின் தாயே தயாநிலையே
எந்தாய் இகல்வேந்தர் ஏறே இறந்தனையோ
அந்தோ இனிவாய்மைக்கு ஆருளரே மெய்யுற்றார். —கம். 58.

தேன்அடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கான்அடைந்தேன் என்னத் தரியாது காவலநீ
வான்அடைந்தாய் இன்னம் இருந்தேன்நான் வாழ்வுகந்தே
ஊன்அடைந்த தெவ்வர் உயிர்அடைந்த ஒள்வேலோய். —கம். 63.

இராமனைத் தேற்றினான் வசிட்டன்

அவ்வாறு அழுவாரைத் தம்பியரும்
அன்பின் பெரியோரும் எடுத்துஓத
மெய்வாழ் வசிட்டமா முனிதேற்ற
மிக்க பரத்துவன் முதல்முனிவர்
தவ்வா விறல்மன்னர் அமைச்சர்மற்றும்
தானைத் தலைவரும் பலரும்சுற்ற
இவ்வாறு இருந்துஅண்ணல் முகம்நோக்கி
எண்கண் அயன்மைந்தன் இயம்பல்உற்றான். 16

துறவோடு அறம்அன்றித் துணையுமுண்டோ
தோற்றம் மரணம்சு பாவம்அன்றோ
பிறவே பிறக்குமுன் இறக்கைகண்டால்
பெரும்பார் அறுபதா யிரக்காலம்
உறவே புரந்தவர்க்கு இரங்குவதோ
உயர்மூ வரும்காலம் கடப்பாரோ
மறவேல் மறைவல்லாப் பூதம்ஐந்தும்
மாயும் எனில்காயம் மாயாதோ. 17

தருமச் சமர்காலத் திரிதோய்த்துத்
தக்க விதிஎன்னும் தழலில்இட்ட
இருமைச் சுடர்நெய்யும் திரியுள்மட்டே
யாக்கை நீரினில் குமிழிஅன்றோ
பெருமைப் புவிமீதில் துயரப்பட்டும்
பின்னும் அங்குஎய்தும் பலசிவன்
அருமைப் பதம்ஆதி அயற்கும்எட்டா
அரிதன் பதம்உற்றான் உந்தைஉன்னால். 18

தந்தைக்கு நீர்க்கடன் செய்தான் இராமன்

இருந்து தவியாதே எழில்வீரா
இதுபோல் அவர்க்குஇன்பம்வே றொன்றுஉண்டோ
திருந்து கடன்செய்யும் நெறிசெய்என;
சென்றுஅங்கு அவரோடும் திரைஆற்றில்

பொருந்து சடங்கைநல் முனிகாட்டப்
　　புக்குப் புனல்ஆடி முக்கைநன்னீர்
அருந்து தாதைக்குப் பரிந்துதந்தான்
　　அமரர் அனைவர்க்கும் அமுதுதந்தான். 19

சீதையின் துயரம்

செய்யும் கடன்செய்துஅங்கு அனைவருடன்
　　சீதை பால்செல்ல; திருவடிமுன்
நையும் பரதன்தான் விழுந்துஅரற்ற,
　　நாதன் இருகையால் எடுத்துஏந்தி
மெய்யும் புகழும்கண்டு அரசர்பிரான்
　　விண்உற்றான் எந்தைஎன் பொருட்டுஎனவே;
தொய்யும் இடைபோல்மெய் துவண்டுகண்ணீர்
　　சொரியப் பலபன்னித் துயரம்உற்றாள். 20

காந்த னுடன்செல்லக் கடுங்கானும்
　　கடிமா நகர்ஒத்த காரிகைக்கு
வேந்தன் இறந்தசொல் கொடுந்தீப்போல்
　　விதனக் கடல்தன்னில் அடிவைக்க;
ஆய்ந்த முனிவர்பத் தினிமாதர்
　　அணைத்துப் புனல்ஆட்டித் துயர்ஆற்ற;
சாந்த பரமன்பால் சுமந்திரனும்
　　தாயார் மூவரும் தாமும்வந்தார். 21

தாய்மார் துயரம்

அத்தன்எங்கே? அருளும்என்ன,
　　அன்னையர்தம் சேவடிமேல்
மொய்த்தகண்ணீர் சொரிய;அவர்
　　முகந்துஅணைத்துப் புலம்பியபின்,
சித்தம்அன்பால் சீதையையும்
　　சென்றுஅணைத்துத் தேம்பல்உற்றார்;
உத்தமராம் நகரிசனம்
　　உலைமெழுகாய் உருகினரே. 22

19. முக்கை நீர் - கைகளால் மூன்று முறை எடுத்து விடப்படும் தர்ப்பணநீர்.

மறுநாள் காலையில்

சுற்றவெய்யோன் இவர்குலத்தோன்
கடல்செயல்போல் கடல்மூழ்கி
மற்றநல்நாள் உதித்திடவே
மாதவரும் தம்பியரும்
கொற்றவரும் சூழ்ந்திருக்கக்
கோன்இருந்து பரதனைநீ
உற்றமுடி சூடாமல்
உயர்தவம்ஏன் முயன்றதுஎன்றான். 23

இராம - பரதர் சம்வாதம்

ஈண்டுஉனைவல் வனம்செலுத்தி,
இறைவனைக்கொன் றவள்மகன்நான்;
மாண்டுஅகலேன் தவம்புரியேன்
வன்பழிஎங் ஙன்கடப்பேன்?
பூண்டமுறை துறந்தஅரசும்
பொறைதுறந்த துறவும்நன்றே!
ஆண்டுஅருள்நீ! உலகுஉடையாய்!
அனைவரும்ஈடு ஏறஎன்றான். 24

மானவனும் தம்பிசொன்ன
வாசகம்கேட்டு அருள்புரிவான்;
ஞானநெறி நன்மைஉற்ற
நரபதியால் விளங்கிடும்காண்
ஆனதுணை தெய்வம்குரு
அன்னைபிதா அல்லதுஇல்லை
ஆனவர்தம் பணிசுமந்தேன்;
இனிமறுக்கை யாதும்சொல்லாய். 25

மைந்தர்தந்தைக்கு ஆற்றும்நன்றி,
வரும்புகழோ? பெரும்வசையோ?
எந்தைதன்சொல் பொய்ஆக்கி
எழுநரகம் புகுவதினால்
வந்தசெங்கோல் எனக்குஇனிதோ?
வாய்மையைப்போல் தூய்மைஉண்டோ?
சிந்தைவந்த படிசெயுமோ?
செகதலத்தோர் வருந்தல்நன்றோ? 26

அன்னார்சொல் பதினாலாண்டு
அடவியில்நான் உறையும்மட்டும்
நின் நாடு நீபுரப்பாய்;
நீ,வரத்தால் வந்ததினால்;
மன்ஆணை மறாமல்அன்றோ
மண்ஆள முதல்இசைந்தேன்;
என்ஆணை மறாதேஎன—
இருதாளும் பூண்டுகொண்டான். 27

குறுக்கிட்டுக் கூறினார் வசிட்டர்

வரமொழிகேட்டு உரைக்கல்உற்ற
வாழ்பரதன் தனைவிலக்கிப்
பரமொழியால் வசிட்டமுனி,
பங்கயக்கண் ணனுக்குஉரைப்பான்:
திரம்ஒழியா வராகமதாய்ச்
செழுங்கோட்டில் பிறைமதிபோல்
உரம்ஒழியா நிலம்இடந்தோன்
உலகம்எல்லாம் ஒடுக்கியபின்; 28

கரைகடந்த பெரும்புனலில்
கண்வளர உந்திஎனும்
விரைகடந்த மலரில்வந்த
வேதன்அவன் படைத்துஉலகை
வரைகடந்த புயத்துஉனது
மரபினரை ஆளவைத்தான்;
உரைகடந்த புகழ்வேந்தர்
முறைகடந்தார் ஒருவர்இல்லை. 29

என்உபதே சத்தின்நெறி
எல்லாரும் புவிபுரந்தார்;
முன்உபதே சித்துஉனையான்
முழுதுஉலகை ஆளஎன்றேன்;

28. பிரளய வெள்ளத்து மூழ்கியிருந்த பூமியைத் திருமால் வராகமாய்த் தன் கொம்பால் எடுத்து வந்த புராணக் கதை நினைவுகூரப்பட்டது.

பின்உபதே சிப்பதுஇப்போ
    பேர்அரசு செய்எனவே;
பன்உபதே சப்பொருளாம்
    பராபரனும் முனிக்குஉரைப்பான்: 30

வசிட்டரை மறுத்துப் பேசினான் இராமன்

தந்தைஅன்னை ஏவல்செய்யாச்
    சந்ததிநா ளும்கடையாம்;
முந்தஒன்றைச் செய்வன்என்று
    மொழிவிரதம் குலையில்நன்றோ?
எந்தலைமேல் கொண்டபணி
    இனித்தகுமோ தவிரஎன்றான்;
அந்தஉரைக்கு எதிர்காணான்
    அருமுனிவன் மறந்திருந்தான். 31

விண்ணாடர் விருப்பம்

ஆண்டவர்ஆண் டிடுகஇனி
    அடவியில்நான் உன்கூடப்
பூண்டதவம் புரிவென்என்று
    புகழ்பரதன் கூற;விண்ணார்,
நீண்டமதில் நகர்க்குஇளையோன்
    நெடியோனைக் கொண்டுசென்றால்
ஈண்டநமக்கு இதம்அலஎன்று
    இவர்கேட்க எடுத்துஉரைத்தார்: 32

கண்ணா!உன் ராமபிரான்
    காடாளும் நாள்அளவும்
மண்ஆள்கை உனதுகடன்
    மலிபுகழாய் என்றுஉரைக்க;

32 — 33. இராமன் எவ்விதத்திலும் இணங்காதது கண்ட பரதன், தானும் வனத்திலே தவம் புரிந்திருப்பேன் என்று கூறவும், இவற்றை எல்லாம் கண்டு மறைந்து நின்ற விண்ணோர், இராவண வதத்தை மனத்துட்கொண்டு, ''இராம பிரான் காடாளும் நாள் அளவும் மண் ஆள்வது உன் கடன்'' என்று அசரீரியாகச் சொன்னார்கள் என்பது வான்மீகம்.

விண்நாடர் சொல்ல;இனி
　　மீறரிது தம்பிஎன்று
தண்ணாரும் துளவோனும்
　　தடக்கைபற்றி வேண்டினனே. 33

இராமனுடைய பாதுகைகளைப் பெற்றான் பரதன்

அன்னபதி னாலாண்டில்
　　அயோத்திநகர்க்கு எழுந்தருளி
மன்னுமுடி புனையாயேல்
　　வன்னியில்நான் மடிவதுஉண்மை;
நின்அடிமேல் ஆணைஎன்ன—
　　நெடியவனும் ஆம்எனவே;
பொன்அடிகள் பாவிஎன்றான்;
　　புனிதனும்தந்து அருள்புரிந்தான். 34

திருவடிகள் இரண்டையும்தன்
　　சென்னியில்சூட் டியபரதன்
இருவடிவேல் இராகவனை
　　இறைஞ்சிவிடை கொண்டபின்பு
உருவடியும் அன்னையரும்
　　உயர்முனியும் பலபடையும்
குருவடிபா ரத்துவனும்
　　கொடைக்குகனும் போயினரே. 35

நந்தியம்பதியிலே

அருவிசொரி குன்றம்அன்னான்
　　அயோத்திநகர் புகுதாமல்
மருவுநந்திப் பதியில்எங்கோன்
　　மலர்அடியால் அரசுஇயற்றி
இருவிழிஅல் லும்பகலும்
　　இமைப்பும்இல்லாது இருக்கஇப்பால்
திருவினொடும் தம்பியொடும்
　　தேவனும்தென் பால்அடைந்தான். 36

—;o;—

ஆரணிய காண்டம்

1 விராதன் வதைப் படலம்

— தண்டக வனம் சேர்ந்தபோது இராமன்
விராதனை வதைத்தது

வாழ்த்து

ஒன்றாய்க்கண்டு ஊறுஅகற்றி ஓதிஉணர் போதெல்லாம்
நன்றாய்த்தன் பொன்னடியே நல்குவான் — குன்றாத
அண்ணற்கு அரியான்மெய் அன்பரெல்லாம் போற்றிநிதம்
எண்ணற்கு உரியான் எமக்கு. 1

தண்டகவனம் சேர்ந்தான் இராமன்

சித்திரகூ டத்தே திருவடியும் நல்விடையும்
மைத்திருமே னிப்பரதாழ் வார்க்குஅருளி — மெய்த்திருவும்
தாமும் இலக்குவனும் தங்கினர்கள் போய்திருவாழ்
மாமுந்து பூங்கா வனம். 2

அத்திரி முனிவர் ஆசிரமத்தில்

ஆசைவென்ற அத்திரியை
அடிவணங்கி ஆசிகொண்டு
ஆசைவென்ற அவன்தேவி
அனுசூயை, துகில்களபம்
ஆசைவென்ற மணிப்பூணால்
அலங்கரித்த சிதையொடும்
ஆசைவென்ற ரகுவீரர்
அருவனம்தண் டகம்புகுந்தார். 3

விராதன்: தும்புரு என்ற கந்தர்வன்; குபேரனது சாபத்தால் அரக்கன் ஆனவன்.

1. குன்றாத அண்ணல் - வேதியர், பிரமன் முதலிய தேவர்கள்.

பேதி யாதுநிமிர் பேத உருவம் பிறழ்கிலா
ஓதி ஓதி உணரும்தொறும் உணர்ச்சி உதவும்
வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
ஆதி தேவர்: அவர்எம் அறிவினுக்கு அறிவரோ.

—கம்ப. ஆரணிய காண்டம்; கடவுள் வாழ்த்து.

2. ஆசை - ஆசு ஐ - ஆணவத்தை. ஆசை - விருப்பம். ஆசை - திசை; இங்கே உலகம். ஆசை - ஆசு ஐ - புற்றுதலை.

தண்டகவனத்தில்

எண்ணிரண்டு மதயானை,
    ஏழ்இரண்டு வலியாளி,
எண்ணிரண்டு விரற்சிங்கம்
    எறிசூலம் தனிற்கோத்துத்
திண்ணிரண்டு கயில்வாங்கித்
    தின்றுபசி தீராமல்
விண்ணிரண்டு செய்யவல்லோன்
    விரதன்என்பான் விரைந்துவந்தான். 4

எதிர்ப்பட்டான் விராதன்

சிவந்தகுஞ்சி சிவந்தகண்கள்
    தீவிடம்போல் இருண்டநிறம்
நிவந்தநண்பார் நடுங்கமலை
    நீறுபட வீசியகை
கவந்தசிங்கம் புலியாளி
    கரிபரிதேர் காலாட்கள்
துவந்தஒன்னார் குருதிசிந்தத்
    தொல்புவியில் தோன்றினனே. 5

விமானமும்தா ராகணமும்
    விண்மணியும் சன்னவீரம்;
புமானயிரா வதமருப்பின்
    புரிகள்அவன் தோள்வளைகள்;
சமானம்இல்லாப் பணிபுலித்தோல்
    தயங்குகச்சைக் கங்கணமாம்;
அமானம்உறும் கலியுகம்போல்
    அடுங்கூற்றும் நடுங்கவந்தான். 6

4. திண்ணிரண்டு - திண்ணிய இரண்டு. கயில் - கையில். விரதன் - விராதன்.

5. நிவந்த நண் பார் - உயர்ந்த நெருங்கியுள்ளதாகிய உலகம். கவந்த சிங்கம் - முண்டமான சிங்கம். துவந்த ஒன்னார் - துவந்த யுத்தம் புரியும் பகைவர்.

6. தேவர்களின் விமானங்களையும் நட்சத்திரங்களையும் நவக்கிரகங்களையும் சன்னவீரமாக (வெற்றி மாலையாக)க் கோத்து அணிந்திருக்கிறான். புமான் - பூமான் - இந்திரன். அயிராவத மருப்பின் புரிகள் - அயிராவதத்தின் மருப்பிலணியப்பட்ட பூண்கள்; அவனுடைய தோள்வளைகளாம். பணி - பாம்பு; கங்கணமாம். புலித்தோல் கச்சையாம். அமானம் – மானம் இல்லாத, ''கங்கு பூசி வருகின்ற கலிகாலம்'' என்பார் கம்பரும்.

சீதையை எடுத்து ஏகினான்

வெள்ளிமலை பொன்மலைபோல்
விண்படர்வீ ரக்கழலான்
தள்ளிடுவான் பூதம்எல்லாம்
சப்தலட்சம் கரிவலியான்
தெள்ளியர்முன் எதிர்இலங்கித்
தின்னஎன்றே வாய்திறந்து
அள்ளிமின்னை ஒருகயில்கொண்டு
ஆகாசந் தனில்எழுந்தான். 7

சீதையை விடுத்துப் போர் ஏற்றான்

வியன்சரத்தாற் சிலைகுனித்து
மீட்கஅடாது எனத்தொடர,
அயன்வரத்தால் இறவேன்நான்
அணங்கினைத்தந்து அகலும்என்;
செயம்படைத்தான் நாண்எறிய;
செகம்ஏழும் முழங்க;அவன்
பயம்படைத்துஅம் மானைவிட்டுப்
படர்சூலம் கொண்டெறிந்தான். 8

மாதலத்தோர் அண்டர்அஞ்ச
வரும்சூலம் வரதன்அம்பால்
பாதகர்க்குஓர் துர்க்குறியாய்ப்
பகல்மீன்போல் எறிந்துவிழ,
போதவெற்பால் எறியலுற்றான்;
புனிதன்அம்பு எதிர்தொடுத்தான்;
காதவெற்பு மீண்டுஅவன்மேல்
காயம்எங்கும் காயம்உற. 9

7. கரி - யானை. தெள்ளியர் - இராமலக்குவர். மின் - சீதை.

8. அயன் - பிரமன். அணங்கு - சீதை. செயம் படைத்தான் - இராமன், பயம்படைத்து - பயங்கொண்டு. அம் மான் - அந்தச் சீதை.

9. காயம் - உடம்பு, புண்.

விரத்தர்தொழும் ராகவனை
        விராதன்அவன் மோதவரும்
மரத்தைஒரு நற்கணையால்
        மாற்றி,மற்றும் பன்னிருகோல்
உரத்தினும்தோ ளினும்அழுந்த
        உதறிமுள்ளம் பன்றியைப்போல்
வரத்தில்நின்ற அவன்மேலே
        வாள்உருவி எதிர்த்தனரே. 10

இருவரையும் இருசுடர்போல்
        இருதோளிற் சுமந்துசெல்வான்
பருவரைபோல் கருடனைப்போல்
        பலசாரி திரியலுற்றான்;
வெருவருசீ தையும்என்னை
        விழுங்கிஅவரை விடுகஎன்று
பொருவரிய சேவல்சிக்கப்
        புலம்பும்அன்னம் போல்புரண்டாள். 11

மெல்லியலாள் தவிக்கைநன்றோ?
        விளையாட்டுஏன்? என்று,தம்பி
சொல்லியபின், ஆங்குஅவனைத்
        தோள்இரண்டும் துணித்து,இருவர்
வல்லியம்போல் குதித்தபின்னர்;
        வான்படர்வான் தனைப்புதைக்க,
நல்லிளையோன் குழிபறிக்க,
        நாதனும்தா ளால்உதைத்தான். 12

மெய்ஞ்ஞானம் பெற்றான்

தாடாளன் திருவடியால்
        தள்ளியபோது அடல்அரக்கன்
கூடாவல் வினைசாபம்
        கூடியகூட் டைத்திறந்து

10. விரத்தர் - பற்றற்றவர். பக்தர் என்பது பத்தர் என்று ஆவதுபோல, விரக்தர் என்பது விரத்தர் ஆயிற்று. கோல் - அம்பு.

12. வல்லியம் - புலி.

வாடாஉந் தியில்உதித்த
மலர்அயன்போல் மேல்விளங்கி
வீடாம்நல் அறிவுபெற்று
மெய்ப்பொருளாம் எனத்தெளிந்தான். 13

நல்லதம்பியின் பரிவு

தெரிந்தாயும் புகழ்மோரூர்த்
திருமலைஅத் தப்பன்அன்பால்
தருந்தாரும் நல்லதம்பி
தனைஅடைந்தோர் அனைவருக்கும்
பரிந்தாபம் தீர்த்தகண்ணன்
பண்பைநல்லோர் புகழ்வதுபோல்
அருஞ்சாபம் தீர்த்தகண்ணன்
அருளைஅவன் புகழலுற்றான். 14

விராதன் துதிமொழி

ஞாலம்எல்லாம் நின்னடிக்கீழ்,
நற்படிவம் எப்படியோ?
மூலம்என்னும் கரிக்குஉதவி
முத்திதந்தாய், பிறப்பதுஎன்னே?
தாலநெறி அறம்காக்கத்
தர்மகர்த்தா வேறுஇலையோ?
சீலமிகு சமயமும்நீ
தெய்வமும்நீ அல்லதுஉண்டோ? 15

13. தாடாளன் - சீர்காழிப் பெருமாள் பெயர்; இங்கே இராமனைக் குறித்தது.

14. பரிந்தாபம் - பரிதாப நிலை. கண்ணன் - அத்தப்பன்; இராமன்.

15. வேதங்கள் அறைகின்ற உலகளங்கும் விரிந்தனநின்
பாதங்கள் இவைஎன்னின் படிவங்கள் எப்படியோ? —கம். 47.
அடுத்தபெரும் தனிமூலத்து அரும்பரமே பரமேஎன்று
எடுத்துஒருவா ரணம்அழைப்ப நீயோஅன்று ஏன்என்றாய். —கம். 48.
அறம்காத்தற்கு உனக்குஒருவர் ஆரும்ஒரு துணைஇன்றிக்
கறங்குஆகும் எனத்திரிய நீயேயோ கடவாய்தான். —கம். 49.

அன்னையும்நீ அப்பனும்நீ
அனைத்துஉறவும் நீஅலவோ?
நின்அடிமை சமயம்எலாம்
நீமறைந்து திரிவதென்னோ?
உன்அடியார் என்றுஅறிவாய்!
உடையவன்என்று அவர்அறியார்!
முன்அயனைப் படைத்தல்கண்டும்
முனிவர்களும் தெளிந்திலரோ! 16

பொன்மாதை மார்பில்வைத்தாய்;
புவியைவைத்தாய் அடிமுடிமேல்;
நின்மாயை யார்அறிவார்?
நீள்சடையோன் புகழநின்றாய்!
என்மாசா பம்தீர்த்தாய்!
இயல்அனமாய் மறைஉரைத்தாய்!
மன்மாதே வரும்பரவப்
பள்ளிகொள்ளும் பரஞ்சுடரே! 17

தேவாநின் ஏதுஇல்லாத்
திருவருளை என்சொலுவேன்?
ஓவாதே நினைந்துஅறியேன்;
ஒருபொழுதும் தொழுதரியேன்;
நாவாரப் புகழ்ந்துஅறியேன்;
நாய்அடியேன் பிறப்புஇறப்பைப்
பூவாரும் உலகுஅளந்த
பொன்அடியால் துடைத்தனையே. 18

16. நீஆதி பரம்பரமும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும்நின் அடியவே அயல்இல்லை
நீயாரின் ஒளித்தியால் வெளிநின்றால் தீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ. —கம். 53.

17. பூமிப் பிராட்டியை ஆதிசேடன் உருவாகித் தலையாலே தாங்குகிறாய். திரிவிக்கிரமாவதாரத்திலே ஓரடியால் அளந்து மறைத்தாய்.

சடையோன் - சிவன். அனம் - அன்னமாய்ப் பிரமனுக்கு வேதங்களை உபதேசித்தாய்.

என்பவனை, எம்பெருமான்
ஈதுஎனவாறு எனக்கேட்க;
துன்பவினை தீர்ப்பவனே!
தும்புருவில் யான்ஒருவன்;
இன்பம்அடா தனசெயலால்
இராக்கதன் ஆகச்சபித்து
நின்பதங் காயம்தீண்ட
நீங்கும்என்றான் குபேரன்எனை. 19

அன்றுமுதல் நாய்அடியேன்
அரும்பாவம் செய்துஉழன்றேன்;
இன்றுநின்சே வடிதீண்ட
இப்பேறு பெற்றுஉயர்ந்தேன்;
நன்றுஉணரேன் பிழைபொறுப்பாய்,
நாதா!என்று, அவன்போனான்;
தென்திசைமூ வரும்நடந்தார்
தினகரன்மே ருவில்மறைந்தான். 20

2 சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்

—சரபங்க முனிவர் இராமனைத் தரிசித்து
முத்தி பெற்றது

சரபங்கன் ஆசிரமம் அடைந்தனன் இராமன்

மின்னும் திருமாலும் இளையோனும்
மிக்க சரபங்கன் தவசுசெய்யும்
மன்னும் வனத்தூடே வருபோதில்
வாச வனும்அந்த வனத்தில்வந்தான்
துன்னும் படிமீதிற் பலமாதர்
சூழத் தானும்தன் னுடைத்தேவி
என்னும் சசியும்வெள் ளானையின்மேல்
இலங்கு கைலாயத்து உமைபங்கன்போல்! 1

முனிவர்க்கு இந்திரன் அழைப்பு

முன்னோர் அகல்வானில் அமரர்க்கெல்லாம்
முதல்வன் பரிமேதம் நூறுசெய்தோன்
அன்னா ரதர்பாடற் செவியுட்கொள்வான்
அரமங் கையர்ஆடல் விழியுட்கொள்வான்
பன்னாண் மதிநாண ஒளிவீசும்
பரம பதம்போலும் தனிக்குடையான்
ஒன்னார் புகழ்தன்பால் அடைந்தாற்போல்
உவமை படைத்திடும் சாமரையான். 2

தாரார் முடியார்க்குஉர் இடிஅன்னான்
தனது சிறைவிட்ட மேகம்ஒப்பான்
தீரா மணிமின்னும் கஞ்சுகத்தான்
செயமா நகைபோலும் தோள்வளையான்

1. திருமால் - இராமன். சரபங்கன் - காமத்தை ஒழித்தவன். வாசவன் - இந்திரன். சசி - இந்திராணி. உமை பங்கன் போல் வந்தான்.

2. பரிமேதம் - அசுவமேதம். அன்னாரதர் - அந்த நாரதர். எதுகையை நோக்கி 'ந', 'ன' ஆகத் திரிந்தது. அ - அந்த. (இங்கு, முன்பு அறிந்த ஒரு பொருளைச் சுட்டுதலின் 'அ' பண்டு அறி சுட்டு என்பர்.) பன்னாண்மதி - பல் நாள் மதி - பூரணச்சந்திரன். பூரணச்சந்திரன் நாண, சுவர்க்கமே குடையாய் வந்ததாம். கீர்த்தி (புகழை) வெண்ணிறமாகக் கூறுதல் மரபு; ஆதலின் அது சாமரைக்கு உவமை ஆயிற்று.

ஏரார் ராவணன்மீ திற்செல்லா
எழில்வச் சிரத்தான்அங்கு இரங்கிநிற்க,
நேரார் முனிசென்று சிறப்புச்செய்து
நின்றன் வரவுஎன்ன? உரைஎன்னவே; 3

அழைப்பை நிராகரித்தான் முனிவன்

வேதா, நீசெய்த அருந்தவத்தால்
மிகவும் மகிழ்ந்துதன் உலகந்தந்தான்
போதாய், இனிஎன்ன முனிவன்சொல்வான்:
புகழாய் நிலைஅற்ற பதம்வேண்டேன்
ஆதல் அழியாத வீடுஎய்துவேன்
அமரா எனும்போதில்; குமரன்வந்தான்—
மாதர் நிதிகொள்வா சவனைக்கண்டு,
வந்தான் மவுனிகன்பால் என்றெண்ணி, 4

இராமனைக் கண்டு துதித்தான் இந்திரன்

பெண்ணார் அமுதையும் தம்பியையும்
பின்னே நிறுத்தி,முன் இறைவன்செல்ல;
கண்ணா யிரத்தான்இந் திரனும்கண்டு,
கழற்கால் தொழப்பெற்றேன் இனிஎன்றெண்ணி,
பண்ணார் மறையாலும் கருத்தாலும்
பரவிப் பணிந்து,எந் தைபிரானே!
நண்ணா அடியோமுக்கு அளித்தவரம்
நல்க வோஎழுந்தரு ளிற்றுஎன்றான். 5

அலையைக் கடைந்துஎங்கட்கு அமுதம்தந்தாய்,
ஆதி இடைஈறுஇல் லாய்போற்றி!
சிலையைத் தெரித்துஎம்மைக் காக்கவந்தாய்,
செலவும் வரவும்இல் லாய்போற்றி!

3. கஞ்சுகம் - அங்கி. செயமா - விசயலட்சுமியின். நகை - புன்சிரிப்பு. இராவணன்மேல் எறியப்பட்டபோதும் முனை மழுங்காத வச்சிரப் படை.
4. வேதா - பிரமன். போதாய் - வருக. குமரன் - இராமன். அங்கிருந்த ஆரவாரத்தில் இந்திரன் வந்திருக்கிறான் என்று ஊகித்தான் இராமன்.

மலையைப் புலியைச்சே வடிதீண்ட
வருந்தி எமைஆளும் மால்போற்றி!
கலையைக் கடந்தகண் ணாபோற்றி!
காரே கருணாகர னேபோற்றி! 6

ஆசிரமத்திலே இரவைக்கழித்தான் இராமன்

திருவா ளனைஇங்ஙன் போற்றிசெய்து
தெளிந்த ஞானியை 'உனக்குமுத்தி
தருவான் இவன்'என்றுஇந் திரன்போனான்;
தவனும் எதிர்கொண்டு குமரன்தன்னைப்
பரிவாய் வணங்கிக்கொண்டு உறையுள்புக்கான்;
பரம புருடன்தன் இளவலையும்
மருவார் குழலையும் கூவிக்கொண்டு
மகிழ்ந்தான் ஆழிக்குள் அறிதுயில்போல். 7

மறுநாள் காலையில்

தங்கி னான்அங்கே தாடாளன்;
தரும வசனங்கள் அறிஞர்சொல்லக்
கங்கு லாகிய உறையைவெய்யோன்
கதிரா யிரத்தாலும் கழற்றிவந்தான்;
எங்கும் விளங்கின கடல்ஞாலம்
எழுந்து சரபங்க மாமுனியும்
பொங்கு திக்குண்டந் தனைவளர்த்துப்
புதல்வா! வைகுண்டம் தருதிஎன்றான். 8

பரமபதம் வேண்டித் தீக்குளித்தான் சரபங்கன்

வில்லேர் உழவன்கண்டு எந்தன்முன்னே
விழத் தகுமோஇத் தழலில்என்ன;
சொல்லேர் உழவன்என்ற தவன்தானும்
சொல்லில் ஆயிரம்உகம் சென்றதுகாண்

6. போக்கிலன் வரவிலன் இறைவன் என்பது திருவாசகம்.

7. திருவாளன் - இராமன். "ஆழியில் அறிதுயில் அவன்என மகிழ்வான்" என்பார் கம்பரும்.

8. உலகின் இருளாகிய போர்வையைச் சூரியன் தன் கிரணங்கள் ஆகிய வாளால் உரித்தெடுத்தானாம்.

நல்லோய் நீஇங்கே வருவைஎன்று,
    நான்செய் பாக்கியம் பலித்ததென்று
வல்லோர் புகழ்வேதன் உலகந்தந்தான்;
    மகவான் இவண்வந்தான் அதுவேண்டிலேன். 9

பரம பதம்ஒன்றே வேண்டுகின்றேன்
    பரமன் ஒருநீயே பாவிஎன்று,
சரம மறைதேடும் பொருள்அறிந்த
    தவமா முனியும்பன் னியும்தானும்
வரமெய் எதிர்தன்னில் எரிமூழ்கி
    மலர்வே தனும்செல்லா உலகிற்சென்றான்;
திரமாம் அதுமாயன் பேர்சொன்னபேர்
    சிவந்த பதம்கண்டார்க்கு அரியதுண்டோ! 10

9. வில் ஏர் உழவன் - இராமன். சொல் ஏர் உழவன் - தவன் - சரபங்கர். வேதன் உலகம் - பிரமலோகம். மகவான் - இந்திரன்.

10. பாவி - கொடுப்பாயாக. மெய்(ப் பொருள்) - இராமன். திருமாலின் ஆயிரம் நாமங்களுள் ஒப்பற்றதாகிய இராமநாமத்தைச் சொன்னவர் அடையும் பேறு பெரியது. அவனுடைய திருவடியைத் தரிசித்தார்க்கு அரியது ஒன்றில்லை.

''பைகலந்த பாம்பணைமேல் திருவரங்கப் பெருநகருள் பள்ளி கொள்ளும் கைகலந்த நேமியான் திருநாமத்து ஒருநாமம் கற்றார், பரமபதம் பெறுவர்'' என்பர் பெரியோர்,

5

அகத்தியப் படலம்

— இராமன் சீதாலக்குமணருடன்
அகத்திய முனிவரை அடைந்தது

முனிவர்களின் வரவேற்பும் மகிழ்ச்சியும்

நன்றிமுனி செயற்குஇரங்கி
நாதனும்தம் பியும்திருவும்
குன்றுபல ஆறுபல
கொடியசுரம் பலகடந்து
சென்றிடலும் வாலகில்லர்
செழுந்தவர்முண் டிதர்மவுனர்
என்றிவர்தண் டகவனத்தே
இராமனைக்கண்டு இன்பம்உற்றார். 1

வஞ்சஇராக் கதர்க்குஉலைந்தோர்
மழைபொழிந்த உலவைகள்போல்
தஞ்சம்இலாக் கன்றினங்கள்
தாய்வரவைக் கண்டதுபோல்
நஞ்சலையில் அழந்துகின்றோர்
நல்லவங்கம் பெற்றதுபோல்
வெஞ்சினங்கள் அற்றோர்போல்
வெகுளிஅற்றோர் மகிழல்உற்றார். 2

சுத்தர்எல்லாம் எதிர்எழுந்து
தொழுதமைந்தன் தனைஅணைத்துச்
சித்தம்மகிழ்ந்து ஆசிசொல்லிச்
சிறப்புநல்கி இருக்கைதந்து
தத்தமிடம் சென்றுதங்கித்
தங்கள்குறை கூறவந்தார்;
முத்தனருள் வீர்எனவே,
முதல்வனுடன் மொழியலுற்றார். 3

1. முனி - சரபங்கர்.

2. உலவை - உலர்ந்த மரங்கள். நஞ்சு - நைந்து. அலை - கடல். வங்கம் - மரக்கலம்.

தம்குறை கூறி முறையிட்டனர் முனிவர்கள்

நலியவிட்டார் அரக்கர்எம்மை
நான்மறைநூல் ஓதல்விட்டோம்;
புலிவனத்துள் மான்ஆனோம்;
புண்ணியமா தவம்மறந்தோம்;
மெலியலுற்றோம் வேதியராய்;
வேள்விஅற்றோம்; வீடதுண்டோ?
வலிமைஅற்றான் வாசவனும்
மற்றவர்க்கே ஏவல்செய்வான். 4

வெருளாதே என்பவரார்?
மேவினைஎம் பாக்கியத்தால்;
இருளாழி இனிக்கடந்தோம்;
எங்கள்பரஞ் சோதிவந்தாய்!
உருளாழி தனைநடத்தி
உலகாண்டோன் திருமதலாய்!
அருளாளா! உனக்குஅபயம்;
ஆதிபரா! அபயம்என்றார். 5

அபயம் அளித்தான் இராமன்

களத்தவரே, உமைநலிந்தோர்
கடுங்கணையால் மடிந்திடுவார்;
சினத்தவரைக் கொல்லேனேல்
செனித்ததினால் என்னபயன்?

4. இரக்கம்என்று ஒருபொருள் இலாத நெஞ்சினர்
அரக்கர்என்று உளர்சிலர் அறத்தின் நீங்கினார்
நெருக்கவும் யாம்படர் நெறிஅ லாநெறி
துரக்கவும் அருந்தவத் துறையும் நீங்கினேம். —கம். 12.

மாதவத்து ஒழுகலெம் மறைகள் யாவையும்
ஓதலெம் ஓதுவார்க்கு உதவல் ஆற்றலெம்
மூதெரி வளர்க்கிலெம் முறையின் நீங்கினேம்
ஆதலின் அந்தண ரேயும் ஆகிலேம், —கம். 14.

எனத்தனவன் உயிர்துறக்க
எம்பியும்தா யரும்வருந்த
வனத்திடைநான் வந்தது,உம்மை
மகிழ்வுடன்ஆ தரிக்கஅன்றோ? 6

காதிஅற்றார் கவந்தநடம்
காணில்என்வில் லாண்மைநன்றாம்;
வேதியர்க்காய் ஆவினுக்காய்
விடுறுவார் விடுறுவார்;
ஆதிஅற்றார் மூவரும்தாம்
ஆங்கவர்க்காய் வந்திடினும்
நீதிஅற்றார் குலம்அறுப்பேன்;
நீங்கள்இடர் நீங்கஎன்றான். 7

பத்தாண்டுகள் கழிந்தபின்

மெய்விமலன் சொற்கேட்டு
வேதியர்ஆ டிப்பாடி
எவ்வுலகும் உனக்குஎதிரோ?
எமதுஉணர்வே சாட்சிஎன்றார்;
அவ்வுறையுள் அவருடனே
ஐயிரண்டாண்டு இருந்தமைந்தன்,
செவ்வியனே அகத்தியன்பால்
செல்கெனவே சென்றனனே. 8

6. எனத்தனவன் - என் அத்தன் அவன் - என் தந்தை ஆகிய அரசன்.

வேந்தன் வியவும் யாய்துயர் மேவவும்
ஏந்தல் எம்பி வருந்தவும் என்நகர்
மாந்தர் வன்துயர் கூரவும் யான்வனம்
போந்தது என்னுடைப் புண்ணியத் தால்என்றான். —கம். 18.

அறந்த வாநெறி அந்தணர் தன்மையை
மறந்த புல்வர் வலிதொலை யேன்எனில்
இறந்து போகினும் நன்றுஇது அல்லது
பிறந்து யான்பெறும் பேறுஎன்பது யாவதோ. —கம். 19.

7. காதி - கொன்று. விடுறுவார் - இறப்பவர்; முக்தி பெறுவார். மூவர் - மும்மூர்த்திகள்.

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் கும்தொழுந் தேவர்கள் ஆகுவார். —கம். 21,

இது, கம்பர் பாடல்தானா என ஐயுறுகிறது மர்ரே பதிப்பு.

சுதட்சண முனிவரிடத்திலே

துற்றவனம் பலகடந்து
சுதட்சணனைத் தொழுதுஇறைஞ்ச;
மற்றவன்தான் அணைத்துஇருத்தி
வந்ததுஎன்பாக் கியம்எனவே,
நற்றவருள் உனக்குஇணையார்?
ஞானிஉளக் கருணைபெற்றேன்;
கொற்றவருள் எனக்குஇணையார்
என;முனிவன் கூறல்உற்றான்: 9

சந்ததம்இங்கு இருந்துஎங்கள்
தபோபலம்நீ கொள்வைஎன்ன;
அந்தணனே ஒருகுறைஉண்டு
அகத்தியனைக் காண்பதுஎன்றே
முந்தவும்நான் சொலிஇருந்தேன்;
முனிவனும்ஆ தரித்திருந்தான்;
மைந்தர்செல்வீர் எனவாழ்த்தி
வழிகாட்டத் தொழுதுசென்றார். 10

எதிர்ப்பட்டார் அகத்தியர்

மானவர்க்குள் உதித்தபிரான்
வந்தனன்என்று அஃதுஅறிந்தான்—
ஞானவர்க்குள் சிவற்குஇணையாய்
நற்பொதியம் தனில்உறைவோன்;
வானவர்க்காய்க் கடலைஉண்டோன்;
மாதவர்க்காய் மலையைவென்றோன்;
ஆனவர்க்காய்த் தமிழ்உரைத்தோன்;
அருமுனிவன் அகத்தியனே. 11

9. துற்றவனம் - துன்னிய வனம் - சேர்ந்த வனம். சுதட்சணன் - சுதீஷ்ண முனிவர்.

11. மானவர் - மானிடர்.

ஈசன் நிகராய் உலகு சீர்பெற இருந்தான். —கம். 40.

விருத்திரன் முதலிய அசுரர்கள் கடலிலே புகுந்து ஒளிந்துகொள, தேவர்களின் வேண்டுகோளின்படி அகத்தியர் ஏழு பெருங் கடலின் நீரையும் பருகினார், அதனால் வெளிப்பட்ட அசுரர்களை இந்திரன் அழித்தான்.

தண்ணிறைந்த முனிவர்விண்ணோர்
தருமறையோர் அறம்தழைக்க
எண்ணிறந்த வர்க்கம்தின்னும்
எரிஅவிக்கும் கருணைமுகில்
விண்ணிறைந்தும் புவிநிறைந்தும்
விரிஞ்சனும்கா ணாதபொருள்
கண்ணிறைந்தும் செவிநிறைந்தும்
கட்டுரைக்கும் எனக்களிப்பான். 12

இராமனை வரவேற்றார்

இராகவனைக் கண்டுமுனி
இருகண்ணும் பொழியநின்றான்;
தராபதிவந்து அடிபணிந்தான்;
தழுவிநண்பால் இனிதுஉரைத்தான்;
பராபரவே தியர்மகிழப்
பன்மலர்தூ வும்காவில்
பிரான்எனநல் விருந்துசெய்தான்
பெருந்தவம்தான் பலித்ததுபோல். 13

உந்தன்அருள் பெற்றுஉயர்ந்தேன்
உயர்ந்தமுன்னோர் போலஎன்ற
சுந்தரனை, உவந்துமுனி,
சுடர்வேலோய்! தண்டகத்தில்

வான் அளாவி எழுந்து நின்ற விந்தமலையைக் கடந்து செல்லும் வழி யாது என்று தேவர்கள் வேண்ட, அம் மலைமீது ஏறி அகத்தியர் அதனைப் பாதளத்தில் ஆழ்த்தினார்.

உழக்குமறை நாவினும் உயர்ந்துஉலகம் ஓதும்
வழக்கினும் மதிக்கவியி னும்மரபில் நாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றிஉமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான். —கம். 41.

12. எண்ணிறந்த உயிரினங்களைக் கொன்று தின்றுவந்த வாதாபி வில்வலன் என்ற அசுர சகோதரர்களை, சாடராக்கினி என்ற தன் வயிற்றழலால் எரித்து ஒழித்தவன்.

13. தராபதி - இராமன்.

வந்ததுஅறிந்து இவ்விடத்தும்
　　வருவைஎன்றே மகிழ்ந்துஇருந்தேன்;
எந்தனுடன் இனிதுஇருநீ
　　ஏழ்உலகும் வாழஎன்றான். 14

படைக்கலங்கள் வழங்கினார்

அரக்கர்வரும் திசைக்குமுந்தி
　　அமர்ந்துஉறைதல் நன்றுஎனவே,
திருக்கண்அவன் சிலையும்அம்பும்
　　திறலவர்க்கு முனிகொடுத்துத்
தருக்கள்செறி பஞ்சவடி
　　தன்எதிர்நீ காய்கனிஉண்டு;
இருக்கைநன்றாம் மின்னொடுஎன்ன;
　　இறைஞ்சிவிடை கொண்டனனே. 15

பாண்டியன்பால் வரிசைப் பெற்ற நல்லதம்பி போல

மிகத்திருவாழ் செங்கோட்டில்
　　வேலவன்பேர் நாரணன்பேர்
செகத்துமன்னர் தருசிறப்பும்
　　தென்னவன்பால் மூவிருதும்
மகத்துகள்பால் நல்லதம்பி
　　வரிசைபெற்றான் மோரூரான்
அகத்தியன்பால் ராமபிரான்
　　அருள்வரிசை பெற்றனனே. 16

14. சுந்தரன் - இராமன்,

4 சடாயுப் படலம்

— இராம சீதாலக்குமணர் சடாயுவைச் சந்தித்தது

சடாயுவைக் கண்டனர்

தூரம் பலசென்று வீரர்கண்டார்
சுடர்போல் விரித்தசெஞ் சிறகானை,
காரம் கலிதாழப் பொலிவானைக்
கழுகின் சடாயுமன் தன்னை,அப்பால்
பாரம் பலகாலம் கடந்தானைப்
பகட்டுஅங் குசம்போலும் மூக்கானை,
ஆர முடியானை, அசுரர்நஞ்சை,
அருணன் மகனைக்கண்டு ஐயம்உற்றார். 1

ஒருவரை ஒருவர் ஐயுற்று நோக்கினர்

கருடன் இவன்அன்றே, அரக்கன்என்று
கருதும் சிலையோரை; அயிர்த்து,அவனும்
வருடந் தரும்தேவர் மூவர்க்குள்ளோ
வல்லேன் அவர்தம்மை, அவர்க்குள்அல்லார்
புருடன் மகன்என்றால் இவர்க்குஆற்றான்;
போதார் மடமானும் திருமாதோ!
நருடன் கோமான்எம் தோழனைப்போல்;
நல்லீர், உமைச்சொல்வீர் அறியஎன்றான். 2

குறிப்பு: இப் படலம் சடாயு காண் படலம் என்று கம்பன் பதிப்புகளில் காணப்பெறும்.

சடாயு, அருணனது புத்திரன்; சம்பாதியின் தம்பி. தசரதனால் உயிர்த்துணைவன் என்று கொண்டாடப்பட்டவன்; ஆதலின் தசரதனுக்குத் தமையன் முறை கொண்டு, சடாயுவைப் 'பெரியவுடையார்' என்று வைணவ சம்பிரதாயம் போற்றும்.

1. கார் அம் கலி - துன்ப இருள். கற்ப காலங்கள் பலவற்றைக் கண்டவன். இந்திரனுடைய அங்குசம்போலத் தீட்டப்பெற்றுத் தேய்ந்து விளங்கும் மூக்கன்.

2. வருடந் தரும் தேவர் – வரம் தரும் தேவர். புருடன் மகன் - திருமாவின் மகனாகிய காமன். நருடன் - நண்பன். தசரதன் போல் அல்லவா தோன்றுகிறார்கள்?

தசரதன் மரணம் கேட்டு வருந்தினான் சடாயு

வாரி உலகாண்ட தசரதன்தன்
    மைந்தர் யாம்என்ற இருவரையும்
பாரில் இறங்கித்தான் அணைத்துக்கொண்டு
    பழுதுஒன்று இலையேநம் அரசர்க்குஎன்றான்;
சேர வானம்சென் றான்எனவே,
    தீர்ந்த உயிர்போலச் சோர்ந்தவனை
நேரில் இருவோரும் அணைத்துஎடுக்க
    நினைவால் உயிர்வந்து புலம்பல்உற்றான். 3

புலம்பினான் சடாயு

காவும் மதியமும் கடலும்அஞ்சும்
    கையும் குடையும்நின் புகழும்எங்கே?
நாவின் கவிஞரும் வியப்ப,என்பால்
    நல்ல அறங்களும் அறியச்சொன்னாய்!
ஆவிநீ என்றாய்நின் சொல்பொய்யோ?
    ஆவி இருக்கமெய் வான்உறுமோ?
ஏவி அழுவதென்?வி ழுவென்தீயில்
    என்று குமரரைப் பார்த்துச்சொல்வான். 4

4. ஏவி - கேவி. உன் கைக் கொடைக்குக் கற்பகக் காவும், உன் குடைக்கு முழுமதியும், உன் புகழுக்குக் கடலிடமும் அஞ்சும் எனக் கூட்டுக.

பரவலரும் கொடைக்கும்நின்தன் தனிக்குடைக்கும்
    பொறைக்கும்நெடும் பண்பு தோற்ற,
கரவலரும் கற்பமும் உடுபதியும்
    கடலிடமும் களித்து வாழப்
புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே
    மெய்க்குஅணியே புகழின் வாழ்வே
இரவலரும் நல்லறமும் யாமும்இனி
    என்படநீத்து ஏகினாயே. —கம். 21.

தவிர்உடைக்கும் மத்தென்ன உலகைநலி
    சம்பரனைத் தடிந்த அந்நாள்
அயிர்கிடக்கும் கடல்வலயத்து அயலறிய
    நீஉடல்யான் ஆவி என்னச்
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய்
    செப்பினாய் திறம்பா நின்சொல்
உயிர்கிடக்க உடலைவிசும்பு ஏற்றினார்
    உணர்வுஇறந்த கூற்றி னாரே. —கம். 23.

தன் வரலாறு கூறினான்

அமரர் பிறந்தஅன் றேபிறந்தேன்;
அருணன் புதல்வன்;சம் பாதிதம்பி;
எமரர் களுக்கெல்லாம் கர்த்தன்ஆன
எந்தைபோல் எந்தஉல கும்செல்வேன்;
தமரர் தமைப்பற்றத் தசரதற்குத்
தமயன் ஆகும்ச டாயுஎன்ன;
குமரர் தகப்பனைமீ ளக்கண்ட
கொள்கை போல்செங்கை குவித்துநின்றார். 5

உயிர்விடத் துணிந்த சடாயுவைத் தடுத்தான் இராமன்

புகல்வான் சடாயுவும்அங்கு அவர்பார்த்துப்
புதல்வீர், கடன்செய்யும் எனக்கும்;இப்போ
பகரின் துணைஇழந்து உயிர்வாழேன்;
படர்தீ புகுவேன்நான் என;கேட்டு
நிகரில் உமைக்கண்டுஎம் இடர்தீர்ந்தோம்;
நீர்சென் றால்எமக்கு ஆர்உண்டுஎன;
நகரில் உமைவந்து முடிசூட்ட
நண்பன் தனைவானில் காண்பன்என்றான். 6

காடுபோந்த காரணம் அறிந்தான்

உம்பர் தானவர்கள் எதிர்த்தாலும்
உடனே பொருதுஉமக்கு உலகுஅளிப்பேன்;
செம்பொன் முடிசூடி ஆளாமல்
சேர்ந்த வாறுஎன்ன வனத்தில்என்ன—
நம்பன் இளையோன் முகம்பார்க்க;
நகரில் சிறுதாயர் விளைத்ததுஎல்லாம்
கம்ப மதயானை இளவீரன்
கழுகின் வேந்தற்குத் தெரியச்சொன்னான். 7

இராமனை வாழ்த்தினான் சடாயு

தாதை வாசகம் தவிராமல்
தாயின் வாசகம் தலையிற்கொண்டு
கோதை அணிதம்பிக்கு அரசாட்சி
கொடுத்த கருணையைக் கொண்டாடி,

ஆதி அரசர்க்கும் தமியேற்கும்
அழியாப் புகழ்தந்தாய் வாழிஎன்று,
காத லனைஉச்சி தான்மோந்து
கண்ணீர் சோர்ந்துஅன்பு கூர்ந்துநின்றான். 8

ஆடல் மயில்அஞ்சும் இயலாளை,
அன்னை இவள்ஆர்? உரையும்என்ன;
தாட கையைக்கொன்ற செயல்முதலாய்த்
தனுவை வளைத்துஐயன் மணம்செய்ததை
ஏட விழுமாலை இலட்சுமணன்
இயம்பு வதுகேட்டு எருவைமன்னன்
நாட தனைவிட்டுக் காட்டில்உற்றீர்
நானே காக்கஇங்கு இருக்கஎன்றான். 9

அன்புற்று அகத்திய முனிவன்தந்த
ஆற்றங் கரைஉண்டுஎன்று அழகன்சொல்ல;
இன்புற்று அதுநன்றே வம்மின்என்று
இறகின் நிழலிட்டுக் கொடுபோந்து,
மன்புட் பழும்காயும் கனியும்தண்கா
வாழும் இதில்என்று மருகியையும்
தன்புத் திரரையும் காத்துக்கொண்டே
சடாயு ஒருகுன்றில் தான்இருந்தான். 10

8. உந்தை உண்மையன் ஆக்கிஉன் சிற்றவை
தந்தசொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே
எந்தை வல்லது யாவர்வல் லார்எனா. —கம். 34.

9. ஏடு அவிழ்மாலை - இதழ்விரிந்த மலர்மாலை. எருவை மன்னன் - கழுகு அரசன்.

5 சூர்ப்பணகைப் படலம்

— சூர்ப்பணகை செய்தியைச் சொல்வது

கோதாவரியின் பொலிவு

புவிக்குஅணியாய் ஒழுக்கமதாய்ப்
    பொருள்நிறைந்த தவப்புலவோர்
கவிக்குஇணையாய்த் தெளிந்துவரக்
    கண்டார்கோ தாவரியை;
செவிக்கமலம் முகம்மலரச்
    செம்பொன்மணித் திரைக்கரங்கள்
குவிக்கவந்து பணிவதுஒக்கும்
    குமரர்திருத் தாள்களையே. 1

துங்கவில்கை விறல்வீரர்
    சுரத்துஉறையும் துயர்நீக்கி
அங்கயற்கண் நீர்பாய
    அழுவதுஒக்கும் ஒலிஆற்றில்;
கொங்கைசக்ர வாளம்என்னக்
    கோதைநலம் கொண்டல்கண்டான்;
பங்கயக்கண் மனத்துள்வைத்துப்
    பைந்தடநீர் பாவைகண்டாள். 2

குறிப்பு: முதல் மூன்று பாடல்களும் பஞ்சவடிப் படலம் என்ற தலைப்பிலே மர்ரே பதிப்பில் இடம் பெறுகின்றன.

சூர்ப்பணகா - சூர்ப்பணகை. சூர்ப்பம் - முறம் - சுளகு போன்ற நகத்தை உடையாள். சூர்ப்பநகை என்றும் எழுதுவர். இவள், இராவணனுடைய தங்கை; விடணனுக்கு முன்பிறந்தவள். காலகேயருள் ஒருவனை மணந்திருந்தாள்: அவன் இராவணனால் கொல்லப்பட்டான். கணவனை இழந்த தங்கைக்குத் தண்டக வனத்திலே ஓர் இராச்சியம் உண்டாக்கி, அங்கே தன் விருப்பப்படி இருக்குமாறு செய்தான் இராவணன். கரதூஷணர் அவளுடைய சேனாதிபதிகள்.

1. புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்று ஆகி
   அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிஅளாவிச்
   சவிஉறத் தெளிந்து தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
   கவிஎனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார். —கம். 1.

சீதைநடைக்கு ஓதுங்கிஅன்னம்
செல்கைகண்டு மால்சிரித்தான்;
நாதன்நடைக்கு ஆனைஅஞ்சி
நடக்கைகண்டு திருநகைத்தாள்;
மாதின்இடைக்கு உவமைஒப்போ
வஞ்சிஎன்பான், மனம்உவந்தான்;
ஆதிஉருக் குவளைஎனும்
அழகுகண்டாள் அகம்மகிழ்ந்தாள். 3

பஞ்சவடியிலே இராமனைக் கண்டாள் சூர்ப்பணகை

திடக்கரைகோ தாவரிபால்
சேர்ந்தபஞ்ச வடிவனத்தில்
தடக்கைவெற்றி இளவல்செய்த
சாலையில்வீற் றிருந்துஉறைநாள்—
உடற்கருத்த இராவணன்தன்
உடன்பிறந்து கொலும்பிணிபோல்
துடக்கறுத்த காரணத்தால்
சூர்ப்பணகை தோன்றினளே. 4

இராமனது பேரழகிலே மயங்கினாள் சூர்ப்பணகை

கானகத்தே தனிஉறைவாள்;
கரந்துஉலகெல் லாம்திரிவாள்;
வானவர்க்காய் உதித்தபிரான்
வடிவுகண்டு மிகமயங்கி,
மீனவர்க்கோ மேனிஇல்லை;
விண்ணவர்க்கோ ஆயிரம்கண்;
ஞானவர்க்கோ மூன்றுவிழி;
நாரணன்தோள் நாள்கெனுமால். 5

3. மால், நாதன் - இராமன். திரு - சீதை. வஞ்சி - கொடி.
ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். —கம். 5.

4. முடிவுகாலம் வரும்போது கொல்லும் உடன்பிறந்த நோய்.

5. ஞானவர் - சிவபிரான். மீனவர் - மன்மதன். விண்ணவர் - இந்திரன்.

பெருந்தவம்செய்து அனங்கன்அங்கம்
பெறினும்இந்த வடிவுபெறான்;
திருந்துமுகம் தாமரையோ?
திங்கள்என்றால் மறுஉளதாம்;
கருந்தடம்குன் றோ?புயமோ?
கரிக்கரமோ? மணிக்கரமோ?
அருந்தவமே செய்ததவம்
அருந்தவமே இவன்செயலால். 6

வாயிதழ்போல் பவளம்;மின்ஆர்
மார்பகமோ விழிக்குஅடங்கா;
ஆயசடை தரித்ததிலே
அணிகுழல்கண்டு ஆர்பிழைப்பார்?
காய்கதிரோன் நாண்இலனோ
கண்டும்இவன் சுடர்வடிவை;
தோயும்மயிர் பொடித்தனவோ
தூயநிலம் தனிற்படர்புல். 7

சீரையுடை நோற்றதவம்
செம்பொன்உடை நோற்றிலதோ?
ஆரம்இவன் அணிந்திடினும்
அதில்ஏது நிறைவுகுறை;

6. அனங்கன் - மன்மதன். கரி - யானை.

கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவன் அன்றுதொட்டு இன்று காறுந்தான்
நற்றவம் இயற்றிஅவ் அனங்கன் நல்லுருப்
பெற்றனன் ஆம்எனப் பெயர்த்தும் எண்ணுவாள். —கம். 6.

நவம்செயத் தகையஇந் நளின நாட்டத்தான்
தவம்செயத் தவஞ்செய்த தவம்என் எல்கின்றாள். —கம். 11.

7. வாள்நிலா முறுவலன் வயங்கு சோதியைக்
காணல னேகொலாம் கதிரின் நாயகன்
சேணெலாம் புல்லொளி செலுத்திச் சிந்தையில்
நாணலன் மீமிசை நடக்கின் றான்என்றாள். —கம். 1

காரைவனம் உறையஇவன்
காற்பொடிஒவ் வான்மகவான்;
சேரஉலகு ஆளவைத்த
திசைமுகனே கொடியன்என்பாள். 8

பொருள்காக்கும் லோபியர்தம்
புகழ்போல்தன் கற்புஅழிவாள்;
நருள்காப்போன் மகன்தோளில்
நாட்டியகண் வாங்கரிதால்
அருள்காப்போன் மாரனைவென்று
அன்றிஇனி உயிர்பிழையேன்;
மருள்காப்போன் அரக்கிஎன்றால்
மறுப்பன்;என்றுஓர் வகைநினைத்தாள். 9

வடிவழகியாய் உருமாறித் தோன்றினாள்

செந்திருவை மனத்துஇறைஞ்சிச்
செங்கையில்நூறு உருச்செபித்தாள்;
சந்திரனே முகம்கனிவாய்
சன்னஇடை அன்னநடை
சிந்துரமா முலைமொழிதேன்
சித்திரத்தேர் அல்குலுமாய்
மந்திரவாள் விழிமானோ
மடமயிலோ எனநடந்தாள். 10

8. மகவான் - இந்திரன். திசைமுகன் - பிரமன்.

கரந்திலன் இலக்கணம் எடுத்துக் காட்டிய
பரந்தரு நான்முகன் பழிப்புற் றான்அரோ
இரந்து இவன் இணைஅடிப் பொடியும் ஏற்கலாப்
புரந்தரன் உலகெலாம் புரக்கின் றான்என்றாள். —கம். 16.

இப் பாடல் கம்பர் பாடியதுதானா என்பது சிலருடைய ஐயம்.

9. நருள் - மக்கள் கூட்டம். காப்போன் - தசரதன். மருள் - மயக்கம்; இது வராமல் காப்பவன் இராமன்.

10. செந்திரு - இலட்சுமி.

யார் இவள்?

வண்டிசையும் சிலம்பொலியும்
வண்செவியால் கேட்டதற்பின்
கண்டிசையும் சொல்லிதனைக்
கண்ணெதிரே நோக்கியமால்,
எண்டிசையும் ஏழ்உலகும்
இல்லைஇந்த வடிவுகண்டால்
தொண்டுசெயும் மன்மதனும்
துறந்தோரும் எனநினைந்தான். 11

காமவல்லியாம் கன்னி

புராதனனைக் கடைக்கணிட்டுப்
பொன்னடிதாழ்ந்து ஒதுங்கிநின்றாள்;
தராபதி,நன் றாகளங்கள்
தலத்தில்வந்தீர், ஆர்?எனவே,
பராவும்அயன் பேரன்மகள்;
பரன்தோழன் குபேரனுக்கும்
இராவணற்கும் தங்கை; என்பேர்
எழில்காம வல்லிஎன்றாள். 12

அவளுடன் அசதி ஆடினான் இராமன்

இராவணன்தன் உடன்பிறந்தால்
இவ்வுருவுஎங் குற்றதென்றான்?
துராகதர்தன் உறவைவிட்டுஎன்
சொல்தவத்தால் பெற்றதுஎன்றாள்;
ஓராண்துணையும் செல்வம்இன்றி
ஒருதனிஏன் வந்ததுஎன்றான்?
நிராதரமாய் நோற்கலுற்றேன்
நின்னில்ஒன்று பெறுகஎன்றாள் 13

11. கண்டு இசையும் சொல்லி - கற்கண்டு போலும் இனிய சொற்களைப் பேசுபவள். மால் - இராமன். புராதனன் - பண்டையோன் ஆகிய இராமன்.

12. தராபதி - இராமன்; பரன் – சிவன்.

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி,மூப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன செங்கையோன் தங்கை, திக்கின்
மாஎலாம் தொலைத்து வெள்ளி மலைஎடுத்து உலகம் மூன்றும்
காவலோன் பின்னை, காம வல்லியாம் கன்னி என்றாள். —கம். 32.

13. துராகதர் - இராக்கதர். நோற்கல் - நோற்றல் - தவம்செயல். ஓராண் - ஒராண்; முதற் குறுக்கம்.

துன்மதிஎன்று அறிந்துஇறையோன்,
சொல்வதுஎன்ன கருமம்என—
தன்மயல்தான் உரைக்கஒண்ணா;
சாற்றுதற்குஒர் பாங்கிஇல்லை;
மன்மதனும் வருத்துகின்றான்;
மாமயல்தீர்த்து அருளிர்என்றாள்—
வின்மலைபே சாதிருந்தான்;
மீண்டும்ஒரு வார்த்தைசொல்வாள்: 14

வந்ததன்றே அறியாமல்
வாலிபம்பாழ் போனதுஎன்றாள்;
அந்தணர்பெண் மணம்ஆகாது
அரசமைந்தர்க்கு எனஉரைத்தான்;
தந்தஅன்னை கற்புடையாள்
சாலகடங் கடன்தையல்
இந்தமணம் மானிடர்க்கும்
இராக்கதர்க்கும் தக்கதுஎன்றாள். 15

சித்திஇல்லாப் பத்திஉண்டோ?
திறல்அரக்கன் தங்கைஎன்றால்
புத்திஇல்லா அரக்கிஎன்று;
புந்தியுள்ளே நொந்து,பின்னும்
சுத்திஇல்லாக் குலத்தைவிட்டேன்
துறவதனால் என்றுரைத்தாள்;
சத்தியுள்ளான் குபேரனுள்ளான்
தராதுகொண்டால் விரோதம்என்றான். 16

14. தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்பது என்பது
ஆமெனல் ஆவது அன்றால் அருங்குல மகளிர்க்கு அம்மா
ஏமுறும் உயிர்க்கு நோவேன் என்செய்கேன் யாரும் இல்லேன்
காமன்என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்றாள்.

—கம். 38.

15. என் தந்தை அந்தணன் (விசுரவசு) ஆயினும், என் தாய் அரசாண்ட சாலகடங்கடர் என்ற அரசகுலத்திலே பிறந்தவன்தான். நமது மணம் சாதி முறைக்குப் பொருந்தியதே.

16. அரக்கி எனத் தள்ளிவிடுவானே என்று நினைந்து.

வரக்கொளுகாந் தர்ப்பமணம்
மறைநெறியே எனைப்புணர்ந்தால்
தரக்கடவார் எனக்குமுன்னோர்
தரணிஎல்லாம் உனக்குஎனவே;
அரக்கர்நண்பும் உன்னழகும்
அநுபவித்தோம் நகர்துறந்து,
பரக்கவனம் உறைந்த தவம்
பலித்ததுஎன்றே பரன்சிரித்தான். 17

அங்கே வந்தாள் சீதை

ஈரமைக்கா வனத்தினின்றும்
இறைவிவந்தாள் இறையவன்பால்;
காரரக்கர் குலம்அறுக்கும்
கற்பெனும்தீ கண்டு,அரக்கி,
ஆரமெய்ப்பூண் மலர்மகளே
அல்லார்க்குஇவ் அழகுஉண்டோ?
சோரலுற்றேன் என்மனமும்
சோரார்ஆர்? என நினைந்தாள். 18

தண்மறையோன் வகுத்தனன்ஆம்
சாதிஇரண் டினும்அதிகம்
எண்மனையாள் தவத்துஇயலான்
இடைவந்தாள் எனஎண்ணி,
திண்மறைவாள் அரக்கிவந்தாள்,
சேராதே துரத்திடு!என்றாள்;
உண்மைசொன்னாய்! என்றுஇறையோன்,
ஒழிபடுமோ? என நகைத்தான். 19

18. இறைவி - சிதை. திப்போல்வாள் ஆய சிதை. சோரல் - தளரல்.

மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்தபோர் அரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணின் கண்டாள். —கம். 51.

மருவொன்று கூந்த லாளை வனத்திவன் கொண்டு வாரான்
உருவிங்கி துடைய ராக மற்றையோர் யாரும் இல்லை
அரவிந்த மலருள் நீங்கி அடிஇணை படியில் தோயத்
திருவிங்கு வருவாள் கொல்லோ என்றுளம் திகைத்து நின்றாள். —கம். 54.

19. பிரமனே ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இருவகையார்க்கும் வடி வழகுக்கு முடிவெல்லையாகப் படைக்கப்பட்டவர் இவ்விருவர். மனையாளுடன் தவத்தை மேற்கொளான்.

சீர்க்குயில்போல் நவில்அரக்கி,
செல்அரக்கி எனலும்,அஞ்சிக்
கார்க்குவடார் துகிற்கொடிபோல்
கண்ணனைத்தோள் உறஅணைந்தாள்;
போர்க்குமரன் முனிவன்உன்னைப்
போஎனவும் போகாமல்
ஆர்க்கும்எய்தா எனைவிடுமோ?
அரக்கிஉனைக் கருதி,என்றாள். 20

மாலையில் மலர்ந்த காமம்

வேலையிற்கார் விடத்தில்வெய்யாள்
விட்டுஅகலாள் என்றுஇறையோன்
சாலையிற்சீ தையும்தானும்
சார்ந்ததற்பின், சோர்ந்துஅரக்கி,
சோலையிற்போய்ப் புகுந்தளவில்
சூரியனும் கடல்புகுந்தான்;
மாலையிற்கா மக்கடும்தீ
வளர்ந்துபரந்து ஏறியதே. 21

விரகதாபம்

எங்கள் வரராமன் தாடகைமேல்
எய்த பாணம்போல் ஏவும்வேளை,
திங்கள் கறியாகத் தின்னஎன்பாள்;
தென்றல் புலிபாய நிலைசோர்வாள்;
பைங்கண் மலர்க்காவைத் துவைப்பன்என்பாள்;
பார்க்கும் நிலவாலே பதைபதைப்பாள்;
அங்கை மலைகொண்டுகடல் துகளண்ணி,
அலறிக் குழலாலே ஆவிசோர்வாள். 22

20. அணைந்தாள் - சீதை. என்றாள் என்றது சூர்ப்பணகையை.

22. ஏவும் வேளை - மலர் அம்புகளை ஏவும் மன்மதனை. சந்திரனையே கறியாகக்கொண்டு தின்ன எண்ணுவாள். குழல் - வேய்ங்குழல் ஓசை.

சின்ன வாடைக்கும் கடல்ஒலிக்கும்
தெரியா அரவாகி முழையுள்செல்வாள்;
முன்னை உருவாகிப் புரளப்புக்காள்;
முகிலை அவன்என்று தழுவிக்கொள்வாள்;
அன்ன ஏகவும் உடல்வேகாள்;
அழகன் வடிவங்குத் தோன்றக்கண்டாள்;
இன்னும் புணர்வேன்என்று ஆவலுற்றே
இருந்தாள் அதனால்அங்கு இறவாதாள். 23

மறுநாள் காலையில்

குவடார் கருங்குன்றே அருள்செய்என்றும்,
கொடியேன் படும்தாபம் தணித்திடுஎன்றும்,
இவள்தா மரையாள்போ லிருக்கஅன்பால்
இரங்கா யோஎன்று புலம்பும்எல்லை;
கவடாம் இருள்தீர ராகவன்போல்
கங்குல் கெடவெய்யோன் உதித்தபின்னை,
அவள்தான் உளமட்டும் எனைக்கூடான்
அவளை வதைப்பேன்என்று அரக்கிவந்தாள். 24

சூர்ப்பணகை அங்கம் பங்கப்படல்

மேவ வரராமன் நியமம்செய்ய;
மின்னாள் தனிஎன்று காத்துநின்ற
காவில் இளையோனைத் தான்காணாள்;
கள்ள அரக்கியும் தொடரக்கண்டு,
பாவி அடிநில்என்று இலக்குமணன்
பற்றிக் கொடுபெண்என்று உடைவாளால்
தாவி எழுவாளைச் செவிமூக்கும்
தடமா முலைக்கண்ணும் அறுத்துவிட்டான். 25

அங்கம் பங்கப்பட்டவளின் அவலம்

குரற்கதறல் விண்நிறையைக்
குருதிவெள்ளம் மண்நிறைய
அரக்கன்முடி பத்தறுக்க
ஆனநன்னாள் இட்டதுபோல்

23. அன்ன - தழுவிக்கொண்ட அம் முகில்.
மோகத் துக்குஓர் முடிவும்உண் டாம்கொலோ. —கம், 71.

உரக்கர்மேல் படுநிமித்தம்
உதிரமழை சொரிவதுபோல்
பரக்கவிசும்பு இறஎழுந்தாள்
பாரில்விழுந்து உருகிநின்றாள். 26

கைகுலைக்கும்; நாசிஒற்றும்;
கனதனம்பார்க்கும்;வேர்க்கும்;
வைகுஉலைக்குள் மெழுகைஒக்கும்;
மனம்மறுகும்; சினம்உருகும்;
மெய்குலைக்கும்; வெய்துஉயிர்க்கும்;
வெங்குருதி தனிற்புரளும்;
கொய்கொலைப்பேர் உற்றாரைக்
கூவிமுறை யிட்டழுமே. 27

குலத்தாரைக் கூவி அழைத்தாள்

நீயிருக்க மனிதர்என்னை
நிறைகழிவு செயத்தகுமோ?
தாயிருக்கச் சினவேங்கைக்
கன்றினுக்குத் தவறுஉறுமோ?
மீயிருக்கும் சுராசுரரும்
மிக்கவரும் உனக்குஅடிமை
ஆயிருக்க, வாழும்அண்ணா!
அண்ணாவோ! அண்ணாவோ! 28

சுட்டழகோர் ஆயிடினும்
கணைக்குஅடங்கா மானிடரோ?
எட்டன்என்னை உதைத்துஉருட்டி
இருசெவிமூக்கு அரியநன்றோ?

26. உரக்கர் - அரக்கர். இராவணன் மணியுடை மகுடத் தலை துமித்தற்கு நாள் கொண்டதுபோலவும், கரன்முதலான நிருதர்களின் முடிவுகாலத்தின் நிமித்த மாகவும் உதிரமழை சொரிந்தது.

28. நிலைஎடுத்து நெடுநிலத்து நீஇருக்க, தாபதர்கள்
சிலைஎடுத்துத் திரியும்இது சிறிதுஅன்றோ? —கம். 93.
புலிதானே புறத்துஆக, குட்டிகோட் படாதுஎன்ன
ஒலிஆழி உலகுஉரைக்கும் உரைபொய்யோ? —கம். 94.

நெட்டவைமுன் வரப்பெறுமோ?
நெருப்பெடுத்தோன் பொருப்பெடுத்தாய்!
அட்டகசம் மருப்பொடித்தாய்!
அண்ணாவோ! அண்ணாவோ! 29

தகவானைக் கருஅறுத்துத்
தானவரைப் பொருதழித்து
மகவானைச் சிறையில்வைத்த
மருகாவோ! மருகாவோ!
சுகவானே, கரனேயோ!
துயின்றீரோ கருணனைப்போல்;
நகவான பழிபாரீர்,
நான்அழைக்கக் கேளீரோ. 30

இராமனிடம் முறையிட்டாள்

நைந்துஅனையாள் புலம்பும்அப்போ
நம்பிசந்தி முடித்துவந்தான்;
நின்றனையான் ஆதரிக்க,
நிகழ்ந்ததுபார்! எனப்பணிந்தாள்;
சிந்தனையால் அறிந்துபின்னும்
சேயிழை,நீ யார்?எனவே,
எந்தனையே மறந்தனையோ!
இராவணன்தன் தங்கைஎன்றாள். 31

அருந்தவம்நான் செயும்இடத்தில்
அடைந்ததுஎன்நீ, அரக்கிஎன;
மருந்துஅனையாய்! நேற்றும்இங்கே
வந்தனனே என்றுரைக்க;

29. சந்திரன்போல் தனிக்குடைக்கீழ் நீஇருக்கும் சபைநடுவே
வந்துஅடியேன் நாணாது முகம்காட்ட வல்லேனோ? —கம். 100.

30. மருகன் - இந்திரசித்தன். கருணன் - கும்பகருணன்.
கரன்இருந்த வனம்அன்றோ இவைபடவும் கடவேனோ?
அரன்இருந்த மலைஎடுத்த அண்ணாவோ! அண்ணாவோ! —கம், 101,

பெருந்திருவே போல்நடந்த
　　பெண்ணமுதோ நீ,எனவே;
திருந்துசெவி மூக்குமுலை
　　தீரில்எங்ஙன் தெரியும்என்றாள். 32

நிகழ்ந்ததைச் சொன்னான் இலக்குமணன்

அரிந்தமனைக் கேட்டருள;
　　அரிந்தமனை வணங்கி, அவன்,
விரிந்தபடை கொணர்ந்தனளோ
　　விழுங்கஎன்றோ இவள்கருத்துத்
தெரிந்ததிலை; தொடர்ந்து வந்தாள்
　　திருவைஎன; சூர்ப்பணகை,
எரிந்துஅழலா தோமனந்தான்
　　எதிராளி காணஎன்றாள். 33

இடைமறித்துப் பேசினாள் சூர்ப்பணகை

பொன்ற அரக்கர்வேர் அறுக்கவந்தோம்;
　　புன்மை சொலிநீயும் இறவாதே,
சென்றுபிழை என்ன;அரக்கி சொல்வாள்:
　　தேவர் தமக்கும்என் தமையன்கர்த்தன்;
இன்றுஉன் நிலைசொன்ன வரையும்கொல்வான்;
　　இறந்தீர் குலத்தொடும், யார்காப்பார்?
நன்றுஎன் உயிர்தன்னை நீர்காத்தால்
　　நானே காப்பேன்நும் உயிரைஎன்றாள். 34

மனக்கற் புடையார்தம் பெருமைசொல்வீர்,
　　வளரும் பரிவாலே உரைசெய்கின்றேன்;
எனக்குத் தமயன்மூ வுலகுஆள்வான்;
　　இவட்குத் தமயன்எவ் உலகுஆள்வான்?

32. கொங்கைகளும் குழைக்காதும் கொடிமூக்கும் குறைத்துஅழித்தால்
அங்கண்அரசே ஒருவர்க்கு அழியாதோ அழகுஎன்றாள். —கம். 111.

33. அரிந்த+மன் - இலக்குவன். அரிந்தமனை - திருமாலை. எதிராளி - சக்களத்தி.

மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்என்றாள். —கம். 114.

கனக்கத் துணைஆவேன்; சுமந்துசெல்வேன்;
கனிகாய் தூரவல்லேன்; இவளால்என்?
முனைக்குள் பொருவேன்; நீர்கருணைசெய்தால்
மூக்கும் பெறுவேன்;நல் வடிவுகொள்வேன். 35

சேமன் விதிகண்ணன் மகவானும்
திரண்டுஓர் உருவான வடிவோனே!
காமன் அவனும்நின் இளையானோ?
கணையால் எனைஆவி அரியப்புக்கான்;
பூமன் குலத்தாலும் நலத்தாலும்
புவிஏ ழினும்மாதர் எனைப்போலார்?
ஓமல் அழகன்றே பெண்கட்குஎல்லாம்;
உயர்ந்த நாசியும் பழுதல்லவோ. 36

இராமன் அச்சுறுத்தியும் ஆசைவிடாள் அரக்கி

ஆரும் விரும்பாமல் மூக்குஅரிந்தீர்;
அறிந்தன் றோநேசம் மிகவும்கொண்டேன்;
பாரும் விசும்பும்என் தமையன்கையால்
பட்டுஎன் பொருட்டாலே அழியாமல்
சேரும் எனைஎன்று தொழுதாளைத்
தீயாய் போஎன்று சீறிக்கண்ணன்
கூருங் கணைஉ..ண்டு தாடகையைக்
கொன்றது இதுஎன்று கூறிப்பின்னும்; 37

36. சே - ரிஷபம். மன் - தலைவன் - சிவன். விழி - பிரமன். ஓமல் - திருஷ்டிதோஷம்; கேடு.

சிவனும்மலர்த் திசைமுகனும் திருமாலும் தெறுகுலிசத்து
அவனும்அடுத்து ஒன்றாகி நின்றன்வ உருவோனே
புவனம்அனைத் தையும்ஒருதன் பூங்கணையால் உயிர்வாங்கும்
அவனும்உனக்கு இளையானோ இவனேபோல் அருளிலனால். —கம். 124.

போக்கினீர்என் நாசிபோய்த்து என்நீர்பொ றுக்குவிரேல்
ஆக்குவென்ஓர் நொடிவரையில் அழகமைவென் அருள்கூரும்
பாக்கியம்உன் டெனின்அதனால் பெண்மைக்குஓர் பழுதுஉண்டோ
மேக்குயரும் நெடுமூக்கும் மடந்தையர்க்கு மிகைஅன்றோ. —கம். 122.

37. பொன்உருவப் பொருகழலீர் புழைகாண
மூக்குஅரிவான் பொருள்வேறு உண்டோ
இன்உருவம் இதுகொண்டுஇங்கு இருந்துஒழியும்
நம்மருங்கே ஏகாள் அப்பால்

தலைவன் தசரதன் தருமைந்தர்யாம்;
　　தாய்சொல் தலைகொண்டு வனம்போந்தோம்;
கொலைவன் கொடியாரை முனிவர்கட்காய்க்
　　கொன்றுஅல் லதுசெல்லோம் நகரின்கண்ணே;
நிலைவன் பாம்பின்கால் பாம்பறியும்
　　நிருதர் செயும்மாயம் தடுப்பேன்யான்;
மலைவன் உடன்மூ வரும்கூடி
　　வரினும் வதைப்போம்நின் குலத்தைஎன்றான். 38

மருங்கில் லாள்தன்னை மருவியநீர்,
　　வளரும் மூக்குஇல்லா ளையும்மருவீர்;
ஒருங்க உணர்என்று மயக்கம்தன்னால்
　　உரைக்க; இளையவன் இறைதன்னையும்
பொருங்கை வேலையும்பார்க்க; எங்கோன்
　　போகாவிடில் என்றான்; நினைவறிந்தாள்
இருங்கோள் உமைக்கொல்லக் கரனைக்கொண்டு
　　ஈண்டே வருகின்றேன் எனப்போனாள். 39

பின்இவளை அயல்ஒருவர் பாரார்என்றே
　　அரிந்தீர் பிழைசெய் தீரோ
அன்னதனை அறிந்துஅன்றோ அன்புஇரட்டி
　　பூண்டதுநான் அறிவுஇ லேனோ. —கம். 125.

39. இருங்கோள் - இருங்கள்; வட்டார வழக்கு.

6 கரன் வதைப் படலம்

— கர தூடணரை இராமலக்குவர் கொன்றது

கரனிடம் சென்று முறையிட்டாள் சூர்ப்பணகை

செக்கர்வான் போல்மறலி தீப்பறைபோல் சூர்ப்பணகை
மிக்ககரன் தாள்மேல் விழுந்துஅரற்ற — இக்கொடுமை
செய்தாரைக் கூறெனவும் செப்புவாள் செங்குருதி
பெய்தாரைத் துண்டத்தாள் பின். 1

வண்ணவில்கை நரர்இருவர்
மதனைஒப்பார் தசரதன்சேய்
எண்ணிறந்தோர் தவநெறிக்காய்
இராக்கதர்வேர் அறுக்கவந்தார்;
பெண்ணொருத்தி உடன்உடையார்
பேசஒண்ணா வடிவுஅவளை
அண்ணனுக்கென்று எடுக்கலுற்றேன்
அவர்அரிந்தார் மூக்கைஎன்றாள். 2

பதினான்கு வீரர் போர் ஏற்றுப் புறப்பட்டனர்

துன்முகம்காட்டு என்றுகண்டான்
தோன்றிடின்நுங்கு எனும்மூக்கைப்
பன்முகங்கள் கரந்தாலும்
பழிபோமோ எனக்கொதிப்பான்;
என்முகம்தேர் தருகைஎன்றான்—
எழுந்தவனை, ஏழ்இருவர்
வன்முகம்சேர் மழுவாள்வேல்
வலியர்எம்மைச் செலவிடுஎன்றார். 3

குறிப்பு: மர்ரே பதிப்பில், சூர்ப்பணகை, கரனிடம் சென்று முறையிடுதல் முதல், திரிசிரன் இறந்த பின், படையினர் புறங்கொடுத்து ஓடுவது வரை "திரிசிரா வதைப் படலம்" என்று காணப்படும்.

1. மறலி - யமன். தீப்பறைபோல் - கொடிய முரசம் போல.

2. என் - மனம். எண்ணிறந்தோர் - என் இறந்தோர் - மனத்தின் விருப்பு வெறுப்புகளைக் கடந்த முனிவர்களின். எண்மை - எளிமை. எண்மை+ இறந்தோர்=எண்ணிறந்தோர் எனக்கொளின், பார்வைக்கு எளிமையுடையோர் போலத் தோன்றினும் பெருவீரர்கள் எனலுமாம்.

3. கண்டான் - முகத்தினைக் காட்டு என்று கண்டவனாகிய கரன்.

கேட்ட வன்உரை கண்டவன் கண்ணினால்
தோட்ட நுங்கின் தொளைஉறு மூக்கினை, —சூம். 8,

நம்முன்என்றும் தகாதவர்மேல்
நாம்நடந்தால் சுரர்சிரிப்பார்;
பொம்மின்அந்த மனித்தரைநீர்
பொருதுகொன்று பூவைதன்னைத்
தம்மின்என்று கரன்விடுக்க;
தரணிஅஞ்ச இடித்துஎழுந்தார்—
வம்மின்என்று கொடுபோனாள்
வல்லரக்கி யமன்தூதாய். 4

கருத்தினையே உணர்ந்திருந்த
கண்ணனைக்கை கொடுகாட்ட;
விருத்தஇராக் கதர்வளைந்தார்;
விமலனும்தன் இளையவனை,
திருத்தனைநீ காத்திடுஎன்ன;
சிலைஏற்றிக் கணைதொடுத்தான்;
உருத்தகைநால் ஏழும்அற்றார்
உயிர்த்தலைஈர் ஏழும்அற்றார். 5

ஆடம்பரமாய்ப் புறப்பட்டான் கரன்

வாழியங்கோள் அரிவதைக்க
மதகரிகள் மடிவதுபோல்
பாழிவன்கை சுமந்துஓடிப்
பாவிசொலக் கேட்டகரன்
ஆழிநெடுந் தேர்தருகை
அடற்சேனை எழுகஎன்றான்;
ஊழியிடி முரசதிர
ஒலிகடல்போல் எழுந்ததுவே. 6

4. பொம்மின் - போமின் - முதல் குறைந்தது. பூவை - சீதை.

5. திரு - சீதை. போரின் தொடக்கத்திலேயே பதினான்கு படைத் தலைவர்களும், தங்கள் கைகள் இருபத்தெட்டையும் தலைகள் பதினான்கையும் இழந்தனர்.

6. கோள்அரி - சிங்கம்.

குளிறு கோபவெங் கோள்அரி மாஅட,
களிறு எலாம்பட, கைதலை மேல்உறப்
பிளறி ஓடும் பிடிஅன்ன பெற்றியாள். —கம். 21.

அரும்பசிபோம் என்றுஆடும்
அலகைகள்போல் கொடிஆட,
பொரும்படைஆ யுதம்நெருங்கிப்
பொறிபறந்து வனம்வேக,
வெரும்பரிதேர் உருண்டகரி
மலைகள்எல்லாம் திரண்டனபோல்
பரும்படநா கமும்சுமந்த
பார்முதுகும் நெளித்திடவே. 7

மீளிகள்போல் வெற்பினம்போல்
வேங்கைகள்போல் விறல்வீரர்
யாளிகள்பேய் பரிகரிமா
இனம்பூண்ட தேர்படைகள்
வாளிவில்வேல் முழுக்கதைவாள்
வாகைபுனை ஆயுதத்தார்
ஆளிவரோ ஒவ்வொருவர்
ஆயிரம்ஆ னையின்வலியார். 8

ஏறுவிண்ணும் விழுங்கவல்லோர்
இந்திரனும் அந்தகனும்
பாறிமுறிந்து ஓடவென்றோர்
பதினால்வர் படைத்தலைவர்
ஆறினொடுஆ யிரம்அமைந்தார்
ஆயிரம்ஓர் ஒருபடையாய்
ஏறினசேனைத் தொகைதான்
ஏழிரண்டா யிரம்படையே. 9

7. அலகை - பேய்.

8. வாளி - அம்பு. ஆள் இவரோ - ஆண்மையினையுடைய இவர்களோ.
ஆயிரம் ஆயிரம் களிற்றின் ஆற்றலர்
மாயிரு ஞாலத்தை விழுங்கும் வாயினர். —கம். 37.

9. பாறி - தோற்று. படை ஒன்றுக்கு அறுபது லட்சம் வீரர் கொண்ட பதினான்கு படைகள்.

கழற்கழலார் தழற்சிகையார்
கவசம்இட்ட மார்பகத்தார்
அழற்கடிய வேங்கைசிங்கம்
அணுகஅஞ்சும் கடுமுகத்தார்
முழக்கம்அறார் ஏழொடெட்டு
முகத்தலையார் இட்டிகையார்
இழக்கவொணா வலிபடைத்த
யானைகுடை கொடிஉடையார். 10

போர்எழுதூ டணன்முதலாம்
புகர்வடிவேல் திரிசிரத்தான்
ஈர்எழுலோ கமும்ஒடுக்கும்
ஈரெழுசே னைத்தலைவர்
ஓரெழுவே லையும்நிரப்பி
ஒலிமுரசால் கடல்நடுவே
பேர்எழுமே ருவைநிகர்க்கும்
பெருந்தேரிற் கரன்நடந்தான். 11

படிநெருங்கி விண்படரப்
பகைஅரக்கி முன்நடத்தி
அடிநெருங்கு தூளிவெள்ளம்
அலைதூர்த்துக் கதிர்மறைக்கக்
கொடிநெருங்கச் சிலைஇடிக்கக்
குலைந்துஓடப் புள்மிருகம்
கடிவனங்கள் பொடிகள்படக்
கரன்படைஎன்று இறைஅறிந்தான். 12

இலக்குவனைத் தடுத்து எழுந்தான் இராமன்

கதிருடைவா ளும்சிலையும்
கவசமும்தூ ணியும்தரித்துச்
சதுரியராம் தபோதனர்க்காய்
சபதம்இட்டேன்; அரக்கரையான்

10. வேங்கை சிங்கம் கரடி யானை முதலிய 'அஞ்சுறக் கனல்புரை முகத்தர்'; ஏழும் எட்டும் ஆகிய தலையர்.

12. அரக்கி - சூர்ப்பணகை. இறை - இராமன்.

உதிரிசெய்வேன்; காத்திருந்
ஒண்நுதலை என்ன;அவன்,
எதிரில்என்முன் பிழைப்பவர்ஆர்?
யான்பொருவேன் அருள்திஎன்றான். 13

வள்ளல்ஒவ்வா நினைவுஅறிந்து
மறுக்கஅஞ்சித் தம்பிநின்றான்;
தெள்ளமுதா னவள்கலங்கித்
திடுக்கமுற; அரக்கர்என்னும்
கொள்ளைமுகில் இடிக்கஎதிர்
கோள்அரிபோல் எழுந்தவனை,
கள்ளஇராக் கதிகாட்டக்
கண்டகரன் என்சொலுவான்: 14

தோன்றியது துன்நிமித்தம்

தானேஓர் மானிடனாம்;
தானைஇது சாகரமாம்;
ஆனேன்என் சேவகம்என்
அனைவீரும் கண்டுநில்லும்;
யானேகொன்று இவனைஉண்பேன்
என்றதுகேட்டு, அகம்பன்என்பான்,
கோனே!கேள்; என்றேதுற்
குறிகள்எல்லாம் கூறிடுவான்: 15

செங்கதிர்ஊர் சூழ்ந்ததுபார்!
செம்மாரி சொரிவதுபார்!
கங்கலரும் தொலைக்கொடிமேல்
கருங்கொடிவீழ்ந்து அலறுதல்பார்!
மங்கலவான் இடிப்பதுபார்!
வாள்தனை ஈ வளைப்பதுபார்!
தொங்கல்புலால் அடிப்பதுபார்!
தோள்கள்இடம் துடிப்பனபார்! 16

13. உதிரி செய்வேன் - சிதறடிப்பேன்—நாட்டுவழக்கு.
14. இராக்கதி - இராட்சசி.
15. மானிடன் ஒருவன் வந்த வலிகெழு சேனைக்கு அம்மா
கான்இடம் இல்லை. —கம். 67.
16. கொடி - துவசம். கருங்கொடி - காகம். புலால் - முடை நாற்றம்.

கரிக்குலம்கொம்பு ஒடிவனபார்!
கடம்,பிடிகள் பொழிவனபார்!
பரிக்குலங்கள் தூங்குகைபார்!
பாரநிலம் அதிர்வதுபார்!
நரிக்குலமும் நாய்க்குலமும்
நாலுதிக்கும் குரைப்பனபார்!
தெரிக்கில்இந்த மானிடனால்
தீங்குவரும் என்றுரைத்தான். 17

போர்க்கள வருணனை

இளைத்துஅமரர் எனக்குஇடைந்தார்;
இவன்நிகரோ? என நகைத்தான்—
கிளைத்தபடை இராகவனைக்
கிளர்அரியை மதகரிகள்
வளைத்தனபோல் வளைத்தளவில்,
வளைத்தனன்மால் வளர்சிலையை;
உளைத்தனமா உருண்டனமா
உருமில்விழும் பெருமலைபோல். 18

கோள்கள்அற்றார்; வாள்கள்அற்றார்;
குரல்கள்அற்றார்; விரல்கள்அற்றார்;
தாள்கள்அற்றார்; தோள்கள்அற்றார்;
தார்கள்அற்றார்; தேர்கள்அற்றார்;
ஆள்கள்அற்றார்; கேள்கள்அற்றார்;
ஆனைஅற்றார்; தானைஅற்றார்;
தோள்கள்அற்றார்; நாள்கள்அற்றார்;
சூலம்அற்றார்; சீலம்அற்றார். 19

ஒன்றுபத்தா யிரம்கோடி
யுகமழைபோல் ராமசரம்
கொன்று,பற்றார் பிணம்கரையாய்;
குருதிவெள்ளம் குளம்ஆறாய்;

17. கடம் - மதநீர்.
18. மா - யானை குதிரைகள். உரும் - இடி.

பொன்றும்அத்தி கொடிகுடைதேர்
புரவிசிலை தலைமிதக்க
அன்றுகாட்டை எறிவதுஒக்கும்
அறுதலைதூண்டு உதிரம்அம்மா. 20

நிவந்தகுன்றில் பொழிமழைபோல்
நிருதர்விட்ட படைக்கலங்கள்
சிவந்தகுஞ்சி கருந்தலையும்
சிவந்தஎங்கோன் சரங்கள்சிந்தக்
கவந்தபந்தங் கள்நடிக்கக்
கண்மணிகா கங்கள்தின்ன
உவந்தனபேய் நிணங்கள்தின்ன
உயிர்சுமந்து நெளிந்ததுஅண்டம். 21

கோடிரவி அனையவன்மேல்
கொடியர்விட்ட படைக்கலங்கள்
ஓடிஇடை துணிந்துவிழ
உத்தமன்தன் சரம்அறுத்து
மூடிவிண்ணிற் கடந்துசெல்ல
மூர்க்கர்சிரம் அற்றுவிழக்
காடிலைநன் நாடிலையே
கடல்சிலைமா மலைஇலையே. 22

சேரக் குடலாகிய பாசிகளும்
சேரார் பிணமாகிய வெண்ணுரையும்
ஈரற் குலையாகிய தாமரையும்
எண்ணற்கு அரிதாகிய புள்ளினமும்
ஆரக் களிறும்முத லைத்திரளும்
அயில்வாள் கணைமீன்என வேநிறையும்
கோரக் குருதிக்கட லாடிநெடும்
குறளும் கழுதும்பசி ஆறிடவே. 23

20. குருதி - இரத்தம். இரத்த வெள்ளத்திலே அத்தி (யானை) முதலிய மூழ்கின. இராம சரம் அந்தக் காட்டை இரத்த ஏரிகள் குளங்களாய் மாற்றின.

21. கவந்த பந்தங்கள் - தலை அற்ற முண்டங்கள்.

22. ரவி - சூரியன். மூர்க்கர் சிரம் அற்று விழாத இடம் இல்லை.

படைத்தலைவர் பதினால்வர் பட்ட பாடு

ஒட்டார் பிணமாம்கரை அங்கடையா
　　உடைய, கடல்ஆறுஎன வேபெருகிப்
பட்டார் எனவானவர் இன்பமுறப்
　　பாடுண் டுபடாத அரக்கர்எல்லாம்
கெட்டார் சிலர்ஓடி உடைந்திடவே
　　கெட்டா ரைநகைத்துஒரு கேசரிமேல்
இட்டார் படைஏறிய தேர்வலியோர்
　　ஈரே ழுபடைத்தலை வீரருமே. 24

அத்தேர் பலபல்வகை ஆயுதமும்
　　அரனைப் பொருமுப்புர வாதிகள்போல்
ஒத்தே சொரியப்பகை யாளிகள்மேல்
　　உறவா ளிகள்ஏவினன் எம்பெருமான்;
கைத்தே குடர்மாமழு வேல்சிலைகோல்
　　கதைவாள் துணியக்கரி தேர்பரிஆள்
செத்தே றிடவான்உட லும்தலையும்
　　தீசிந் தநிலத்திடை சிந்திடவே. 25

ஈரேழ் படைத்தலை வீரரும்தான்
　　இரகுவீ ரரைப்பற்றி இகல்செயவே
ஈரேழ் அவர்தேரும் அழிந்துசிந்த
　　இறைவன் கணைசிந்த இறங்கிஅவர்
ஈரேழ் சிலையாலும் எரிசரங்கள்
　　இடிபோல் விடக்கண்டு விலக்கிளங்கோன்
ஈரேழ் கணைதொட்ட வர்கைச்சிலை
　　ஈரே ழையும்நாலேழ் ஆகச்செய்தான். 26

சிலைகள் பதினாலும் இழந்தவர்கள்
　　சிலைகள் பலகொண்டு சொரியப்புக்கார்;
நிலைகொள் பதினாலு புவனம்தந்தோன்
　　நெடிய வரிவில்லைக் கால்வளைத்து,
கொலைகொள் பதினாலு பகழிதொட்டான்;
　　கொடிய அரக்கர்தம் கரத்துஏந்தும்
மலைகள் பதினாலும் துணிந்துமண்மேல்
　　மணல்போல் உதிர்ந்தது கணத்தில்அம்மா. 27

செத்தது திரிசிரன் சேனை

சேனைத் தலைவர்பட்டு உருளக்கண்டு
திரிசி ராவும்தன் பெருஞ்சேனை
ஆனைப் புரவியொடு முரசம்சங்கம்
அடல்வெஞ் சிலைநாண் முழங்கச்சென்று
கோனைப் புடைசுற்றி எரிந்துஆர்த்தார்;
கோன்அம் பால்அற்ற படைக்கலங்கள்
வானைத் தொடவானோர் மறையச்சென்றார்;
மன்னும் திசைமாவும் மறுகுற்றதே. 28

திண்டொ ணாஈசன் சூலத்தைப்போல்
திரிசி ராஎன்னும் சிலைமேகம்
ஈண்டஅந் நடுவாக அவன்சேனை
ஏழு கடல்போலே அணிவகுக்க
நீண்ட இருளில்தூண் டாவிளக்காய்
நிமலன் சரத்தாலே அணிவகுத்தான்;
மாண்ட சதுரங்க பலமும்மண்மேல்
மடிந்தது இடிவீழும் மலைஎன்னவே. 29

தடவும் தலைஅற்றுத் தனுவளைத்துச்
சரங்கள் தொடுத்துஎய்யும் சிலகவந்தம்;
படவும் குதித்திட்டுப் பரிசைதட்டிப்
பார வாள்வீசும் சிலகவந்தம்;
நடவும் எனமாயன் சுவர்க்கம்தந்தான்
நமக்குஎன்று உவந்தாடும் சிலகவந்தம்;
கடவுள் மாதர்க்குஎன் உடலென்றங்கே
காட்ட நடம்செய்யும் சிலகவந்தம். 30

நடலைக் குடைஎன்னும் நுரையோடும்
நடிக்கும் கவந்தங்கள்; சுழித்தோடும்
கடலைப் புதுக்கிற்று குருதிவெள்ளம்
களப்பாடு இலங்கேசற்கு அறிகைபோல்;

29. ஈண்டு அந் நடுவாக - திரிசிராவை நடுவிலே கொண்டு. ''துன்னிருள் இடையதோர் விளக்கின் தோன்றினான் இராமன்'' என்பார் கம்பரும்.

உடலைத் துணித்தவன் ஒருவன்என்றே
உம்பர் பிரான்அவன் காட்சிகண்டார்;
குடலை நாய்பற்றப் பேய்பற்றத்தான்
கொடாதே பிணக்காடும் பிணக்காடே. 31

விரியும் படைமாளத் திரிசிரத்தான்
வெகுண்டு பெருந்தேரை மிகத்தூண்டி,
சொரியும் கணையால்ஐ யனைமூடத்
தோன்றல் யாவர்க்கும் சான்றுஆனோன்
அரியின் பாணம்தொட் டவற்றைஎலாம்
அகற்றிப் பதினாலு சரத்தாலே
பரியும் பரித்தேரும் தேர்ஊரும்
பாகன் தனையும்பட் டுருவத்தொட்டான். 32

சிரங்கள் இழந்தான் திரிசிரன்

மற்றும் அவன்மூன்று தலையில்ஒன்றை
வைத்தங்கு இரண்டையும் ஒருசரத்தால்
இற்று விழஎய்யத் திரிசிரத்தான்
எனும்பேர் அறவும்ஓர் சிரத்தன்ஆனான்;
பற்றும் சிலைவளைத்து உலகம்எல்லாம்
பகழி மழைபெய்யச் சிலைதனையும்
அற்று விழஐயன் சரம்தூண்ட
அடுக்கல் மழையாகப் பொழியலுற்றான். 33

இரண்டு தாளும்திண் தோள்இரண்டும்
இரண்டோடு இரண்டுஅம்பில் துணியஎய்ய,
கரண்டு தினச்சீறி வாய்விரித்துக்
கவ்வ வருவானை; தலைஒன்றையும்
புரண்டு விழஅங்கோர் வாளிஎய்யப்
புக்கிட்டு அரக்கர்கள் ஓடப்புக்கார்;
திரண்டு செறிவில்கைத் தூடணன்தான்
திரும்பீர் எனச்சற்றும் திரும்பாதே. 34

31. பிணக்கு ஆடும் பிணக்காடு.
34. கரண்டு தின - பற்களினால் கரண்டு தின்றுவதற்கு.

எஞ்சிய சேனை சிதறி ஓடியது

அடுக்கும் குழைகையில் ஏந்திச்சென்றார்;
அலைக்கும் உதிரத்தில் நீந்திச்சென்றார்;
கடுக்கும் பெருவெள்ளத்து ஒழுகிச்சென்றார்;
காலைக் குடல்சுற்ற முழுகிச்சென்றார்;
தடுக்கும் பிணத்துள்ளே உருவிச்சென்றார்;
சாபம் சரம்என்ன வெருவிச்சென்றார்;
நடுக்கும் உடலோடு மருகிச்சென்றார்;
நமக்குஇன்று அழிகாலம் குறுகிற்றென்றார். 35

தூடணனின் வீரவுரை

சேர உடைந்தோடும் அரக்கர்தம்மைச்
சிரித்துத் தூடணன் பழித்துச்சொல்வான்:
வீரம் விதரணம் இரண்டும்கெட்டால்
வேட்ட மனையாளும் மனம்வேண்டாள்;
சூரர் ஓடார்;வான் சுரர்ஓடத்
தொடர்ந்த நீர்கண்டு படித்தீரோ?
கோர மார்பம்போ? முதுகில்கொம்போ?
கோதை மார்கண்டு புகழநும்மை! 36

உங்கள் கரவாளால் உழுதுநட்டு
ஒருவா ணிபம்செய்து உயிர்வாழும்
எங்கள் சேவகம்பார்த் துச்செல்லும்
என்று, தானும்தன் படையும்சென்று

36. மர்ரே பதிப்பில், தூடணன் வீரவுரை முதல் ''தூடணன் வதைப் படலம்'' என்று காணப்படும்.

விதரணம் - கொடை. மனம் வேண்டாள் - விரும்பாள், மார்பு அம்போ.

வச்சை ஆம்எனும் பயம்மனத்து உண்டுஎன வாழும்
பொச்சை மாந்தரைக் கோள்வளை மகளிரும் கூசார்
நிச்ச யம்எனும் கவசம்தான் நிலைநிற்பது அன்றி
அச்சம் என்னும்ஈது ஆர்உயிர்க்கு அருந்துணை ஆமோ. —கம். 2.

பூஅ ராவுவேல் புரந்தரன் தன்னொடு பொன்றா
மூவ ரோடுதாம் முன்நின்று முட்டிய முனையில்
ஏவர் ஓடினர் இராக்கதர் நுமக்குஇடைந்து ஓடும்
தேவ ரோடுகற்று அறிந்துளி ரோமனம் திகைத்திர். —கம். 3.

செம்பு காட்டிய கண்இணை பால்எனத் தெளிந்திர்
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிந்உறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோதட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதி ரோகுல மங்கையர்க்கு அம்மா. —கம், 5.

நங்கள் நாயகன்தனை வளைத்தார்;
நன்றென்று அவனும்தன் சிலைவளைத்தான்;
வெங்கண் மலையும்தேர் பரிகாலாள்
விழுந்தது இடிவீழ்ந்து விழும்குன்றம்போல். 37

தொலைந்தான் தூடணனும்

கோட்டு மதஆனை நெடுங்காலும்
கொடும்கை யொடும்கூட மருங்கும்அற்றார்;
தாட்டும் புரவியின் பூட்டிழந்து
தட்டும் தடந்தேரும் அலக்கழிந்து
நாட்டும் படைத்தானை நிலைசாய்ந்து
நடுவி லுடன்பந்த நாசப்பட்டு
மூட்டும் கணைவேலின் நிறையும்ஒன்னார்
முடியும் அறக்கையும் கொடியும்அற்றார். 38

கவசம் துளைத்தோடும் நாராசம்
கழுத்தை அரிந்தோடும் கங்கபத்திரம்
துவசம் துணித்தோடும் பிறைவாய்க்கோல்
சோரி சுழித்தோடும் நிணத்தோடும்
திவசம் செயும்பேயும் களித்தாடத்
தேக்கிட் டனன்காலன் உயிர்மாந்தி
அவசம் பிணக்குன்றம் கடக்கைஎன்றே
அடல்தூ டணன்திண்தேர் நடத்திவந்தான். 39

மலையும் செருவெல்லை ஐயன்மேல்
வாளி மூன்றாலே வீரபட்டம்
அலையும் படஎய்யத் தேவர்நொந்தார்
அரியும் நகைத்துஅந்தத் தூடணன்தன்

37. ஆர வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ அயில்வேல்
வீர வாள்கொழு எனமடுத்து உழுதிரோ வெறிப்போர்த்
தீர வாழ்க்கையிற் றேவரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையி ரெங்ஙனம் வாழ்திரோ விளம்பீர். —கம். 7

38. அலக்கழிந்து - குடை கவிழ்ந்து.

39. நாராசம், கங்கபத்திரம், கோல் - அம்பைக் குறிப்பன,

சிலையும் ஐயைந்து பரிபூண்ட
　　தேரும் கவசமும் சிதறஎய்து
தலையும் விழஅங்கோர் பகழிதொட்டான்
　　சலித்த சுரர்க்குஇன்பம் பலித்ததன்றே. 40

போர் ஏற்று வந்தான் கரன்

தம்பி படக்கண்டு கரன்சீறிச்
　　சசியை மேகங்கள் வளைத்தாற்போல்
நம்பி தனைச்சேனை கொடுமூட;
　　நம்பி சரம்என்னும் தறிகைக்கொண்டே
அம்பு சிலைசூலம் கரிதேர்மா
　　அரக்கர் படைஎன்னும் காடுவெட்டி
வெம்பி எளியாரை வலிதிற்கொன்ற
　　வெய்யர் தமையேவிரை விற்கொன்றான். 41

இவ்வாறு அனைவோரும் மடியக்கண்டான்
　　இரத்தக் கடலுள்மந் தரகிரிபோல்
அவ்வா ழியிற்செல்லும் மரக்கலம்போல்
　　அடல்தேர் நடத்திக்கொண்டு அழல்விழித்துத்
தெவ்வா யிரம்அம்பு கரன்தொடுத்தான்;
　　செவ்வா யிரம்அம்பால் விலக்கிளங்கோன்
தவ்வாய் தெரியம்பு தொட,அரக்கன்
　　தானும் எரிஅம்பு தொடுத்தறுத்தான். 42

மாய வினைசெய்துஅங்கு அரக்கன்பின்னும்
　　மாலைச் சரமாரி யால்மூட;
மாய வனுமேஒரு பாணம்தொட்டு
　　வலியால் வாங்கிடவும் சிலைஒடிந்து
மாய; அதுகண்ட முனிவோரும்
　　வானோர் அனைவோரும் கலக்கம்உற்றார்;
மாயம் இதுஎன்றே தசரதன்தன்
　　மைந்தன் திருக்கைவான் நீட்டினனே. 43

40. ஐயன், அரி - இராமன்.

41. மர்ரே பதிப்பில், கரன், தன் தம்பியாகிய தூடணன் இராமனால் கொல்லப்பட்டதை அறிந்து போருக்கு எழுந்தது முதல், கரனும் போரில் இறந்துபட, சூர்ப்பணகை இலங்கை நோக்கி ஓடத் தொடங்குவது வரை "கரன் வதைப் படலம்" என்று காணப்படும்,

நல்லதம்பி

தருண மறையவர் தமிழ்ப்புலவர்
தக்கோர் மிக்கசக லர்க்கெல்லாம்
அருண முகில்போல உதவும்கண்ணன்
அர்த்த நாரிசொல் மோரூரான்
கருணை தலதம்பி குலத்தார்போல்
களத்தில் ஏற்றகை மாற்றாமல்
வருணன் உதவினன் மாயோற்கு
மழுவில் லோன்பண்டு கொடுத்தவில்லை. 44

கை இழந்த கரன் உயிரும் இழந்தான்

அவ்வில் வளைத்துஐயன் நூறம்பினால்
அரக்கன் பெருந்தேரைப் பொடிஆக்க;
கைவில் லுடன்வானில் அரக்கன்சென்று
கரிய மாணிக்கன் புயமலைமேல்
தொய்வில் கணைமாரி சொரியப்புக்கான்;
தோளில் திடவாளி அமலன்தொட்டான்;
உய்வில் வலக்கைஅற்று இடக்கைதன்னால்
உலக்கை விடுக்கவும் விலக்கக்கண்டு; 45

உருமைச் சுடுவெண்பல் அரவிற்பொங்கி
ஒரும ராமரத்தை எறியலுற்ற
கருமைக் கரன்தன்னைக் கரம்போக்கிக்
கண்டத் தையும்எய்து கண்டம்கண்டான்;
அருமைப் பனிவென்ற பரிதிஅன்னான்
அந்த ணாளர்கொண் டாடவந்தான்;
பெருமைத் திருவும்தம் பியும்சீவன்
பிரிந்த உடல்போல்அங்கு இருந்தவர்பால். 46

44. பரசுராமனிடமிருந்து பெற்ற விஷ்ணுதனுசை, வருணன் கொண்டு வந்து கொடுத்தான்.

45. கரிய மாணிக்கன் - இராமன். அமலன் - இராமன்.

46. கடுவிஷம் உடையவெண்பல் முறிபட்ட பாம்புபோலச் சீறி. கண்டம் - கழுத்து. பரிதி - பருதி - சூரியன் போன்ற இராமன். ''அனிக வெஞ்சமத்து ஆருயிர் போகத் தனியிருந்த உடல் அன்ன தையல்பால் இராமனும் ஏகினான்'' என்பார் கம்பரும்.

அழுது புலம்பி இலங்கைக்குப் போனாள் சூர்ப்பணகை

மின்னும் இளையோனும் விழிநீரால்
விளக்கி னான்ஐயன் திருவடியை;
மன்னும் உலகேழும் தொழுதுஏத்த
மகிழ்ந்துஅங் கிருந்தார்— இருக்க;அப்பால்
பன்னும் துயராலே சூர்ப்பணகை
பதைத்துக் கரன்மேலே புரண்டழுது
துன்னும் அரக்கர்தம் வேர்அறுப்பாள்
சூறா வளிபோல இலங்கைபுக்காள். 47

7 மாரீசன் வதைப் படலம்

— மாயையில் வல்ல மாரீசனை வதைத்தது

வாதை அரக்கர் மடிந்ததற்பின் சூர்ப்பணகை
ஈதை உரைக்க இலங்கைதனில் — சீதை
திருந்தழகைச் சொல்லஎன்றே செல்ல; முடிபத்தோன்
இருந்தழகைச் சொல்வேன் இனி. 1

கொலுவீற்றிருந்தான் இராவணன்

மதிக்கும்அயன் முயன்றுசெய்த
மண்டபச்சிங் காதனத்தில்
உதிக்கும்இரு பதுகதிரும்
உதயகிரி இருபதும்போல்
துதிக்கும்மணிக் குண்டலமும்
தோள்களும்பன் மேருவைப்போல்
கொதிக்கும்மின்னா ரையும்வணங்காக்
குழல்முடியும் சுடர்விடவே; 2

சிறையில்இட்ட சுடர்களைப்போல்
செழுமணிஆ ரம்செறிய
முறைகள்இட்டுத் தொழும்அரக்கர்
முடிகள்பட்டுக் கழல்ஒலிப்ப;
சிறைகுவித்துச் சுராசுரரும்
சித்தவித்தி யாதரரும்
நிறைமலர்க்குப் பையும்மலைபோல்
நிதியும்இட்டுத் தெண்டன்இட; 3

1. ஈதை - துன்பம்; இதை என்பது ஈதை என்றாயிற்று எனலுமாம். முடி பத்தோன் - தசக்கிரீவன்.

2. மேருவைப் போன்ற இருபது புயங்களும் இருபது உதயகிரிகளாம். அவற்றின்மேலே பன்னிரு சூரியர் இருபது சூரியராய்த் துலங்கல்போல இருபது சுர்ண குண்டலங்களுடனும், ஊடற்காலத்திலும் மாதரை வணங்காத பத்து சிரங்களிலும் மகுடவரிசைகள் ஒளிவீசவும் வீற்றிருந்தான் இராவணன்,

அம்புருவ விழிச்சியரை
    அமைச்சர்களை அவன்பார்த்தால்
வெம்பிமனம் என்சொல்என்று
    விடநாகம் பயந்துஅணுக;
தும்புருவும் நாரதரும்
    தோகையரும் மாகதரும்
கிம்புருடர் கின்னரரும்
    கீதமும்நா தமும்கிளத்த; 4

சுடர்மணிப்பூ சுகந்தம்என்னும்
    தூள்அற,வா யுவும்பெருக்க;
கடல்அரசன் திவலைசிந்த;
    கனல்அரசன் விளக்குஏற்ற;
திடவலிஆ யுதம்துறந்து
    தென்புலக்கோன் கடிகைசொல்ல;
இடவகைவேத் திரக்கரத்தோர்
    இருப்பவரை அறிந்துஇருத்த; 5

வாய்ந்தசெழும் கங்கைமுதல்
    மங்கையர்மங் கலம்கூற;
காந்திதன்னால் இருள்ஓட;
    கடவுள்மின்னார் நடம்ஆட;
ஈந்திடலார்க்கு அவன்கேட்ட
    இருநிதிகா வலர்நீட்ட;
ஏந்திழையார் தன்கடலுள்
    இராவணன்வீற்று இருந்தனனே. 6

4. நாகம் - நாகராஜன்.

5. தென்புலக்கோன் - யமன்; தனது காலதண்டம், பாசம் முதலிய ஆயுதங்களை விட்டெறிந்து, காலம் கழியும் கணக்குக் கூற. வேத்திரக் கரத்தோர் - கையிலே பிரம்பு ஏந்திச் சேவகம் செய்யும் வியாழ, வெள்ளிகள்.

6. கற்பகத் தரு, காமதேனு முதலியன ஏற்பார்க்கு எப்பொருளையும் கொடுப்பதற்குக் காத்திருக்க, மகளிர் காதற்பார்வை அலைமோதப்பெற்று இறுமாந்து வீற்றிருந்தான்.

மூக்கறையான சூர்ப்பணகையின் பிரவேசம்

தங்கைசெங்கை தலையில்வைத்துத்
தன்பேழ்வாய் திறந்துஅலறிக்
கொங்கைசெவி மூக்கில்வரும்
குருதிசிந்தக் குழல்விரித்துத்
துங்கவட வாசலிலே
தோன்றலும்கண்டு அரக்கியர்கள்
அங்கைகுலைத்து அடித்துவிழ
அரக்கர்திரண்டு அரண்டுநின்றார். 7

அண்ணன்இ ராவணன்கோபம்
ஆரொடுஇனி முடியும்என்பார்;
விண்ணவர்தாம் அஞ்சிடுவார்;
வேறுபகை யாது?என்பார்;
திண்ணம்இவள் கற்பழிந்தாள்,
சினகரனே அறுத்ததுஎன்பார்;
நண்ணலரும் மாதவத்தோர்
நவின்றபெரும் சாபம்என்பார். 8

ஆடல்விட்டும் பாடல்விட்டும்
அழுகைஎங்கும் அழுங்கையினால்
ஊடல்விட்டும் புணர்ச்சிவிட்டும்
ஒருவர்முன்னே ஒருவர்முந்திக்
கூடல்விட்டு வாய்மடிவார்
கொங்கைமுகம் புடைத்துஅழுது
சூடல்விட்ட குழல்விரிநீர்
சோர்ந்துஅணைத்துக் கொண்டுசென்றார். 9

யார் இது செய்தது?

இமையவரும் இருசுடரும்
எண்கரியும் பயந்துஓடத்
தமையன்முன்னே விழுந்துஅழுதாள்;
தடவரைமுன் படிமுகில்போல்

8. கற்பழிந்தாள் என்று கரனே அறுத்தானோ.

9. அழுங்கை - துன்பம். சூடல்விட்ட - பூச்சூடுதல் ஒழிந்த.

சுமையறவாய் மடித்துஇடிபோல்
கனன்று,இதுயார் செய்தது?என்றான்;
அமையடைகா னகத்துஉறைவோர்
அரிந்தனர்மா னிடவர்என்றாள். 10

மனிதராவது இது செய்வதாவது
அவர்க்குஅவ் வலியுண்டோ? நமக்குஅஞ்சுவார்;
அஞ்சா தேசொல்என்று அரக்கன்சொல்ல;
மூவர்க்கா கவேவென்றி முடிக்கவல்லார்,
மூரிச் சிலைவல்லார், மறைகள்வல்லார்,
தவர்க்காய் நமைக்கொல்லும் கருத்தும்சொன்னார்;
தந்தை தசரதன்தன் பணிபூண்டார்;
எவர்க்காம் அவர்பண்பும் திறமும்சொல்ல
இரகுரா மனும்லட்சு மணனும்என்றாள். 11

அரிந்த நாசி பொருந்தாது
உரைசெய் என;தங்கை மூக்குஅரிந்தார்
ஒளிர்மா னிடர்என்ன; உயிர்வாழேன்
அரசர் முடிகோடி அரிந்தாலும்
அரிந்த அணிநாசி பொருந்திடுமோ?
வரிசை பலதோளும் சிவன்கொடுத்த
வாளும் இருந்துஎன்? மற்றவர்இருந்தார்;
சரச மனமே?இப் பழிதாங்கித்
தலைபத்து இருந்தும்நீ சலிப்பதுஎன்னே? 12

மூன்றே நாழிகையுள் முடிந்தார்கள் மூவரும்
என்றான்; நகைசெய்தான்; எரிவிழித்தான்;
இருவர் மனிதரை, வனத்துஇருந்தும்
கொன்றான் இலையோ?நம் கரன்,எனவே;
கொடியாள் புவிமீதில் புரண்டுஅழுது,

10. எண் கரி - திசை யானைகள் எட்டு. அமை - மூங்கில்.

11. ஆர்ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள் ஐயா
ஓர்ஒருவ ரேஇறைவர் மூவரையும் ஒப்பார். —கம். 56.
மூவர் என்பது முவர் என முதல் குறுகியது. தவர் - தவசிகள்.

12. மூக்கரிந்தார் மானிடர் என்று சூர்ப்பணகை சொல்லவும் இராவணன் தன்னை வெறுத்துப் பேசினான்.

இன்றா ருயிர்உண்டான் உறவைஎல்லாம்
என்சொல் கேட்டுமூ வரும்படையும்
சென்றார்; மடிந்தார்நா ழிகைமூன்றில்
இராமன் சுடுசரம் சேரஎன்றாள். 13

அவள் பேர் சீதை

தம்பி மார்பட்ட துயர்கேட்டான்;
தழற்கண் இருபத்தும் உருக்கிவிட்ட
செம்பு போல்சோரி சொரிந்துஅழுது
செய்த பிழைஎன்?நீ மனிதர்க்குஎன்றான்;
வெம்பு சரராமன் உடன்வாழும்
மின்னாள் பொருட்டாலே விளைந்ததுஎன்றாள்;
அம்பொன் நிறமின்னாள் ஆர்?சொல்என்ன;
அவள்பேர் சீதைஎன்று அழகைச்சொல்வாள்: 14

கவள யானையின் கோடுகொங்கை;
கரிய மால்கையின் கோடுகண்டம்;
பவளம் விரலோ? அமுதைஅள்ளிப்
பவள வாயிற்சொல் லாகப்பெற்றாள்;
துவள இடையாக மின்னைப்பெற்றாள்;
சோதித் திருமுகம் தாமரைப்பூ;
அவள வானாலும் அதனுள்கண்கள்
அலைஆ ழியைப்பற்றப் பெரியதுஅய்யா! 15

நாளையே காண்பாய்

பொன்மா தினைப்பாங்கி என்னப்பெற்றாள்?
பொருமா ரனைத்தொண்டன் என்னப்பெற்றாள்;
மின்மா முகில்கூந்தல் ஆகப்பெற்றாள்;
வேயை இருதோள்கள் ஆகப்பெற்றாள்;

15. கோடு - கொம்பு. சங்கு - கண்டம் - கழுத்து. அவளவானாலும் - அவ்வளவு ஆனாலும்.

அஞ்சொற்கள் அமுதின் அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற் றேனும் கடலினும் பெரிய கண்கள். —கம். 70.

நன்மா சிலைமேனி எனவும்பெற்றாள்;
நகைமா சிலமுத்தம் எனவும்பெற்றாள்;
உன்மால் கெடநாளைக் காண்பாய்நீயே;
உவமை இலள்என்றே அறிவாய்நீயே. 16

சீதையைப் பெற்றால்

சந்த்ர சேகரன் உமையைப்பெற்றான்;
சக்ர பாணிசெந் திருவைப்பெற்றான்;
இந்த்ரன் இந்த்ராணி தன்னைப்பெற்றான்;
எழுத அரியாளை நீயும்பெற்றால்,
வெந்திறல் உனக்குஆகும் பெருமைஎன்னோ?
மெய்வாய் மணிமார்பில் தாரம்வைத்தார்;
சந்த்ர முகத்தாளே கிடைத்திடின்நீ
தலைஅத் தினும்வைத்துத் தாங்கத்தக்காள். 17

தனக்கு நிகர்ஈரேழ் உலகத்தில்லாள்
தனக்குஆம் உனக்குள்ள சம்பத்துஎல்லாம்;
உனக்கு மிகநல்லேன்; உன்மனையார்
உள்ளோர் அனைவர்க்கும் பொல்லேன்நான்;
நினைக்கும் மடமாதர் வயிற்றுள்அல்ல,
நீர்வாரி யில்அல்ல, நிலத்தில்வந்தாள்;
கனக்கும் தலைபத்தும் இரட்டிகையும்
கண்ணும் படைத்தபேறு இனிப்பெறுவாய். 18

16. பொன்மாது - இலட்சுமி. மாரன் - மன்மதன்.

17. இந்திரன் சசியைப் பெற்றான்; இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்கணானும்
செந்திரு மகளைப் பெற்றான்; சிதையைப் பெற்றாய் நீயும்:
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்குஇல்லை உனக்கே ஐயா!
—கம். 75.

பாகத்தில் ஒருவன் வைத்தான்; பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன் நாவில் வைத்தான்;
மேகத்தில் பிறந்த மின்னை வென்றநுண் இடையி னாளை
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி? —கம். 76.

இராமனைத் தருவாய் எனக்கு

தேன்ஆ தரிக்கின்ற தேனேபோல்
செம்பஞ்சு அடிச்சீதை உனக்குஆனால்,
யான்ஆ தரிக்கரா மனைச்சேர்ப்பாய்;
அங்குஅ வள்தன்னை எடுக்கல்உற்றேன்;
கான்ஆர் மலர்த்தாரன் இலக்குமணன்
கண்டு செவியொடு மூக்கரிந்தான்;
ஊன்ஆர் உயிர்மாள்வேன்; உனக்குஇத்தன்மை
உரைத்துப் பினர்மாளத் துணிந்தேன்என்றாள். 19

கேட்ட மங்கையை மட்டும் மறக்கவில்லை

செனமும் மானமும் சேவகமும்
சேரப் பிறந்தாள்தன் பரிபவமும்
தனமும் வாணாளும் வரம்பெற்றதும்
தம்பி மார்பட்ட பெருந்துன்பமும்
சுனமும் மறந்தான்;தன் செவியிற்புக்க
காமம் உயிரோடு கலந்திடவே
மனமும் சீதைதன் பேரும்ஒன்றாய்
மறவா வகைவந்து மதிஅற்றதே! 20

காமத்தைக் கடக்கல் ஆமோ?

வஞ்சித் திருமாதைத் தீஎன்றுஎண்ணான்
வஞ்சித்து இலங்கையில் சிறைவைக்குமுன்
நெஞ்சிற் சிறைவைத்த அரக்கன்நெஞ்சம்
நெருப்பிற் செறிவெண்ணெய் போலப்பொங்க

20. கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலாதான். —கம். 83.

சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும்
உற்றுஇரண்டு ஒன்றாய் நின்றால் ஒன்றுஒழித்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ? மறக்கலாம் வழிமற்று யாதோ?
கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கல் ஆமோ? —கம். 84.

அஞ்சிற் றிலன்காமன் அஞ்சிட்டுஎய்தான்;
ஆண்மை அழிப்பதும் காமம்அன்றோ?
தொஞ்சிட்டு ஓலக்கம் பிரிந்துசங்கும்
துடியும் முழங்கப்பொன் மாடம்புக்கான். 21

தன்தே வியர்கொங்கை அணைநீங்கித்
தனியோர் மலர்அணை தனிற்சேர்ந்தான்;
ஒன்றோ சதகோடி புழலைநெஞ்சும்
ஊதும் துருத்தியைப் போல்உயிர்த்து
வன்றே மதன்பாண மும்துளைக்க
வாடை இளந்தென்றல் மலர்வாசம்
சென்றே சுடஆவி மருகல்உற்றான்
திசையா னையைவென்ற திறலோனே. 22

ஓர் சோலையூடு போயினான்

எரிக்கும் மலர்ப்பாயற்கு ஆற்றாமல்
எய்தி னான்அங்கோர் மணிச்சோலை;
வருக்கை மாணிக்கம் வாழைபச்சை
வயிர மாநிலம் குருவிந்தங்கள்
தெரிக்கும் வேங்கையும் கோங்குசாலம்
செம்பொன் தென்னைமா பளிங்குபுன்னை
புரிக்குள் பாடலம்ப வளங்களாம்
பூகம் அரவிந்த ராகங்களே. 23

21. தொஞ்சிட்டு - தோய்ந்திட்டு - தளர்ந்து.

மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன் இதயம்ஆம் சிறையில் வைத்தான்;
அயிலுடை அரக்கன் உள்ளம் அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய்போல் வெதும்பிற்று அன்றே.
—கம். 85.

மன்மதன் வாளி தூவி நலிவதுஓர் வலத்தன் ஆனான்
வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்தது அன்றே? —கம். 87.

23. வருக்கை - (பலா) மாணிக்கம். வாழை - பச்சை (மரகதம்). தென்னை - வயிரம். மாமரம் - நீலம். கோங்கு - அரவிந்தராகம். பூகம் - (கமுகு) நீலம். வேங்கை - பொன். புன்னை - பளிங்கு. பாடலம் - பவளம். சாலம் - குருவிந்தம். பாடலம் - பாதிரி மரம். சாலம் - ஆச்சா மரம்.

பருவங்கள் தடுமாறின

நீதன் மணிக்காவில் அணைசேர்ந்தான்;
சேரப் பலபுள்ளும் வாய்அடங்க
ஏதம் பனிவாடை எரிவீச
ஏதடா காலம் எனச்சீற;
போதன் பனிக்காலம் பயந்துசெல்ல;
புகுந்த வேனிலுமே புழுங்கநொந்தான்;
சீதம் சுடவேனில் பொறுக்கொண்ணுமோ?
சிந்தை மயல்தீர மருந்தொன்றுண்டோ! 24

சந்திரன் வரட்டும்

இருது அனைத்தையும் போகச்சொன்னான்;
ஏகிச் சொர்க்கம்போல் எங்கும்நன்றாய்
கருதும் இவன்தாபம் தீர்க்கவில்லை!
காலம் தீர்க்குமோ சீலம்அன்றி;
பரிது முகில்கஞ்சம் வளையம்பன்னீர்
பரம்பு கமழ்சாந்து புயத்தணைத்தும்
குருதி வாள்போலே அரியப்பட்டுக்
குளிர்மா மதிதன்னைக் கொணர்மின்என்றான். 25

இருக்கும் இலங்கையை விலக்கிஅப்பால்
ஏகி மதிவர, இறைவன்உன்னைப்
பொருக்கென்று அழைத்திட்டான் அஞ்சல்என;
பூண்ட பயம்அற்றுஅங்கு உதயம்செய்தான்;
உருக்கி மேல்வீசும் வெள்ளியைப்போல்
ஒன்னார் புகழ்போலக் கூற்றுவன்போல்
திருக்கை மால்ஏவும் திகிரியைப்போல்
தீய அரக்கனைக் காயல்உற்றான். 26

24. அன்பெனும் விடம்உண் டாரை ஆற்றல்ஆம் மருந்தும் உண்டோ?
இன்பமும் துன்பந் தானும் உள்ளத்தோடு இயைந்த அன்றே?
—கம். 100.

25. .... காமத்தால் கனலும் வெந்தி
சீலத்தால் அவிவது அன்றி, செய்யத்தான் ஆவது உண்டோ?
—கம். 104.

பண்ணார் மொழிமாதர்க்கு ஆசைகொண்டு
　　படுநோய் முதல்என்றும் அறியாதான்
தண்ணார் சசிதன்னை அழையும்என்னத்
　　தழல்வெங் கதிரோனை அழைத்தோர்ஆர்?
நண்ணார் போல்என்ன தூதர்அஞ்சி
　　நாதர் கதிர்ஆகில் வருந்தேர்மேல்
விண்ணார் மதியேவி மானத்தின்மேல்
　　மெய்யே இதுஎன்ன;வெதும்பிச் சொல்வான்: 27

சூரியன் தோன்றட்டும்

தேய்கின் றான்உன்தன் உடல்வெளுத்தாய்;
　　சிதை முகத்துக்குஉன் நலம்தோற்றாய்;
காய்கின் றாய்உள்ளம் கருகிஎன்போல்;
　　கண்டார் சொலநீயும் கேட்டாயோ?
மாய்கின் றேன்எங்ஙன் வாழ்வது?என்று,
　　வருத்தும் கொடுந்திங்கள் தனைமாற்றி,
ஏகி இரவியை அழையும்என்றான்;
　　இரவி எழுந்திட்டான் இமைக்கும்முன்னே. 28

நீதிச் சுருதிகொண்டு அழல்முகத்தில்
　　நெய்யே உருக்கியநிறை செம்பொன்மேல்
ஆதிக் கதிர்தோன்ற அலர்ந்தகஞ்சம்;
　　அருள்அற்று ஈட்டியபொருள் அற்றபின்
பேதித் தவர்ஒத்த சேதாம்பல்;
　　பெற்ற தலம்மற்றோர் அரசன்கொள்ள
சோதித் தனதானை இழந்தமன்போல்
　　சோமன் சுடர்மங்கித் தோன்றானே. 29

29. தலம் - நாடு. மன் - மன்னவன்.
இருக்கின் மொழியார் எரிமுகத்தின் ஈந்தநெய்யின் அவிர்செம்பொன்
உருக்கி அனைய கதிர்பாய, அவல்போல் விரிந்தது உயர்கமலம்;
அருக்கன் எய்த அமைந்து அடங்கிவாழா அடாத பொருள்எய்திச்
செருக்கி இடையே திருஇழந்த சிறியோர் போன்ற சேதாம்பல்.
—கம். 117.

நடுராத்திரியில் தோன்றினான் சூரியன்

ஊடல் உற்றார்புண ரும்முன்னே
　　உணங்கல் உற்றுமுனிந் தார்சிலரே;
வாடல் உற்றார் குவளைமுத்தம்
　　வழங்கல் உற்றுமுனிந் தார்சிலரே;
கூடல் உற்றார் கோடுசுற்றும்
　　கொடிபவளம் போற்சிலரே;
ஆடல் உற்றார் கலவிமுற்றி
　　அனந்தல் உற்றார் சிலர்சிலரே. 30

வெயில்உறைத்தும் வண்டுஇரைத்தும்
　　விழிஉறக்கம் செயும்மாதர்
பயில்விளக்கம் துணைபிரிந்த
　　பாவையர்போல் ஒளிஇழந்து,
துயில்விடப்பொன் சாளரத்தின்
　　சுடர்பரந்து தெருள்மருளாய்
அயில்விடக்கண் இமைதிறவார்
　　ஐயம்இடார் வாசலைப்போல். 31

சாலவினை அற்றவர்போல்
　　தழைத்தசக்ர வாளம்எல்லாம்
ஓலவண்டின் இசைகேட்டும்
　　உலோபரைப்போன் றனகுமுதம்;
காலம்உணர் வாரணமும்
　　கணிதர்களும் துயிலல்உற்றார்;
கோலஇரவி சுடஅரக்கன்
　　கொடுந்தீஎன்று அறமுனிந்தான். 32

31. இச்சையில் துயில்பவர் யாவர் கண்களும்
நிச்சயம், பகலும்தம் இமைகள் நீக்கல
பிச்சையும் இடுதும்என்று உணர்வு பேணலா
வச்சையர் நெடுமனை வாயில் மானவே. —கம். 125,

மூன்றாம் பிறை வரட்டும்

அருக்கன்அன்றி மதிசுடுமோ?
அதிசயம்என் றார்சிலர்போய்;
அருக்கன்அன்றோ பசும்பரித்தேர்
ஆழிஒன்றுஎன் றார்சிலர்போய்;
அருக்கன்இவன் தனைஅகற்றி,
அலைகடலை ஒலிஅகற்றி,
அருக்கல்செய் யாதுஇளநிலவை
அழையும்என்றான் கடல்அரக்கன். 33

நட்டிரவில் எழுந்தவெய்யோன்
நடுநடுங்கிப் போய்ஒளித்தான்;
எட்டிரட்டி கலைமதியும்
இமைக்குமுன்னே மேற்றிசையில்
மட்டியமூன் றாம்பிறையா
வந்ததுமா லைப்பொழுது;
கிட்டியதே ஆகையினால்
கிளர்தவமே வலியதம்மா! 34

புதுவியசெம் மாலைஎன்றும்
பொங்குஅரவின் பிறைஎயிறோ?
அதுவும்அன்றி, வடகனலோ?
அடுநமன்தன் நடுவறையோ?
கதுவும்நஞ்சை மிடற்றில்வைத்த
கண்நுதலோன் சடையில்வைத்தது
இதுவும்நஞ்சாம் ஒன்றலவோ?
என்றுஅரக்கன் எரியல்உற்றான். 35

இருள் வரட்டும்

நிறைமதிக்கும் சிறுபிறைக்கும்
நெருப்புஎரிதல் குறைந்ததுஇல்லை;
இறைமதிக்கும் பெரும்பாம்பு
இளம்பாம்பு விடம்சரியே;

34. நட்டிரவில் - நள்ளிரவில். மட்டிய - சேர்ந்த.
எந்நாளும் அருந்தவம் அன்றி, இயற்றல் ஆமோ? —கம், 188,

உறமதிக்கும் எனைச்சுடுமோ?
ஒருவர்இளிப் பிழைப்பவர்ஆர்?
திறமதிபோம்; இதுநீக்கிச்
செறிஇருளைக் கொணர்மின்என்றான். 36

மெய்ஞ்ஞான சோதிஅற்று
மேதகுகண் ணோட்டம்இன்றி
அஞ்ஞானம் செறிமனம்போல்
அந்தஇருள் வர,அரக்கன்
கைஞ்ஞாகம் உரித்தசிவன்
கான்றனனோ களத்துநஞ்சை
இஞ்ஞாலம் சுடுகனல்உண்டு
இருண்டதுவோ எனக்கனன்றான். 37

உருவெளித் தோற்றம்

பொலன்குழையும் மழைமுகிலும்
புதுமதியும் புதுமதிக்குள்
அலங்குழையும் பூங்கமுகும்
அணிவிளக்காய்த் தோன்றுவதுஎன்?
நலங்குழையும் கனதனமும்
நான்தானே இவட்குஇணையாய்!
இலங்குழைஎன் மனத்தவளோ!
எங்கைஎங்கே? கேட்க,என்றான். 38

இவளா சீதை? ஆம், இவனே இராமன்!

பெருமைஇல்லாள் வர,அரக்கன்
பேசுதங்காய்! எந்தன்முன்னே
வருமயில்போல் விளங்கிநின்றாள்
மாதுஇவளோ சீதை?என்ன,

37. கைஞ்ஞாகம் - கைநாகம் - துதிக்கையை உடைய யானை; போலி.
.... கேள்விச் சுடர்புக்கு வழங்கல் இன்றிக்
குருடுசங்கிது என்ன, குறிக்கொண்டு, கண்ணோட்டம் குன்றி
அருள்தீர்ந்த நெஞ்சின் கரிது என்பதுஅவ் அந்த காரம்.
—கம். 139.

38. எங்கை - எம் தங்கை.
இருளூடு இருகுண்டலம் கொண்டும் இருண்ட நீலச்
சுருளோடும் வந்துஓர் சுடர்மாமதி தோன்றும் அன்றே! —கம். 143.

திருமுகமும் மலர்விழியும்
　　செவ்வாயும் செழுவரைபோல்
இருபுயமும் பொலியநின்றான்
　　இங்குஇவனே இராமன்!என்றாள். 39

பெண்ணுருவை ஆண்என நீ
　　பேசியதுஆர் மாயம்?என்ன;
எண்ணிஒன்றோ மனம்உகந்தால்
　　எங்கும்அதே தோன்றும்என்றாள்;
கண்ணுறநீ இராமன்உருக்
　　காண்பதுஎன்னோ? உரைசெய்!என்றான்;
புண்ணுறுமா செய்தஅன்றே
　　புயம்மறவேன் அவனைஎன்றாள். 40

பிழைப்பது எப்படி?

ஒக்கும்என்றே வாள்அரக்கன்
　　உய்வதுஎவ்வாறு இனி?எனவே;
மிக்கஉனக்கு அருமைஉண்டோ?
　　விரைந்துஅவளைக் கொணர்கஎன்றாள்;
அக்கருமம் செயல்காணான்;
　　அழன்றனன்மா ளாததுஒன்றே;
தக்கவர்சந் திரகாந்த
　　மண்டபம்நீர் சமையும்என்றான். 41

சந்திரகாந்த மண்டபத்தில்

வந்ததெய்வக் கண்ணாளன்
　　மணித்தூண்ஆ யிரம்நாட்டித்
தந்தமுதத் துளிசொரியும்
　　சந்திரகாந் தத்தாலே

39. மைந்நின்ற வாள்கண் மயில்நின்றென வந்துஎன் முன்னர்
இந்நின்றவள் ஆம்கொல் இயம்பிய சிதை? என்றான். —கம். 148.
செந்தா மரைக்கண்ணொடும் செங்கனி வாயி னோடும்
சந்தார் தடந்தோளொடும் தாழ்தடக் கைக ளோடும்
அந்தார் அகலத்தொடும் அஞ்சனக் குன்றம் என்ன
வந்தான் இவன்ஆகும் அவ்வல்வில் இராமன் என்றாள். —கம், 149,

சிந்தைமகிழ் மண்டபமும்
 தென்றல்புகும் சாளரமும்
கந்தமலி கற்பகப்பூங்
 காவனம்சூ ழவும்வகுத்தான். 42

தெய்வமின்னார் விளக்குஏந்தத்
 தெய்வவிமா னத்தில்வந்தான்
தெய்வமின்னார் முகமதியால்
 செழுமணிஒன் பதின்சுடரால்
தெய்வனதா ருவின்நிழலால்
 செறிஇருளும் பகலாகத்
தெய்வகண்ணா ளன்வகுத்த
 சீதளமண் டபம்புகுந்தான். 43

பட்டமுதம் வரும்கடல்போல்
 படுத்தவெண்பா யலிற்படுத்தான்;
பட்டமரம் தழைக்கஅங்ஙன்
 பைந்தமிழ்ஆ லம்வீசப்
பட்டவன்சா ளரத்தூடே
 பாம்புவந்தாற் போல்,உடுத்த
பட்டதுவும் கடிக்கஉடல்
 பதைக்கஉள்ளம் கொதிக்கல்உற்றான். 44

காற்றைஇங்ஙன் அழைத்தவர்ஆர்?
 காவலரை அழையும்என்று,
சீற்றமுடன் என்சொல்அன்றிச
 செயத்தகுமோ? என்ன;அவர்
சாற்றரும்சோ லையில்இருந்தால்
 தடைஇலைவா யுவுக்குஎனலும்;
மாற்றம்என்னோ? பிடித்துஅவனை
 வன்சிறையில் வைம்மின்என்றான். 45

42. கண்ணாளன் - தெய்வ தச்சன் மயன்.

44. பட்டமுதம் - பட்ட (தோன்றிய) அமுதம். படுத்த - விரித்த. பைந்தமிழ் ஆலம் வீச - தண்பொதிகைத் தமிழ்த்தென்றல் ஆலவட்டம்போல் வீச, தென்றல் பாம்புபோலத் துன்புறுத்தியதாம்.

வாதனைத்தான் முனிந்ததினால்
வருவதுஎன்னே என்று,மன்னும்
சீதைசித்தம் பெறேன்ஆகில்
தின்னும்என்னைக் கூற்றுவனும்;
ஆதலிற்போய் அமைச்சர்களை
அழையும்என்ன; தேர்மீதில்
போதகத்தில் சிவிகைதனில்
புரவியில்வந்து அடிபணிந்தார். 46

மாரீசனிடம் சென்றான்

அமைச்சருடன் உபாயம்எண்ணி,
அரக்கர்மன்னன், விமானம்மிசை
இமைச்சிடுமுன் ஒருவனும்போய்
இயல்மாரீ சனைக்காண;
எமைச்சிலநீ பொருள்செயுமோ?
எனஉகந்து, சிறப்புநல்கி
முமைச்சகமும் அரசாள்வாய்!
மொழிந்தருள்நீ வந்ததுஎன்றான். 47

வந்தது, உன்னால் பழி தீர

ஒருமனிதன் வடிவாளால்
உன்மருகி மூக்குஇழந்தாள்;
ஒருமனிதன் சிலையாலே
உன்மருகர் மூவர்பட்டார்;
இருமனிதர்க்கு இசைஇழந்தேன்;
இலக்குஅவர்மேல் யான்நடவேன்;
வரும்மயிலை வவ்விநின்னால்
வசைதீர வந்ததுஎன்றான். 48

46. வாதன் - வாயுதேவன். போதகம் - யானை.

47. முமைச்சகம் - மும்மைச்சகம் - மூவுலகு. இமைச்சிடுமுன் - இமைத்திடும் முன். இராவணன் வரவைக் கண்ட மாரீசன், எம்மையும் ஒரு பொருட்டாய் நீ கருதினாயோ? என்று சொல்லி, வந்தது என் என்றான்,

புத்திகெட்டுப் போகாதே

தாழ்வினைகேட்டு இருசெவியும்
  தான்மூடி மாரீசன்,
ஊழ்வினைதான் உனவலதோ?
  உணர்ந்துகொள்வாய் என,உரைப்பான்:
சூழ்வினையால் தலைஅரிந்து
  சுடரில்இட்டுத் தவம்புரிந்து
வாழ்வினைநீ பெற்றதுஎல்லாம்
  வல்வினையால் இழக்கல்உற்றாய். 49

திறமறைவா ணரைநலிந்தோர்,
  செப்பம்இல்லா வழக்குஉரைத்தோர்,
பிறர்மனையை ஆசரித்தோர்
  பெருநகரம் புகுவர்கண்டாய்—
நிறைமகவான் உருவுஅழிந்தான்;
  நினைத்தாலும் பாவம்இது!
நறைமலிதார் ராமன்அம்பால்
  நசித்திடுவாய் குலத்துடனே. 50

நின்படையில் உயர்கரனை
  நெடும்படையோ டும்துணித்தான்;
பின்படையை வேரொடுஇன்னம்
  பெரும்படையால் அறுப்பன்என்றே
துன்புஅடையும் என்மனத்தைச்
  சுடஉரைத்தாய் இவ்வார்த்தை;
வன்படையும் விராதனும்தான்
  வான்அடைந்தது உணர்ந்திலையோ? 51

இறந்துஅவிந்தார் அவன்கணையால்
  எம்பியும்என் மாதாவும்;
அறம்தவிர்ந்து பிழைத்தவர்ஆர்?
  அருமறைநூல் கற்றுஅறிந்தோய்!

49. உனவலதோ - உன்ன (ஆராய) வல்லதோ.

மறந்திடுஇந்தப் புன்வினையை;
மந்திரம்என் வாசகம்போல்
சிறந்ததுஇல்லை என்றும்,என்றும்
செல்வமுடன் வாழ்கஎன்றான். 52

பிழை பொறுத்தேன்

செந்தழல்போல் வெகுண்டுஅரக்கன்,
சிவனோடும் கயிலைதன்னைப்
பந்துஅதுபோல் எடுத்தஎன்னைப்
படப்பொருவார் மனிதர்என்றாய்;
அந்தம்இலாத் தங்கைமூக்கு
அரிந்தவரைப் புகழ்ந்துஉரைத்தாய்;
இந்தஒரு பிழைபொறுத்தேன்
என்றதுகேட்டு, அவன்சொலுவான்: 53

வேண்டா இந்தப் பாதகச்செயல்

உரைத்தசினம் என்னைஅல்ல,
உன்னையும் உன்மரபினையும்;
கருத்தர்வெள்ளி மலைஎடுத்தாய்;
கனகவரை அவன்ஒடித்தான்;
திருத்தனைஓர் வனிதைஎன்றாய்;
சினஅரக்கர் குலம்அறுக்கும்
மிருத்துஎன்றே சொலக்கேளாய்!
விடத்தைஉண்டால் விலக்காரோ. 54

காதுசிலை வரராமன்
கவுசிகன்பால் பெற்றபடை
கோதுசிலை குனிக்கும்முன்னே
கொள்ளைகொள்ளும் நம்உயிரை

54. திருத்தனை - இலட்சுமியைச் சாமானியப் பெண்ணாகக் கருதினாய். மிருத்து - மரணம் பயக்கும் நஞ்சு.

நஞ்சு நுகர்வாரை 'இது நன்று' எனலும் நன்றோ? ..—கம், 24,

ஆதலினால், காதலினால்
அடாதுசெய்தால் ஆனிவரும்;
மாதுலன்ஆ கையில்உரைத்தேன்;
மறந்துவிடாய் இதனைஎன்றான். 55

நீயும் ஓர் ஆண்மகன்தானா?

அன்னதுகேட்டு இராவணன்தான்,
அட்டகசம் மறுப்புஒடித்து
மன்அமரர் அயன்உலகில்
மறைந்திட மூவுலகுஆள்வேன்;
என்னைஒரு தசரதன்சேய்
இருவர்மைந்தர் நலிவர்என்றாய்;
அன்னைபழி திராதாய்!
யார்க்குஆவாய் அஞ்சிய;நீ. 56

தருக்கினர் கெடுவர்

சினத்த படிகண்டு மாரீசன்,
செருக்கற்கு இதம்செய்வார் செருக்கர்என்று,
நினைத்த மனம்அஞ்சி நடுநடுங்கி,
நீர்உற் றதுபோலும் நீர்மைச்சொல்லால்
அனைத்தும் உனக்குஆன அறிதிசொன்னேன்;
அனர்த்தம் வரும்காலம் அமுதும்கைக்கும்;
இனித்தான் யான்செய்யும் செயல்சொல்?என்ன,
எழுந்து சினம்ஆறித் தழுவிக்கொண்டான். 57

55. ஆனி - ஹானி - திங்கு.

56. அட்டகசம் - திசை யானைகள் எட்டு. தசரதன் புதல்வர் இருவர். அன்னை - தாடகை.

57. நீர்மைச்சொல் - நீர்போலும் தெளிந்த தூய இனிய சொற்களால்.

அரக்கன்அஃது உரைத்த லோடும் அறிந்தனன் அடங்கி நெஞ்சம்
தருக்கினர் கெடுவர் என்றல் தத்துவ நிலையிற்று அன்றோ?
செருக்குநர்த் திர்த்தும் என்பார் தம்மின்ஆர் செருக்கர்? என்னா,
உருக்கிய செம்பின் உற்ற நீர்என உரைக்கல் உற்றான். —கம். 31.

நன்மையும் தின்மை அன்றோ நாசம்வந்து உற்ற போது. —கம். 32.

செருக்குநர் திர்த்தும் என்பார் - செருக்கரது கருவத்தைத் திர்க்கிறோம் என்பாரினும்—செருக்கர் இல்லை. செருக்கினில் திரும் என்பார் - செருக்காலேயே அழிவோம் என்பாரினும் — செருக்கிய பகைவர் இல்லை. செருக்கற்கு இதம் செய்வார் என்பது தக்கையின் பாடம்.

இனிச் செய்யும் காரியம் என்ன

சினவேல் கணைகொல்லப் படுகைதன்னில்
சீராமன் கணைகொல்லின் புகழ்உண்டுஎன்றான்;
மனவே தனைசெய்த தென்றல்என்னை
மகிழ்விக்க அவள்தன்னைத் தருஎதின்றான்;
எனவே, முனம்தண்ட காவனத்தில்
எதிர்த்துஅங்கு அவன்பால் என்தம்பியும்
வினைவேல் அரக்கரும் மடியஅஞ்சி
மீண்டேன் இனிச்செய்யும் வலிஎன்என்றான். 58

இதுவும் விதியே

மாயத் தால்கொண்டு வருவம்என்றான்;
மலைந்து செருவென்று தரல்நன்றுஎன்றான்;
தேயத் தான்மைந்தன் உயிர்மாண்டால்
சீதை தனதுஆவி போவாள்என்றான்;
போயத் தால்மின்னைத் தீண்டாமுன்
புரளும் இவன்பத்துத் தலைஎன்றுஎண்ணி,
ஆயத்தாற் சொன்னேன் அதனுக்குஒப்பான்
அதுவும் விதியேஎன்று அகத்துள்கொண்டான். 59

வன்மா யைதன்னால் இயற்றஎன்ன,
மடமான் இதுவேணும் என்னத்தக்க
பொன்மான் உருவாகி இருவரையும்
புறமே அகன்றுஏகும் வினைசெய்என்றான்;
சொன்மா றாதுஅங்ஙன் துணிந்துசென்றான்;
துன்மா மதியோனும் வெறித்துச்சென்றான்;
பின்மா ரீசன்முன் விதியைநொந்து
பெருமான் உறையும்வனத் தில்சென்றான். 60

58. அவள் - சீதை.
59. தேயத்தான் - தசரதன். போயத்தால் - போய் அதனால்.

வந்தது மாயமான்

முன்னம் சமர்தன்னில் முறிந்துசென்றான்,
முடியும் படிவந்தான்; நஞ்சுண்டமீன்
என்ன நடுங்கித்தன் உறவைஎண்ணி
இரங்கி, மாரீசன் மண்ணும்விண்ணும்
மின்ன வரும்பொன்மான் உருவம்தன்னை
விரும்பித் தொடர்கின்ற கலைமான்கள்,
சொன்ன விலைமாதர் வடிவைக்கண்டு
தொடர்கின் றவர்ஒக்கும் சூழல்எங்கும்; 61

கொடியா ரிடைநோவச் செங்கைஎன்னும்
கொய்யா மலராலே மலர்கொய்கின்றாள்,
வடிவார் குழலாள்பொன் மானைக்கண்டாள்;
மாய மான்என்று மனத்தில்எண்ணாள்;
முடியா ராவணன் முடிவதற்கும்,
மூன்றாம் உலகோர் இதுகேட்போர்
விடியா வினைநீங்கி வாழ்வதற்கும்
வேணும் இதுஎன்று விருப்பம்உற்றாள். 62

மாயமே இது

சனகன் மகள்சென்று தலைவன்முன்னே
தாளும் செவிவாலும் மாணிக்கத்தால்
கனக மான்ஒன்றுதோன் றிற்றுஅங்கே!
காணத் தகும்என்று வணங்கிச்சொல்ல;

61. வெஞ்சுற் றம்நினைந்து உகும்வீ ரரைவேறு
அஞ்சுற் றுமறுக் குறும்ஆழ் குழிநீர்
நஞ்சுஉற் றுழிமீ னின்நடுக் குறுவான்
நெஞ்சுஉற் றதுஓர்பெற் றிநினைப்பு அரிதால். —கம். 41.

கலைமான் முதல்ஆ யினகண் டஎலாம்
அலைமானு றும்ஆ சையின்வந் தனவால்
நிலையா மனவஞ் சனைநே யம்இலா
விலைமா தர்கண்யா ரும்விழுந் தெனவே. —கம். 44.

அனகன் இதுகாண ஆதரித்தான்;
அம்பொன் மானால்அயிர்ப்பு உண்டுஎன்று,
பனக அணையானுக்கு இளையோன்தான்
பணிந்துஅங்கு உரைசெய்யப் பரமன்சொல்வான்: 63

இயல்பானதாயும் இருக்கலாமே

பல்லா யிரங்கோடி பிறவிஅன்றோ?
பசும்பொன் அலவோபண்டுஏழ் அன்னமும்?
எல்லா உயிரும்கண்டு அறிந்தவர்ஆர்?
என்றுஅங்கு அருள்செய்ய; எழிற்சீதை
சொல்லாது என்முன்னே அந்தப்பொன்மான்
தூரம் போம்என்று வருந்திச்சொல்ல;
நல்லாய் அதுதன்னைக்காட்டு என்றுஎங்கோன்
நடந்துஅங்கு இளையோனும் தானும்கண்டான். 64

கண்டு கடல்வண்ணன் விருப்பம்உற்றான்;
கனக மான்என்றே கருதுகின்றான்;
உண்டு பொருள்சொல்ல? அனந்தன்தன்மேல்
யோகத் துயில்விட்டுப் பிரிந்ததுதான்
பண்டு சுரர்செய்த தவம்அலவோ?
பழுது வருமோஅங்கு அதனாலே;
வண்டு செறிதொங்கல் இளையோற்கு
மானைப் பார்என்று மாயன்சொன்னான். 65

63. பனக அணையான் - திருமால் ஆகிய இராமன். பனகம் - பாம்பு.
ஆணிப் பொனின்ஆ கியதுஆய் கதிரால்
சேணில் சுடர்கின்ற துதின் செவிகால்
மாணிக் கமயத்து ஒருமான் உளதால்
காணத் தகும்என் றனள்கை தொழுவாள். —கம். 49.

64. நில்லா உலகின் நிலைநேர் மையினால்
வல்லா ரும்உணர்ந் திலர்மன் உயிர்தாம்
பல்ஆ யிரகோ டிபரந் துளவால்
இல்லா தனஇல் லைஇளங் குமரா! —கம். 52.
முறையும் முடிவும்இலை மொய்உயிர். —கம். 54.

65. கனகமான் - பொன்மான்.
'நன்று இது' என்றான்; அதன்பொருள் சொல்லல் ஆகும்? —கம். 56.

கண்டோம், மீண்டு போவதே மேன்மை

மின்னும் மணிப்பாதம், தரளம்பற்கள்,
மேனி நிறம்செம்பொன், வெள்ளிபுள்ளி;
துன்னும் இதனைக்கண்டு உருகார்ஆர்?
சுடரில் விழும்விட்டில் இனம்போலே;
உன்னும் பறவையும் மிருகங்களும்
உருகும் படிபார்!என்று அதுகேட்டு,
பொன்னின் மான்பின்போம்; இனி,மீண்டு
போவது இனிதுஎன்றான் இளங்கோமான். 66

மாயமான் என்றால் மாய்ப்போம்

கஞ்ச மலராள்,இம் மானைப்பற்றிக்
கடிமா நகரிற்சென்று அடையும்நாள்
கொஞ்ச விளையாடத் தகும்இதுஎன்ன;
கோமான் இனிதுஎன்ன; இளையோனும்
வெஞ்சொல் அரக்கர்கள் மாயம்செய்து
விடுத்த மான்இனம் காண்கைஎன்ன;
வஞ்சம் எனிற்கொன்று பகைதீர்வோம்
மானே எனில்பற்றி வளர்ப்போம்என்றான். 67

எண்ணார் படைஉண்டோ செயும்மாயம்
ஏதோ தெரியாதுஎன்று இளவல்சொல்ல;
நண்ணார் பலர்என்றும் மாயம்என்றும்
நந்தம் விரதத்தை விடல்ஆமோ?
தண்ணார் தொடையாய்என்று அருளிச்செய்ய;
தம்பி, யான்சென்று பகைவர்வந்தால்
மண்ணாள் பகைதீர வதைப்பநின்றேன்;
மானைப் பிடித்துஇங்கு வருவென்என்றான். 68

66. .... யாவும்
விரிசுடர் விளக்கம் கண்ட விட்டில்போல் வீழ்வ காணாய். —கம். 58.

மானை விரட்டிச் சென்றான் இராமன்

தலைவ நீயேசென்று இதனைப்பற்றித்
    தருகின் றிலைஎன்கண் எனவும்தையல்
கொலைவாள் விழிமுத்தம் சிந்தச்சென்றாள்;
    கோபம் அதுகண்ட அருளாளன்,
அலைவாய் வடிவேலாய்! சுடர்மானை
    யானே பிடித்துஇங்ஙன் கொணருகின்றேன்;
சிலைவாள் நுதலாளைக் காத்திடுஎன்று
    சிலையும் கணையும்கொண்டு அதன்பின்சென்றான்.

அன்று பிழைத்திட்ட மாரீசன்
    அவனாம் இன்னம் கண்டருள்வாழி
என்று தொழுது,அவன் எழிற்சீதை
    இருந்த சாலையில் புறங்காத்து
நின்று, பகர்தம்பி மொழிஉட்கொள்ளான்;
    நிகர்இல் லாள்கொண்ட சீற்றம்கண்டு
துன்று மணிவாள் நகைவீரன்
    சொர்ண மானின்பின் தொடரல்உற்றான். 70

தோயும் நிலம்தன்னில் மிதிக்கும்;மெள்ளச்
    சுடர்கால் உரம்கூட்டிச் செவிநீட்டிப்
பாயும் மலைமேலும் குதிக்கும்நிற்கும்;
    பாய்ந்து மேகத்தில் மறைந்துசெல்லும்;
வாயு வேகமும்மன கதியும்இந்த
    மானின் வேகத்துக்கு இணைஅன்றுஎன்ன,
ஆயும் புகழ்மாயன் உலகுஅளந்த
    அம்பொன் அடிநோவத் தொடர்ந்துசென்றான். 71

மாயமே ஆகியது

இன்னம் அளக்கஓர்அண் டம்உண்டோ?
    எங்குந் தான்என்றே இசைவித்ததோ?
இன்னது எனஒண்ணா விசையிற்செல்வான்
    எதிரே அணிதாகும் நிங்கும்பொன்மான்

71. மிதித்தது மெல்ல மெல்ல: வெறித்தது வெருவி; மீதில்
குதித்தது; செவியை நீட்டி, குரபதம் உரத்தைக் கூட்டி,
உதித்துஎழும் ஊதை உள்ளம் என்றுஇவை உருவச் செல்லும்
கதிக்குஒரு கல்வி வேறே காட்டுவது ஒத்தது அன்றே. —கம். 70.

இன்ன முதம்மென்சொல் களிமாதர்
　எட்டு மனம்போல்எட் டாமற்செல்ல;
இன்னல் செயும்மாயம் எனஅறிந்தான்;
　இளையோன் மொழிஎண்ணி எண்ணல்உற்றான். 72

பிடியான் இனி,என்னைப் பாணம்தன்னால்
　பிளப்பான் எனஎண்ணி, மேகத்தின்மேல்
கடிதாய் ஒளிக்கக்கண்டு, இறைவனும்தான்
　கனல்ஆ ழியினாலும் தடுக்கஒண்ணாக்
கொடிதுஓர் கணைதொட்டான் எங்கும்சென்று
　கொல்வாய் என;வஞ்சன் நெஞ்சில்பட்டு,
வடிவேல் இளையாய்! என்றுஅழைத்தே
　மண்மேல் விழுந்திட்டான் மாரீசனே. 73

வெஞ்சொல் அரக்கன்,தன் உருவோடும்
　வீழ்வது கண்டவெவ் விறல்வீரன்,
வஞ்சம் இதுஎன்ற இளையோனை
　வல்லன் மதிஆள வல்லன்என்றே,
அஞ்சொல் முனிஆகத்து அஞ்சிச்சென்ற
　அம்மா ரீசன்என்று அறிபோதில்,
நஞ்சொல் எனவிட்ட குரல்கேட்டால்
　நாரி வருந்தும்,என்று உளம்தவித்தான். 74

ஏதோ சூது இது

வந்த மாரீசன்த னையும்வல்லான்,
　மதிவல் லான்,எந்தன் வலியும்வல்லான்
இந்த ஓசையும்வ கையும்வல்லான்
　எம்பி தேற்றுவன் எனத்தேறி,
அந்தம் உறுவெய்யோன் அழைத்தசொல்லால்
　ஆகும் வினைஉண்டு; தோகைநல்லாள்
சிந்தை மெலியாமல் மீள்வன்என்று
　தெய்வ நாயகன்வி ரைந்துவந்தான். 75

75. வல்லானாகிய எம்பி.

8 சடாயு வதைப் படலம்

— சடாயு என்ற கழுகரசன் உயிர்நீத்துப்
பரமபதம் அடைந்தது

பொன்மானின் பின்போய்ப் பொருகணையால் பொன்றுவித்த
நன்மா னவன்செயலை நன்குஉரைத்தேன்—பின்மானும்
தோடுஉற்ற வார்குழலாள் துன்பும் சடாயுவந்து
வீடுஉற்ற வாறுஉரைப்பேன் மேல். 1

கூக்குரல் கேட்டாள் சீதை

மாரீசன் மாய்கையிலே
மாய்கையினால் அழைத்தகுரல்
பேர்ஓசை கேட்டவஞ்சி
பெருந்துயரால் வருந்தினளால்
தார்ஈசன் குரலதுஎன்றே
சாய்கொடிபோல் வயிற்றைஎற்றி
ஆர்ஓதை இடிகேட்ட
அரவதுபோல் புரண்டுஅழுதாள். 2

நிற்றியோ இளையோய் நீ

மான்பிடித்துத் தருகஎன்றேன்;
வாள்முதலை முடித்தொழிந்தேன்;
கான்பிடித்துத் தொடர்ந்தநம்கோன்
கார்அரக்கர் வஞ்சனையால்
வான்பிடித்தான் சொல்கேட்டு,
மருங்குநின்ற இளையோனே!
தேன்பிடித்த தொடையோன்பால்
செல்லையோ என்றுஉரைத்தாள். 3

கம்பராமாயணப் பதிப்புகள் சிலவற்றிலே இப்படலம் 32ஆம் செய்யுள் முடிய ''இராவணன் சூழ்ச்சிப் படலம்'' என்றும், 33ஆம் பாடல் முதல் ''சடாயு உயிர் நீத்த படலம்'' என்றும் காணப்படுகின்றன.

2. மாய்கை - மாய்தல்; மாயை. ஈசன் - இராமன். இடி ஓசை கேட்ட பாம்பு போல.

3. செல்லையோ - ஐயோ செல்வாயாக.

இராமனை யார் எனக் கருதினீர் ?

இராமபிரான் வரிசிலைமுன்
　　ஈர்எழுலோ கமும்எதிரோ?
பிரான்அலவோ யார்க்கும்அவன்?
　　பேதமையால் அறிந்திலிரோ?
தராதலம்,நீர், தழல்,கால்,வான்
　　சகலமும்தான் அவன்முனிந்தால்
நிராசுரமாம்; அஃதுஅறியீர்,
　　நீள்துயரில் அழுந்துகின்றீர். 4

அறும்அரக்கற்கு ஆற்றாமல்
　　ஐயன்என்னைக் கூவுவனேல்
தெறும்அரக்காய் வெந்துஅழியும்
　　திசைமுகனோடு உலகம்எல்லாம்;
உறும்சுரற்குஆம் மேருவில்லை
　　ஒடித்தநம்கோன் வடிக்கணையால்
இறும்அரக்கன் விளைத்தகுரல்
　　இதற்குஇனிநீர் அஞ்சல்என்றான். 5

தீப்பாய்வேன் என்றாள் சீதை

உயிர்கொடுப்பார் பழகினரும்;
　　உடன்பிறந்தும் உதவுகில்லாய்,
செயிர்மனத்தாய்! எனக்கொதித்துத்
　　திறன்அலநீர் நின்றதுஎன்று,
பயிர்வனத்தா மரைஅனம்போல்
　　படர்வனத்தில் புகநடந்தாள்;
அயிர்மனத்தான் விலக்கிஅஞ்சி
　　அடிவணங்கிக் கூறுகின்றான்: 6

விதியினை வெல்ல வல்லமோ?

வென்றார்ஆர் விதிவலியை?
　　விரைந்துஅடியேன் ஏகுகின்றேன்;
நின்றாலோ முனியலுற்றார்,
　　நீங்குவனேல் கேடுவரும்;

4. பஞ்சபூதங்களும் சகலமும் அவனேதான்.
6. தாமரை வனத்திடைத் தாவும் அன்னம்போல்
தூமவெங் காட்டுளெரி தொடர்கின்றாள், —கம், 14.

என்றுஆகம் விம்மிவிம்மி
எருவைமன்னன் காப்பன்என்று
சென்றான்,வா னவர்தவத்தால்
திருமால்பால் இளையவனே. 7

வந்தான், இராவண சந்நியாசி

இளையபிரான் ஏகியபின்
இராவணன்தான் உருமாறித்
தளைஅமைமுக் கோல்தரித்துச்
சந்யாசி வேடமதாய்
உளையஉடல் பழுத்துமுற்றி
உணாதவர்போல் உலர்ந்துஎலும்பாய்
வளையவிழும் பூப்போலே
வருந்திமெல்ல நடந்துவந்தான். 8

முளரிமணிச் செபமாலை
முப்புரிநூல் அணிமார்பன்
விளரிகுழல் யாழிசைபோல்
வேதமொழி ஓதிடுவான்
வளர்இசைசேர் கற்புடையாள்
மருவிடத்தை வந்துஅணுகித்
தளர்இசைநாக் குளறிடவே
சாலைஉள்ளே யாவர்?என்றான். 9

கண்டான், கற்பினுக்கு அரசியை

ஈட்டறம்செய் போதனர்என்று
எதிர்எழுந்து வருகஎன்றாள்;
தீட்டரும்சீர் கற்புடையாள்
திருவடிவைக் கேட்டதிலும்
மீட்டம்என்றே கண்டுஉருகி
வீங்கிமெலிந்து உடல்வெறுத்து
நாட்டமும்உள் ளமும்மகிழ்ந்தான்
நறைமலர்உண் களிஅளிபோல். 10

10. போதனர் - தபோதனர், மீட்டம் - மேம்பட்டது.

திருஅழகாம் பெரும்கடற்குள்
    சிறந்தகண்ஆ யிரம்வேணும்
இருபதுமூன் றரைக்கோடி
    எந்நாளும் போதாவாம்
வரும்இவள்மூ வுலகாள
    வைத்துஇவட்கே ஏவல்செய்வேன்
அருளியதங் கைக்குஇலங்கை
    அருள்வேன்என்று அண்ணல்உற்றான். 11

பொற்புநகை என்செயுமோ
    புலம்புநகை உருக்குதுஎனும்
அற்பன்உள்ளம் தெரிந்துஅறியாள்
    அழுகைவிட்டுஆ சனம்கொடுத்துக்
கற்புடையாள் இருக்கஎன்றாள்;
    கயவனும்தான் இருந்தளவில்
வெற்புமரம் பாம்புபட்சி
    விருக்கமுதல் நடுங்கினவே. 12

வினாவும் விடையும்

ஈண்டுஉறையும் மாதவன்ஆர்?
    எனக்கேட்க; இவர்நமக்கு
வேண்டினவர் என்றுஉரைப்பாள்:
    வேல்வேந்தன் தசரதன்சேய்
தாண்டுபுகழ்த் தம்பியுடன்
    தாய்மொழியால் ஈண்டுஅடைந்தான்;
ஆண்டவர்பேர் அறியீரோ,
    அருந்தவரே! எனமொழிந்தாள். 13

கண்டுஅறியேன், கேட்டுஅறிவேன்,
    கங்கைநல்நீர் நாடன்அவன்;
ஒண்தொடிநீர் ஆர்?எனவே
    உடையவன் மான்பின்போன

11. அண்ணல் - நெருங்கல்.
12. விருக்கம் - மிருகம்.

புண்டரிகன் அன்றியுமே
புகழ்ச்சனகன் பெற்றமகள்
வண்டுஅமர்தார் இராமபிரான்
மனைவிஎன்பேர் சனகிஎன்றாள். 14

அதுஉரைத்த ஆயிழையாள்
அங்குஅவனை நோக்கி,மற்றும்
முதுவிருத்த ராய்இருந்தீர்
முழுதும்உடல் நடுங்குகின்றீர்
இதுவருத்தம் சொல்லரிதால்
எங்கிருந்து வந்ததுஎன;
மதுவிரைத்தண் குழல்அவட்கு
வஞ்சனையான் வகுத்துஉரைப்பான்: 15

முழுவலியோன்; மறைகள்வல்லோன்;
மூன்றுஉலகம் அரசாள்வோன்;
செழுமலரோன் மரபில்வந்தோன்;
தேவர்அவன் ஏவல்செய்வார்;
செழுகமலக் கண்ணன்அருள்
சிறந்தவிதி யோனும்எண்ணி
எழுதலொண்ணாத் தலைகள்பத்தும்
இருபதுதோ ளும்படைத்தான்; 16

சிவன்அமர்ந்த வரைஎடுத்தோன்;
திசையானை மருப்புஒடித்தோன்;
இவன்இனங்கேள் வியும்திறலும்
இந்திரற்கும் இந்திரனாம்;
புவனம்எங்கும் தனக்குஇசைந்த
பூவையையே நாடுகின்றான்;
அவன்இலங்கைக்கு யாதும்ஒவ்வாது
ஆங்குஉறைவேன் எனமொழிந்தான். 17

வாக்குவாதம்

மாதவர்பால் வானவர்பால்
மருவாமல் அரக்கர்என்னும்
பாதகர்பால் மருவுவதோ?
பற்றுஒழிந்தீர்! எனக்,கேட்டு,

கோதவர்பால் இலைஎமைப்போல்
　　குணவியரே நிருதர்என்றான்;
தீதுஅவர்பால் இணங்குவதும்
　　சேர்ந்தவரும் தீயர்என்றாள். 18

அய்யம்உற்றாள் எனமறைப்பான்;
　　அடல்அரக்கர் சேவைவிட்டால்
வையம்உற்றார் வானம்உற்றார்
　　வாழ்வதுஉற்றார் ஆர்?எனவே;
எய்யமுற்றாக் கணைஎங்கோன்
　　இங்குஇருந்தெய்து அவர்தலையைக்
கொய்யமுற்றும் மடிவர்பின்னைக்
　　குற்றம்இல்லை உலகில்என்றாள். 19

நிருதரைமா னிடவர்கொல்லில்
　　நெடுங்கரியை நரிகள்கொல்லும்;
கருதரிய கோள்அரியைக்
　　கலைகள்கொல் லும்;எனக்கேட்டு,
துரிதவிரா தனும்கரனும்
　　துணிந்ததுபோல் இலங்கைமன்னன்
பொருதுஅழிவான்; வெல்வதுஉண்டோ?
　　புண்ணியத்தைப் பாவம்என்றாள். 20

இன்மொழிகேட்டு இன்புறுவோன்,
　　இகல்மனிதர் வலியர்என்ற
வன்மொழியால் கோபம்உற்றான்;
　　வலிமைஇல்லாச் சிறியர்பட்டார்
என்மொழிகேள் மனிதர்மட்டோ
　　இருபதுதோள் காற்றுஅடித்தால்
பொன்மலையும் மண்ணும்விண்ணும்
　　பூளைகள்போல் பறக்கும்என்றான். 21

18. குணவியர் - குணம் வாய்ந்தவர்.

20. மீளஅருந் தருமந்தன்னை வெல்லுமோ பாவம் என்றாள். —கம். 57,

பன்னிலங்க மறுதோள்கள்
பலபடைத்தால் வலிவருமோ?
தென்லிலங்கா புரியோனைச்
சிறையில்இட்ட திறலவன் தன்
மின்னிலங்குஆ யிரம்புயமும்
விறல்மழுவால் வீட்டினவன்,
உன்னில்,அங்குஆர் இரண்டுகையான்
ஒருவன்அன்றோ? என்றுரைத்தாள். 22

வெகுளி பொங்க, விட்டது மாயவேடம்

ஆங்குஅதுகேட்டு எரிந்தனகண்;
அட்டதிக்கும் பரந்தனதோள்;
ஓங்கினவான் அளந்தமுடி;
ஒன்றொடுஒன்று புடைத்தனகை;
வீங்கினகார் உரும்இடிபோல்;
மென்றபல்லால் விழுந்தபொறி;
நீங்கினன்மா யாவேடம்
நெஞ்சில்உற்ற வஞ்சினத்தால். 23

விடஅரவம் படம்விரித்து
வெகுண்டெழுந்தாற் போன்றதுகண்டு
அடவரும்கூற் றுவனைஅஞ்சும்
ஆருயிர்போல் நடுக்கம்உற்றாள்;
திடவரம்வீ ரம்பாராய்
சிறுமனிசர் வெல்வர்என்றாய்
மடமகள்ஆ கப்பிழைத்தாய்
வதைத்துஉடனே மாள்வன்என்றான் 24

22. இலங்காபுரியானைச் சிறையில் இட்டவன், கார்த்தவீரியார்ச்சுனன். அவனுடைய ஆயிரம் தோள்களை வெட்டியவன் பரசுராமன்.

24. கூற்றம்வந் துற்ற காலத்து உயிர்என குலைவு கொண்டாள்.

—கம். 46.

பெண்எனப் பிழைத்தாய் அல்லை; உன்னையான் பிசைந்து தின்ன
எண்ணுவென்என்னின் பின்னை என்உயிர் இழப்பென் என்றான்.

—கம், 65

அடாது சொன்னாய், அரக்க

நவிவிழியாய் அஞ்சல்இனி;
நன்முடிமேல் நான்சுமக்கப்
புவியில்மின்னார் தெய்வமின்னார்
போற்றுபதம் கைக்கொள்என்றான்;
செவியினைமூ டிப்பெருமாள்
தேவிஅன்னை வேள்விஉண்ணும்
அவியினைநாய் வேட்டதுபோல்
அடாதுசொன்னாய் அரக்கஎன்னா, 25

நிலையில்இல்லா உடல்உயிர்க்காய்
நீதி,நல்லோர் விடுவர்களோ?
சிலையில்வரும் கணைபடும்முன்
சென்றுஓடிப் பிழைஎன்னவே;
குலையுறுமோ திசைக்களிற்றின்
கோடுஒடித்த மார்பில்உற்றால்
மலையில்விழும் மலர்காண்உன்
மகுணனையும் வாழிஎன்றான். 26

இறைவா! இளையோய்!

குறையும்என்ஆ ருயிரைநல்கிக்
கொள்கஎல்லா உலகும்என்று
முறையதில்லான் விழுந்துஇறைஞ்ச;
முனைவேலால் எறிந்ததுபோல்,
இறையவனே! இளையவனே!
என்றுஅரற்றி விழுந்தளவே
தரையையோ சனைவகிர்ந்தான்;
சாபம்எண்ணித் தொடப்பயந்தே. 27

25\. .... பொங்குளரிப் புனிதர் ஈயும்
அவியை நாய்வேட்ட தென்ன என்சொனாய் அரக்க என்னா.

—கம். 67.

26\. உன் கணவன் எய்யும் அம்பு, திசை யானைகளின் கொம்பை ஒடித்த என் மார்பைத் தாக்குவது, மலைமேல் மலர் எறிவது போலத்தான். மகுணன் - மகிழ்நன் - கணவன்.

பாரோடும் சாலையொடும்
படர்தேரின் மீதில்வைத்துத்
தேர்ஓட விடுகஎன்றான்;
தேர்ப்பாகன் விரையல்உற்றான்;
வேரோடும் துயரோடும்
வெங்கனல்சேர் மென்கொடி,மேல்
சூரோடும் மலையோடும்
சுனையோடும் புலம்பல்உற்றாள். 28

நிலைகுலைந்தாள் - கதறினாள்

மான்காள் கலைகாள் மலைஇனங்காள்
மயில்காள் குயில்காள் வாள்அரிகாள்
கான்காள் மரங்காள் கனவரைகாள்
கடவா ரணங்காள் கடும்பிடிகாள்
தேன்காள் மலர்காள் சிறைவண்டுகாள்
செழுமா முகில்காள் தேவதைகாள்
மீன்காள் சுனைகாள் எனதாபம்
விறலார் வீரர்க்கு விளம்பீரே. 29

உரதார் அழகர்க்குஎன் இடர்தனைநீ
ஓதாய் கோதா விரியாறே;
வரதா! இளையாய்! அரக்கவர்க்கம்
மாளப் பொருதுஎன்னை மேவீரோ?
பரதா! இளையாய்!பூ ணுதிரோவெம்
பழிஎன்று அழுவாள், துயர்கண்டுதான்
நரர்தாம் எனைக்கொன்று மீட்பர்உன்னை
நன்றுஎன்று அரக்கனும்மு றுவல்செய்தான். 30

தேரை நிறுத்து

மீட்பார் வருவர்உன்தேர் கடவாதே;
வீரன் நீஆகில் விரையாதே;
கேட்பாய் எனை,உங்கை மூக்குஅரிந்தும்
கிளர்சே னைகொன்றும் வனத்திருந்தும்

29. மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரே நிலைதேடி னிர்போய்
உலையா வலியார் உழைநீர் உரையீர். —கம். 57,

தாட்பாய் எதிராமல் மாயப்பொன்மான்
தனைவிட்டு உறவோரைப் பிரியச்செய்து
பாட்பாய் களவில்கொண்டு ஏகல்கற்றாய்
பயத்தால் அலவோ?சொல், பாவி!என்றாள். 31

பாவம் ஏது? பழி ஏது?

ஓடும் நரரோடும் யான்எதிர்ந்தால்
உமைபா கன்மலைகொண்ட வீரத்தோட்குக்
கூடும் பழிநாணி, அதனைவிட்டுக்
கொணர்ந்தேன் மாயம்செய்து; எனக்கேட்டு,
சாடும் அவர்பால்போ காதுஎன்அவர்
தம்கற் புடையாரை நலிகைநன்றோ?
நீடும் பழிஎன்ன? நாணம்என்ன?
நெஞ்சில் அருள்அற்ற நிருதர்க்குஎன்றாள். 32

எங்கடா போவது? நில்! நில்!

போகின் றதுகண்டான் எருவைமன்னன்,
போவதுஎன்? நில்!நில்!என்று இடிக்கும்சொல்லான்,
வேகுண் டதோர்நெஞ்சன், எரியும்கண்ணன்,
மின்னும் சுடர்போலும் விறல்மூக்கன்,
மாகுன் றமேவானில் வருவபோலும்
மைய்யன் ஆழியும்உல கும்ஒன்றாய்
ஆகின் றஊழிக்காற்று என்னவீசி
அட்ட திசைமூடும் இருசிறகான்; 33

வெள்ளி மலைசெம்பொன் மலைஈதுஎன்ன,
விரவும் கருடன்என்று அரவும்அஞ்ச,
வள்ளி இடைமானை அஞ்சல்என்று,
வஞ்சன் தொடவும்இல்லை எனஎண்ணிக்

31. தாட்பாய் - தாட்டீகமாய். பாட்பாய் - பாழ்ப்பாய் - வஞ்சகமாய்.

32. பாவையும் அதனைக் கேளாத் தம்குலப் பகைஞர் தம்பால்
போவது குற்றம் வாளின் பொருவது நாணம் போலாம்
ஆவது கற்பி னாரை வஞ்சிக்கும் ஆற்ற லேஆம்
ஏவம்என் பழிதான் என்னே இரக்கம்இல் அரக்கர்க்கு என்றாள்.
—கம். 84.

கொள்ளி யினைக்கொண்டு ஏகல்உற்றாய்;
        குலத்தோடு இறந்தாய்நீ வாழ்வும்அற்றாய்;
தெள்ளிது அலஉந்தன் செயல்இதுஎன்று
        தெரியா அரக்கனுக்கு உரைக்கல்உற்றான். 34

கற்பால் அனல்என்றும் உலகுக்குஎல்லாம்
        கருணைத் தாய்என்றும் கருத்தில்கொள்ளாய்;
வெற்பால் அமர்செய்துஉன் கிளைஞர்பட்டார்
        வீரன் கணையால்என்று அறியாயோ?
கொற்பால் விடம்உண்டும் பிழைக்கஎன்றோ?
        கொல்லும் கரிக்குஉண்டை தெரிப்பதுஎன்னோ?
நற்பால் மூவர்க்கும் முதல்என்றுஎண்ணாய்,
        நரரா கையிலார்என்று உணர்ந்தனையோ! 35

இந்தா, பழிநந்தா நரகம்கொண்டாய்!
        இந்தப் பிழையாலே பிழையாய்காண்!
பைந்தார் சிலைவீரர் இருவோர்க்கும்
        பதினா லுலகமும் எதிர்நிற்குமோ?
சிந்தா வரமும்நின் னுயிரும்நில்லா,
        சிராமன் கணைமுன்னே; அவர்க்குமுன்னோ
நந்தாய் அவளைவிட்டால் நாயகன்பால்
        நானே கொடுசெல்வன், போநீஎன்றான். 36

தாயே, வருந்தாதே!

நாளாம் அரக்கன்வாய் மடித்துப்பொங்கி
        நரரைக் காட்டு,என்தன் சரத்தின்முன்னே;
மாளா தேநீபோ, இரும்புஉண்டநீர்
        வரிலும் இவள்மீளாள் எனக்கேட்டு;

35. கொல்பால் விடம் உண்டும் பிழைக்க என்றோ - கொல்லும் தன்மைய தாகிய விடத்தை உண்டும் பிழைத்திருக்க நினைப்பது என்ன மதி ஈனம். கொல்ல வந்த கரி (யானை)மீது மண் உருண்டையை வீச விரும்பினாயே. வீசினால் முன்னிலும் அதிகமாகக் கோபங்கொண்டு தாக்கும் என்பதை அறிந்திலைபோலும் நீ. பரம்பொருளே மானிடராய் வந்தார் என்று எண்ணாது, அம் மனிதர் கையால் ஆகாதவர் என்று கருதினாய்போலும்.

நீளார் குழல்அஞ்சா; எருவைமன்னன்,
நிருதன் தனைக்கொல்வேன் இமைக்கும்முன்னே
வாளார் விழியன்னீர் வரராமன்
வருகின் றிலன்என்றுநீ வருந்தாதே. 37

தலைகள் பத்தும் பலியாவதைப் பார்

பத்துத் தலைதத்தப் பனங்காய்போல்
பலிசெய் வேன்பத்துத் திசைக்கும்என்று,
பத்துக் கிரீடமும் சிறகில்எற்றிப்
படிமேல் விழவிட்டு, துவசத்தையும்
கொத்திப் பறிக்கக்கண்டு, அமரேசர்
கூடிப் புகழ்ந்திட்டார்; அதுபோதில்,
சத்திச் சிலைஆர வளைத்துஅரக்கன்
சடாயு தனைமோதிச் சரங்கள்எய்தான். 38

இராவணனை எதிர்த்தான் சடாயு

அடித்தான் கடித்தான் சரங்கள்எல்லாம்
அரவங் களைக்கொல்லும் கருடனைப்போல்
ஒடித்தான், மீளவும்அவன் சென்னிமேல்
உயர்த்தினன் மூக்குஎன்ன— சிலைகுனித்துத்
தொடுத்தான்; விடும்முன்குண் டலங்கள்எல்லாம்
துணித்துஅங்கு எழுந்தானை, ஏழ்இரண்டு
வடித்தார் கணைமார்பம் திறக்கஎய்தான்;
வானோர் அதுகண்டு மயக்கம்உற்றார். 39

வெறிய கரன்முதல் அரக்கர்செந்நீர்
வேலை எனஉண்டுசொரி கொண்டல்போல்
செறிய உடல்எங்கும் குருதிசிந்தச்
சீறிக் கழுகின்கோன் அரக்கன்தன்னை

37. இரும்புஉண் டநீர்மீளி னும்என் னுழையின்
கரும்புஉண் டசொல்மீள் கிலள்;கா னுதியால். —கம். 18.

முறியா உரம்எங்கும் சிறகுஇரண்டால்
மோதிக் கவசத்தைப் பறித்துஎறிந்தான்;
எறிய, ஒருநூறு பாணம்எய்தான்;
எய்த சிலையையும் கடித்துஎழுந்தான். 40

சேலார் விழிபங்கன் வரைஎடுத்துத்
தேவேந் திரனைவென் றவன்கைவில்லைக்
காலால் ஒடித்தான், சிவன்கைவில்லைக்
கையால் ஒடித்தான் பெரியதந்தை;
சூலாயுதம் ஒன்றை அவன்எறிந்தான்;
சூலம்தனை மார்பில் எதிர்ஏற்றான்;
மேலார் இதுசெய்த வீரர்என்று
விண்ணோர் தோள்கொட்டி மிகஆர்த்தார். 41

அவத்தர் பால்சென்ற இரவலர்போல்
அற்பர் பாற்சென்ற விருந்தினர்போல்
தவத்தர் பாற்சென்ற மாதர்கண்போல்
சடாயு மேற்சென்று மீண்டதுஅவ்வேல்
பவத்தன் வேறொன்றை எடுக்கும்முன்னே
பாய்ந்து தேர்ஊரும் பாகன்தன்னைச்
சிவத்த நகத்தால் சிரத்தைக்கிள்ளிச்
சினத்தோடு அரக்கன்தன் முகத்துஎறிந்தான். 42

40. முன்னம் கரன் முதலான அரக்கர் இராமனுடன் போர் செய்து சொரிந்த இரத்தப் பெருக்கைக் கடல் என்று கருதிக் கவர்ந்துகொண்டதை, மறுபடியும் உமிழ்ந்து, விண்ணிலே விளங்குகிற வெண்மேகம் போன்றதாம், தன் உடம்பிலிருந்து ரத்தம் பெருகி வழிய வானிலே சடாயு நின்ற தோற்றம்.

41. ஏற்றான் எருவைக்கு இறை, முத்தலை எஃகம் மார்பில்;
மேல்தான் இதுசெய்பவர் யார்?என விண்ணு ளோர்கள்
தோற்றாது நின்றார்தம தோள்புடை கொட்டி ஆர்த்தார். —கம். 32.

42. அவத்தர் - வீணர், உலுத்தர்பால் சென்ற இரவலர். இவரை, 'பொன் நோக்கியர்தம் புலன் நோக்கிய புன்கணோர்' என்பார் கம்பர். பொன் நோக்கியர் - பொன்னையே போற்றும் உலுத்தர். புன்கணோர் இரவலர். இது எம்பெருமானார் கொண்ட உரை. இதற்கு, பொன்னைப் பெறுதலையே கருத்தாக உடைய விலைமாதர் வீட்டை விரும்பிச் செல்லும் வறியவர் என்று உரை கூறுவர் பிறர்.

கொடாய்உன் உயிர்என்று வயிரத்தண்டால்
கொதித்து இராவணன் புடைத்திடவே,
சடாயு விழுந்தான்; விழ,அரக்கன்
தானே கடவத்தேர் கடுகிச்செல்ல,
அடா!எங்கு இனிப்போவாய்? என்றுஎழுந்தான்
அரற்றும் சீதையை அஞ்சல்என்றான்
தடாய்உன் தேரைஎன்று எதிர்பாய்ந்தான்
தண்டா யுதத்தையும் பறித்துஎழுந்தான். 43

தேரு பதினாறு பரியும்பொன்றச்
சிந்திச் சரத்தூணி, சிலைஇன்மையால்
போரும் பொருவில்லை, புல்லர்செல்வம்
பொலிகின் றதனைப்போல் பறித்துஎறிந்து,
கூரு மூக்காலும் சிறகாலும்
குமைக்க உடல்எங்கும் குருதிவெள்ளம்
சோரும் அரக்கன்மெய் சோர்ந்திருந்தான்;
சோரா! இதுவோஉன் வலிமை?என்றான். 44

வீழ்ந்தான் சடாயு

நீசன் அவன்,பொய்யா வாள்உருவி
நீள்ச டாயுவின் சிறகைவெட்ட,
ஈசன் வடிவாளால் முடிவதுஎன்றும்
இதுநாள் அளவுஎன்றும் விதித்திட்டதால்,
வாச மகவானால் இறகுஅற்றதுஓர்
மலைபோல் விழுந்திட்டான் அமரர்முன்னால்
நேச முனிவோரும் இரக்கம்உற்றார்
நெடுமால் உலகோர்பொன் மழைபொழிந்தார். 45

44. தேரும் பரியும் சிதையவே அம்பறாத்தூணியில் அம்புகளும் தீர்ந்த நிலையில் வில்லைமட்டும் பிடித்து வெறுங்கையனாய் நின்றான் இராவணன். அம்பு இல்லாததால் வில் இனி அவனுக்குப் பயன்படாது. புல்லர் (அற்பர்) செல்வம் போன்றதுதான் அது. அதையும் பறித்து எறிந்தான் சடாயு.

45. இராவணன் வாளால் சிறகு இழந்து சடாயு இறப்பான் என்ற விதியோ சாபமோ இருந்ததுபோலும். சடாயுவுக்கு உயிர் அவன் சிறகுகளில் அமைந்திருந்தது என்பர். மகவான் (இந்திரன்) மலைகளின் சிறகை அரிந்தவன். நெடுமால் உலகோர் - நித்யசூரிகளான பரமபதவாசிகள்.

நல்லவன் தோற்பதோ

சுழிந்து ராவணன் ஆர்த்துஎழுந்தான்
　தோகை அவள்தான் எழுந்தணலில்
விழுந்த கொடிபோல் புரண்டுவிம்மி,
　மேலோன் இறப்பதோ பாவிகையில்
அழிந்த தோதர்மம் எனக்குஆக
　அகன்ற சிலைவல்லீர் உமக்குஆகக்
கழிந்த தாதைக்குக் கடனும்செய்வீர்
　காண வாரீர்என்று அழைத்துஅழுதாள். 46

மண்ணோடு தோளில் சுமந்துசென்றான் சீதையை

கற்புக்கு அழிவில்லை, பழிஉண்டுஅன்றோ?
　கணவன் சிலைக்கும்என் மனைக்கும்என்பாள்;
பொற்பின் புகழ்மன்னா துணைவனுடன்
　புல்கிற் றோவானில் எனப்புலம்ப;
மற்புற் றவன்திண்தேர் ஒழிந்தபின்பு
　மண்ணோடு ஒருதோளில் சுமந்துகொண்டு
சொற்பின் படச்செல்ல மனமும்கண்ணும்
　சுழல நினைவற்றாள் உயிரும்அற்றாள். 47

இராவணன் ஏகுதல் கண்டு வருந்தினான் சடாயு

விருத்தம்

ஏகினன் அரக்கனும்; எருவை வேந்தனும்
மோகவெந் துயர்சிறிது ஆறி முன்னியே
மாகமே நோக்கினன் வஞ்சன் வல்லையில்
போகுதல் கண்டுஅகம் புலர்ந்து சொல்லுவான்: 48

வந்திலர் மைந்தர்;நன் மருகிக்கு எய்திய
வெந்துயர் துடைத்தனென் என்னும் மெய்ப்புகழ்
தந்திலர் விதியினார்; தரும வேலியைச்
சிந்தினர் மேல்இனிச் செயல்என் ஆம்கொலோ. 49

குறிப்பு: இப் படலத்துள் 47ஆம் பாடலுக்குப் பின்னர் 62ஆம் பாடல் முடிய ஏடு செப்பவிட முடியாதபடி மிகுதியும் சிதைந்திருத்தலின், கதைப் பகுதிக் காக, இங்குக் கம்பன் பாடல்கள் இடம் பெறுகின்றன.

அம்சிறை குருதிஆறு அழிந்து சோரவும்
வஞ்சியை மீட்டிலென் என்னும் மானமும்
செஞ்செவே மக்கள்பால் சென்ற காதலும்
நெஞ்சுறத் துயின்றனன் உணர்வு நீங்கலான். 50

சீதையைச் சிறை வைத்தான் இராவணன்

வஞ்சியை அரக்கனும் வல்லை கொண்டுபோய்
செஞ்செவே திருஉருத் தீண்ட அஞ்சுவான்
நஞ்சுஇயல் அரக்கியர் நடுவண் ஆயிடை
சிஞ்சுப வனத்திடைச் சிறைவைத் தான்அரோ. 51

தேர்த்தடத்தைப் பார்த்துப் பதைபதைத்தனர் இராம இலக்குவர்

தெற்கு நோக்கியது எனும்பொருள்
    தெரித்ததுஅத் திண்தேர்
மற்கு நோக்கிய திரள்புயத்து
    அண்ணலே வானம்
விற்கு நோக்கிய பகழியின்
    நெடிதுஅன்று விம்மி
நிற்கும் நோக்கில்என் பயன்என
    இளையவன் நேர்ந்தான். 52

கொடி முதலிய சிதறிக்கிடப்பதைக் கண்டான் இராமன்

ஆகும் அன்னதே கருமம்என்று
    அத்திசை நோக்கி
ஏகி யோசனை இரண்டுசென்
    றார்இடை எதிர்ந்தார்
மாக மால்வரை கால்பொர
    மறிந்தது மானப்
பாக வீணையின் கொடிஒன்று
    கிடந்தது பார்மேல். 53

51. சிஞ்சுபம் - அசோகம்.

52. மற்கு - மற்போருக்கு. உனது அம்பு செல்லும் எல்லைக்குள் உள்ளது தான் வானம். விம்மித் தவித்துநின்று தாமதிப்பது பயன்படாது.

53. மாகம் - வானம்.

தோள்அ ணிக்குலம் பலஉள;
குண்டலத் தொகுதி
வாள்இ மைப்பன பலஉள;
மணிமுடி பலவால்;
நாள்அ னைத்தையும் கடந்தனன்
தமியன்நம் தாதை;
யாளி போல்பவர் பலர்உளர்
பொருதனர்; இளையோய்! 54

இது செய்தான் ஒருவனே, அவன் இராவணன்

திருவின் நாயகன் உரைசெயச்
சுமித்திரை சிங்கம்
தருவின் நீளிய தோள்பல
தலைபல என்றால்,
பொருது தாதையை இத்தனை
நெறிக்கொடு போனான்
ஒருவனே, அவன் இராவணன்
ஆம்என உரைத்தான். 55

உயிர்த்தி லன்ஒரு நாழிகை;
உணர்விலன் கொல்என்று
அயிர்த்த தம்பிபுக்கு அங்கையின்
எடுத்தனன், அருவிப்
புயல்க லந்தநீர் தெளித்தலும்
புண்டரீ கக்கண்
பெயர்த்துப் பைப்பைய அயர்வுதீர்ந்து
இனையன பேசும்: 56

நின்றேனே நெடுமரம்போல்

தம்தா தையரைத் தனையர் கொலைநேர்ந்தார்
முந்துஆரே உள்ளார்? முடிந்தானே முன்ஒருவன்;
எந்தாயே! எற்காக நீயும் இறந்தனையால்;
அந்தோ! வினையேன் அருங்கூற்றம் ஆனேனே! 57

54. தோளிலே அணியும் வாகுவலயம் முதலிய பல. வாள் - ஒளி. மணிமுடி - இரத்தின கிரீடம், பல ஆயுட் காலங்களைக் கடந்தவன் ஆன நமது தந்தை சடாயு,

மாண்டேனே அன்றோ மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரதம் அதனால் உயிர்பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்றுழிந்த புன்தொழிலேன்
வேண்டேன் இம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே! 58

என்தாரம் பற்றுண்ண ஏன்றாயைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான்; கொலையுண்டு நீகிடந்தாய்;
வன்தாள் சிலைஏந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனும் நின்றேன்; நெடுமரம்போல் நின்றேனே! 59

இருவரையும் பார்த்தான் சடாயு

அன்னா பலபலவும் பன்னி அழும்; மயங்கும்;
தன்நேர் இலாதானும் தம்பியும்அத் தன்மையனாய்;
உன்னா உணர்வுசிறிது உள்முளைப்பப் புள்ளரசும்
இன்னா உயிர்ப்பான் இருவரையும் நோக்கினான். 60

பாக்கியத்தால் இன்றுஎன் பயன்இல் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே வம்மின்என்று
தாக்கி அரக்கனது மகுடத் தலைதகர்த்த
மூக்கினால் உச்சி முறைமுறையே மோக்கின்றான். 61

வஞ்சனையால் வந்த வரவுஎன்பது என்னுடைய
நெஞ்சகமே முன்னே நினைவித்தது ஆனாலும்
அஞ்சொல் மயிலை அருந்ததியை நீங்கினிரோ
எஞ்சல்இலா ஆற்றல் இருவீரும் என்றுஉரைத்தான். 62

விதியை வெல்ல வல்லமோ

தக்கை

வஞ்சகமான் கண்டது,இடை
வந்தமுற்றும் இளவல்சொல்ல;
நெஞ்சம்உறும் துயர்நீக்க
நினைந்துதந்தை தேற்றல்உற்றான்—
வெஞ்சனனம் இன்பதுன்பம்
விதிவசமாய் விலக்குஅரிதாம்;
செஞ்சொல்விதி சிரம்இழக்கச்
செய்தவிதி வலியதுஅன்றோ? 63

முந்துஇரந்தான் தலைஓட்டால்,
    முயல்தவமோ? சிவன்விதியோ?
சந்திரன்தான் தேய்ந்துஒழிவான்;
    ஞாயிறுபாம்பு உண்டுஉமிழும்;
இந்திரன்தான் படாதுபட்டான்,
    ஈடுஅழிந்தான்; சம்பரனால்
வந்துஇரந்தான் உந்தையின்பால்
    வான்புரந்தான் விதிவலிதான். 64

இன்பம்வரும் துன்பம்வரும்
    யார்அவற்றை விலக்கவல்லார்?
முன்புஅமரர் பாக்கியத்தால்
    முனிவர்செய்த மாதவத்தால்
அன்புஅவளும் உனைப்பிரிந்தாள்;
    அரக்கர்எனும் களைகளைந்து
வன்புஅமரும் கதிர்வேலோய்
    மண்ணுலகை வாழ்விஎன்றான். 65

இது இன்று நிகழ்ந்தது

மெய்த்திருவை ராவணன்தான்
    மேதினியோடு எடுத்துஏக,
சத்திஎலாம் கொடுதடுத்தேன்;
    சங்கரன்வா ளால்துணித்தான்;
சித்தியினால் நேர்ந்ததுஎன—
    செம்மலர்க்கண் மிகச்சிவந்தான்
எத்திசையும் புகைபறக்க
    எரிபிறக்கத் தழல்உயிர்த்தான். 66

வெகுண்டு எழுந்தான் இராமன்

விண்திரிய, கடல்மலைபார்
    விண்டுஇரிய, புனலொடுகால்
கண்டுஇரிய, கதிர்மதியம்
    கண்திரிய, திசைமுகனும்

64. சிவனார் பிரமகபாலத்திலே பிச்சை எடுத்தது; சந்திரன் தேய்வது; இராகு கேதுக்கள் சூரியனை உண்டு உமிழ்வது; நாரதர் துருவாசர் அகத்தியர் சாபங்களுக்கு இந்திரன் ஆளானது; சம்பரனால் அவன் பதவி இழந்து உன் தந்தையிடம் யாசித்தது எல்லாம் விதிவலிதான்.

பண்டுஇரிய, சுருதியொடும்
　　பண்திரியா தவர்இரிய,
எண்திசையும் வெருவல்செய்ய,
　　இராமபிரான் எடுத்துஉரைப்பான்: 67

என்தேவிக்கு இடர்வர,நீர்
　　இறக்கஇது பார்த்துநின்ற
வன்தேவர் அனைவரையும்
　　வளைத்து,உலகம் ஏழினொடும்
ஒன்றுஏவிக் கொடும்பகழி
　　உடைப்பதுபார் மேழிகள்போல்
இன்றேஇக் கணத்தில்என்றே
　　இராமபிரான் வெகுண்டுஎழுந்தான். 68

முனியல், வாழி!

கதிரவனும் மறையல்உற்றான்;
　　கரிகள்சுற்றும் ஓடல்உற்ற;
சதிரின்வீ ரனும்அயர்ந்தான்
　　சகலமும்தான் இறக்கும்என்றே;
முதிர்சினம்கொண்டு, எருவைமன்னன்,
　　முனிந்தருளல், வாழி!ஐயா,
எதிரியார் இராவணன்முன்
　　யாவர்நிற்பார்? என்றுஉரைப்பான். 69

உன் பிழைதான் இது!

தன்ஆளாய் அவன்ஆள்வான்
　　சதுர்முகனை வானவரை
அந்நாளில் உலகுஅளந்தோன்
　　அமுதுஅருளா விடின்பிழையார்;
இந்நாள்உன் கைபார்க்கும்
　　இவர்;அவன்மேல் குற்றம்உண்டோ?
பொன்னாளைத் தனிஇருத்திப்
　　போனதுஉன்மேல் குற்றம்என்றான். 70

69. கரிகள் - திசை யானைகள். வீரன் - இலக்குவன்.
70. தன் ஆளாய் - தன் அடிமையாய். அவன் - இராவணன்.

தெய்வ மரணம் உற்றான் சடாயு

அரக்கரைக்கொன்று அணங்கினைமீட்டு
அமரரைக்காத்து அருள்செய்என்ன—
வரக்கமலம் பணிந்து,அவன்சொல்
மன்னவன்சொல் எனக்கருதி,
திரக்கருமம் நீபணித்தாய்,
சென்றதுஎப்பால் அரக்கன்என்றான்;
உரைக்குமுன்னே மறைக்கும்எட்டா
ஒளிமலர்ச்சே வடிஅடைந்தான். 71

என் செய்கேன், இளவல்!

பூதம்ஐந்தும் இறந்துஇறவாப்
புனிதர்பதம் சடாயுஉற்றான்;
வேதமைந்தர் புலம்பிடவே
விண்ணும்மண்ணும் புலம்பினவாம்;
தாதுஅமைந்த தொடைஇளையாய்!
தந்தைபோனான், யான்இருந்தேன்;
ஏதுஅமைந்தது ஆண்மைஅற்றேன்
இறந்திடவோ துறந்திடவோ. 72

தேற்றினான் இலக்குவன்

என்றிடவே தம்பிசொல்வான்:
ஏழைமையால் ஏந்திழையை
ஒன்றிடவேண் டாவிடினும்
உந்தைதனைக் கொன்றவனைக்
கொன்றிடவேண் டாவிடிலே
குறித்ததவம் செய்வதுதான்
பொன்றிடவோ பிறந்ததுஎல்லாம்
பூர்வவிதி எனமொழிந்தான். 73

ஈமக்கடன் இயற்றினர்

சிந்தனைதேர்ந்து இளவல்சொல்ல;
செயக்கடவோம் உரிமைஎன்று
சந்தனம்கார் அகில்அடுக்கித்
தருப்பைவைத்து வேதிகைமேல்

முந்தநல்மார்பு உறஏந்தி
முத்தனைஈ மம்கிடத்திக்
கந்தநல்நீர் மலர்சொரிந்து
கடைந்தவன்னி தலையில்வைத்தான். 74

பெருகுநல்நூல் முறைகொடுதீப்
பெருகுகையில், நதிமூழ்கி,
இருகையில்நீர் முக்கைதந்தான்;
யாவரும்தான் அமுதுசெய்தார்;
பருகினர்போல் திருப்திபெற்றார்;
பலிக்கடன்கள் பலமுடித்தார்;
ஒருகுலமா துன்பத்தின்
ஒலிகடல்மூழ் கினன்கதிரோன். 75

74. உரிமை - பிதுர்க்கடன். வன்னி - கொள்ளி.

75. இரு கையில் நீர் முக்கை தந்தான் - எள்ளும் தண்ணீரும் இறைத்துத் தர்ப்பணம் செய்தான். இராமனே தர்ப்பணம் செய்ததால் தேவர் அனைவருமே அதை அருந்தி மகிழ்ந்தனராம். பலிக்கடன் - பிண்ட பலி முதலிய பிதுர்க்கடன்கள். சூரியன் தன் குலத்திலே (பிறந்த) தோன்றிய சடாயு இறந்த துன்பத்தினால் மேல்கடலில் வீழ்ந்தான்.

9 அயோமுகிப் படலம்

— அயோமுகி என்ற அரக்கியை வதைத்தது

சடாயுமுத்திப் பேறுஉரைத்தேன்; சாற்றுகின் றேன்காம
விடாயில்உற்று அயோமுகிதன் வெப்பும்—கெடாமல்
கவந்தன்பே றும்சவரி காரணமும் கேட்போர்
உவந்தன் பெறும்அடியே உற்று. 1

இருள் சூழ்ந்தது

மாலை வரச்சென்றுஓர் வரையில்தங்க
வலிய இருள்மூடி அரக்கரைப்போல்
மாலை ஒளியாத பிறவியைப்போல்
வடவை விடம்மூண்டு கருத்தாற்போல்
மாலை விடியாமல் வருத்துவதும்
மானத் துடன்தந்தை இழவும்கண்டு
மாலை அருவிக்கண் புனல்சோர
மலைக ளும்வனமும் அழுதஎல்லாம். 2

சந்திரோதயம்

கொம்பின் மருங்கில்செந் திருவைவிட்டுக்
குளிர்ந்த முகமதி காண்பதுஎன்று
நம்பி விழிஎன்னும் கமலபுட்பம்
நள்ளிர வினிலும் குவியவில்லை;
தம்பி நயனம்போல் இமைப்பும்இல்லை;
தவிக்கும் மனங்கண்டு நேயத்தோடும்
வம்பின் முலைமங்கை முகம்ஈதுஎன்று
வாரி தனில்சோமன் உதயம்செய்தான். 3

2. அரக்கர் கூட்டம்போல இருள் பரவியது. மயக்கம் தீராத பிறவியைப் போலவும் வடவை விடம் போலவும் பரவிய இருள் இராமனை வருத்தியது. தன் மானமும் சடாயு இறந்த துயரும் வருத்த அவன் கண்ணீர் வடித்தான். இதைப் பார்த்த மலைகளும் வனங்களுமே அழுவது போன்றதாம், அங்கே அருவிகள் வீழ்வது. மாலை ஒழியாத - மயக்கம் தீராத. மாலை விடியாமல் - இரவு விடியாமல். மால் - திருமாலாகிய இராமன்.

3. மரக்கிளைகளிடையே சந்திரன் தோன்றுவது, சீதையின் முகத்தை ஞாபகப்படுத்த, இராமனது கண்கள் குவியாமல் விழித்த கண் விழித்தபடி அதையே பார்த்திருந்தனவாம்.

பிரிவாற்றாமை

கள்ள மதவேடன் மறைந்துகொல்லும்
கங்குல் கானத்தை ஒளிசெய்நிலா
வெள்ளை விடம்ஆகிச் சுட,வீரன்
வெண்மதி வதனத்தாள் தனிமைஎண்ணி,
கொள்ளை கொள்ளும்ஆனை ஒடித்தபொன்னின்
கொடியே! பூவொடுமு டிந்தகொம்பே!
அள்ள வரும்போதுஎன் நினைந்தனையோ?
அருந்தற்கு அரிதான அமுதேஎன்றான். 4

திடவெம் சிலையான்வரும் என்றுஎன்னைத்
தேனே திசைபார்த்து இருந்தனையோ?
அடல்கொண்டு அரக்கரை வெலமாட்டான்
அஞ்சி னான்என்றுஅங்கு அயிர்த்தனையோ?
மிடல்என் புயம்என்ன வரிவில்என்ன
வீரம் இனிஎன்ன? மிகநாணி,
கடல்வெண் திரைபோல விழுந்துஅடங்கிக்
கனல்போல் உயிர்த்துள்ளம் கரையல்உற்றான். 5

காரார் கொடைத்தம்பி விரித்தமென்பூ
கரியத் துளிவாடை எரியக்கன்றி
வாரார் உலகுஎங்கும் இடர்தீர்ப்பான்
மன்ன னுக்குஇடர்செய்த வலிநன்றுஎன்பான்;
ஓரா யிரம்கற்பம் ஒருகங்குலாய்
உறங்கும் பெருமாள் பிரிவுஆற்றான்;
ஓரா யிரம்கற்பம் ஒருகங்குலாய்
உறங்கா மலர்க்கண்ணன் உழலல்என்னே! 6

கன்றிப் பாம்புண்ட கலைமதிபோல்
கன்றித் தேம்புண்டு தளர்மதியோன்
இன்றிப் போவஞ்சி முகமதிதான்
இன்றிக் காய்கின்றாய் பகைமதியே

4. மன்மதனாகிய வேடன் மறைந்திருந்து கொல்லும் அவ்இரவிலே அவனைக் காட்டிக் கொடுக்குமாப்போல அந்த வனத்தை ஒளிரச் செய்தது நிலா.

அன்றிக் கதிரோனைக் கோள்களைப்போல்
அரக்கன் சிறையில்நன்று அடைத்தனனோ?
வென்றிக் குலம்இந்தப் பழிஎய்தலால்
வெட்கி மறைந்தானோ இரவிஎன்பான். 7

திறத்தான் இளையோனே நாள்என்றும்போல்
செல்லும் இரவுஇன்று வளர்வதுஎன்னோ
மறத்தார் செயம்பெற்றால் அறத்தில்என்னோ
வையம் முடிந்தாலோ விடியும்என்பான்;
உறத்தான் மலர்எய்யும் மதனைக்கண்டான்;
உடல்முன் இழந்தவன் உயிரும்இன்னும்
இறத்தான் வரும்என்று நடுங்கக்கண்டான்
இரங்கி னான்நைய இருள்அற்றதே. 8

சூரியோதயம்

திருப்பால் ஆழியின் துயில்நீங்கித்
திருக்கற் பாழிக்குள் படியும்எங்கோன்
விருப்பாம் மையல்பேடும் கலைமானும்
வேழம் பிடியோடும் திரியக்கண்டான்;
மருப்பாய் மலர்க்கமலத் தாள்நீக்கி
மாது இங்஑ன்இல்லை என்றுகைகாட்ட,
சுருப்பார் குழற்கொம்பைக் காணாதான்
சோலை தனைக்கண்டு சோகம்உற்றான். 9

பல இடங்களிலும் தேடிப் பார்த்தனர்

அப்போது இளையவன் தேற்ற,அண்ணல்
அரக்கன் இருக்கும்இடந் துருவிப்பார்த்து
மைப்போல் வரைக்கானம் பலதேடி
வையம் தரும்செல்வி தனைக்காணார்;

8. மறத்தி னார்கள் வலிந்தவர் வாழ்வரேல்
அறத்தி னால்இனி ஆவதுஎன்? என்னுமால். —கம். 24.

9. .... பாற்கடலின் விரும்பும் துயிலை வெறுத்து ....
.... கற்பின் கடலில் படிவான். —கம். 28.

செந்தாமரையிலே தங்கியிருந்த திருமகளான சீதை, நேற்று நான் முடச் செய்த இந்தத் தாமரை மலரில் இல்லை என்று அவிழ்த்துச் சுட்டிக்காட்டுவான் போலச் சூரிய கிரணங்கள் பரவின.

வெப்போர் பதினெட்டுஒ சனைதூரம்
விரையா மலர்ச்சோலை புகுந்தவெய்யோன்
துப்போர் இதழ்ப்பொன்னை நாடிஇப்பால்
சொன்ன மலைக்குஅப்பால் நாடிச்சென்றான். 10

ஒருநாள் இரவில்

மைப்போர் அரவம்போல் அறிவுஒன்றிலார்
மனம்போல் இருண்டன திசைகள்பத்தும்;
பைப்பேர் இரவேதான் எனும்சோதி
பளிங்கின் அறைகண்டுஅங்கு அவர்இருந்தார்;
கைப்போ தகமன்னன் இளையோனைக்
கடுகிப் பருகநீர் தருகஎன்றான்;
மெய்ப்போ தகன்எங்கும் புனல்தேடி
விரையும் போதுஅங்குஓர் அரக்கிகண்டாள். 11

கண்டதும் காமுற்றாள் அயோமுகி

தூமம் கனல்காலும் உயிர்ப்பும்கண்ணும்
சுவறக் கடல்கொள்ளும் மூழைதன்வாய்
வேமன் னியகாலத்து எரிசெங்குஞ்சி
மென்று கரியாளி அடியொடுஉண்பாள்
மாமந் திரம்கேளா அரவின்பொங்கி
வரும்அ யோமுகி, மதனும்மெச்சும்
காமன் இவன்என்றே புணரஇன்றேல்
கடிதுஉண் பேன்என்று கருத்தில்கொண்டாள். 12

சிங்கங் களைக்காதில் குழைஎன்றுஇட்டுச்
சீறும் புலிஆரம் பலபூண்டு
துங்கம் திகழ்வெங்கண் நாகங்களால்
தொடியும் கடகமும் வளையும்இட்டுச்
சங்கம் செறியாளி தாலிகட்டித்
தாளில் சிலம்பும்இட்டு ஊழிதன்னில்
பொங்கும் சுடர்அஞ்சும் சுடுமுகத்தாள்
பூமி அதிர்ந்திட நடந்துவந்தாள். 13

12. மூழை - முழை - குகை.
நல்மதி யோர்புகல் மந்திர நாமச்
சொல்மதி யாஅர வின்சுடு கிற்பாள். —கம். 40.

யார் நீ?

பார்ப்பது அரிதென்ன எயிறுமின்போல்
 படர வருவாளை இளவல்கண்டு,
சூர்ப்ப ணகைக்கும்தா டகைக்கும்ஒப்பாள்
 துட்ட அரக்கிஎன்று இதயத்துஎண்ணி,
பேர்ப்பது அரிதான கொடும்கானில்
 பெருகும் இருள்தன்னிற் சிலம்புஓசை
ஆர்ப்புஅ ரவம்செய்ய வருகின்றநீ
 யார்அடி ஒல்லைஉரை செய்என்றான். 14

என்னோடு இரு

பாவலர்போற்று அழகுஉடையாய்
 பரவிலைஆ னாலும்உன்னை
ஆவலுடன் கூடவந்தேன்
 அயோமுகியாம் என்பெயர்தான்!
காவல்அழி யாதஎன்தன்
 கனதனம்உன் புயத்துஅழுந்த
பூவலர்பா யலில்அணைத்துப்
 பொரும்மதனை அகற்றிடுஎன்றாள். 15

ஓடிப்போ

வருத்துரைநீ கூறிடில்என்
 வாளிஉன்மேல் கூறிடும்என்று
உருத்துஇளையோன் உரைக்க; அவள்
 உயிர்உதவாய் எனப்பணிந்து,
கருத்துஉறநீர் நாடினையேல்
 கங்கைநல்நீர் தருவன்என;
பெருத்துயர்மூக் கும்செவியும்
 பிரியும்முன்நீ அகன்றிடுஎன்றான். 16

எடுத்து ஏகினாள்

ஓங்குமுழை தனில்அடைத்தால்
 உரம்அடங்கி இசைவன்என்று
தாங்கிவிண்மேல் ஏகல்உற்றாள்
 சந்திரனோடு எழுமுகில்போல்

பூங்குழல்வா சவன்பிடிபோல்
பொருப்புஅதனால் கடைகடல்போல்
காங்கயன்ஊர் தோகையைப்போல்
ககனமிசை கொண்டுசென்றாள். 17

கான்அதனில் அயோமுகிதன்
கையினும்மார் பினும்அடங்கி
வான்அதனில் விளங்குஇளையோன்
மற்றவள்நா சியும்செவியும்
ஊன்அதனோடு அரிந்துஅகன்றான்
உரித்தகரி உருத்திரன்போல்
ஆனதின்வந் திலன்தம்பி
அண்ணல்உளம் வருந்தினனே. 18

தம்பியைக் காணாது புலம்பினான்

வனத்தில்நல்நீர் கண்டிலனோ?
மாற்றலர்வந்து எதிர்த்தனரோ?
கனத்தனமான் தனைஒழித்த
கார்அரக்கன் வவ்வினனோ?
அனத்தம்என்னால் விளைந்ததுஎன்றே
அங்கியில்வீழ்ந்து இறந்தனனோ?
எனத்தனுசன் வரக்காணேன்
யாவரையான் காண்பதுஎன்றான். 19

அரியஎல்லாம் முடிக்கவல்லாய்,
அருவினையேன் ஆருயிரே!
பெரியவனே! இளையவனே!
பிழைஇதுஅன்றோ எனைத்துறந்தால்;
பரிபவர்ஆர் தாயர்பிதா
பைந்தொடியாள் நீங்கிடவும்
உரியஉயிர் சுமந்துஇருந்தேன்
உனைப்பிரியா வாறுஅலவோ! 20

17. வாசவன் - இந்திரன். பொருப்பு - மந்தரமலை. காங்கயன் - காங்கேயன் - முருகன்.

மானினைத்தே டித்திரிவேன்
உனைப்பிரிந்தால் வாழ்வதுஉண்டோ?
யான்இறப்பேன் நமரும்இரார்
யாவரையும் கொன்றனையாம்
வானில்உற்றான் மாந்தாதா
மரபில்எந்தை நகரிவிட்டுக்
கானில்உற்றாய் என்னுடனே
கனிவுவிட்டாய் இதுகுணமோ? 21

மின்னாளோடு என்உயிரை
விழிஇமையாக் காத்துநிற்பாய்
மின்னாதே இடியாதே
விளைத்தனையோ வல்லிருளை
என்னாவீழ்ந் தும்எழுந்தும்
எங்கணும்தே டிப்பரந்தும்
என்னாவி லக்குமணா
என்றுஅழைத்துப் புலம்பலுற்றான். 22

அரக்கி அழுகுரல் கேட்டது

இன்னம்ஒரு பிறவிஉற்றால்
எற்குஅவன் முன்னவன்ஆய்
பின்னவன் ஆகித்தமியேன்
பிறக்கஎன்று பெருந்தவத்தால்
உன்னஒண்ணா மாமாயன்
உயிர்விடவாள் உருவியபோது
அன்னஅரும் தொனிகேட்டான்
அரக்கிகுரல் என்றுஅறிந்தான். 23

தம்பி வந்தான்

கனல்பகழி கையில்தரித்துக்
கங்குலையும் பகல்ஆக்கி
அனல்படுபோல் அடவிகளும்
அருவரையும் ஒடிபடவே

23. அறப்பால் உளதேல் அவன்முன் னவனாய்ப்
பிறப்பான் உறில்வந்து பிறக்க. —தம், 76,

இதற்கு விளக்கம் தருகிறார் எம்பெருமானார்,

புனல்கடல்ஊ ழியில்உலகைப்
    போர்ப்பதுபோல் வரும்அவனை
இனற்படுமோ அடிமைவந்தேன்
    என்றுஇளையோன் வாழிஎன்றான். 24

கன்றதனைப் பிரிந்துஅலறிக்
    கண்டுஉருகும் தேனுவைப்போல்
நின்றவனைப் பணிந்தவனை
    நெடுங்கணில்நீ ராட்டிஅம்பொன்
குன்றதனை யனையகருங்
    குன்றுஎனகேட்டு உற்றதுஎல்லாம்
மன்றதனால் இன்பதுன்பம்
    மடங்கினனே அதிகர்இல்லான். 25

வல்லவன்தான் நீ

பெருங்கலவர் அலைக்கலையார்
    பிறந்துநல்லோர் தலைக்கலையார்
நெருங்களல்லா உலகும்என்மேல்
    நேர்பொரினும் நினக்குஎதிரோ?
ஒருங்கஎல்லா ரையும்பிரிந்தேன்
    உனைப்பிரியேன் ஆகில்எந்தன்
மருங்குஉறுமோ துயர்கள்என்றான்
    மறைந்துஇருகண் வந்தவர்போல். 26

வன்சொலினாள் இராக்கதையை
    வதைத்திலையோ எனக்கேட்க;
புன்செவிவாய் மூக்குஅரிந்தேன்
    பூசல்இட்டுஓ டினள்எனவே

25. அதிகர் இல்லான் - தன்னினும் மேலாயவர் இல்லாத இராமன்.
தான்அலாது ஒருபொருள் தனக்கு மேல்இலான். —கம். 85.

26. ஆய்வுறு பெருங்கடல் அகத்துள் ஆயினார்
பாய்திரை வருதொறும் பரிதற் பாலரோ?
தீவினைப் பிறவிவெஞ் சிறையில் பட்டயாம்
நோயுறு துயர்வர உட்கல் நோன்மையோ? —கம், 86,

தின்செயலாள் எடுத்துஅகன்றும்
சிறியும்கொல் லாதுவிட்டாய்
மன்செயல்காண் மனுகுலத்தாய்
வல்லைஎன்றே மகிழ்ந்துஅணைத்தான். 27

கனவோ இது

வாருணமந் திரம்நினைந்து
மழைவணன்தா கம்தணிந்து
பாருணன்பூ வணைசிறந்தான்
பாதம்இளை யவன்பிடிக்க
பேருணர்வுள் ளானவெற்றிப்
பெண்ணமுதைப் பிரிந்தபின்னை
ஓர்உணவும் அமுதுசெய்யான்
உறங்குவனே உயிர்க்கலுற்றான். 28

தையல்எந்தன் மனத்துஇருந்தோ
தார்அரக்கர் மாயம்இதே
மெய்யதுபோல் பார்க்களங்கும்
வெளிப்படுமோ அவள்உருவம்
செய்யகையால் அணைப்பரிதே
சிற்றிடையின் மிகச்சிறிதே
துய்யசெவ்வாய் அமுதுஉகந்தேன்
துயில்துறந்தும் கனாவருமோ? 29

மூவகை அமரரும் உலகம் மும்மையும்
மேவஅரும் பகைஎனக்கு ஆக மேல்வரின்
ஏவரே கடப்பவர் எம்பி நீஉளை
ஆவதே வலிஇவி அரணும் வேண்டுமோ? —கம். 87.

பிரிபவர் யாவரும் பிரிக பேர்இடர்
வருவன யாவையும் வருக வார்கழல்
செருவலி வீரநின் திரும் அல்லது
பருவரல், என்வயின் பயிலற் பாலதோ? —கம். 88.

29. கருங்குழல் சேயரிக் கண்ணி கற்பினோர்க்கு
அருங்கலம் மருங்குவந்து இருப்ப, ஆசையால்
ஒருங்குறத் தழுவுவென் ஒன்றும் காண்கிலன்
மருங்குல்போல் ஆனதோ வடிவும் மெல்லவே? —கம். 96.

புண்ட ரிகப்புது மலரில் தேன்பொதி
தொண்டையம் சேயொளித் துவர்த்த வாய்அமுது
உண்டனென்; ஈண்டுஅவள் உழையள் அல்லளால்
கண்துயில் அன்றியும் கனவுஉண் டாகுமோ? —கம். 97.

தொடுமதியார் ஆற்றவல்லார்
 தோகைகண்போல் நெடியஇரா
கொடுமதியால் வெந்தவிண்ணின்
 கொப்புளமோ தாரகையோ
நெடுமதியான் கலங்குகின்றேன்
 என்றுஇறையோன் நீள்துயரம்
படுமதியான் காப்பன்என்று
 பரிந்துவெய்யோன் எழுந்தனனே. 30

கவந்தன் படலம்

— கவந்தனை வதைத்தது

கவந்தவனம் அடைந்தனர்

பைம்பொன் மலர்மங்கை பிரிவைக்கண்டு
பலவும் புலம்பிடும் காலம்தன்னில்
ஐம்பது யோசனை வனத்துள்சென்றார்
அருக்கன் நடுவானில் செலும்போது
மொய்ம்ப துடன்அங்கே இருந்துகையால்
முழுதும் வாரித்தன் வயிற்றின்உள்ளே
இம்பர் உயிர்எல்லாம் அடையக்கொள்ளும்
இகல்வெங் கவந்தன்தன் வனத்தைஉற்றார். 1

கவந்தன் கையில் அகப்பட்டனர்

எறும்பு கடையானை தலையாக
எல்லா உயிர்களும் கலகம்இட்டுக்
குறும்பு செயும்மன்னர் நாட்டில்உள்ள
குடிபோல் வெகுண்டுஎங்கும் குலைந்துஓட
நறும்பூங் குன்றம் பறித்துஉருட்டி
நதிகள் மேகங்கள் வாரிக்கொண்டு
வறும்பூ தலமாகக் கடல்கொள்ளல்போல்
வளைத்து வருகின்ற கரத்துள்புக்கார். 2

அடர்ந்து வருசக்கர வாளவெற்போ
அரக்கர் படையோஎன்று அமலன்செப்ப
தொடர்ந்த படைஆகில் முரசும்சங்கும்
தொனிக்கும் அதுஅல்ல வாசுகியாம்
படர்ந்த தலையாலும் வாலாலும்
பசியால் வளைத்ததுஎன்று இளவல்சொல்ல
நடந்து சுரத்துள்பன் னிருகாதம்
நரநா ரணர்கண்டார் கவந்தன்தன்னை. 3

3. "என்னைநீ புகலக் கேண்மோ எங்குமாய் யாவு மாகி
மன்னிய பொருளும் யானே மறைக்கெலாம் முடிவும் யானே
உன்னையான் பிரிவ தில்லை ஒருமுறை பிறந்து மேனாள்
நன்விலா எறிக்கும் பூணாய் நரனும்நா ரணனும் ஆனோம்,"

கோர ரூபம்

பண்டை இரவிபோல் எரியும்கண்ணன்
    பற்கள் ஒன்றுக்குஒன்று இருகாதம்
அண்டர் கடையும்போது இருபாலும்
    அரவம் பெற்றால் அனையகைகள்
சண்ட மாருதத் துருத்தியைப்போல்
    தழலும் புகையும்கொண்டு உயிர்க்கும்துண்டம்
துண்டம் இரண்டாக மதியம்தன்னைத்
    துணித்த வாறுஒக்கும் எயிறுஇரண்டும். 4

மையோ விடம்ஒக்கும் வடிவின்வண்ணம்
    வடவா முகம்ஒக்கும் நாவின்வண்ணம்
கையோ கடுங்காலன் பாசம்ஒக்கும்
    காதோ கதிர்உண்ணும் பணியும்துஞ்சும்
பொய்யோ யமலோக வழிஒக்கும்வாய்
    பொல்லா நரகுஒக்கும் புதுவயிறு
மெய்யோ வியன்பஞ்ச பூதம்அல்ல
    விளைந்திட் டதுபஞ்ச பாதகத்தால். 5

சால வேலையில் பெரிதுஓசை
    தலைவன் நேமியில்தலை துணித்த
கால நேமியை நிகர்கவந்தன்
    காலில் கொடிமுடி இடந்தோறும்
கோல மேருவைப் போல்இருந்த
    கோர ரூபமும் வாயும்கண்டு
நீல ராவணன் நகர்க்குஇதுவாம்
    நெடிய வாசல்என்று உளம்மகிழ்ந்தார். 6

இவன் கையில் மாள்வதுதான் நலம்

அய்யுற் றதுதிரப் பார்த்துத்தம்பி
    அய்யா இதுஒரு பெரும்பூதம்
கையில் திரட்டித்தன் வயிற்றில்கொள்ளும்
    கருத்தில் இனிஎது செயல்எனவே

"பின்னொரு பிறப்பில் யாமே இராமலக் குமப்பேர் பெற்றோம்" என்ற வில்லிபுத்தூராழ்வாரின் பாரதம் — முதற்போர்ச் சருக்கம், 6, 7ஆம் பாடல்கள் இங்கே நினைவுகொளற்குரியன.

மையிற் கொடுகட லதுசூழும்
வையம் இடம்இல்லை இரையும்பற்றா
மெய்யுற் றதுஇளை யோனேஎன்று
மீட்டும் விறல்வீரன் அருளிச்செய்வான். 7

எந்தை இறந்தான்எம் மயில்பிரிந்தாள்
எடுத்த பழியொடும் சிலைஏந்தி
நந்தமர் யாரும் இளையோரும்
நகரும் துயர்எய்த உயிர்வாழேன்
உந்தன் மகள்உள்ளாள் அரக்கர்இல்என்று
உரைக்கச் சனகன்பால் உறுவேனோ
வந்த பழிதீர இதன்கையினால்
மாள்கை நலம்நீயும் மீள்கைஎன்றான். 8

மறுத்துரைத்தான் இலக்குவன்

என்றே உரைசெய்ய இளவல்சொல்வான்
இடர்வென் றார்அன்றோ எழில்வீரர்
நின்றேன் நினக்குமுன் இறவாமல்
நீங்கி னால்எந்தன் சேவகமும்
சென்றே இறைவன்பின் கானம்எங்கும்
சேரத் திரிந்துகண் உறங்காமல்
நன்றே மீண்டும்தான் ஒருவன்வந்தான்
நலன்என்று உரைப்பதும் நகைஅலவோ? 9

முன்னன் அடிபேணிப் பகைஉற்றால்
முன்னே முடிஎன்றாள் சொல்பொய்யோ
அன்ன முதல்தேவர் அழிந்தாலும்
அழியா இதன்கையில் அழிவதுஉண்டோ
பொன்னை மீட்காமல் வசைகொள்வதோ
பூதம் தனைவாளில் புரட்டுகைபார்
என்ன விலக்கவும் இறைவன்நில்லான்
இமையோர் களும்விம்மி அழுதனரால். 10

தோள்களைத் துண்டித்தனர்

நிகழ்ந்தார் அரக்கன்பால் வர;கவந்தன்
நீர்ஆர்? எனவும்,பே சாமல்நின்றார்;
இகழ்ந்தார் எனைஎன்று விழுங்கப்பற்றும்
இருதோ ளையும்வாளில் துணியச்செய்தார்;
அகழ்ந்துஆறு உதிரத்தால் திரண்டுஓடும்
ஆகப் பொருப்பொடும் சாபம்அற்றுப்
புகழ்ந்தான், உயர்வானில் கருடனைப்போல்
புனிதன் கரம்தீண்டில் அரியதுஉண்டோ? 11

இறைவ! உன்னை அறிவார் யார்?

தந்தையே சீவவகை கட்குஎல்லாம்
தருமமே தேவர் தவப்பேறே
முந்தை ஆல்எனும் தருநிழல்கீழ்
முக்கண் பரனோ வேலைதுஞ்சும்
அந்தண் மகவோபாற் கடலின்கண்ணே
அமரர் அடிபோற்ற அனந்தன்மேல்
எந்தை யோஎந்தன் இடர்தீர்த்தாய்
ஈசனே உன்னை அறிவார்ஆர்? 12

ஆரில் காண்பானும் காட்சியுமாய்
ஆண்பெண் அலியாய்அல் லாதபண்பும்
வேரில் பொருட்டுஎன்றும் வேட்பாலும்
வேள்விப் பயனும்நீ ஆம்வாறும்
நீரில் குமிழிபோல் உலகம்எல்லாம்
நின்னில் பிறப்பதும் இறப்பதுவும்
தேரில் பலவேதப் பொருளும்உன்தன்
செயலே புகழ்வதும் தெரிவார்ஆர்? 13

ஆதிப் பிரமனும் பரமனும்நீ
ஆதிக்கு அடங்கா அனாதியும்நீ
ஓதிப் பிரமனொடு அகிலாண்டமும்
உந்திக் கமலத்தில் படைத்தவன்நீ
பேதித்து உழல்கின்ற நாய்அடியேன்
பிறவி அறுத்திட்டாய் போற்றிஎன்று
நீதித் தாய்கண்ட தனயன்தன்னை
நெடியோன் இளையோனை வினவுஎன்னவே. 14

கந்தர்ப்பன் நான்; பகைவெல்லத் துணை தேடிக்கொள்

யாதுன் வரலாறுஎன்று இளவல்கேட்க
    இறைவா தனுஎன்னும் காந்தர்ப்பன் நான்
பூத உருவானேன் என்சாபம்
    போகத் துடைத்துநல் வானம்தந்தீர்
நாதர் உமக்கென்ன துணைஎன்செய்யும்
    நல்தோ கையைத்தேடத் துணைதேடிப்
போதன் பகைவேலை கடந்துஏறும்
    புணைகொண்டு அலைவேலை கடப்பவர்போல், 15

சவரி சொல்வாள்; சுக்கிரீவனைத் துணைகொள்

அன்னை யினும்நல்ல சவரிதன்பால்
    அணுகி யேஅங்கே அவள்வாக்கால்
சொன்ன மலைஅன்ன மலைஏறிச்
    சுக்ரீ வனைத்துணை கொண்டுபின்னில்
அன்னம் அனையாளை நாடும்என்ன
    அதுவே செயல்என்று தொழுதுசென்றார்;
சொன்ன நெறிதூரம் இருவரும்போய்
    துங்க மாதங்க வனத்தைஉற்றார். 16

11 சவரி பிறப்பு நீங்கு படலம்

— சவரி பிறப்பு நீங்கி முத்திப்பேறடைதல்

மதங்காச்சிரமத்தில்

நாளும் கொடைமாறாது அத்தப்பன்சொல்
நல்ல தம்பிதன் மோரூரும்
ஆளும் பூந்துறை வளநாடும்
அர்த்த நாரீசர் செங்கோடும்
நீளும் செழுமலர்ச் சோலையைப்போல்
நினைத்த படிநல்கும் பூங்காவைத்
தோளும் துணையும்போல் இருவோரும்
துன்பம் அகலக்கண்டு இன்பம்உற்றார். 1

சவரியின் உபகாரம்

கவரி மலர்க்காவில் குமரர்சென்றார்
கதிவா னவன்வைகக் கமலக்கண்ணன்
சவரி தனைக்கண்டுஇங்கு இனிதுஉறைந்தான்
தவத்தாள் சொரிந்திட்டாள் ஞானக்கண்ணீர்
உவரி தனில்மிக்க பதவிபெற்றேன்
உயரும் வீடுஎன்றுஅங்கு உருகி,அன்பால்
துவரில் நறும்காயும் கனியும்தந்து
துய்ய விருந்துசெய்து இருந்தளவில். 2

சிவனும் அயனும்இந் திரனும்இங்கே
தேவ ருடன்வந்து வரராமன்
அவனும் வரும்பூசை அவற்குச்செய்வாய்
அதுவே பேறுஎன்றுஅங்கு அவர்போனார்;
தவனும் பதம்கண்டு பலித்ததுஇப்போ
தந்தாய் எவர்க்கும்தம் தாயேபோல்
எவனும் நிகர்அல்லா மாலும்நின்னால்
இடர்அற் றோம்அன்னை வாழிஎன்றான். 3

3. அவர் போனார்; உம் வரவை எதிர்நோக்கி இருந்தேன். தவனும் - தவனும் பதங் கண்டு பலித்தது இப்போ - இன்றுதான் என் புண்ணியம் பூத்தது என்ற அருந்தவத்தரசியை இராமனும் அன்புற நோக்கி, எங்கள் துயரம் தீர்த்தாய் தாயே நீ வாழ்க என்றான்.

சுக்கிரீவன் இருந்த இடத்துக்கு வழிகூறினாள் சவரி

சதிரான் இளையோனும் தானும்அங்கே
    தங்க அவருடன் சவரிசொன்னாள்
கதிரா யிரம்மன்னன் மகன்இருந்த
    கனமால் வரைக்குஏறும் வழியைஎல்லாம்
முதிரா மோக்கத்தின் படிஇதுஎன்பார்
    மொழிபோல் அவள்சொன்ன நெறிகேட்டான்
அதிரா சியம்கேள்வி செவியுள்கொள்ளும்
    அறிவாம் அமுதத்தின் சுவைஆனோன். 4

பம்பைப் பொய்கையை அடைந்தனர்

அண்டர்அருந்தவர் தமக்கும்எட்டா
    அரியபெருமுத்தி சவரிபெற்றாள்;
கண்ட குமரரும் அதிசயமாய்,
    கருதி அவள்சொன்ன நெறியில்சென்றார்
கொண்டல் வரைஆறு வனம்கடந்து
    குடைந்து புனல்ஆடும் உலகத்துஉள்ளோர்
பண்டை வினைத்தீயால் அறமுருகும்
    படிபோல் எழுந்திட்ட பம்பைகண்டார். 5

4. .... கேள்வியால் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும் அமிழ்தத்தின் சுவையாய் நின்றான்.
—கம். 7.